**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**DIRECTORATE OF DISTANCE & CONTINUING EDUCATION**

**TIRUNELVELI - 627 012, TAMIL NADU**

**B.A - TAMIL**

# பேச்சுக்கலைத் திறன்

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**தொலைதூரத் தொடர்கல்வி இயக்ககம்**

**திருநெல்வேலி - 627 012**

**தமிழ்நாடு**

# பேச்சுக்கலைத் திறன்

## அலகு - I

சொற்பொழிவு ஓர் அரிய கலை - வரையறை - வரலாறு - விளக்கம் - பேச்சாளர் தகுதிகள் - முன்னோடிகள் - இலக்கிய அறிவு - மொழி அறிவு - அனுபவம் - தனித்தன்மை - முன் முயற்சிகள் - மேடைப்பேச்சு வரலாறு - வகைகள்

## அலகு - II

சமய சொற்பொழிவு - இலக்கிய சொற்பொழிவு - அரசியல் சொற்பொழிவு - பொழுதுபோக்குச் சொற்பொழிவு - நகைச்சுவைச் சொற்பொழிவு - ஊடகப் பொழிவுகள் - அவையச்சம் நீங்க வழிமுறைகள் - மொழியைக் கையாளும் திறன்

## அலகு - III

பேச்சுநடை - உச்சரிப்பு முறை - அவையறிதல் - பொருளறிதல் - சொல் தெரிவு - மொழி ஆளுமை - இலக்கியப் புலமை - வெளிப்பாட்டுத் திறம் - தொனி - பேச்சின் தொடக்கம் - பொருள் விரித்தல் முறை - முத்தாய்ப்பாக முடித்தல் - நினைவாற்றலைப் பெருக்கும் வழிமுறைகள்

## அலகு - IV

புகழ்பெற்ற சொற்பொழிவாளர்கள் - வ.உ.சி - திரு.வி.க - மறைமலையடிகள் - வரதராச நாயுடு - ஜீவா -பெரியார் - அண்ணா - ம.பொ.சிவஞானம் - கி.ஆ.பெ.விசுவநாதன் - கலைஞர் கருணாநிதி - கிருபானந்த வாரியார் - கி.வா.ஜகன்நாதன் - புலவர் கீரன் - திருக்குறள் முனுசாமி - வலம்புரி ஜான் - சிலம்பொலி செல்லப்பன் - நெல்லைக் கண்ணன் - தென்கட்சி சுவாமிநாதன் - சுகி சிவம் - மேலைநாட்டு பேரறிஞர்கள் போன்றோர்.

## அலகு - V

பேச்சாளருக்குரிய நெறிமுறைகள் - பொழிவு தயாரிப்பும் உத்திகளும் - கவனத்திற் கொள்ள வேண்டிய குறிப்புகள் ( பாராட்டு - வாழ்த்து - இரங்கல் கூட்டங்களில் பேசும்

முறை) - சொற்போர் - பட்டிமன்றம் - வழக்காடு மன்றம் - பக்தி சொற்பொழிவு - நூல் விமர்சனம் - அவைத்தலைமை - நன்றியுரை -போன்றவை பேசும்முறை - பயிற்சி.

# பேச்சுக்கலைத் திறன்

## அலகு - I

### சொற்பொழிவு ஓர் அரிய கலை

பேச்சு ஒரு தலை சிறந்த கலையாகும் சிறந்த பேச்சாற்றல் உடைய ஒருவர் தன் எதிரே நிற்கும் மக்கள் கூட்டத்தினை மயக்கி தன் வயப்படுத்த இயலும் முரண்பாடான சூழல்களில் சிக்கல்களைத் தவிர்த்து அமைதியை ஏற்படுத்த சிறந்த பேச்சாளரால் இயலும். ஒருவன் ஏற்றுக்கொள்ளத் தயங்கும் கருத்தினைக்கூட நயமான பேச்சினால் ஏற்றுக்கொள்ளச் செய்ய இயலும். பேச்சுக் கலை பெரிய கலை அரிய கலை கற்றாரையும் கல்லாதவரையும் கவர வல்ல கலை பொதுவாக நாட்டு முன்னேற்றத்திற்கும் தனிப்பட்டவர் முன்னேற்றத்திற்கும் வேண்டிய இன்றியமையாத கதை. சிறப்பாக மக்களாட்சி மலர்ந்துள்ள நாடுகளுக்கு மிக இன்றியமையாத கலை அரசியல் சீர்திருத்தம் சமூக சீர்திருத்தம் சமுதாய சீர்திருத்தம் தொழிலாளர் முன்னேற்றம் தேர்தலில் வெற்றி பெறுதல் முதலியவற்றிற்கும் பேச்சுக்கலை தேவைப்படுதலை இன்று நாம் உணராமல் இல்லை. தொழில்துறையில் இறங்கி இருக்கும் முதலாளிகளுக்கும் பலவகையான நிலையங்களை நடத்தும் பெரும் செல்வர்களுக்கும் இந்நாளில் பேச்சுக்கலை மிக இன்றியமையாததாகிவிட்டது. நிலைய அமைப்பை நடத்தும் திறமையோடு ஆண்டு பேரவையில் பேசும் ஆற்றலும் இக்காலத்தில் தொழில் அதிபர்களுக்கு வேண்டுவதாய் இருக்கிறது. ஒவ்வொரு கட்சிக்கும் தலைசிறந்த பேச்சாளர்கள் வேண்டும். தலைசிறந்த பேச்சாளர்கள் இல்லாவிட்டால் கட்சி முன்னேற முடியாது.

பேச்சினால் உலகம் இயங்குகிறது. இன்றைய உலகம் பேச்சின் அடிப்படையிலேயே பெரிதும் இயங்குகின்றது. இல்லத்தில் மனைவி குழந்தைகளுடன் ஒருவர் நன்றாக சுமுகமாக பேச வேண்டிய நிலை உள்ளது. இல்லாவிட்டால் குடும்பம் நரகமாகிவிடும். ஒருவன் பணி செய்யும் இடத்தில் சக பணியாளர்களுடனும் மேல் அதிகாரிகளுடனும் அவரவர்க்கு உரிய முறையில் பேச வேண்டும். இதுதான் ஒருவனை அவனது பணியில் மேம்பாடு அடைய செய்கிறது. ஒரு கூட்டு உணர்வை (Team spirit) ஏற்படுத்துகிறது. சிறந்த பேச்சினால் நயமான பேச்சினால் ஒருவனை சுற்றி சுமூகமான சூழல் ஏற்படுகின்றது. இச்சூழல் பணியிடத்தில் ஒருவனது மனதினையும் உடலினையும் உற்சாகப்படுத்தி உழைக்கும் திறனை மேம்படுத்துகிறது. விளைவுகள் சிறப்பாக இருக்க நல்ல பேச்சு உதவுகிறது.

**பேசினால் விளையும் நன்மைகள்**

பணிகள் தொடர்பான பேச்சு ஒருவனை செயல்பட தூண்டுகிறது என்றால் பெரிதொரு வகை பேச்சு நல்ல நட்பினை ஏற்படுத்துகிறது. அலுவலக ஓய்வு நேரத்தில் நல்ல பேசும் திறன் உள்ள ஒருவன் சிறந்த நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வான். இவ்வாறு ஏற்படும் கண்ணியம் மிகுந்த நட்பானது ஒருவரது பணியில் ஏற்படும் இடர்களை குறைத்து விடுகின்றது. சிக்கலான பணி சூழல்களில் இத்தகைய நண்பர்கள் உதவிக்கு வருவார்கள். நல்ல பேச்சாற்றலால் ஏற்படும் விளைவுகள் எத்தனை இன்பம் பயப்பவை.

பேச்சு ஒருவனை சமூக வையப்படுத்துகிறது செயல்படுவதற்கான ஆற்றலை வழங்குகிறது என்று உறுதிப்பட கூறலாம். பேச்சு மனிதனின் உயிர் மூச்சாக திகழ்கின்றது. தனி மனிதன் தான் வாழும் சமூகத்துடன் தொடர்பு கொள்வதற்கும் பேச்சு மிக இன்றியமையாததாக அமைகின்றது. பண்டைத் தமிழ் மக்களிடையே பேச்சுக்கலை மிகவும் சிறந்து விளங்கியது. பெரு வழக்காகவும் இருந்தது என்று தோன்றுகிறது. சங்க தமிழகத்திற்கு நிகரான தொன்மையினை உடைய கிரேக்க சமுதாயத்திலும் உரையாடல் அல்லது பேச்சு பெரிதும் போற்றப்பட்ட ஒரு கலையாக திகழ்ந்திருக்கிறது. சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்றோர் தங்களின் புதுமையான எண்ணங்களை உரையாடல்களின் மூலம் இளைஞர்களுக்கு தெரிவித்தனர். உரையாடல், பலர் முன்னிலையில் உரை நிகழ்த்துதல், அவையில் பேசுதல், உள குறிப்பை உணர்ந்து பேசுதல், பிறருக்கு நன்மை உண்டாகும் வண்ணம் பேசுதல், தீய செய்திகளை பேசாமல் தவிர்த்தல் முதலான பல சிறப்பு கூறுகள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. செவ்வியல் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் அனைத்தும் ஒரு புலவருடைய அல்லது ஓர் இலக்கிய மாந்தருடைய கூற்றாக அமைந்திருப்பதை காண முடிகின்றது. தொல்காப்பியத்தில் நற்றாய் கூற்று, தோழி கூற்று, கண்டோர் கூற்று, வாயில்களின் கூற்று புறப்பாடல்களில் அவனை அவர் பாடியது என்று அமையும் குறிப்புகள் என்றவாறு விரிவான கூற்றுகள் வகுக்கப் பெற்றுள்ளன. இத்தகைய அமைப்பு முறையானது நமக்கு ஒரு செய்தியினை கூறுகிறது. கவியை கூற்றுகள் என்ற அடித்தளத்தின் மீதுதான் கட்டமைக்க முடியும் என்று தொல்காப்பியர் கருதி இருந்தார் என்பதுதான் அச்செய்தி.

**நாநலம் -திருக்குறள்**

திருவள்ளுவர் பேச்சின் முக்கியத்துவத்தை சொல் வன்மை என்னும் அதிகாரத்தில் வற்புறுத்துகின்றார். ஒருவர் எத்துணை நலன்களை பெற்றிருந்தாலும் பேசும் திறன் உடையவராக இருப்பதுதான் உண்மையான செல்வமாகும் என்ற கருத்துப்பட

**நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்**
**யாநலத்து உள்ளதூஉம் அன்று "(குறள் 641)**

என்ற குறளில் கூறுகின்றார்.

நன்கு பேசத் தெரிந்தவன் உலகினரால் மதிக்கப்படுவான் என்ற கருத்தினை

**விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார் பெறின்**

**(திருக்குறள் 648)**

என்ற குறட்பாவில் வள்ளுவர் அமைத்திருக்கின்றார். பேச்சுக்கலைக்கு உலகம் கொடுத்த வரவேற்பினை இக்குறட்பாவின் மூலம் உணர்த்துகின்றார்.

**சொற்பொழிவு என்ற பெயர் தோற்றம்**

மேடைப்பேச்சு இன்று சொற்பொழிவு என்ற அழகிய தமிழ் சொல்லினாலும் குறிக்கப்படுகிறது. இச்சொல் முதன்முதலில் திருநெல்வேலியில் பிறந்ததாக மு.இறைவாணி என்பார் குறிப்பிடுகிறார். இச்சொல் வழக்கிற்கு வரும் முன்னர் உரை, பிரசங்கம் போன்ற சொற்களே நடைமுறையில் இருந்தன. கல்கி அவர்கள் பிரசங்கமும் பிரச்சினைகளும் என்ற தலைப்பில் ஈ. வே. ராமசாமி நாயக்கர், ராஜகோபாலாச்சாரி ஆகியவர்களை பற்றி 12.2.1930 ஆனந்த விகடனில் எழுதியுள்ளார். இதனை மாற்றி சொற்பொழிவு என்ற பழகு தமிழ் சொல்லினை புழக்கத்திற்கு கொண்டு வந்தவர் திருநெல்வேலி தமிழ் அறிஞர் பால்வண்ண முதலியார் என்பவர் ஆவார். தருமை ஆதீனத்தின் முதல் புலவராக திகழ்ந்த அவர் உபன்யாசம், பிரசங்கம் என்ற சொற்களுக்கு மாற்றுச்சொல்லினைத் தேடி ஆய்வு செய்து முடிவில் சொற்பொழிவு என்ற சொல்லை கண்டறிந்தார். சொற்பொழிவாற்றுப்படை என்ற நூலினையும் அவர் இயற்றினார். சொற்பொழிவு எவ்வாறு நிகழ்த்தப்பட வேண்டும், சொற்பொழிவாளர் எவ்வாறு நிற்க

வேண்டும், எப்படி பேசுதல் வேண்டும் என்ற செய்திகளை அவர் அதில் கூறியிருந்தார். இந்நூல் இன்று கிடைக்கவில்லை. இந்நூலினை பலருக்கும் அவர் அன்பளிப்பாக வழங்கி பலருடைய எள்ளலுக்கும் ஆளானார். ஆனால் பால்வண்ண முதலியார் இறுதியில் தமது கொள்கையில் வெற்றி பெற்றார். இன்று பட்டி தொட்டிகளில் எல்லாம் சொற்பொழிவு என்ற சொல்லினை மக்கள் பயன்படுத்த காண்கிறோம்.

**பேச்சாளருக்கான தகுதிகள்**

இப்போது யுகத்தை அணுயுகம் என்று சிலரும், விண்வெளியுகம் என்று சிலரும் கூறுகின்றனர். தகவல் தொடர்பு யுகம் என்று வேறு சிலர் கூறுகின்றனர். இவை ஒரு வகையில் உண்மைதான்; எனினும் இந்த யுகத்தைச் சொற்பொழிவு நாம் வாழும் யுகம் என்று குறிப்பிடலாம் என்கிறார் பேராசிரியர் தி.அ.சொக்கலிங்கனார். சொற்பொழிவில்தான் பொழுது விடிகிறது. அதிலேயே பொழுதும் மடிகிறது. அதிலும்தான் எத்தனை வகை! இலக்கியச் சொற்பொழிவு பட்டிமன்றங்கள், பகுத்தறிவு மன்றங்கள். கருத்தரங்குகள். சிந்தனை மேடைகள் அரசியல் பொழிவுகள், பக்திப் பொழிவுகள், பகுத்தறிவுச் சொற்பொழிவுகள், அப்பப்பா! எண்ணில் அடங்காத வகைகள்! நாட்டின் எந்த மூலையில் எங்கு திரும்பினாலும், ஏதாவது ஒரு சொற்பொழிவு நம் காதில் விழுகின்றது. சொற்பொழிவுகளைக் கேட்காத காதென்ன காதோ? என்று நினைக்கும் அளவுக்கு அக்கடலுள் நாம் தத்தளிக்கிறோம் என்று தி.அ. சொக்கலிங்கம் குறிப்பிடுகின்றார்.? இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பேச்சு உலகத்தில் விரும்பியோ, விரும்பாமலோ நாமும் ஓர் அங்கமாகத் திகழ்கின்றோம். எனவே ஒவ்வொருவரும் பேச்சுக்கலைக்குத் தம்மைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக்கொள்வது இன்றியமையாதது. இவ்வியல் ஒரு சிறந்த பேச்சாளருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் குறித்து விளக்குகிறது.

பேச்சை ஆளும் நபர்தான் பேச்சாளர் என்பது நமக்குத் தெரியும். எந்த ஒரு பணிக்கும் ஒரு தகுதி இருக்க வேண்டும். தகுதியோடு கூடிய திறமையை அந்தப் பணியில் இருப்பவர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இன்று அடிப்படைத் தகுதியே இல்லாத நிறைய பேர் நிறைய பதவிகளில் இருப்பது கண்கூடு. இருந்தாலும் பேச்சாளருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் சிலவற்றை இங்கே சுருக்கமாகக் காணலாம். முதலில் அடிப்படையாகத் தேவைப்படுவது 'முயற்சியும் பயிற்சியும்' தான்.

**முயற்சியும் பயிற்சியும்**

எந்த ஒரு செயலுக்கும் முயற்சி என்பது அடிப்படை. அதற்கு அடிப்படை 'தன்முனைப்பு' (Self interest). தன் முனைப்புடன் கூடிய முயற்சி அவன் வாழ்வில் வெற்றியைத் தரும். "நீ என்னவாகப் போகிறாய்?" என்று சிறு வயதில் கேட்கும்போதே "நான் வருங்காலத்தில் பேச்சாளராகப் போகிறேன்.." என்று பதில் வரும். +2 மாணவர்களிடம் நீங்கள் என்னவாகப் போகிறீர்கள்?" " டாக்டராகப் போகிறேன்" என்று கூறக் கேட்டிருப்பீர்கள். சொன்னால் மட்டும் போதாது. சிறந்த பேச்சாளர் ஆக வேண்டுமென்றால் அவர் பல பேச்சாளர்களின் பேச்சுகளைக் கேட்க வேண்டும்.

ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் 'பேசும் பேச்சாளர் நிகழ்ச்சியில் ஒரு இளைஞனைப் பாராட்டிப் போர் நெல்லைக் கண்ணன், "நீங்கள் தமிழார்வத்துடனும் நினைவாற்றலுடனும் ஏற்ற இறக்கத்துடனும் பேசுகிறீர்கள், அருமையாக உள்ளது... ஆனால், உங்கள் செய்கைகள் ஒரு அரசியல்வாதியின் சாயலைக் கொண்டு உள்ளது. அதை மாற்றிக் கொள்ளுங்கள். உங்களுக்கென்று ஒரு தனிப் பாணியை ஏற்படுத்திக் கொண்டு பேசுங்கள். பிரகாசமான எதிர்காலம் உள்ளது" என்று அறிவுரை கூறினார். அவர் கூறியபடியே அந்த இளைஞர் இன்று ஒரு பிரபலமான தொலைக்காட்சியில் 'விவாத மேடை நிகழ்ச்சியைத் திறம்பட நடத்தி வருகிறார்.

**எண்ண ஓட்டம்**

ஒவ்வொரு மனிதனுக்குமே 'எண்ண ஓட்டம்' என்பது முக்கியம். குறிப்பாகப் பேச்சாளனுக்குத் தன் சொற் பொழிவின்போதும், அதற்குத் தயார் செய்யும்போதும் சீரான எண்ண ஓட்டம் இருப்பது அவசியம்.

எண்ணங்கள் மனிதனின் செயல் வடிவங்களாக மாற்றம் பெறுகின்றன. 'மனம் போல் வாழ்வு' என்பார்களே அது போலத்தான். எண்ண ஓட்டங்களை ஒவ்வொரு பேச்சாளரும் தன்பேச்சின் கருத்தை ஒட்டி ஒருங்கமைவு செய்ய வேண்டும். மனதில் குடும்பப் பிரச்சனை காரணமாகவோ அன்றைய பகல் நேரம் நடந்த சில சம்பவங்கள் காரணமாகவோ சஞ் சலங்கள் தோன்றலாம். அவற்றையெல்லாம் ஓரங்கட்டி விட்டு மனதை ஒருமுகப்படுத்தி பேச்சை நோக்கித் தன் முழுக்கவனத்தையும் செலுத்தினால் சிறப்பு.

**நினைவாற்றல் (Memory Power)**

பேச்சாளருக்குரிய தலையாய தகுதிகளில் ஒன்று 'நினைவாற்றல்'. சிலர் குறிப்புத் தாள்களைக் கையில் வைத்துக் கொண்டு பேசுவார்கள். சிலர் வருடங்கள், நபர்கள், இடங்கள் என்று மிகத் துல்லியமான புள்ளிவிபரங்களைத் தம் விரல் நுனியில்

வைத்திருப்பார்கள். நேரம் பொழுது பார்த்து எடுத்து விடுவார்கள். கேட்பவர்களுக்கு ஆச்சரியத்தையும் உற்சாகத்தையும் ஊட்டுவதாக அமையும்.

சிறுவயது முதலே பேச்சாளர்க்குரிய நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். இலக்கியங்களில் உள்ள மேற்கோள்கள், உலகப் புகழ்பெற்ற சம்பவங்கள், நினைவிடங்கள், குறிப்புகள் பேச்சாளருடைய மூளையில் ஆழப் பதிந்து இருக்க வேண்டும். பல்வேறு நூல்களில் உள்ள செய்திகளை உரிய தக்க சான்றுகளுடன் தேவைப்படும்போது எடுத்துக் கூறவேண்டும். அப்போதுதான் மக்கள் மனதில் இடம்பெறும்.

**பேச்சு வழக்கு**

பொதுவாக பேச்சு வழக்கை இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்குவார்கள்.

1. **இலக்கியப் பேச்சு வழக்கு**
2. **நாட்டார் பேச்சு வழக்கு**

இடம், பொருள், ஏவலைப் பொறுத்துப் பேச்சாளர் தம் பேச்சை அமைத்துக் கொள்ளலாம். ஒரு நிகழ்ச்சிக்குப் பேச்சாளரை நிர்ணயிப்பவர்கள் பேசும் இடத்திற்கும் கேட்பவர்கள் சூழலுக்கும் தகுந்தவாறு பேசக்கூடியவரை நிர்ணயிக்க வேண்டும். இலக்கிய மேடைகளில் பாண்டித்திய நடையில் பேச வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கும். கம்பன் கழகம், கோவில் பெருவிழாக்கள், பக்திச் சொற்பொழிவு ஆகியவற்றில் நடை மிகவும் தரமுடையதாக இருக்க வேண்டும்.

முற்காலங்களில் பட்டிமன்றங்களில் பேச்சாளர்கள் செம்மாந்த மொழி நடையில்தான் பேசினார்கள். ஆனால், காலம் செல்லச் செல்ல அவையோர் ரசனை மாறத் தொடங்கியது. எளிமையை நோக்கிச் செல்லும் தற்காலாறம் தெரும்பான்மையான பேச்சாளர்கள் பேச்சுவழக்கிலேயே பேசத் தொடங்கி விட்டனர். எந்த நடையில் பேச்சாளர் தம் தொடக்கக் காலத்தில் பேசிப் பழகுகிறாரோ அந்த நடைதான் அவருக்குக் கைவரப் பெறும். இடத்திற்கேற்ப பேச்சாளர்கள் தம்பேச்சு நடையை அல்லது பேச்சுமொழியைத் தகவமைத்துக் கொள்வது முக்கியம்.

**மேற்கோள் ஆளும் தன்மை**

மேடைப் பேச்சு சிறப்பதற்கு முழுக் காரணமாகப் பல இருந்தாலும் பல்வேறு அறிஞர்களின் மேற்கோள்களை எடுத்துச் சொல்வதும் ஒன்றாகும். எங்கு? எப்படி? யாருடைய? எந்த மேற்கோளை எங்கே? எப்போது? பயன்படுத்த வேண்டுமோ அந்த இடத்தில் அந்தக் குறிப்பிட்ட மேற்கோளை எடுத்தாளும் திறமை ஒவ்வொரு பேச்சாளனுக்கும் இருக்க வேண்டும்.

வார்த்தைச் சித்தர் என்று போற்றப்பட்ட வலம்புரிஜான் தான் பேசும்போது "நெஞ்சில் உறைந்த எண்ண நெய்யைப் பேச்சால் இப்போது உருக்குகிறேன்" என்று பேச வந்த சூழல் பற்றிப் பேசுவார். சிறுவர்கள் பேச்சுப் போட்டிக்குத் தயார் செய்யும்போது,

பயிற்றுநர்கள், ஆசிரியர்கள் அறிஞர் அண்ணாவின் பேச்சை மேற்கோள் காட்டாமல் இருக்க முடியாது. "தம்பியுடையான் படைக்கு அஞ்சான்", "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்", "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்பன போன்ற வாசகங்கள் அறிஞர் அண்ணாவுக்கே உரித்தான சொற்றொடர்கள். இவற்றையெல்லாம் மேற்கோள் காட்டுவது சபையோரைக் கவர்வதாக அமையும்.

**பன்னூலறிவு**

பேச்சாளர் என்பவன் மேடைக்கு மேடை தன் திறமையைப் பிரகாசிக்கச் செய்யத் தொடர்ந்து முயற்சி செய்வான். காலம் செல்லச் செல்ல மேடைப்பேச்சு அனுபவம் மெருகேறத் தொடங்கும். இரண்டு வகையில் தன் திறமையைப் பேச்சாளர் வளர்த்துக் கொள்ளலாம்.

1. கற்றல் அறிவு
2. கேட்டல் அறிவு

இதனைக் கல்வியறிவு, கேள்வியறிவு என்றும் சொல்லலாம். கற்றலின் கேட்டல் நன்று' என்று சொல்வார்கள். பல நூல்களைப் படித்து, தகவல்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு பேச்சாளனுக்கும் பன்னூலறிவு தேவை.

**"முற்றப் பகலும் முனியாது இனிது ஓதிக்**
**கற்றலின் கேட்டலே நன்று."**

என்று பழமொழி நானூறு கூறுகிறது.

**“செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்"**

என்று வள்ளுவர் கூறினாலும், அதே குறட்பாக்களில் 'முட்டாள் கூற்று பயனில்லை' என்றும் கூறியுள்ளார். பல நூல்களைக் கற்றுணர்ந்து மூளையில் ஏற்றி வைத்துக் கொள்ள வேண்டும்.

1.வரலாற்று நூல்கள்
2. பயண நூல்கள்
3. நகைச்சுவைத் துணுக்குகள்
4. அறிவியல் அறிஞர்களின் நூல்கள்
5. ஆன்மீகம்
6. புதுக்கவிதைகள்
7. ஆய்வு நூல்கள்

இன்ன பிறவகை நூல்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். சொந்தமாகப் பல நூல்களைச் சேகரித்து வைத்துக் கொண்டு தேவைக்கேற்பப் படித்துப் பயன் பெறலாம். பல நூலறிஞர் கருத்துகளைப் பேச்சாளர் தொடர்ந்து எடுத்து வைக்கும் போது மேடை முன் இருக்கும் அவையோர் ஆச்சரியப்படுவார்கள். வரவேற்பார்கள் என்பது திண்ணம்.

**மதிநுட்பம்**

மேற்கூறப்பட்ட தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றால் பேச்சாளர் மதிநுட்பம் வாய்ந்தவரான இருக்க வேண்டும். கூர்மையான நுண்ணறிவுதான் மதிநுட்பம் என்பது.

**மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்**
**யாவுள முன்நிற் பவை (அமைச்சு - குறள் 636)**

இயற்கையாக உள்ள மதிநுட்பத்தை நூலறிவோடு கொண்டவர் முன் நிற்பவை எதுவுமில்லை என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார். அறிஞர் தர்ஸ்டன் ஏழு வகையான நுண்ணறிவுத் திறன் குறித்து எழுதியுள்ளார்.

1. சொல்லாற்றல், 2.சொல் வேகம், 3. எண்ணாற்றல், 4. இட ஆற்றல்,

5. நினைவாற்றல், 6. புலன்காட்சி வேகம், 7. காரண காரியத் தொடர்பு.

சொல்லாற்றல் என்பது சொற்களால் குறிக்கப்படும் பொதுக் கருத்துகளின் பொருள்களை உணர்ந்து அவற்றைச் சிந்தனையில் பயன்படுத்தும் திறன். பேச்சாளர் மதிநுட்பம் வாய்ந்தவராகத் திகழ வேண்டும். ஒருவனுக்கு இன்றியமையாத குணங்களுள் சிறந்தது நாவன்மையாகும். அந்த நலம் ஏனைய நலன்களையும் விட சிறப்புடையது.

**மொழி அறிவு**

பேச்சாளனின் அடிப்படை ஆயுதம் மொழி என்பதால் பேச்சாளன் தன் மொழியில் மிகுந்த அறிவும் திறனும் உடையவனாக இருக்க வேண்டும். மொழித்திறத்தின் முட்டறுத்த ஒருவன் எவ்விதத் தயக்கமுமின்றி மேடையில் ஏறிப்பேச இயலும். ஒருவர் தன்னுடைய தாய்மொழியில் எவ்வளவு புலமை பெற்றிருக்கிறார் என்பதைப் பொறுத்து அவரது பேச்சு அமையும். ஆங்கிலக் கவிஞரான மில்டன் எட்டாயிரம் வார்த்தைகளை தாம் யாத்துள்ள நூல்களில் பயன்படுத்தியுள்ளார். உலகப் புகழ்பெற்ற நாடக மேதையான சேக்ஸ்பியர் தனது நாடகங்களில் பதினைந்தாயிரம் சொற்களைக் கையாண்டுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் என்பார் முப்பத்தி ஐயாயிரம் ஆங்கிலச் சொற்களை உபயோகிக்க வல்லவராக இருந்தார். இங்கிலாந்து பிரதமரான வின்சண்டு சர்ச்சிலுக்கு இருபத்திஐயாயிரம் சொற்களை உபயோகிக்க முடிந்தது. காலம் சென்ற மகா கனம் சீனிவாச சாஸ்திரியார் (இவரை Silver tongue Srinivasa Sastri என்று அழைப்பார்கள்) ஆங்கில மொழியில் இருபத்தி ஐயாயிரம் சொற்களைப் பயன்படுத்த வல்லவராக இருந்தார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் வின்ஸ்டன் சர்ச்சில் கூறிய ஒரு சொல்லைத் திருத்தி வேறு சொல்லைப் பயன்படுத்தும்படி அறிவுறுத்தக்கூடிய அளவிற்கு ஆங்கில மொழியில் புலமை பெற்றிருந்தார் என்று தி.மு.தெய்வசிகாமணி ஆச்சாரியார் கூறும் கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது. எனவே ஒருவர் பெற்றிருக்கும் மொழிஅறிவு அவரது பேச்சின் சிறப்பிற்குக் காரணமாக அமைகிறது.

**சொற்களைத் தெரிவு செய்தல்**

பேசும் பொருளுக்குத் தகுந்த சொற்களைத் தெரிவு செய்து பயன்படுத்துவது பேச்சாளரின் வெற்றிக்கு வழிவகுக்கும். வார்த்தைகளின் வலிமையையும், பொருள் பேதங்களையும், தமிழ் இலக்கியங்களின் உதவியால் நன்கு உணர்தல் வேண்டும். தமிழ் அகராதி. திவாகரம், பிற நிகண்டுகள் முதலியவற்றின் துணை கொண்டு சொற்களைக் குறித்து எழும் ஐயப்பாடுகளைப் போக்கிக் கொள்ளலாம் என்று தி.மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் கூறுகின்றார். அழகிய என்ற சொல்லை உடை, மலர், கட்டடம், சிற்பம் போன்றவற்றிற்கு அடையாகப் பயன்படுத்தலாம். அழகிய உடை. அழகிய மலர், அழகிய கட்டடம் என்றவாறு வரும். அழகிய என்ற இதே சொல்லை மரம், நாய், சொற்பொழிவு போன்றவற்றிற்கு அடையாகப் பயன்படுத்தினால் பொருள் புலப்பாடு சிறப்பாக இருக்காது; மாறாக உயர்ந்த பெரிய நாய், சிறந்த சொற்பொழிவு என்றவாறு அடைகளை மாற்றிப் பயன்படுத்தினால் பேச்சு சிறப்பாக அமைந்துவிடும்.

**உணர்ச்சிகளும் சொற்களும்**

பாவேந்தர் பாரதிதாசன் தமது கவிதைகளில் ஆற்றல்மிகுந்த சொற்களைப் பயன்படுத்தியிருப்பதை உணரலாம். சான்றாகப் 'புரட்சிக்கவி'யில், கவிஞன் உதாரனிடம் மன்னன் பேசும் இடத்தைக் காணலாம்:

**"கொற்றவன் பெற்ற குலக்கொடியைக் கவி**
**கற்க உன்பால் விடுத்தேன் - அட!**
**குற்றம் புரிந்தனையா இல்லையா இதை**
**மட்டும் உரைத்து விடு**
**வெற்றி எட்டுத் திக்கும் முற்றிலுமே சென்று**
**மேவிட ஆளுபவன் நான் - அட!**
**இன்றைக்கு நின்தலை அற்றது! மற்றென்னை**
**என்னென்றுதான் நினைத்தாய்"**

இப்பாடலில் மன்னனின் வீரம், மன்னனின் அதிகாரம், பேசும் சூழ்நிலை, மன்னனின் மனநிலை ஆகிய அனைத்தும் புலப்படும்படிச் சொற்களைப் பெய்து கவிதையினை அமைத்துள்ள திறத்தினை உணர்ந்து மகிழலாம். பெரும்பாலும் வல்லின எழுத்துக்கள், உணர்ச்சிக் குறிப்புச் சொற்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி

பாரதிதாசன் மன்னனின் பேச்சை அமைத்திருக்கின்றார். பேச்சாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய ஒரு நெறிமுறையாக இது அமைகிறது.

கூட்டத்திற்கு காலதாமதமாக வந்த அரசியல் கட்சித் தலைவர் ஒருவர் பின்வருமாறு தன் பேச்சைத் தொடங்குகிறார்: 'மாதமோ சித்திரை! நேரமோ பத்தரை! உங்களைத் தழுவி இருப்பதோ நித்திரை!, நான் தொடங்குகிறேன் எனது சிற்றுரை!' இவ்வாறு பேசத்தொடங்கியவுடன் பாதி உறக்கத்திலிருந்த பொதுமக்கள் எழுந்து அவர் பேச்சை ரசிக்கத் தொடங்கினார்கள். ஒரு பேச்சாளனுக்கு மொழி அறிவு ஒரு சிறந்த ஆயுதமாகும். கலைஞர் மு.கருணாநிதி பேச்சாளனுக்கு மொழிஅறிவு எத்துணை இன்றியமையாதது என்பதைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "சொற்களைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்துவதன் மூலமே எழுத்துக்கலையையும் பேச்சுக்கலையையும் திறமையாகக் கையாளமுடியும். நிறைய நூல்களைப் படிப்பதாலும் நாளேடுகள், கிழமையேடுகள், திங்கள் ஏடுகளைப் படிப்பதாலும் புதிய புதிய சொற்கள் நமக்குப் பழகிப் போய் விடுகின்றன. நாம் பேசும்போது அவை தானாகவே வலிய வந்து விழ வேண்டும். வாக்கியத்திற்கு வாக்கியம் பொருத்தமான சொற்களை மேடையில் ஏறி நின்று கொண்டுத் தேடக்கூடாது. ஓரளவு நாமே ஒரு அகராதியாக விளங்கிட வேண்டும். தொடக்க நிலைப் பேச்சாளர்கள் பயன்படுத்தும் மொழியினால் சிறப்புப்பெற முடியும் என்று கூறும் கலைஞர் கருணாநிதி சான்றாக ஒரு பத்தியை அமைத்துக் காட்டுகிறார். "ஏதென்ஸ் நகரத்து அறிவுக் கிழவன் சாக்ரடீஸைப் போல் பொதுவுடைமைப் பூங்காவிற்கு கருத்துவிதையிட்ட காரல்மார்க்ஸைப் போல் - தன்மானச்சிங்கம் தந்தை பெரியார் விளங்கினார். "இப்பத்தியில் அறிவுக்கிழவன், பொதுவுடைமைப்பூங்கா, கருத்துவிதை, இருளில் ஒளி, தன்மானச்சிங்கம் போன்ற புதிய சொல்லாக்கங்கள் பார்வையாளரை ஈர்க்க வல்லன. இப்பத்தியில் மோனைத்தொடை அமைந்து ஒருவித இசைத்தன்மையும் தொனிப்பதை உணரலாம். பேச்சாளனுக்கு மொழியறிவு எத்துணை இன்றியமையாதது என்பதை இக்கருத்துக்கள் புலப்படுத்துகின்றன.

**இலக்கியப் பயிற்சி**

மேடையில் பேசக் கூடிய பேச்சாளர்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய அருமருந்து இலக்கியமாகும். அரசியல் கூட்டம், தன் முன்னேற்றப் பேச்சுக்கள், அலுவலகக் கூட்டங்கள் பட்டிமன்றங்கள், பாராட்டுக் கூட்டங்கள் என்றவாறு அமையக்கூடிய எக்கூட்டத்திலும் பொருத்தமான இலக்கிய மேற்கோள்களைக் கூறினால் பேச்சு எடுப்பாக அமையும். சர்க்கரைப் பொங்கலிலும் பாயாசத்திலும் தூவி விடப்படும் நெய்யில் வறுக்கப்பட்ட முந்திரி பருப்புகளைப் போல இலக்கிய மேற்கோள்கள் சுவையுடையனவாக இருக்கும்.

**திருக்குறள் - எளிய முறை விளக்கம்**

பட்டிமன்றக் கூட்டத்தில் வறுமை பற்றிப்பேசும் ஒரு பேச்சாளர் திருக்குறளின் நல்குரவு அதிகாரத்தில் உள்ள ஒரு சில குறட்பாக்களை உணர்ச்சியுடன் எடுத்துக் கூறினால் கேட்போர் உள்ளத்தைக் கவரலாம். சான்றாகக் கொடிய வறுமையில் வாடும் ஒருவனால் தூாங்கவும் இயலாது என்ற கருத்தை கூறிவிட்டுப் பின்வரும் திருக்குறளை மேற்கோள் காட்டினால்

**“நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்**

**யாதொன்றும் கண்பாடு அரிது.”**

அக்குறட்பாவிற்கு, "மந்திர மருந்துகளால் ஒருவனுக்கு நெருப்பிடையே கிடந்து உறங்கலுமாம். நிரப்பு வந்துளி யாதொன்றானும் உறக்கமில்லை என்று பரிமேலழகர் உரை கூறுகிறார். இந்த விளக்கம் பொதுமக்களுக்குச் சென்று சேராது என்பதனால் இதனை எளிமையாக விளக்கலாம். 'நான் படுத்துத் தூங்குவதற்கு போதுமான இடம் விட்டு பெரிய வட்டம் போடுங்கள். நெருப்பின் வெக்கை என்னைத் தாக்காமல் தூரத்திலிருக்குமானால் நெருப்பு எரிவது பற்றிக் கவலையின்றி என்னால் தூங்க முடியும். குளிர்சாதன வசதி செய்யப்பட்ட நல்ல அறை. மென்மையான படுக்கை போன்றவையெல்லாம் கொடுத்தாலும் வயிற்றுப்பசியுடன் தூங்கச் சொன்னால் என்னால் தூங்க முடியாது. இதுதான் உண்மை. இதனையே திருவள்ளுவர் மேற்காட்டிய குறட்பாவில் கூறுகிறார் என்று பசியின் கொடுமையைப் புதிய முறையில் புரியும்படி விளக்கலாம். இவ்வாறு விளக்கும் போது மக்கள் இதனை இரசிப்பதுடன் கூட்டத்தின் முடிவில் குறளில் இது எந்த இடத்தில் வருகிறது என்று கேட்பார்கள். பொருத்தமான திருக்குறளை மேற்கோள் காட்டியது பேச்சின் வெற்றியாக அமைந்தது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

**சங்க இலக்கியக் கருத்து**

மதுரை காலேஜ் ஹவுஸ் விடுதியின் மேலாண்மை இயக்குநர் திருக்குறள் செம்மல் மணிமொழியன் அவர்களைப் பாராட்டிப் பேசிய ஒரு கூட்டத்தில் சிறுபாணற்றுப்படையில் வரும் பின்வரும் அடிகளை மேற்கோள்காட்டிப் பாராட்டப்பட்டது.

**"எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்**
**விரிகடல் வேலி வியலகம் விளங்க**
**ஒருதான் தாங்கிய உரனுடைநோன்றாள் "**

இவ்வரிகளைச் சொல்லி முடித்து, இதற்கு விளக்கமும் கூறப்பட்டது. ஏழுவள்ளல்கள். மூவேந்தர்கள் ஆட்சிக் காலங்களுக்குப் பின்னர் நல்லியக்கோடன் எனும் ஒரு சிற்றரசன் தனித்திருந்து ஏழுபேர் ஆற்றிய ஈகை எனும் கடமையைத் தான் ஒருவனாகத் தனித்து நின்று ஆற்றுகிறான். எனவே இவனுக்கு முன்பிருந்த வள்ளல்களைவிடவும், இவன் வலிமையும் ஈகையும் உடையவன் என்று கூறி இதே போல் ஈகைப்பண்பு உடையவர் மணிமொழியன் என்று நிறைவு செய்தபோது அவையினர் இம்மேற்கோளை விரும்பிக் கேட்டனர்.

**பொது அறிவு**

ஒருவருடைய பேச்சு அவையில் கூடியிருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களாலும் சுவைக்கப்பட வேண்டுமாயின் பேச்சில் பலவகைப்பட்ட செய்திகள் இடம் பெறவேண்டும். இலக்கிய மேற்கோள்கள். வரலாற்றுக் குறிப்புக்கள், சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள், வேளாண்மை, பொருளாதாரம், அறிவியல், சமயம், அரசியல், விளையாட்டு, வேளாண்மையியல், பத்திரிகைச் செய்திகள், நடைமுறை வாழ்க்கை நிகழ்வுகள் போன்ற பல்துறைச் செய்திகளையும் தேவையான அளவுக்கு ஒருவர் தம் பேச்சில் கலந்து கொடுக்க வேண்டும்.

**விளையாட்டுச் செய்தி**

ஒரு கூட்டத்தில் ஆய்வு மாணவர் பேசிமுடித்தவுடன் கேள்வி நேரத்தில் முதலாவதாக ஒரு பேராசிரியை எழுந்து வினாக்கள் தொடுத்தார். நான் அமர்வின் முடிவில் நன்றி கூற எழுந்த போது நேரம் ஆகிவிட்டமையால் அவையினர் சோர்வடைந்திருந்தனர். நான் எழுந்து 'இவ்வரங்கில் தொடக்க ஆட்டக்காரராக அமைந்து வினாக்கள் தொடுத்த பேராசிரியைக்கு நன்றி" என்று கூறினேன். தொடக்க ஆட்டக்காரர் என்பதை ஆங்கிலத்தில் Opening Batsman என்று குறிப்பிட்டவுடன் அவையினர் மகிழ்ந்து சிரித்தார்கள். பின்னர் தொடர்ந்து பேசுவதற்கு அரங்கு ஏற்றதாக அமைந்தது.

**பெண்கள்**

பெண்கள் முன்னேற்றம் பற்றி நடைபெறும் கூட்டங்களில் கல்பனா சாவ்லா", "சானியா மிர்சா" போன்ற வீர மங்கையர்களைப்பற்றிக் குறிப்பிட்டால் அரங்கம் கைதட்டலால் அதிர்வதைக் காணலாம்.

**உழைப்பு**

கடின உழைப்பின், சிறப்புகளைப் பற்றிப் பேசும் போது தாமஸ் ஆல்வா எடிசன் பற்றிக்குறிப்பிடுவது சுவையுடையதாக இருக்கும். உழைப்பில் ஒன்றிப்போயிருந்த "ஆல்வா எடிசன் தனது திருமண நாளினை மறந்து ஆய்வகத்திற்குள் நுழைந்துவிட்டார். அவரது நண்பர்கள் அலைந்து திரிந்து மணமகனான எடிசனை அவரது ஆய்வகத்தில் கண்டு பிடித்துத் திருமண அரங்கிற்கு அழைத்து வந்தனர். இச்செய்தியை மேடையிலேயே குறிப்பிடும் போது அவையினர் விரும்பிக் கேட்பார்கள். இதனைக் கூறிவிட்டு, எடிசன் உண்மையிலேயே மறதியினால் திருமண மேடைக்கும் போகாமல் இருந்தாரா? அல்லது பயந்துகொண்டு மறந்தது போல் நடித்தாரா? தெரியவில்லை என்று கூறும்போது அவையில் சிரிப்புத் தோன்றும். திரைப்பட வாய்ப்பைத் தேடிச்சென்ற எம்.ஜி. ராமச்சந்திரன் தோல்வியினால் தளர்ந்த போது கலைவாணரின் நம்பிக்கை மிகுந்த வார்த்தைகளால் மீண்டும் உழைக்கத் தொடங்கினார். தமிழ் நாட்டு மக்கள் மனத்தில் நீங்காத இடத்தினைப் பெற்றார். திரைப்படம் தொடர்பான இச்செய்தி மேடையிலேயே கூறப்படுகின்ற போது மக்களின் ஏற்பினைப் பெறும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு பேச்சாளனுக்குப் பல்துறை சார்ந்த பொது அறிவு இன்றியமையாத தேவையாகிறது.

பேச்சாளர் பொது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டுமாயின் எண்ணற்ற நூல்கள், கட்டுரைகள், பத்திரிகைச் செய்திகள் முதலியவற்றைப் படித்துத் தொகுத்துக் குறிப்புக்களாக வைத்துக் கொள்ள வேண்டும்; அதைவிட நினைவில் வைத்துக் கொள்வது மிகமிக நல்லது.

**வாழ்க்கை அனுபவங்கள்**

வாழ்வியல் அனுபவங்களை உற்றுநோக்கி அவற்றைப் பேச்சில் பயன் படுத்துவதும் உற்றுநோக்கலின் பாற்படும். ஒருமுறை நானும் என் துணைவியாரும் திருமண அன்பளிப்பு வழங்குவதற்காக பாத்திரக் கடையில் ரூ 500 கொடுத்து ஒரு பாத்திரம் வாங்கினோம், பாத்திரம் விலை பேரம் பேசிய பிறகு வாங்கப்பட்டது. பாத்திரத்தில் பெயர் பொறிக்கும் வேலை செய்யும் ஒருவர் வெளியில் அமர்ந்திருந்தார். அவரிடம் பாத்திரத்தைக் கொடுத்து பெயரைப் பொறிக்கச் சொன்ன போது ஒரு எழுத்துக்கு 25 பைசா கூலியாகக் கேட்டார். உடனே என் துணைவியார் "20 பைசா வாங்கிக்கொள்ளப்பா!" என்று பேரம் பேசினார். பெயர் பொறிப்பவர். "25 பைசாவீதம்

மொத்தக்கூலி ரூ.3.75 "பைசாதான் வருகிறது. 500ரூபாய்க்கு பாத்திரம் வாங்கிய நீங்க இந்த ஏழைக்கு 3.75 பைசா கூலி கொடுக்கக்கூடாதா எனக் கேட்டான். நான் உடனே தலையிட்டு ரூ.3.75 பைசாவே நீ வாங்கிக்கொள் என்று பேரத்திற்கு முடிவு கட்டினேன். என் துணைவியார் என்னை முறைத்துப் பார்த்துவிட்டு அமைதியானார்கள். இந்த நிகழ்வு எனது மனத்தில் தங்கியிருந்தது. பின் நாட்களில் ஈரோட்டில் நடந்த ஒரு பட்டிமன்றத்தில், 'பெண்கள் வேலைக்குச் செல்வதால் நன்மையே! துன்பமே என்ற தலைப்பில் பேசியபோது, வேலைக்குச் செல்லும் பெண்கள் பணம் செலவாவதைப்பற்றி அதிகம் கவலைப்பட மாட்டார்கள் என்றும் வீட்டிலிருக்கும் பெண்கள் ஒவ்வொரு பைசாவையும் பார்த்துப்பார்த்துச் செலவு செய்வார்கள் என்றும் கூறினேன். அதற்கு எடுத்துக்காட்டாக மேற்கண்ட நிகழ்ச்சியை நான் கூறினேன். இதுபோல, பூக்காரிகளிடம், காய்கறி விற்பவர்களிடம் பெண்கள் பேரம் பேசுவதையும் கூறினேன். எதிரணியிலே பேசிய அம்மையார் பொருளாதாரத்தில் (Economics) டாக்டர் பட்டம் பெற்றவர். நான் தமிழ்ப் பேராசிரியர், "எதிரணி பேச்சாளர் எக்கனாமிக்ஸ்ல டாக்டர் பட்டம் வாங்கினவங்க! நான் என் மனைவியைப் பார்த்து அனுபவ எக்னாமிக்ஸ் படிச்சவன் என்று வேடிக்கையாகக் கூறினேன். கூட்டத்தினர் 'அனுபவ எக்கனாமிக்ஸ்' என்ற வார்த்தைப் பிரயோகத்தை மிகவும் ரசித்தனர். என்றோ நடந்த ஒன்றை உற்றுநோக்கிப் பேச்சில் சரியான இடத்தில் பொருத்திக் காட்டியதற்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. எனவே பேச்சாளருக்கு உற்று நோக்கல் பயன்படக் கூடிய நல்ல அருமருந்தாகும்.

மேலும் பேச்சாளர் மேடையில் அமர்ந்திருக்கும் போது, தனக்கு முன்னே பேசிக்கொண்டிருக்கும் பேச்சாளரின், தனக்கு ஏற்படும் சிந்தனைகளைக் குறித்து வைத்துக்கொண்டு அவற்றினை தன் பேச்சில் வெளிப்படுத்தலாம். அதனால் ஒரே மேடையில் பேசும் சூழ்நிலைகளில் ஒரு பொருள் தொடர்ச்சி ஏற்பட வாய்ப்பு உண்டு.

**தனித்தன்மை**

இவ்வுலகம் இயற்கை வேறுபாடுகளால் ஆனது. ஒன்றைப் போலப் பிறிதொன்றில்லை. ஒரு மனிதனைப் போல இன்னொருவர் இல்லை. ஒரு நாளைப் போல இன்னொரு நாளில்லை. மாற்றமும் வேறுபாடுகளும் உலகின், வாழ்க்கையின் இயல்புகளாக அமைந்திருக்கின்றன. எனவே பேச்சாளர்களும் பல திறத்தினராக இருப்பார்கள். ஒருவருடைய பேச்சுப் பாணியைப் பிறிதொருவர் கவனித்துத் தனக்கெனத் தனிப்பாணியை உருவாக்கிக்கொள்ள வேண்டும். ஒருவரைப் பார்த்து நாம் பேசத்

தொடங்கலாம். ஆனால் அவரைப் போலவே பேச முயற்சி செய்வது பெரும் தவறாகும். "நான் கேட்ட அளவில் சிறந்த பேச்சாளர்கள் எவருமே இன்னொருவர் பாணியை பின்பற்றிப் பேசியதில்லை. அவரவரும் அவரவருக்கே உரிய பாணியில் பேசுகிறார்கள்" என்று குமரி அனந்தன் கூறுகிறார்.

**பேச்சாளர்கள் பலவிதம்! திறன்களும் பலவிதம்!**

உடை அலங்காரம், மேடையில் நிற்கும்முறை, முக பாவனைகள், சிகை அலங்காரம், உடல்மொழி, குரல் அமைப்பு என்றின்ன பிற கூறுகளின் அடிப்படையில் வளரும் பேச்சாளர் தனக்கெனத் தனிப் பாணியை வளர்த்துக் கொள்ள வேண்டும். திருக்குறள் முனிசாமி, குரல் ஏற்ற இறக்கங்களின் மூலம் நகைச்சுவையை வருவிப்பார். ஜெயகாந்தன் பேசும்போது பேச்சின் ஊடே முக்கிய செய்திகளைக் கூறும் போது மிக விரைவாகவும் உரத்த குரலிலும், கேள்வி கேட்கும் தோரணையிலும் கூறுவார். பேச்சாளர் நெல்லைக் கண்ணன், இயல்பாகப் பேசி பாடல்வரிகளைக் கூறும் போது மிகவிரைவாகவும் உரத்த குரலிலும் கடகட வென மழை போல் கொட்டுவார். கிருபானந்த வாரியார் உச்ச ஸ்தாயிக்குரலில் மிக நிதானமாக இழுத்துப்பேசி கருத்துக்களைக் கூறுவார். திண்டுக்கல் லியோனியின் பேச்சில் திரைப்படப்பாடல்கள் அதிகமாகக் கலந்திருக்கும். அறிஞர் அண்ணாவின் பேச்சு ஆற்றொழுக்குப் போல கரகரப்பான குரலில் அமைந்திருக்கும். இவையெல்லாம் தனித்தனி பாணிகள். இவை அவரவர்களுக்கே உரியவை. இவற்றை இன்னொருவர் பின்பற்றுவது என்பது புலியைப் பார்த்து பூனை சூடுபோட்டுக் கொண்டதைப் போலாகும்; அல்லது கான மயிலாட கண்டிருந்த வான்கோழி தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடுவதைப் போலாகும். எனவே வளரும் பேச்சாளர் தனக்கென ஒரு பாணியை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ் மொழியில் பேச்சுக் கலை பற்றி முதல் நூல் எழுதிய தெய்வசிகாமணி ஆச்சாரியார் பேச்சாளனுக்குத் தனித்தன்மை தேவை என்பதைப் பெரிதும் வற்புறுத்துகின்றார். ஒரு பேச்சாளர் "தமது இயற்கைப் பேச்சுப் போக்கை விடுத்து அவரைப் போல் எல்லா வகையிலும் நடித்துப்பேச முயலுதல் அடாத செயலாகும். அங்ஙனம் பேச முற்படுவோர் தமது சொந்த வன்மையையும் இழந்து ஆழ்ந்து ஆசித்த பிறர் சக்தியையும் அடையாது திரிசங்கு நிலை போலாவர்."

**உண்மை பேசுதல்**

மேடைப்பேச்சு சிறப்பதற்கு உண்மைத் தன்மை மிக அவசியமாகும். "உள்ளத்திற்கும் உச்சரிக்கப்படும் சொற்களுக்கும் தொடர்பு இருக்கவேண்டும் " என்று

கலைஞர் மு. கருணாநிதி கூறுகிறார். தி.மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார்; ஒரு நல்ல பேச்சாளரிடம் எதிர்பார்ப்பது அப்பேச்சாளரின் உண்மை உள்ளமேயாம். அவ்வுள்ளத்தை நூலறிவு கொண்டு பெருக்கி, மெருகிட்டுப் பேசும் பேச்சாளரே பெரும் பேச்சாளர் அல்லது பெரும் நாவலராவார் என்று பேச்சில் உண்மை தேவை என்பதை வற்புறுத்துகிறார்.

அரங்கில் வீற்றிருப்போர் பேச்சாளரைப் போலவே ஞானம் உடையவர்களாக இருக்கக் கூடும். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் மேடைக்காக வருவித்துக் கொண்டு செயற்கையாகப் பேசாமல் பேச எடுத்துக்கொண்ட பொருளுக்கு நேர்மையுடையவராக அமைந்து பேசவேண்டும். பேச்சாளருக்கு விதியின் மீது நம்பிக்கையிருந்தால் விதியின் வலிமை பற்றிய அவரது பேச்சு சிறப்பாக அமையும். ஒருவருக்கு விதியிலும் நம்பிக்கையிருந்து அதே சமயம் உழைப்பினால் முன்னேற வேண்டும் என்ற துடிப்பும் இருந்தால் அவருடைய பேச்சு விதிக்கும் உழைப்பிற்கும் இடையிலான போராட்டமாக அமைந்து கேட்பவருக்குச் சுவையுடையதாக இருக்கும். இன்றைய சூழலில் மனிதனுக்குத் தேவை சத்தியமா சாமர்த்தியமா என்பது போன்ற தலைப்புக்களில் பேசுவோர் ஒன்று சத்தியத்தின் மீது பற்றுடையவர்களாக இருக்க வேண்டும்; அல்லது சாமர்த்தியத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க வேண்டும்: இத்தகையோர் பேசும் போது, ஒருவர் மற்றொருவரை விஞ்சிச் செல்லும் பண்பு காணப்படும். இதனால் நிகழ்ச்சி சிறப்பாக அமைகிறது.

**அச்சமின்மை**

பேச்சாளரிடம் இருக்கவேண்டிய அடிப்படைத் தகுதி அச்சமின்மைதான். உலகின் தலைசிறந்த பேச்சாளர்கள் தொடக்க நிலையில் மேடையில் பேசுவதற்கு அஞ்சியவர்கள்தான். புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் அடிசன் என்பார் பேசுவதற்காக எழுந்து நின்றார். நான் கருதுகிறேன் என்னும் பொருள்படும்படியாக "| Conceive" என்று தொடங்கினார். பயத்தினால் பேசமுடியாமல் தடுமாறி மீண்டும் ஒரு முறை "| Conceive" என்று ஆரம்பித்தார். மூன்றாம் முறையாக "I Conceive" என்று தொடங்கினார். மீண்டும் பய உணர்ச்சியினால் பேசாமல் நாற்காலியில் உட்கார்ந்து விட்டார். அவரைத் தொடர்ந்து பேச இருந்த இன்னொரு பேச்சாளர் எழுந்து நின்று "நண்பர் மூன்று முறை முயற்சித்தும் ஒன்றும் பேசவில்லை என்பதைக் கிண்டலுடன் Our friend Conceived thrice but delivered nothing" என்று கூறியவுடன் அரங்கமே சிரித்தது. ஏனென்றால் Conceived என்ற சொல்லுக்கு கருத்தரித்தல் என்ற பொருளும் உண்டு. அப்படி நோக்கினால் நண்பர் மூன்று முறை கருத்தரித்தும் ஒன்றுகூடப் பெறவில்லை என்ற பொருளும் அதற்கு உண்டு. எனவே

அவையினர் சிரித்தனர். அச்சமுடைய ஒருவர் அவையில் வெல்ல இயலாது என்பதற்கு இதுவும் சான்று.

**சுவாமி விவேகானந்தர்**

இந்தியாவின் ஆன்மீக விளக்கான சுவாமி விவேகானந்தர் முதன்முறையாக மேடையில் பேசிய போது, பேச இயலாது தடுமாறியதைக் குறிப்பிடுகிறார். "நான் மேடை ஏறியதும் என் நாக்கு வறண்டு போனது. தொண்டை அடைத்தது. உடலெங்கும் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. ஒரு கணம் என் மூச்சு நின்றுவிடுமோ என்று தோன்றியது. முதலில் இவ்வாறு அஞ்சிய சுவாமி விவேகானந்தர் பின்னாட்களில் இந்தியப் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் மேன்மைகளை 'சிகாகோ'வில் நிறுவும் அளவிற்கு வளர்ந்தார். ஒவ்வொரு மேடையிலும் தன்னுடைய ஆளுமையை நிரூபித்தார். எனவே பேச்சாளன் என்பவன் முதற்கண் அச்சத்திலிருந்து விடுபட வேண்டும். 'அறியாமையிலிருந்து பிறப்பதே அச்சம்' என்று 'எமர்சன்' என்னும் அறிஞர் கூறுவதை நினைவில் கொள்ள வேண்டும். கவியரசர் தாகூர் 'எங்கே மனம் அச்சமற்று இருக்கிறதோ அங்கு சொர்க்கம் உதயமாகிறது' என்று கூறுகின்றார். எனவே பேச்சாளன் முதலில் கைவிட வேண்டிய பண்பு அச்சமாகும்.

**அச்சம் பிறப்பது எவ்வாறு?**

மேடையில் பேசுபவர்களுக்கு அச்சம் எவற்றால் ஏற்படுகின்றது என்பதைப் புரிந்து கொண்டால் அச்சத்தை எளிதில் களைந்து விடலாம். முதலில் மேடையில் தோன்றுபவர்க்குச் சக பேச்சாளர்களைக் கண்டு அச்சம் ஏற்படலாம். அரங்கில் அமர்ந்திருக்கின்ற பார்வையாளர்களைக் கண்டும் சில நேரங்களில் பேச்சாளருக்கு அச்சம் ஏற்படும். நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்காக வந்திருக்கும் முக்கியப் பிரமுகர்களைப் பார்க்கும்போதும் அச்சம் ஏற்படும்.

**அச்சத்தைப் போக்குதல்**

கன்னிப் பேச்சாளன் அஞ்சுவதற்குப் பதிலாக மற்ற பேச்சாளர்களின் பேச்சுமுறை பற்றி மனத்திற்குள் ஆய்வு செய்யலாம்; தான் எப்படிப் பேசினால் நன்றாக இருக்கும் என்ற திட்டத்தினை வகுத்துக்கொண்டு இருக்கலாம். இருட்டில் புது இடத்தில் நடந்து செல்லும் ஒருவர் பயத்தைப் போக்கிக் கொள்வதற்குத் தனக்குத்தானே பாடிக் கொள்வதில்லையா? அதைப் போலத்தான் இதுவும். சக பேச்சாளர்கள், பார்வையாளர்கள், முக்கியப்

பிரமுகர்கள் எல்லோருமே நம்மைப் போல மனிதர்கள்தான் என்றும், அவர்களுக்கும் தெரியாத அநேக விஷயங்கள் உலகில் இருக்கக்கூடும் என்றும் மனத்தில் எண்ணிக்கொண்டால் பயம் மாறித் துணிவு பிறக்கும்.

**"மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும்என்**
**பண்கண்ட அளவில் பணியச்செய்வாய் படைப்போன் முதலாம்**
**விண்கண்ட தெய்வம்பல் கோடியுடண் டேனும் விளம்பில் உன்போல்**
**கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலா வல்லியே"**

இப்பாடல் குமரகுருபரர் பாடிய சகலகலாவல்லி மாலையில் இடம் பெற்றிருக்கும் ஒரு பாடலாகும். கடவுள் நம்பிக்கை உண்டா? இல்லையா? என்ற வினாவுக்கு இடம்தராமல் மனத்தில் துணிவு பிறப்பதற்கு பயன்படக்கூடிய ஒரு மந்திரச் சொல் என்று இதைக் கருதி இப்பாடலை மனத்திற்குள் சொல்லிப் பழகலாம். ஏனென்றால் தன் சொல்லாற்றலுக்கு முன் மன்னர்கள் பணிந்து நிற்க வேண்டும் என்ற விருப்பத்தினை இப்பாடலின் வழிக் குமரகுருபரர் வெளிப்படுத்துகிறார்.

**பன்முறை பேசுதல் - பெர்னாட்ஷா**

அச்சத்தைப் போக்குவதற்குரிய பிறிதொரு வழி பன்முறை பேசிப்பேசி பயிற்சி பெறுவதாகும். நாடக மேதை 'பெர்னாட்ஷா' முதல் கூட்டத்தில் பேசுவதற்காக, தன் நண்பன் 'லெக்கி'யுடன் சென்று பேச இயலாமல் தோல்வியுற்றுத் திரும்பினார். பலரும் பெர்னாட்ஷாவைப் ஏளனம் செய்ய அவர் மனம் தளராமல் தொடர்ந்து கூட்டங்களில் பேசுவதென முடிவு செய்தார். பெர்னாட்ஷா தம் இளம் வயதிலேயே ஜான் ஸ்டுவர்ட் மில், டார்வின், டின்டால். ஜார்ஜ் எலியட் போன்றோரின் கருத்துக்களை நன்கு படித்திருந்தார். எனவே பல கூட்டங்களில், தெருமுனைகளில் கூட அவர் பேசத் தலைப்பட்டார். தன்னுடைய பேச்சை மக்கள் கேட்கிறார்களா? இல்லையா? என்றெல்லாம் கவலைப்படாமல் உற்சாகமாகப் பேசினார். ஒரு நாள் கொட்டும் மழையில் அவர் பேசும்போது மக்கள் ஒருவர்கூட இல்லாமல் ஆறு போலீஸ்காரர்கள் மட்டும் அவரது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர். இவ்வாறு இரவு பகல் பாராது உழைத்துப் பயிற்சி பெற்றமையினால் பெர்னாட்ஷா உலகம் போற்றும் சிறந்த பேச்சாளராகப் பெற்றார். காலப் போக்கில் சிறப்புக் கூட்டங்களிலும் சோசலிசச் சார்புடைய புகழ் கூட்டங்களில் மட்டும் பேசுவதென முடிவு செய்து சாதாரணக் கூடங்களில் பேசுவதைத் தவிர்த்தார். பெர்னாட்ஷா தன்னைப் பற்றிய இச்செய்திகளை ‘‘நான் எவ்வாறு பொதுக்கூட்டப் பேச்சாளரானேன்" (How I became a public speaker) என்ற கட்டுரையில் விரிவாகக்

குறிப்பிடுகிறார். மேடைப்பேச்சு பயம் உள்ளவர்கள் இக்கட்டுரையைப் படித்தால் தன்னம்பிக்கை பெறலாம்.

**குரல்வளம்**

மேடைப் பேச்சாளனுடைய மிக முக்கிய ஆயுதம் அவனுடைய குரல்வளம்தான். பேச்சாளர் உடல் தோற்றம் மிடுக்காக இருந்தும் குரல்வளம் சரியாக அமையவில்லை என்றால் பேச்சில் அவர் வெற்றிபெற இயலாது. குரல்வளம் என்றால் என்ன? என்ற வினாவிற்கு, எவருடைய குரல் கூட்டத்தினருக்குத் தெளிவாய் கருத்துக்களைக் கொண்டு சேர்க்கிறதோ அதுவே நல்ல குரலாகும் என்பதுதான் விடை. மனிதர் அனைவருக்கும் கர்ஜிக்கும் சிம்மக் குரல் (Sonorous Voice) இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது. 'சிம்மக் குரலோன்களாக இல்லாதவர்கள் எல்லாம் பேச்சுத் துறையை விட்டு விலகி விடவும் முடியாது. எனவே பேச்சாளனின் குரல் கேட்போரின் மனதைத் தொடும் வண்ணம் சீராகவும், ஆணித்தரமாகவும், பிசிறு இல்லாமலும் இருந்தாலே அது வளமான குரல் என்று கூறப்படும்.

**கர கரப்பான குரல்**

தமிழ்நாட்டு அரசியல்வாதிகளில் பலருக்குக் கரகரப்பான குரல் இருந்தது. அக்குரலிலேயே அவர்கள் பேசி மக்கள் மனத்தைக் கவர்ந்தார்கள். அவர்களுக்குப் பின்னே வந்த பலரும் தங்கள் இயற்கைக் குரலை விடுத்துக் கரகரப்பான குரலில் பேசி மக்கள் மனத்தில் இடம்பெற முயற்சி செய்தார்கள்.

**குரல் சீரமைப்பு**

குரல்வளம் சீராக இல்லாதவர்கள் குரல் பயிற்சி மூலம் தங்கள் குரலைச் செம்மை செய்து கொள்ளலாம். தனியாக ஓரிடத்தில் இருந்துகொண்டு பாரதியார், பாரதிதாசன் போன்ற மகா கவிஞர்களின் எழுச்சி மிகுந்த பாடல்களை உரத்த குரலில் வாய்விட்டுப் பேசப்பேச ஒருவருடைய குரல் பக்குவமடையத் தொடங்கும்.

**பயிற்சி இரண்டு**

'ரீடர்ஸ் டைஜஸ்ட்' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் வெளியீடான "How to write and speak better" என்ற நூலில் ஒரு பயிற்சி கூறப்பட்டுள்ளது. இயல்பாகவே அடங்கிய குரல் உடையவர்கள் தனி இடத்திற்குச் சென்று ஒன்று முதல் பத்துவரை தொடர்ந்து

எண்ண வேண்டும். அவ்வாறு எண்ணும்போது தொடக்கத்தில் அடங்கிய குரலிலும் படிப்படியாக குரலை உயர்த்திக் கொண்டும் எண்ண வேண்டும். இவ்வாறு தொடர்ந்து பன்முறை செய்தால் குரல்வளம் சீரடையும். குரலை உயர்த்துவதும் தாழ்த்துவதும் சரியாக அமைகிறதா என்று சரிபார்த்துக் கொள்ள ஒரு ஒலிநாடாக் கருவியையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது.'

**குரல் பாதுகாப்பு**

பனங்கற்கண்டு, மிளகு போன்றவற்றை மென்று குரல் கரகரப்பைப் போக்கிக் கொள்ளலாம். பேசத் தொடங்கும் முன்னர் குளிர்பானங்களை அருந்தாமல் இளம் வெண்ணீர் அருந்திவர குரல் பிசிறு தட்டாமலிருக்கும். காலை நேரத்தில் ஒரு தேக்கரண்டி அளவு தேனை தண்ணீரில் கலந்து உறிஞ்சிக் குடிப்பது குரலுக்கு நல்லது தரும் என்று குமரிஅனந்தன் கூறுகிறார். தினமும் மூச்சுப் பயிற்சி செய்து வர குரல் செம்மையாக அமையும் என்றும் கூறுவர்.

குரலினைப் பாதுகாக்கும் சில வழிமுறைகளை "How to write and speak better" என்ற நூல் குறிப்பிடுகின்றது; இவ்வழிமுறைகளைப் பேச்சாளர் தெரிந்து கொள்வது நல்லது என்பதால் அவை இங்கு தெரிவிக்கப்படுகின்றன.

1.உங்களுடைய குரலுக்கு முறையான ஓய்வு தரவேண்டும். தொடர்ந்து பல மணி நேரங்கள்பேச வேண்டிய நிலை ஏற்பட்டால் மூச்சுப் பயிற்சி மூலம் குரல் நாண்களைப் பலப்படுத்திக் கொள்ளலாம்.
2. புகைப்பிடித்தல், மது அருந்துதல் முதலிய பழக்கங்களைக் கைவிட வேண்டும். இவை தொண்டையைப் பாதிக்கும்.
3. பேசத் தொடங்கும் முன்னர் பால், வெண்ணெய், பாலாடைக்கட்டி முதலியவற்றை உண்பதைத் தவிர்க்க வேண்டும்.
4. பின்னிரவுகளில் உறங்கச் செல்லும் நாட்களில் கனமான, காரம் மிகுந்த உணவு வகைகளை அளவிற்கு அதிகமாக உண்ணக் கூடாது. இரவில் இவற்றைச் சீரணிப்பதற்காகச் சுரக்கும் அமிலம் தொண்டையையும் பாதிக்கும்.
5. வறட்சியான, வெப்பத்தன்மை மிகுந்த அறைகளில் தங்குவதைத் தவிர்க்க வேண்டும்.
6.பெருங்கூட்டங்களில் பேசத் தொடங்கும் முன்னர் சிறிது குரல் பயிற்சி செய்து கொள்ள வேண்டும். காலையில் எழுந்தவுடன் உடலைச் சூடுபடுத்திக்

கொள்வதற்காகச் சிறு பயிற்சிகள் செய்பவரைப் போல குரலை ஆயத்தம் செய்துகொள்ள வேண்டும்.

**மேற்குரலும் கீழ்க்குரலும்**

ஒருவர் தனக்குக் கீழ்ஸ்தாயி குரல் அமைந்துவிட்டதற்காக வருந்த வேண்டியதில்லை. ஏனென்றால் கீழ்ஸ்தாயி குரலிலேயே மிக அருமையாகப் பேசி மக்கள் மனம் கவர்ந்த பேச்சாளர்கள் பலர் உண்டு. சான்றாகத் திருக்குறளார் முனிசாமி, கி.ஆ.பெ.விசுவநாதம், தமிழருவி மணியன் போன்றோர் மக்கள் மனத்தில் நீங்காத இடம் பெற்றுள்ளவர்கள். இவர்களது குரலும் பேச்சும் கீழ்ஸ்தாயியில் அமைந்திருந்தாலும் மேல்ஸ்தாயிப்பேச்சாளர்களை விடத் தெளிவும், உருக்கமும் அதிகாரப்பூர்வதன்மையும் (Authoritativeness) கொண்டு மக்கள் செவிவழிப் புகுந்து கருத்தினில் நிற்பதை உணர்க. பாவேந்தர் பாரதிதாசன், சாலமன் பாப்பையா, நெல்லை கண்ணன், வை.கோ போன்ற பல பேச்சாளர்கள், தியாகராஜ பாகவதர், எம்.எஸ் போன்றோர் மேல்ஸ்தாயி குரல் அமைப்பிற்குச் சான்றாக நிற்பவர்கள். குரல் எவ்வாறாகிலும் தன்னம்பிக்கையுடன் கருத்துக்களைத் தெளிவுற எடுத்துரைப்பவரே மதிக்கப்படுகிற பேச்சாளராவார். தொடக்கநிலைப் பேச்சாளனுக்குத் தன்னம்பிக்கை குறைகிறபோதும் பேச்சுக்குரிய பொருளில் ஈடுபாடு குன்றுகிறபோதும் புற அடையாளமாகக் குரல் தாழ்ந்து ஒலிப்பதுண்டு என்று "ரீடர்ஸ் டைஜஸ்ட்" கூறுவதையும் இங்கு நினைத்துப் பார்க்கலாம். எனவே பேச்சுக்குரிய பொருளில் ஈடுபாட்டினைப் பேச்சாளர் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரே சமயத்தில் கீழ்ஸ்தாயி, மேல்ஸ்தாயி குரலை நிறுத்திப் பாடும் திறன் பல பாடகர்களிடம் உண்டு; இவர்களுள் சோழவந்தான் தென்கரையைச் சேர்ந்த டி.ஆர். மகாலிங்கம் என்ற பழம்பெரும் நடிகரைக் குறிப்பிடலாம். "தீர்த்தக்கரையினிலே செண்பகத் தோட்டத்திலே", "செந்தமிழ்த் தேன் மொழியாள் நிலாவெனச் சிரிக்கும் மலர்க் கொடியாள்" முதலிய பாடல்களில் டி.ஆர்.மகாலிங்கத்தின் குரல் விளையாட்டுக் கலையை உணரலாம். ஓர் எடுத்துக்காட்டாக இச்செய்தி இங்குக் கூறப்பட்டது. புலவர் கீரனின் சொற்பொழிவுகளைக் கேட்டவர்கள் அவரது குரலில் ஏற்ற இறக்கங்களையும், அவற்றின் அழகியல் விளைவுகளையும் நன்குணர்வார்கள். மகாபாரதக் கதையைப் புலவர் கீரன் கூறிச் செல்கின்றபோது குரல் ஏற்ற இறக்கங்களால் அவையோர் கட்டுண்டு கண்ணீர் சிந்தி இரசித்ததுண்டு. இசைக்கு மட்டுமல்லாமல் பேச்சாளர்களின் குரல் இனிமைக்கும் மக்களை ஈர்க்கிற ஆற்றல் உண்டு.

**தோற்றப் பொலிவு**

பேச்சாளனின் வெற்றியில் குறிப்பிடத்தகுந்த சதவிகிதம் அவனுடைய தோற்றப் பொலிவில் அமைந்திருக்கிறது. மேடைக்குப் பேசச் செல்லும் முன் பேச்சாளர் சிறந்த உடைகளை அணிந்துகொள்ள வேண்டும். மக்கள் மனத்தில் இடம்பெற்றுவிட்ட பேச்சாளரின் தோற்றத்தில் சிறுமாற்றம் வருவதைக்கூட மக்கள் விரும்புவதில்லை. ஜவஹர்லால் நேரு, பெருந்தலைவர் காமராஜர், சிலம்புச் செல்வர் மா.பொ.சி. முதலிய பல தலைவர்களின் உருவ அமைதி மக்கள் மனத்தில் பதிந்து விட்டவையாகும். எனவே பேச்சாளர் தன் உருவத்தை மக்கள் மனத்தில் பதிய வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

**உடை**

வளரும் நிலையிலுள்ள பேச்சாளர் எப்போதும் தூய்மையான, அளவான உடை அணிந்து செல்ல வேண்டும். உடையில், தோற்றத்தில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் மக்கள் அவரது பேச்சைக் கவனிக்காமல் குறைபாட்டினையே கவனிக்கக்கூடும். உதாரணமாகக் கலைந்த தலைமுடி, பொத்தல் விழுந்த சட்டை முதலியவை மக்கள் மனத்தைத் திசை திருப்பக்கூடியவை. எனவே பேச்சாளர் தலையைப் படிய வாரி, தூய்மையான ஆடை அணிந்து மேடைக்குச் செல்வது மிக இன்றியமையாதது.

**முகம்**

பேச்சாளரின் முகம் அழகு பொருந்தியதாக இருக்க வேண்டும். ஏனென்றால் எந்த முகத்தையும் ஒருவரால் நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே முகமானது பார்க்கக்கூடிய அளவில் இருந்தால்தான் பார்வையாளர் பேச்சாளரைக் கவனித்துக் கொண்டிருப்பார். முகத்தில் அழுக்கு, தாடி முதலியன இல்லாமல் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**கண்கள்**

ஒருவரின் கண்கள் அவரை எடைபோட உதவும் கருவிகள் என்பர். எனவே பேச்சாளர் தன்னுடைய கண்களை ஒளிபொருந்தியதாகவும் உற்சாகம் பீறிடும் முறையிலும் வைத்துக் கொள்ள வேண்டும். கண்களில் சோர்வோ, மயக்கமோ இருப்பின் பார்வையாளர் பேச்சாளரைத் தவறாகப்புரிந்து கொள்ள நேரிடும்.

**மேடையில் நிற்றல்**

மேடையில் நிற்கும் போது பேச்சாளர் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் எவருக்கும் அஞ்சாத துணிவும், திமிர்ந்த ஞானச் செருக்கும் உடையவராக நிற்றல் வேண்டும். பேச்சாளரின் மேடையில் நிற்கின்ற தோற்றமே பார்வையாளரைக் கவரக்கடியதாக இருக்க வேண்டும். இதுபற்றி "ரீடர்ஸ் டைஜஸ்ட்" கூறுவதாவது: 'நன்றாக நிமிர்ந்து நிற்கும் நிலை என்பது உடலின் இயற்கையான அமைப்பும் சேர்க்கையுமாகும். நீங்கள் நேராக நின்றால் உங்கள் இடுப்பும் நேர்கோட்டில் இருக்க வேண்டும். கழுத்தின் பின்புறத்தில், தோள்கள், விலாப்பகுதி இடுப்பு, வயிற்றுப்பகுதி, முழங்கால் மற்றும் குதிங்கால் ஆகியவற்றில் எந்த பதற்றமும் இருக்கக்கூடாது. இதில் காணப்படும் மாற்றம் பேச்சாளர் பயத்தினால் செயற்கையாக வருவித்துக் கொள்வதாகும்.

"ரீடர் டைஜஸ்ட்" மேலும், "நீங்கள் நிற்கும் தோற்றம் பரிதாபகரமாக இருந்தால் பார்வையாளர் உங்களைப் பற்றித் தாழ்வாக நினைக்க நேரிடும் என்றும் கூறுகிறது. " பேச்சாளர்கள் முன்னே குனிந்து, பின்னே சாய்ந்து நிற்றலும் மைக்கை கையினால் பிடித்துக் கொண்டு ஆடி அசைதலும், ஒரு புறமாகத் தேவையில்லாமல் சரிந்து நிற்றலும் பரிதாபகரமான தோற்றத்தைப் பார்வையாளருக்கு ஏற்படுத்தக் கூடியன. எனவே இவற்றைத் தவிர்க்க வேண்டும்; செம்மாந்து நிற்க வேண்டும்.

**மன ஒருமைப்பாடு**

மன ஒருமைப்பாடு என்பது மேடைப்பேச்சுக்கு மட்டுமல்லாமல் அனைத்துப் பணிகளுக்கும் தேவையானதாகும். இந்திய மரபில் யோகம் என்பது மன ஒருமைப்பாட்டைக் குறிக்கும் ஒரு நெறிமுறையாகும். மன ஒருமைப்பாடு பற்றி டேனியல் புட்னம் என்பார். "மனத்தின் சக்தியும் செயல்பாடும் அது புலன் அறிவின்பாற்பட்டதாயினும் சரி, அல்லது சிந்தனைத் தொடர்பினதாயினும் சரி, இவ்வாறு ஒருமுகப்படுத்தப்படும் போது ஒரு காகிதத்தின் மீது சூரிய ஒளியை ஒருமுகப்படுத்தும் கண்ணாடி செயல்படுவது போலச் செயல்படுகிறது. குறிவைக்கப்பட்டுள்ள பொருள் ஒளியூட்டப்படுகிறது; வெப்பப்படுத்தப்படுகிறது; நெருப்பு பற்றவைக்கப்படுகிறது; ஏற்படுத்தப்படும் பதிவுகள் அவ்வளவு அழுத்தமானவை." என்று மன ஒருமைப்பாட்டின் பயன்களை விளக்குகிறார். எனவே பேச்சாளரின் மனம் முழுவதும் அவரது பேச்சிலேயே மூழ்கியிருக்க வேண்டும். பேசும்போது மன ஒருமைப்பாடு சிதையுமாயின் பேச்சின் போக்கு தடைபடும்.

**மன ஒருமைப்பாட்டினைப் பெறுதல்**

பேச்சாளனின் கவனத்தைச் சிதைக்கக்கூடிய பல அம்சங்கள் அரங்கிலும், மேடையிலும் நிகழக்கூடும். அரங்கில் அமர்ந்திருப்போர் பேச்சாளரின் சொற்பொழிவைக் கவனிக்காமல் பக்கத்தில் உள்ளவரிடம் திரும்பி ஏதாவது பேசக்கூடும். பேச்சாளர் இதனால் கவனம் சிதறக் கூடாது, எதிரே அமர்ந்திருக்கும் பார்வையாளர்ளும் பக்கத்திலுள்ளவரிடம் பேசுதல், கொட்டாவி விடுதல், சோம்பல் முறித்தல் போன்ற மெய்ப்பாடுகளைப் புலப்படுத்தக்கூடும். பேச்சாளர் இவற்றால் பாதிக்கப்படக்கூடாது. மாறாக ஆர்வக் குறைபாடு உடையவர்களை ஆர்வத்துடன் தன்னைக் கவனிக்குமாறு செய்ய புதிய உத்திகளைக் கையாண்டு பேசவேண்டும்.

மனம் பொதுவாகக் கட்டுப்பாடுகளை மீறிப் பாய்ந்து செல்லும் திறம் படைத்தது. மகாகவி பாரதியின் மனம் ஞான ரதத்தில் ஏறிப் பல உலகங்களையும், சுற்றி வரவில்லையா! அதுபோல! நமது மனதும் இவ்வாறு உலகம் சுற்றுவது நமக்கு தெரியுமே!. பேச்சாளரின் மனமும் சில நேரங்களில் அவர் எடுத்துக் கொண்டிருக்கும் மையப் பொருளை விட்டு விலகிச் செல்லக்கூடும். அவ்வாறு மனம் விலகிச் செல்லுகிற தருணத்தை உணர்ந்து அதைக் கையும் களவுமாகப் பிடித்துத் திரும்பவும் மையப்பொருளை நோக்கித் திருப்புவது பேச்சாளரின் தலையாய கடமையாகும். சில சமயங்களில் பேச்சாளர் ஒரு வாக்கியத்தைப் பேசிக் கொண்டிருக்கும் போதே பிறிதொரு வாக்கியத்தைப் பற்றிச் சிந்திப்பது கவனத்தைத் திசை திரும்பும் என்றும் "டேல் கார்னகி" எனும் பேச்சுக்கலை வல்லுனர் கூறுகிறார். எனவே பேச்சாளர் என்போர் தாம் பேசும் சொற்கள், தொடர்களில் முதலில் கவனம் செலுத்துவதைவிடப் பேச்சுப் பொருளின் மீது கவனத்தை ஒரு முகப்படுத்த வேண்டும். அப்போது பொருளுக்குரிய சொற்கள் தாமே வந்து விழும்; அல்லது அவ்வாறு சொற்கள் வந்து நின்று தனக்குப்பணி செய்யுமாறு ஒரு பேச்சாளர் பயிற்சிப் பெற்று கொள்ள வேண்டும். "நல்லியற் புலவர் நாவில் பொருள் குறித்து அமர்ந்த நாமச் சொல்" என்று புலவர் குறிப்பிடுவதையும் இங்கு நினைவிற் கொள்ள வேண்டும்.

குமரி அனந்தன் ஒரு சிறந்த உதாரணத்தின் மூலம் இக்கருத்தை விளக்குகிறார். மகாபாரதத்தில் துரோணர் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் போர்ப் பயிற்சிகள் அளிக்கிறார். பயிற்சியின் போது, மரக்கிளையில் ஒரு பறவை பொம்மையை வைத்து அதனை வில்லினால் அம்பெய்து வீழ்த்துமாறு கூறுகிறார். வீமன், நகுலன், சகாதேவன், துரியோதனன் மற்றும் பலரையும் அழைத்து மரம் தெரிகிறதா? கிளை தெரிகிறதா? கிளையின் மீதுள்ள பறவை தெரிகிறதா? என்றெல்லாம் கேட்கிறார். அனைவரும் 'ஆம்',

'ஆம்', 'ஆம்' என்று பதில் கூறுகிறார்கள்; துரோணர் அவர்களையெல்லாம் அம்பெய்யாமல் விலகிப் போகச் சொல்லி விடுகிறார். இறுதியில் அர்ச்சுனனை வரச் செய்து இதே கேள்விகளைக் கேட்கிறார். அவன் "தெரியவில்லை" என்று பதில் கூறிக்கொண்டே வருகிறான். நிறைவாக பறவை தெரிகிறதா?' என்ற கேள்விக்கு ஆம், பறவை மட்டும் தான் தெரிகிறது' என்று கூறினான். துரோணர் பறவையை அம்பினால் எய்து வீழ்த்துமாறு கூறுகிறார்; ஒரே அம்பில் பறவை கீழே விழுகிறது. இதன் பொருள் என்ன? ஏன் துரோணர் மற்றவர்களை அம்பெய்ய அனுமதிக்கவில்லை? காரணம் மிகவும் எளிமையானது. அருச்சுனன் ஒருவனுக்குத் தான் அம்பினை எய்ய வேண்டிய இலக்கு மட்டும் தெரிந்தது; மற்றவை எதுவும் கண்களில் தெரியவில்லை. மற்றவர்களுக்கு தாம் எய்ய வேண்டிய இலக்கும் தெரிந்தது; பிறவும் தெரிந்தன. எனவே அவர்களுக்கு ஒருமுகப்பட்ட தன்மை இல்லை; அருச்சுனன் ஒருவனுக்குத் தான் மன ஒருமைப்பாடு இருந்தது என்பதைத் துரோணர் உணர்ந்து கொண்டார்; அவனுக்கு வாய்ப்பளித்தார்; அவன் குறி பிழைக்காமல் அம்பெய்து வெற்றி பெற்றான். இக்கதையைக் குமரி அனந்தன் மேடையில் ஏற்ற இறக்கங்களுடன் லாவகமாக பேசிக் கைதட்டல் பெற்றார். எனவே மன ஒருமைப்பாடு (Concentration) மிகவும் இன்றியமையாதது. உங்கள் சுற்றுப் புறத்தில் இருக்கும் அனைத்துப் பொருள்களிலிருந்தும் "உங்கள் கவனத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதன் மூலம் (withdrawal) திடமாக நீங்கள் கவனம் செலுத்த முயலும் பொருளின் மீது உங்கள் எண்ணத்தை ஒருமுகப்படுத்த முடிகிறது." என்று பேச்சுக் கலை வல்லுநர்கள் கூறும் கருத்து ஒரு பேச்சாளருக்கு உதவக்கூடும்.

## மேடைப்பேச்சு வரலாறு

### மேடைப் பேச்சின் தோற்றம்

இந்தியாவிற்கு ஆங்கிலேயர் வந்ததன் விளைவாக கிறிஸ்தவ சமய பரப்புதலும் நடைபெற்றது. இதன் துணை விளைவாக மேடைப்பேச்சுகலை தமிழகத்தில் நன்கு வளர்ச்சி அடைந்தது. இன்றைய மேடைப் பேச்சின் வளர்ச்சி பற்றி ஆங்கில ஆட்சியினூடே பொது மேடைப் பேச்சுக்கள் முதற்கண் நாட்டில் புகுந்தன. காங்கிரஸ் சபையும் பல்வேறு சங்கமும் சமூக இயக்கங்களும் தோன்ற அவற்றின் சார்பில் பல

தரப்பட்ட சொற்பெருக்குகள் பொது மேடைகளில் நடைபெறலாயின" என்று தெய்வசிகாமணி ஆச்சாரியர் கூறுகின்றார். இன்றைய நிலையில் மேடைப் பேச்சுக்கலை மக்களுக்கு திகட்டும் அளவிற்கு வளர்ந்து இருக்கிறது. இது பல வகைகளாக இன்று வளர்ந்து இருப்பதை காணலாம்.

**மேடைப் பேச்சு வரலாறு**

பேச்சுக்கலை பெரிய கலை; அரிய கலை; கற்றாரையும் கல்லாதவரையும் கவர வல்ல கலை; பொதுவாக நாட்டு முன்னேற்றத்துக்கும் தனிப்பட்டவர் முன்னேற்றத்துக்கும் வேண்டிய இன்றியமையாத கலை; சிறப்பாக, மக்களாட்சி மலர்ந்துள்ள நாடுகளுக்கு மிக மிக இன்றியமையாத கலை. அரசியல் சீர்திருத்தம், சமயச் சீர்திருத்தம், சமுதாயச் சீர்திருத்தம், தொழிலாளர் முன்னேற்றம், தேர்தலில் வெற்றிபெறுதல் முதலியவற்றிற்கும் பேச்சுக்கலை தேவைப்படுதலை இன்று நாம் உணராமல் இல்லை. தொழில் துறையில் இறங்கியிருக்கும் முதலாளிகளுக்கும் பலவகையான நிலையங்களை நடத்தும் பெருஞ் செல்வர்களுக்கும் இந்நாளில் பேச்சுக்கலை இன்றியமையாததாகிவிட்டது. நிலைய அமைப்பை நடத்தும் திறமையோடு ஆண்டுப் பேரவையில் பேசும் ஆற்றலும் இக்காலத்தில் தொழிலதிபர்களுக்கு வேண்டுவதாய் இருக்கிறது. ஒவ்வொரு கட்சிக்கும் தலைசிறந்த பேச்சாளர்கள் வேண்டும். தலைசிறந்த பேச்சாளர்கள் இல்லாவிட்டால் கட்சி முன்னேற முடியாது. தொண்டு செய்ய விருப்பமுள்ளவர்களும் பேச்சுக்கலையில் பயிற்சி பெற வேண்டிய இன்றியமையாமை இன்று ஏற்பட்டுள்ளது. எந்தத்துறையில் ஒருவர் தொண்டு செய்ய விரும்புகிறாரோ, அந்தத் துறைக்கு வேண்டும் அறிவைப் பெற முயல்வதோடு,பேச்சுக் கலையிலும் பயிற்சி பெற்றிருந்தால்தான், அவரது தொண்டு பயனுறும். அமைச்சர்களுக்குப் பேச்சுப் பயிற்சி மிகவும் வேண்டும் என்று சொல்லத் தேவையில்லை. சிறிதளவாவது நல்ல முறையில் பேசும் திறமை பெற்றுள்ள அமைச்சர்களே நாட்டில் சிறந்த மதிப்பை அடைதல் கூடும்.

காலமோ மாறிவிட்டது. இக்காலத்தில் பேச்சுக் கலையானது ஒருவர் முன்னேற்றத்திற்கும் தலைவர்களாவதற்கும் செல்வம் தேடுவதற்கும் திறமை தரும் பெருங்கலையாகத் திகழத் தொடங்கிவிட்டது. நடைமுறையிலே நோக்கும்போது இன்று பெரும்பாலும் தலைசிறந்த பேச்சாளர்களே தலைவர்களாயிருப்பதைக் காண்கிறோம். இந்தப் பேச்சாளர்களே நமது கருத்தை உருவாக்குகிறார்கள்; நம்மை ஆட்சியும்

செய்கிறார்கள். இக்காலத்தில் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பெரும்பாலும் நாநலமே - பேச்சுக்கலையே - ஆட்சிக்கும் அதிகாரத்துக்கும் அடிப்படையான கருவியாக அமைந்துவிட்டது.

பேச்சுக்கலை இந்த நூற்றாண்டில் அருந்தொழில் நடத்தும் அதிபர் முதல் அரும்பாடுபடும் தொழிலாளர் வரையிலும், அறிஞர் முதல் அமைச்சர் வரைக்கும் அறிந்து கொள்ள வேண்டிய, அடைய வேண்டிய அருங்கலையாக அமைந்துவிட்டது எனலாம். ஆதலால்,பேச்சுக்கலை இந்நாளில் பலருக்கும் தேவைப்படுகிறது.

**முயன்றால் திறமை பெறலாம்**

பலரும் பேசலாம்; ஆனால், பலர் உள்ளம் கவரும் முறையில் பேசுவது இயலாது; புலவராயிருப்பினும்ஒருவர் மேடைப்பேச்சில் திறமையற்றவராக இருக்கலாம். புலவரெல்லாரும் பேச்சாளராகார்; பேச்சாளரெல்லாரும் புலவராகார். அவைக்குத் தக்கவராக அமைபவர் நூற்றுக்கு ஒருவர்; புலவராயிருப்பவர் ஆயிரத்துக்கு ஒருவர்; பேச்சாளராக இருப்பவர் பதினாயிரத்துக்கு ஒருவர். இதனைப் பிற்கால ஔவையார் அடுத்துவரும் வெண்பாவில் கூறியிருப்பதைக் காணலாம்:

**"ஆர்த்தசபை நூற்றொருவர்; ஆயிரத்து ஒன்றாம்புலவர்;**
**வார்த்தைபதி னாயிரத்து ஒருவர்; - பூத்தமலர்த்**
**தண்டா மரைத்திருவே! தாதாகோடிக்கு ஒருவர்;**
**உண்டாயின் உண்டென்று அறு."**

(தாதா-கொடையாளி)

பொற்கிழி அறும்படி பாடியபோது ஔவையார் கூறியவாறு பதினாயிரத்துக்கு ஒருவரே தலைசிறந்த பேச்சாளராக இருப்பார். தலைசிறந்த நாவலராயிருத்தல் - உயர்ந்த பேச்சாளராய் அமைதல் - கருவிலே அமைந்த திரு என்பது மறுக்க முடியாத உண்மை. என்றாலும், முயற்சி செய்தால் முடியாதது இல்லை. "உழப்பின் வாரா உறுதிகள் உளவோ?" என்றார் முற்காலத்துப் பட்டினத்தடிகளார். முயன்றால் பலர் மதிக்கத்தக்க பேச்சாளராதல் கூடும்; மிகவும் முயன்றால் நாவலராதலும் கூடும். இதில் சிறிதும் ஐயம் இல்லை. முதலில் மேடையேறிப் பேச முடியாது என்று கருதியிருந்தவர்களும், பேச அஞ்சி நடுங்கியவர்களும் இன்று தமிழகத்தில் பெரும் பேச்சாளர்களாகவும் நாநலம் மிக்க

நாவலர்களாகவும் விளங்குகிறார்கள் என்பதறிக. முயற்சி தான் வேண்டும்; இல்லை, விடாமுயற்சியும் வேண்டும்.

**மேடைப்பேச்சு வரலாறு**

பேச்சுக்கலைப் பயிற்சிக்கு உரிய வழிகளை அறிந்து கொள்வதற்கு முன்னே தமிழகத்தில் மேடைப்பேச்சு வளர்ந்த வரலாற்றை ஒரு சிறிது தெரிந்து கொள்ளுவது நலம். வள்ளுவர் திருக்குறளில் நூலறிவின்றி அவையில் ஒருவர் பேசுதல் அரங்கின்றி வட்டாடுதல் போன்றது என்றும், கல்லாதவன் பேச விரும்புதல் பெண் தன்மை இல்லாதாள் இன்பம் பெற விழைவதை ஒக்கும் என்றும், பேசுபவர் எளிதாக உள்ளத்தில் அமையுமாறு பேச வேண்டும் என்றும், 'கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய்க் கேளாரும் வேட்பப் பேசவேண்டும் என்றும், "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லும் சொல் இன்மை அறிந்து" என்றும், முறைப் படுத்திச் சொல்ல வேண்டுவதைச் சொன்னால் உலக மக்கள் விரைந்து கேட்பர் என்றும், நாநலமே பல நலங்க ளுள்ளும் தலைசிறந்த நலமாகும் என்றும் கூறியுள்ளார். மணிமேகலையில் இந்திரவிழாவில் முரசறைவிப்போன்,

**"தண்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்**
**புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்!**
**ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்**
**பட்டி மண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின்!"**

என்று தெரிவிப்பதைக் காண்கிறோம். பட்டிமண்டபம் என்பது கலை ஆராய்தற்கும் வாது புரிதற்கும் உரிய மண்டபம். சிலப்பதிகாரத்திலும் பட்டிமண்டபம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தண்ணிழற் பந்தரிலும் ஊர் அம்பலத்திலும் அறிஞர் பெருமக்கள் உரை நடத்தல் வேண்டும் என்றும், சமயவாதிகள் பட்டிமண்டபம் ஏறிப் பகைமையின்றி வாது செய்யலாம் என்றும் முதுகுடி வள்ளுவன் இந்திரவிழா தொடங்குவதற்குமுன் முரசறை வித்த செய்தியையே முன் குறித்த அடிகள் தெரிவிக் கின்றன.

பட்டினப்பாலையில்,

**"பல்கேள்வித் துறைபோகிய**
**தொல்லாணை நல்லாசிரியர்**
**உறழ்குறித்து எடுத்த உருகெழு கொடியும்"**

என்று வரும் அடிகள், முற்றக் கற்ற மூதறிஞர்கள் சொற்போர் புரியும்போது கொடி கட்டி வைப்பது வழக்கம் என்பதைக் குறிப்பிடுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்தில் பலவகையான கொடிகளுடன் வாதம் செய்ய அறிவித்தற்குரிய கொடிகளும் விளங்கின என்று அப்பட்டினப்பாலை தெரிவிக்கிறது.

**பண்டைக்காலப் பேச்சுகள்**

மேற்கண்ட குறிப்புகளால் பண்டைத் தண்டமிழ் நாட்டில் பேச்சுக்கலை இருந்ததை அறிகிறோம். ஆனால், அப்பேச்சுக்கலை இக்காலத்தில் நாம் கருதும் சொற்பொழிவுக்கலை அன்று என்பதை அறிய வேண்டும். அக்காலத்தில் சொற்பொழிவு முறை இருந்ததில்லை; பாட்டுரை விளக்கமும் சமயவாதப் பேச்சுகளும் அறவுரை (உபதேசம்) வழங்கலுமே இருந்தன. ஐம்பெருங் குழு என்ற அவையிலும் எண்பேராயம் என்ற அவையிலும் வாதிக்கும் முறையில் பேச்சுக்கலை விளங்கியது. குடியாட்சி நாடுகளிலே சொற்பொழிவு அமைவதுதான் இயல்பு; உண்மையுமாகும். முடியாட்சி இருந்த தமிழகத்தில் சொற்பொழிவு முறை இருந்ததில்லை; இருந்திருத்தலும் இயலாது. வரலாறு அறிந்தவர்கள் இவ்வுண்மையினை நன்குணர்வார்கள்.

கிரேக்க நாட்டில் கி.மு. 4-ஆம் நூற்றாண்டிலேயே அஃதாவது 2400 ஆண்டுகளுக்கு முன்னமே குடியாட்சி நிலவியிருந்ததால், டெமாஸ்தனிஸ் போன்ற பெருநாவலர்கள் அந்நாட்டில் விளங்கினார்கள். டெமாஸ்தனிஸ் தம் நாவன்மையால் பல சமயங்களில் வெற்றி பெற்றதாகக் கிரேக்க நாட்டு வரலாறு கூறுகிறது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு குடியாட்சி நிலவிய ரோம நாட்டில் மார்க்ஸ் டல்வியஸ் சிசிரோ தலைசிறந்த நாவலராக விளங்கியதை ரோம நாட்டு வரலாற்றிலிருந்து அறிகிறோம். ஆங்கில நாட்டிலும் பேச்சுக்கலை உச்சநிலையடைந்திருந்ததைக் காண்கிறோம். மில்டன் என்ற பெருங்காப்பியக் கவிஞரும் சொற்பொழிவைத் தம் 'வீடுபேறிழப்பு' (Paradise Lost) என்னும் காப்பியத்திலும் புகுத்திவிட்டார். சில நூற்றாண்டுகளாகப் பெருநாவலர் பலர் ஆங்கில நாட்டை அணி செய்து வந்தனர். கி.பி.18-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பர்க் என்பவர் பெருநாவலராக விளங்கினார். அவருடைய சொற்பொழிவு இலக்கியங்கள் இன்றும் அரசியல் தத்துவக் களஞ்சியங்களாக மிளிர்கின்றன. இந்நாளிலும் ஆங்கில நாட்டில் தலை சிறந்த நாவலர்கள் இருக்கிறார்கள்.

தமிழகத்தில் மேடைப்பேச்சு 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் தோன்றியது. வள்ளுவர் கூறியது சொற்பொழிவுக்கன்று; அரசவையில் பேசும் பேச்சுக்கே

ஆகும். வள்ளுவர் கூறியுள்ள அவை என்பது ஐம்பெருங் குழு, எண்பேராயம் ஆகிய அரசவைகளையே குறிக்கும். சொற்பொழிவு முறைக்கும் அவர் கூறியது பொருத்தமாக இருப்பதால், பண்டைக்காலத்தில் சொற்பொழிவு முறை இருந்ததெனக் கொள்ளுதல் தவறாகும். பிரசங்க முறையாகிய பொருள் விளக்கும் முறையே இருந்தது என்பதைப் பெரிய புராண அரங்கேற்றம் முதலியவற்றால் அறியலாம். கி.பி.18-ஆம் நூற்றாண்டில் கீர்த்தனைகள் தோன்றியதும் கதா காலட்சேபங்கள் நடைபெற்றன. பிரசங்கம், காலட்சேபம் ஆகிய இவ்விரு பேச்சு முறைகளிலும் இசை மிகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. பேச்சுக்கிடையே இசை மக்களுக்கு இன்பம் தந்தது. நெடுங்காலமாக இருந்து வந்த சமயவாதப் பேச்சு முறை 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மறையத் தொடங்கிவிட்டது; இன்று முற்றும் மறைந்துவிட்டது.

**இந்திய நாட்டில் ஆங்கிலப் பேச்சுக்கலை**

19-ஆம் நூற்றாண்டில் இந்திய நாட்டில் ஆங்கில ஆட்சி இருந்ததால் ஆங்கிலப் பேச்சுக்கலை தோன்றியது. இந்நூற்றாண்டிலிருந்து இந்திய நாட்டு மொழிகளிலும் இக்கால முறையில் பேச்சுக்கலை வளரலாயிற்று. தமிழில் மேடைப்பேச்சுத் தோன்றியகாலம் இருபதாம் நூற்றாண் டின் முற்பகுதியாகும். ஏறக்குறைய அறுபது ஆண்டுகளாகத்தான் தமிழ்ப் பேச்சுக்கலை வளர்ச்சியுற்று வருகிறது. இந்தியாவில் 19-ஆம் நூற்றாண்டின் இறுதி யில் வங்கச் சிங்கங்களாக விளங்கிய சுரேந்திரநாத் பானர்ஜி, பிபின் சந்திரபால், தமிழ்நாட்டுப் பேரறிஞராய்த் திகழ்ந்த சீனிவாச சாஸ்திரியார் போன்ற ஒரு சிலரே ஆங்கிலத்தில் பெருநாவலர்களாகச் சிறந்து விளங்கினர். இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் எஸ். சத்தியமூர்த்தி, சர். ஆர். கே. சண்முகம் செட்டியார், சர். ஆ. இராமசாமி முதலியார் போன்ற சிலரே ஆங்கில மொழிப் பெருநாவலர்களாகச் சிறந்து விளங்கினர். இன்று ஆங்கிலத்தில் அவர்களைப் போலப் பேசும் பெருநாவலர்கள் இந்நாட்டில் அருகி வருகிறார்கள்.

**தமிழ்நாட்டில் தமிழ்ப் பேச்சுக்கலை**

தமிழ் மொழியிலோ சொற்பொழிவாற்ற வல்லவர் இல்லை என்ற குறை இருந்து வந்தது. காங்கிரஸ், விடு தலைக் கிளர்ச்சிக்காக மேடையில் தமிழ் மொழியைப் பயன்படுத்தியது. அதனால், மேடைப்பேச்சு ஓரளவு வளரத் தொடங்கியது. திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் பேச்சுக்கலையைத் தமிழ் நாட்டில் அரிய

கலையாக வளர்த்துவிட்டன. இன்று தலைசிறந்த பேச்சாளர்கள் பலர் தமிழ் நாட்டில் இருக்கின்றனர்.

**திரு.வி.க.**

மேடைப்பேச்சுக் கலையைத் தமிழில் உருவாக்கியவர் பெருநாவலரான திரு.வி.கலியாணசுந்தரனார் ஆவார். அவரே மேடைப்பேச்சுக் கலைக்குத் தந்தையாவார். அவரே மேடைத்தமிழ்க் குழந்தையைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்த செவிலி. அவரே சொற்பொழிவைத் தமிழில் கலையாக்கியவர். அவரே உணர்ச்சி ததும்பப் பொருட்செறிவுடன் பேசும் முறையை நாட்டியவர். அவரே தம் பேச்சினால் பொதுவாக மக்கள் உள்ளத்தைச் சிறப்பாகத் தொழிலாளர் உள்ளத்தைக் கவர்ந்தவர். அவரால் உயர்ந்த பேச்சுக் கலை தமிழ்நாட்டில் நடமாடத் தொடங்கியது. அவருடைய சொற்பொழிவு நூல்களும் வெளிவந்தன. அவரது 'தமிழ்த் தென்றல்,' பேச்சாளர்களாக விரும்புவோர்க்கு மிகவும் பயன்படும். உணர்ச்சி மிக்க தமிழ் உரைநடையை வளர்த்தவரும் அவரே.

**அண்ணா**

பேரறிஞர் அண்ணாதுரையும் ஆங்கிலத்திலும் தமிழிலும் பெருநாவலராக விளங்கி ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தார். அவர் முதலில் திராவிடர் கழகத்தில் இருந்தார்; அதன்பின் திராவிட முன்னேற்றக் கழகத்தை 1949-இல் உருவாக்கினார். இரு கட்சிகளில் இருந்த காலத்திலும் அண்ணாவின் பேச்சை மாற்றுக் கட்சியினரும் கேட்டு மகிழ்ந்தனர்; அவர்தம் கருத்தை ஏற்காதவர்களும் மறைந்திருந்து கேட்டு வியந்ததை அறியலாம். கற்றாரையும் கல்லாதாரையும் கவர்ந்த பெருநாவலர் அருந்திறன் மிக்க அண்ணா ஆவார் என்பதில் ஐயமில்லை.

மாணவர்கள் சிறந்த பேச்சாளர்களாக விரும்பிப் பேச்சுக்கலையில் பயிற்சி பெற்று வருகிறார்கள். பேச்சுப் பயிற்சி பெறப் பலர் இன்று ஆர்வம் காட்டுகின்றனர். பலர் தலைசிறந்த பேச்சாளராகாவிடினும், முயற்சி செய்தால் மதிப்புப் பெறத்தக்க பேச்சாளராதல் கூடும்.

## மேடைப்பேச்சு வகைகள்

மேடைப்பேச்சோ காலங்கண்டது. பண்டைய பேச்சு வகைகள் வேறானவை; இன்றைய பேச்சு வகைகள் வேறானவை. இருவகைளும் இன்று தமிழகத்தில் இருந்து வருகின்றன.

**பாட்டு விளக்கம்**

இதனைப் புராணப் பிரசங்கம் என்கிறோம். பெரிய புராணத்திலோ திருவிளையாடற் புராணத்திலோ வேறு நூல்களிலோ ஒருவர் குறிப்பிட்ட பாக்களை இசையுடன் படிக்க, மற்றொருவர் பாட்டின் பொருளைச் சொல்லி, மேற்கோள் கூறிக் கதை தழுவி இடையிடையே கிளைக் கதைகள் சொல்லி முடிப்பது பிரசங்கமாகும். பாட்டை இசையுடன் படிப்பவரைக் கையேடு படிப்பவர் என்பர். புராணிகர் கதை தழுவிப் பொருள் விளக்கம் செய்வார். இடையிடையே தேவாரப் பாடல்களும் பாடப்படும். பிரசங்கம் குறைந்தது ஐந்து மணி நேரமாவது நடைபெறும். புராணிகருக்கு மிகுதியாக இலக்கணம் இலக்கியம் தெரிய வேண்டுவதில்லை; ஓரளவு தெரிந்திருப்பது போதுமானது. ஆனால், நினைவாற்றலும் சொல்லும் திறமையும் புராணிகருக்கு இன்றியமையாதவை. மேற்கோள் செய்யுளுக்குத் தமிழில் 'பன்னூல் திரட்டு', 'புறத்திரட்டு', 'தனிப்பாடல் திரட்டு' போன்ற நூல்களுண்டு. அவற்றில் வேண்டிய பாடல்களைத் தேடி மனப்பாடம் செய்து விடலாம். சிந்தாமணியையோ நாலடியாரையோ திருக்குறளையோ முழுதும் படியாமலே சில பாக்களை மனப்பாடம் செய்து சபையில் கூறும்போது, கேட்போருக்குக் கூறுவோர் அந்நூலை எல்லாம் படித்துவிட்டதாகத் தோன்றும். புராணிகர்களுள் இலக்கண இலக்கியங்களையும் சமய நூல்களையும் ஆழ்ந்து படித்தவர்களும் இல்லாமல் இல்லை. இப்பிரசங்க வகை தமிழகத்தில் தொன்று தொட்டுச் சமய அறிவைக் கற்றவரிடத்தும் மற்றவரிடத்தும் பரப்பி வந்தது என்பதை மறத்தலாகாது. இவ்வகையில் காலஞ் சென்ற ராஜாராம் பிள்ளை குறிப்பிடத்தக்கவர்களுள் ஒருவர். அவருடைய பிரசங்கம் இனிமை மிக்கதாயும் அறிவு செறிந்ததாயும் இருந்ததை அறியலாம். மக்கள் ஐந்து மணி நேரம் அவரது பிரசங்கத்தைக் கேட்டுப் பயன் பெற்றார்கள். தமிழின் இனிமையை அவர் பேச்சால் அறிந்தோம்.

இந்நாளில் மக்கள் ஐந்து அல்லது ஆறு மணி நேரத்தைக் கழிக்க விரும்புவதில்லை. பெருநேரத்தை இப்படிச் செலவழிப்பது நாட்டுக்கே பெருநட்டமாகும். எனவே, வெளியூர்களில் எந்தவிதமான சொற்பொழிவுகளையும் இரவு 8 மணிக்குமேல் நடத்துவதைக் காணலாம். இம்முறை, கால அருமை குறித்து மறைந்து வருகிறது. கால மாறுபாடும் இது மறைந்து வருவதற்கு காரணமாகும்.

**காலட்சேபம்**

இது கதையை இசைக் குழுவுடன் நின்றுகொண்டு பேசுவது. காலட்சேபம் செய்கிறவர் பாகவதர் எனப்படுவர். பாடுகிறவர்களையும் பாகவதர் என்பதுண்டு. சிலர் தங்கள் பெயருடன் 'பாகவதர்' என்னும் பட்டத்தைச் சேர்த்துக் கொள்வர். இசையறிவும் தமிழறிவும் உள்ளவரே சிறந்த பாகவதராகப் புகழ் பெறுவர். கதை சொல்லும் திறமையுடன் கீர்த்தனை பாடும் திறமையும் காலட்சேபத்திற்கு வேண்டும். வடமொழி தென்மொழி வல்லுநரான பேரறிவு படைத்த பாகவதர்கள் ஒரு சிலர் உளர். இத்தகையோருள் அண்ணங்கராச்சாரியார் தலைசிறந்தவர். இன்று கற்றாரையும் மற்றாரையும் நீண்ட நேரம் இருந்து கேட்கும்படி செய்யும் திறமைமிக்க அறிஞர் கிருபானந்த வாரியார். அவருடைய பேச்சை - காலட்சேபத்தை- நூற்றுக்கணக்கானவர் கேட்டுப் பயன்பெறுகின்றனர். பெரும்பாலோர் சாதாரண அறிவு படைத்தவரே. இவ்வகையினர் சைவ, வைணவ சமயக் கதைகளையே கூறுவர். கிறித்தவர்களுள்ளும் பாகதவர்கள் ஒரு சிலர் உள்ளனர். இவர்கள் விவிலியக் கதைகளைக் கூறுகிறார்கள்.

பொதுவாகப் பாகவதர்களுக்குச் சொற்பொழிவாற்றும் திறன் அமைவது அரிது. ஆனால், இவர்களிடம் ஆயிரக்கணக்கான பாடல்கள் மனப்பாடமாக உள்ள அற்புத நினைவாற்றலைக் காணலாம். இக்காலட்சேப முறை ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளாக இந்த நாட்டில் இருந்து வந்திருக்கலாம். மக்கள் நீண்ட நேரம் இருந்து கேட்கக் கூடிய சூழ்நிலை இன்று இல்லாமையாலும், மறுமலர்ச்சி எழுச்சியாலும் இதுவும் நகரங்களில் இந்நாளில் அருகி வருகிறது. இஃது ஒரு காலத்தில் நாட்டில் சமய அறிவைப் பரப்புவதற்குக் கருவியாக அமைந்திருந்தது.

**அறவுரை**

இதனைத் தருமோபதேசம் என்பர். இது முற்றும் துறந்த முனிவர்கள், நல்லொழுக்கம் மிக்க மடாதிபதிகள், ஒழுக்கம் மிக்க சான்றோர்கள் ஆகியவர்கள் அறவழிகளைக் குறித்தும், மக்கள் ஒழுக வேண்டிய ஒழுக்க முறைகளைப் பற்றியும் பேசுவது. இது சொற்பொழிவு முறையில் அமைவது. இவ்வுரைகள் கிறித்துவக் கோயில்களில் ஞாயிறுதோறும் இன்றும் நடைபெறுகின்றன. இக்கோயில்களில் விவிலிய நூலில் காணப்படும் ஒரு சொற்றொடரை அல்லது ஒரு வாக்கியத்தைப் பொருளாகக் கொண்டு அறவுரை நிகழ்த்தப்படுவதுண்டு. இத்தகைய அறவுரைகளுக்கு உதவியாகப் பல நூல்கள் ஆங்கிலத்தில் இருக்கின்றன. அறவுரைகளாகவே அந் நூல்கள் அமைந்துள்ளன. இந்து சமயக் கூட்டு வழிபாடுகளில் இந்நாளில் அறவுரைகள் நிகழ்த்தப்படுகின்றன.

ஒழுக்க நெறி வளர்ச்சிக்கு இந்த அறவுரைகள் பயன்படும். சான்றோர்களே இவ்வறவுரையை நிகழ்த்தத் தகுதியுடையவர்களாவார்கள்.

**பொருட் சொற்பொழிவு**

இஃது உடல் நலவழிகளைக் குறித்தோ, சமய தத்துவங்களை ஒட்டியோ, வேறுபொருள் பற்றியோ இருக்கலாம். இப்பொருட் சொற்பொழிவு நாட்டுக்கு இன்றியமையாதது. பலரும் பொருட்சொற்பொழிவில் திறமை பெறல் வேண்டும்.

**ஆராய்ச்சிச் சொற்பொழிவு**

இதற்கு இலக்கியத்திலோ வேறு பொருளிலோ ஆராய்ச்சியுடையாரே தகுதியுடையார். தலைமை தாங்குவோரும் ஆராய்ச்சி வல்லுநராய் இருத்தல் நல்லது. ஆராய்ச்சி முடிவில் வேறுபாடு இருப்பதால், தலைமை தாங்குவோர் சொற்பொழிவாளர் கருத்தை வெட்டிப் பேசுவதையே கடமையாகக் கொள்ளுதல் கூடாது. தலைமை தாங்குவோர், தம் கருத்து இஃது எனத் தெரிவிக்கலாம். சொற்பொழிவாளர் கூறியது அனைத்தும் தவறு என்றும், தம்முடையதே முடிந்த முடிபு என்றும் தலைமை வகிப்போர் கூறுவது அறிவுடைமையாகாது. இலக்கிய ஆராய்ச்சியில் தொல்லை உண்டு. சமயப்பற்றாலும் ஆராய்ச்சிக் குறைவாலும் ஒருவர் மாறுபட்ட முடிவு கொண்டிருக்கலாம். ஆதலால், சிறப்பாக இலக்கிய ஆராய்ச்சிச் சொற்பொழிவு அமைப்போர் தக்கவர்களைத் தேர்ந்தெடுப்பது மிகமிக வேண்டற்பாலது.

**வரவேற்புரை**

கழகத் தலைவரோ செயலாளரோ வந்தவர்களை வரவேற்கும் முறையில் தம்மை வெளிப்படுத்திக் கழக நோக்கங்களையோ செயல்களையோ விளம்பரப்படுத்திச் சில சொல்லி வரவேற்பதாகும். சாதாரணக் கூட்டங்களில் வரவேற்புரை 5 அல்லது 7 நிமிடங்களுக்கு மேல் நீண்டு போதல் கூடாது. மாநாடுகளில் வரவேற்புரை நீண்டிருக்கலாம். பொதுவாகச் சொற்பொழிவு, பேச்சுவகைகளில் தனிப்பட்ட சிறப்புடையது. இது முக்கால் மணியிலிருந்து ஒரு மணிக்கு மேற்படாதிருப்பது நல்லது.

**திறப்புரை**

திறந்து வைக்கும் முகத்தான் நோக்கங்களைக் கூறி அல்லது செய்ய வேண்டுவதைச் சொல்லித் திறந்து வைக்க ஆற்றும் உரையே திறப்புரையாகும். திறப்புரைக்கு அரைமணியே ஏற்றதாக அமையலாம்.

**தலைமையுரை**

சாதாரணமான கூட்டங்களில் தலைமையுரை நீண்டு விடுதல் கூடாது. கூட்டத்தை நடத்திவைக்க வேண்டிய பொறுப்பே தலைமை தாங்குவோர்க்கு உண்டு. குறிக்கப்பட்டுள்ள பொருளை ஒட்டியே தலைமை தாங்குவோர் முன்னுரையாகவும் முடிவுரையாகவும் பேசவேண்டும். கூட்ட அமைப்பாளர்கள் தலைமை தாங்குவோரைத் தலைமை தாங்குவதோடு வேறு ஒரு பொருளைப் பேசுமாறு வேண்டுவது தவறு; தலைமை தாங்குவோர்க்குத் தொல்லை தருவதுமாகும். தலைமை தாங்குவோர் எத்தகைய ஆராய்ச்சி வல்லுநராயினும் சிறிதே முன்னுரையிலும் முடிவுரையிலும் பேசவேண்டுமேயன்றிப் பேச்சாளர் நேரத்தை விட மிகுதியாகப் பேசுதல் பேச்சாளரை இழிவு படுத்துவதாகும். பேச்சாளர் பேசியதனைத்தையும் வெட்டிப் பேசுவது, தலைமை தாங்குவோர் வேலை அன்று. தலைமை தாங்குவோர் நன்முறையில் கூட்டத்தை நடத்தித் தருபவராக அமைதலே நல்லது. மாநாடுகளில் தலைமை தாங்குவோர் நீண்ட தலைமையுரை நிகழ்த்தலாம்; ஒவ்வொரு நிலையிலும் பேசலாம்; முடிவில் பலர் கூறியதைத் திரட்டிக் கூறலாம்.

**வாழ்த்துரை**

வாழ்த்துரை என்பது பெரும்பாலும் மணமக்களை வாழ்த்தும் முறையில் அமைவது. புதுமணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கும்போது, வாழ்க்கையில் புகும் மணமக்கள் நல்வாழ்வு நடத்த வழிகளைக் கூறி வாழ்த்துவதே நல்லது. அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவில் வாழ்த்துதலும் இதில் அடங்கும். வாழ்த்துரைகளில் கட்சிக் கொள்கைகளையும் பிறரைப் புண்படுத்தும் சொற்களையும் புகுத்தாமல் இருப்பது நல்லது. திருமண வாழ்த்திலும் அரசியலைப் பேசுவது பொருத்தமற்றது மட்டுமன்றி வெறுக்கத்தக்கதுமாகும். ஒரு சிலர் இவ்வாறு செய்வதைப் பார்த்து மற்றவரும் அவ்வாறு செய்தல் கூடாது.

**பாராட்டுரை**

வெற்றி பெற்றதைப் பற்றியோ, நூலை வெளியிட்டதைக் குறித்தோ, பதவியுற்றதைப் பற்றியோ, பட்டம் பெற்றதைக் குறித்தோ பாராட்டிப் பேசுவது பாராட்டுரை. இதில் ஒருவரை மிகைபடப் புகழாது உள்ளவாறு பாராட்டுவது நன்று.

**தீர்மானம் நிறைவேற்றுரை**

இது சுருக்கமாக அமையவேண்டும். ஒருவர் தீர்மானத்தை முன்மொழிய வேண்டும்; மற்றொருவர் வழிமொழிய வேண்டும்; இன்னொருவர் ஆதரிக்க வேண்டும். இம்முறையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். தீர்மானத்தைப் படித்துக் காட்டி அதைக் குறித்துக் கூறி ஒருவர் முன்மொழிய வேண்டும்; பின்வரும் இருவரும், நிறைவேற்ற வேண்டிய காரணங்களைக் கூறி முடிக்க வேண்டும். தலைவரே தீர்மானத்தைப் படித்துக் காட்டி நிறைவேறுமாறு செய்தலுமுண்டு.

**இரங்கலுரை**

இறந்தவரைக் குறித்து அனுதாபப்படுவதைத் தெரிவிப்பது இரங்கலுரை. இதை ஆழ்ந்த துக்கத்துடன் பேச வேண்டுமேயன்றி நகைச்சுவை ததும்பப் பேசலாகாது. இதில், நகைச்சுவையே தலைகாட்டல் கூடாது. உண்மையாக ஒருவரது மறைவால் உளம் வருந்துவோரே இவ்வுரை நிகழ்த்தத் தக்கவராவார்.

**நன்றியுரை**

இது மிகமிகச் சுருக்கமாக அமைவது இன்றியமையாதது. நன்றி கூறுவோர் விளம்பரத்தையோ வேண்டுகோளையோ முதலில் கூறிவிட்டுப் பின்னர் நன்றி கூறுதலைச் சொற்பொழிவாகச் செய்யாமல், சுருக்கமாக வீண் புகழ்ச்சியில் ஈடுபடாமல், கேட்போர் காலத்தை வீணாக்காமல், கூட்டம் கலைந்து போவதற்குள், ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல், நன்றி கூறி அமைதலே நன்று. நன்றி கூறுவோர் பேச்சாளர் பேசிய கருத்துகளையும், தலைமை தாங்கியவர் பேசிய கருத்துகளையும் எடுத்துக் காட்டிப் பாராட்டிப் பேசுதல் முறைமையன்று; நன்றி கூறும் எல்லையைக் கடந்து போவதாகும். பெரும் பேச்சாளராக இருப்பவரும் நன்றி கூறுவதில் ஈடுபட்டால் சுருக்கமாக நன்றியுரையை முடிப்பதே நன்று.

## அலகு - II

**சமயச் சொற்பொழிவுகள்**

இன்று சமயச்சொற்பொழிவுகள் கூட ஒரு வகையில் இலக்கியச் சொற்பொழிவுகளைப் போலவே அமைகின்றன. எனினும் சிற்சில வேறுபாடுகள் உண்டு. சமயச் சொற்பொழிவினைக் கேட்க வருபவர்கள் முற்றிலும் பக்தியில் ஆழ்ந்து போகக் கூடியவர்கள். இறை நம்பிக்கை உடையவர்கள். எனவே இங்கு பேசும் பேச்சாளர்கள் மிகுந்த கவனத்துடன் சொற்களை எடுத்தாள வேண்டும். இலக்கியச் சொற்பொழிவாளர் பேச்சுக்குத் தேவையான சில குறிப்புக்களைத் தாளில் எழுதிவைத்துக் கொள்ளலாம். ஆனால் சமயச் சொற்பொழிவாளர் ஏராளமான பக்தி இலக்கியப் பாடல்களை மனனம் செய்து வைத்திருக்க வேண்டும்: அப்போதுதான் அவையினரின் கருத்தினைக் காண முடியும். ஆராய்ச்சிபூர்வமான உரைகளில் சிறிது இடைவெளி விடலாம்: கேள்விகள் கேட்கலாம்; ஆனால் பக்திச் சொற்பொழிவுகளில் உணர்வுடன்தான் பேச இயலும். எனவே பேச்சாளர் குறிப்புக்களைப் புரட்டிக்கொண்டு பேசுவது அவையினருக்கு உகப்பாக இராது.

**உருக்கம்**

பக்திப் பொழிவில் ஈடுபாடும் உருக்கமும் மிகமிக முக்கியமானவை. கிருபானந்த வாரியாரின் பேச்சுக்களை இங்கு முழுமையாக எண்ணிப்பார்க்க வேண்டும், பேச்சில் இடையிடையே "என் அப்பனே முருகா!" என்று அவர் விளித்துக் கூறுவது கவனிக்கத்தக்கது. பக்திச் சொற்பொழிவுகள் நிகழ்த்தும் பேச்சாளருக்கு இசைப்புலமை இருந்தால் அவரது பேச்சு சிறப்பாக அமையும். தேவாரங்கள், திவ்வியப் பிரபந்தங்களை இசையுடன் பாடுவது பேச்சிற்கு மெருகு ஊட்டும்.

**கதைகளின் பயன்பாடு**

பக்தி அனுபவம், பக்தி இலக்கியச் சிறப்பு முதலியவற்றை எடுத்துரைக்கும் போது, பேச்சாளர் அதனை மட்டுமே பேசிக்கொண்டிருந்தால் சிறிது நேரத்தில் சலிப்பு உணர்வு தோன்றிவிடக் கூடும். இதனைத் தவிர்க்க சிறுசிறு கதைகளைப் பேச்சாளர் இடையில் நுழைத்துப் பேசவேண்டும். இக்கதைகள் நகைச்சுவை சிறிதளவும் கருத்தியல் பேரளவும் கொண்டனவாக இருக்க வேண்டும். ஜென் கதைகள், இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறிய கதைகள், மகாபாரதம் இராமாயணங்களில் காணப்படும் எண்ணற்ற கிளைக்கதைகள் முதலியன இவ்வகையில் பேச்சாளருக்கு உதவக் கூடியன.

**பன்முறை வாசித்தல்**

பக்தி இலக்கியப் பாடல் வரிகளுக்கு மிகவும் நுணுக்கமான பொருளை உணர்ந்து, அதனை எடுத்துக்காட்டிப் பேச வேண்டியது பேச்சாளரின் கடமை. இதற்காகப் பக்தி இலக்கியங்களை ஒருவர் பன்முறை வாசித்துக்கொண்டே இருக்க வேண்டும்; அது பற்றிச் சிந்தனை செய்துகொண்டே இருக்க வேண்டியதாகிறது.

**அரசியற் சொற்பொழிவு**

ஒவ்வொரு கட்சியும் அரசியற் சொற்பொழிவில் ஈடுபட்டிருக்கக் காணலாம். சொற்பொழிவாளர் திறமையைப் பொறுத்தே தேர்தல்களில் வெற்றி தோல்வி நிகழக் காண்கிறோம். கட்சிக்கொள்கை பரவுதற்கும் அரசியற் சொற்பொழிவு வேண்டும். இதற்கு அரசியல் அறிவு மிக மிக வேண்டும். விடுதலைக்கு முன்னும் அரசியல் கூட்டம் மக்களைக் கவர்ந்தது. அக்காலத்தில் நாவன்மை மிக்க அறிஞர்களின் ஆங்கிலப் பேச்சு இளைஞர்களை மிகவும் கவர்ந்தது. திரு.வி.க., வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, சத்தியமூர்த்தி முதலியவர்களின் தமிழ்ப் பேச்சு இளைஞரையும் முதியோரையும் கவர்ந்தது. விடுதலை பெற்ற பின்பு தமிழ்ப்பேச்சே நகர மக்களையும் பட்டி தொட்டி மக்களையும் கவர்ந்து வருகிறது. மேடையில் சிலர் அநாகரிகமாகப் பேசுவது ஒழிய வேண்டும்.

**இலக்கியச் சொற்பொழிவு**

பொதுமக்களுக்கு இலக்கியச்சுவையை ஊட்டுதற்கும், இலக்கிய அறிவை நாட்டில் பரப்புதற்கும் இலக்கியச் சொற்பொழிவு வேண்டுவதாகும். இன்றைய தமிழ் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தது இலக்கியச் சொற்பொழிவே. ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ் நாடெங்கும் பலர் இலக்கியச் சொற்பொழிவுகள் அமைத்துத் தமிழ் மொழியில் பற்றுண்டாக்கினர். இந்தி மொழி வந்து நம் தமிழை வீழ்ச்சியுறச் செய்யாதவாறு செந்தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள் இனியும் நடைபெறல் வேண்டும். ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்குள் ஒன்று அல்லது இரண்டு சொற்பொழிவுகளும் தலைமையுரையும் அமையுமாறு சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்வதே நாட்டில் தமிழ் வளர்ச்சிக்குச் செய்யும் தொண்டாகும். பேசுபவர்களும் சிந்தனை செய்து சுருக்கமாக 45 நிமிடத்தில் பேசப் பயிற்சி பெற வேண்டும்; எடுத்த பொருளை விடுத்துக் கண்டவாறு பேசுதலாகாது. இந்நாளில் கேட்பவர்கள் அறிவுடையவர்கள் என்பதை பேசுவோர் மறத்தல் கூடாது.

**ஊடகப் பொழிவுகள்**

**வானொலி உரைகள்**

ஒருவருடைய சிந்திக்கும் திறனை வளர்க்கும் துறைகளுள் வானொலி உரையும் ஒன்று. குறிப்பிட்ட பொருள் பற்றிய தலைப்புக்களில் கருத்துக்களை ஒரு சீர்மையாகச் சிந்தித்து எழுதித் தட்டச்சு செய்து வானொலி நிலையத்திற்குச் சென்று ஒலிப்பதிவு செய்தல் (Recording) வானொலி உரையின் முதன்மை இலக்கணம் ஆகும். மூன்று நிமிடங்கள், பதினைந்து நிமிடங்கள், முப்பது நிமிடங்கள் என்றவாறு வானொலி உரைகள்

அமைகின்றன. வானொலி உரை நிகழ்த்தும் பேச்சாளர்கள் குரலைக் கரகரப்பாக்கி விடாமல் துல்லியமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

**தனிநபர் பற்றிய குறிப்புக்கள் கூடாது**

எந்தத் தனிநபரையும் பற்றிக் குறிப்புக்கள் இடம் பெறாதவாறு உரைகளில் செய்திகளை எழுதிக்கொள்ள வேண்டும். எவராவது ஒருவரின் தனிப்பட்ட விசித்திரமான பண்புகளைப் பற்றிப் பேசித்தான் ஆக வேண்டும் என்ற திலையில் "எனக்குத் தெரிந்த ஒருவர்" என்று தொடங்கிக் கூறலாம். தனிப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள், அவர்களின் தயாரிப்புக்கள் பற்றிய செய்திகளும் வானொலி உரையில் இடம்பெறக் கூடாது; இது அவர்களுக்கு ஒரு விளம்பரம் போல் ஆகிவிடும்; இதனை வானொலி நிலையத்தார் ஏற்றுக் கொள்வதில்லை.

**எதிர்மறைக் கருத்துக்களுக்கு இடமில்லை**

எதிர்மறையான செய்திகள், கருத்துக்களுக்கு வானொலி உரையில் இடம் தரலாகாது. வானொலி படித்தவர் முதல் பாமரர் வரை அனைவரும் கேட்டு இரசிக்கும் ஒரு தொடர்புச் சாதனமாகும். எனவே இதில் உடன்பாட்டு முறையில் அமைந்த செய்திகளையே விரிவாக விளக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட நிகழ்வு பற்றியோ, மனிதர் பற்றியோ, ஊர் பற்றியோ எதிர்மறை விமர்சனங்களை வானொலிப் பேச்சில் தவிர்க்க வேண்டும். கேட்பவர்களுக்கு நம்பிக்கை (Optimism) தோன்றுமாறு நமது பேச்சினை அமைத்துக்கொள்ள வேண்டும். நான் ஒரு முறை 'நினைவாற்றலை வளர்க்க முடியுமா' என்ற தலைப்பில் பேசியபோது, நினைவாற்றல் குறைபாட்டினால் ஏற்படும் தீமைகள் பற்றி மிகமிகக் குறைவாக 1% குறிப்பிட்டுவிட்டு நினைவாற்றலின் சிறப்பினை மட்டும் எடுத்துக் கூறினேன்; நினைவாற்றலைப் பெருக்கிக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் பற்றிக் கூறிப் பேச்சினை முடித்தேன் என பேச்சுக்கலை நூலின் ஆசிரியர் டாக்டர் ம.திருமலை கூறுகிறார்.

**உடற்குறைகளை விவாதிக்க கூடாது**

வானொலிப் பேச்சில் மனிதர்களின் உடற் குறைபாடு பற்றி மறந்தும் பேசிவிடக் கூடாது. அவசியம் குறிப்பிட்டாக வேண்டிய நிலையில் குறைபாட்டினை நயமான நாகரிகமான சொற்களில் கூறலாம். இதுகூட அவசியம் தேவையானால் தான். சான்றாகப் பார்வையற்றவரைக் 'குருடர்' என்று குறிப்பிடவே கூடாது. இதே போலப் பிற குறைகளையும் சுட்டிக்கூறுவதைத் தவிர்க்க வேண்டும். வானொலி உரையில் மட்டுமல்லாமல் எந்தப் பேச்சிலும் ஒருவரது குறையைச் சுட்டிக்கூறக் கூடாது. ஒரு முறை கல்லூரி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பில் நான் பேசி முடித்த பிறகு, ஒரு பேராசிரியை எழுந்து நன்றியுரை கூறினார். அவர் ஏதோ நகைச்சுவையாகக் கூறுவதாக

எண்ணி என் தலைமுடி குறைவாக இருப்பதைக் குறிப்பிட்டு, “ஐயாவுக்குத் தலையின் வெளியே குறைவாக இருந்தாலும் தலைக்கு உள்ளே நிறைய விஷயம் இருந்ததைக் கண்டோம்" என்று கூறினார். இதோடு நில்லாமல் அவரது கணவருடன் ஒப்பிட்டு, 'என் கணவரை விட ஐயாவுக்குத் தலை முடி அதிகமாக உள்ளது என்றெல்லாம் கூறினார். இப்பேச்சினைக் கேட்ட நான் மிகுந்த மனவருத்தம் அடைந்தேன் என டாக்டர் ம.திருமலை கூறுகிறார்.

இதற்கே இப்படி என்கிற போது வானொலியில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கேட்கும்போது நாம் மிகவும் கவனமாகப் பேச வேண்டும். ஒலிப்பதிவுக்குப் செல்லும் முன் நமது பேச்சினை ஒரு முறை வீட்டில் பேசிப் பார்த்து விட்டுச் செல்வது மிகவும் நல்லது. நேரடியாக நிகழும் சொற்பொழிவைக் கேட்பது போன்றதோர் உணர்வைக் கேட்போரிடம் ஏற்படுத்தும் வகையில் படிப்பு அமைய வேண்டும். ஏற்ற இறக்கங்களுடன் தட்டுத் தடங்கலின்றி அமைதியாகப் பேசவேண்டும். ஒலிப்பதிவின் போது பின்பற்றத்தக்க நெறிமுறைகளைத் தெளிவாகப் பின்பற்ற வேண்டும்.

**தொலைக்காட்சி உரைகள்**

வானொலி உரையை விடத் தொலைக்காட்சி உரை மிகவும் கடினமானது. அதிக முயற்சியும் பயிற்சியும் தேவை. வானொலி உரையை எழுதி தயாரித்துக் கொண்டுபோய்ப் படித்துவிடலாம். ஆனால் தொலைக்காட்சி உரைகளைப் பார்த்துப்படிக்க இயலாது. மனத்தில் செய்திகளை நிலைநிறுத்திக் கொண்டு தன்னிச்சையாகப் பேசுவது போன்று படப்பிடிப்புக் கருவியைப் பார்த்துப் பேச வேண்டும். கூட்டங்களில் பார்வையாளர் எதிரே பேசும் போது பார்வையாளர்களின் முகக்குறிப்புக்கள் நமக்குச் சிறிது உதவி செய்கின்றன. ஆனால் தொலைக்காட்சி உரையில் "காமிராவை" மட்டும்தான் நாம் பார்த்துப் பேச வேண்டும். எனவே பேசுபவர் தாம் பேச விரும்பும் விஷயத்துக்குள் நுழைந்து பேசவேண்டும். தேவையான உடல்மொழிகளை (Body Language) மெய்ப்பாடுகளைப் பேச்சாளர் தாமே கற்பிதம் செய்துகொண்டு புலப்படுத்த வேண்டும்; ஏனென்றால் பார்யைாளர்கள் எதிர்வினை (Audience response) தொலைக்காட்சி உரையில் பேச்சாளருக்குக் கிடைக்காது.

வானொலி உரையில் பின்பற்ற வேண்டிய அனைத்துக் கட்டுப்பாடுகளும் தொலைக்காட்சி உரைக்கும் பொருந்தும். தொலைக்காட்சியில் பேசுவோர் தமது முகம், உடல் முதலியவற்றைத் தூய்மையாகவும் பிறர் பார்த்து இரசிக்கக் கூடிய முறையிலும் வைத்துக்கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியமானதாகும்.

பேசும் விஷயத்திற்குத் தகுந்த முறையில் முகபாவனைகளை வைத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக, பேச்சாளர் புன்னகை பூத்த முகத்தினையுடையவராக இருப்பது நல்லது. அதே சமயம், துக்கச் செய்திகள், விபத்துச் செய்திகள் பற்றிப் பேசும் போது முகத்தைக் கவலை தோய்ந்ததாக வைத்துக் கொள்ள வேண்டும். சுருங்கக் கூறுவதாயின் தொலைக்காட்சி உரை, பேச்சாளரின் திறனுக்குச் சவால் விடக்கூடிய உரையாகும்.

தொலைக்காட்சியில் சில சமயங்களில் படிக்க வேண்டிய சூழல்களில், படிப்பதைப் பிறர் அறியா வண்ணமும் உணரா வண்ணமும் பேச்சு அமைய வேண்டும் என்று குமரி அனந்தன் கூறுகிறார்.

## அவையச்சம் நீங்க அரிய வழிகள்

பேரவையில் - ஏன்? - சிற்றவையிலும் முதலில் பேசுவதற்கு அச்சம் தோன்றாமல் இராது. கற்றறிந்த பெரும் புலவர்களுக்கும் முதலில் பெருங்கூட்டத்தில் பேசுவது கடினமாகவே இருக்கும். நன்கு கற்றவர்களும் மன்றத்தில் பேச நடுங்குவதுண்டு. இதனால், நீதிநெறி விளக்கம், "அவையஞ்சி நடுங்குவார் கல்வியும், கல்லார் அவையஞ்சா ஆரவாரமான பேச்சும், ஈத்துண்ணார் செல்வமும், ஏழைகளின் இனிய நலன்களும் பூத்தலினும் பூவாமை நன்று" என்று கூறுகிறது.

கற்றவர் பாடே இப்படி இருக்குமாயின் மற்றவர் பாடு எப்படி இருக்கும்? திருவள்ளுவர், "போர்க்களத்துக்குச் சென்று இறக்க வல்லார் பலர்; ஆனால், அவையில் அஞ்சாது பேச வல்லார் சிலரேயாவர்" எனப் பொருள்படுமாறு.

**"பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்**

**அவையகத்து அஞ்சா தவர்"**

என்று கூறியுள்ளார். இங்கே எளியர் என்பது பலர் என்னும் பொருளையும், அரியர் என்பது சிலர் என்னும் பொருளையும் உணர்த்துகின்றன.

மனவலியாலும் தன்னம்பிக்கையாலும் முயற்சி யாலும் பயிற்சியாலும் பழக்கத்தாலும் ஒருவர் சிறந்த பேச்சாளராதல் கூடும். முயற்சியுடையார் இகழ்ச்சி யடைவரோ? அடையார்.

## முதல் முதல் பேசத் தொடங்குதல்

முதல் முதல் பேசத் தொடங்குவோர்க்குச் சபையைத் கண்டதும் அச்சம் தோன்றும்; கைகள் நடுங்கும். தொடைகள் வீணை வாசிக்கும்; நாக்குழறும்; சொற்கள் வாயிலிருந்து வெளிவாராமலிருக்கும். சுருங்கச் சொன்னால் இவர்களுக்குச் பேசுவது பிரசவ வேதனையாகவே இருக்கும். இப்படி இருப்பது இயற்கை: அதற்காகப் பேசவே வாராது என்று ஒருவரும் அஞ்ச வேண்டுவ தில்லை. ஒருமுறை தாயானவள் மறுமுறையும் தாயாக அஞ்சுவதுண்டோ? இல்லை. அதுபோல ஒருமுறை பேசி வெற்றி பெற்றவர். பேசுவதில்

ஏற்படும் தொல்லைக்காக, மறுமுறையும் பேச அஞ்சுதல் கூடாது. அவையில் பேசப் பேச அச்சம் அகன்றோடும்.

எத்துணையோ பேர்கள் முதல் முதல் பேசத் தொடங்கியபோது தொல்லைப்பட்டதுண்டு. ஆங்கிலப் பேரறிஞர் அடிசன் ஆங்கில நாட்டில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தலைசிறந்து விளங்கிய எழுத்தாளர். அவர் ஒருமுறை பேச எழுந்து, "நான் நினைக்கிறேன். நினைக்கிறேன். நினைக்கிறேன்" என்று மூன்று முறை சொல்லிவிட்டு மேலும் பேச முடியாமல் உட்கார்ந்து விட்டாராம். அவர் ஆங்கிலத்தில் I Conceive Conceive, Conceive" என்றாராம். 'கன்சீவ்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நினைக்கிறேன்' என்பது ஒரு பொருள்; கருவுற்றிருக்கிறேன்" என்பது மற்றொரு பொருள். அருகிலிருந்தவர், அறிஞர் அடிசன் அமர்ந்து விட்டதும் எழுந்து நின்று 'திருவாளர் அடிசன் மூன்று முறை கருவுற்றார். குழந்தைதான் பெறவில்லை" என்று நகைச்சுவை தோன்றக் கூறினாராம். காந்தியடிகளும் ஆங்கில நாட்டிற்குச் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்று வந்து இந்திய நாட்டு வழக்கு மன்றத்தில் வழக்காட முதல் முதல் தொடங்கிய காலத்தில். பேச முடியாமல் திணறினார். அவரே பிற்காலத்தில் தலைசிறந்த ஆங்கிலப் பேச்சாளரானார். லாயிட் ஜார்ஜ் என்ற ஆங்கில நாட்டுப் பெரு நாவலர் முதல் முதல் பேசத் தொடங்கியபோது. “என் நா மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. ஒரு சொல் கூடப் பேசமுடியாமல் திகைக் கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். மற்றொரு ஆங்கில நாட்டுப் பெரும் பேச்சாளரான டிஸ்ரலி "நான் முதல் முதல் பாராளுமன்றத்தைக் கண்டு நடுங்கினேன். நான் குதிரைப் படைக்குத் தலைமை தாங்கிப் போர்க்களத்தை நோக்கிச் சென்று போரிட்டிருப்பேன். அது கடினமாகத் தோன்றியிராது. பாராளும் மன்றத்தில் முதல் முதல் பேசத் தொடங்கியது எனக்கும் பேரச்சத்தைக் கொடுத்தது" என்றார். அவரது தொடக்கப் பேச்சுத் தோல்வியுற்றதாம். அவர் தோல்வியைப்பற்றிக் கவலைப்படாமல் மேலும் மேலும் முயன்றார்; பெரும் பேச்சாளரானார். ஆதலால், தோல்வி குறித்துக் கவலைப்பட்டுப் பேச்சுப் பயிற்சியைக் கைவிடுதல் கூடாது.

நம் நாட்டில் சிலர் பேச ஒப்புக்கொண்டு, பேச அஞ்சி, அலறி, நடுங்கிப் பேசவேண்டிய நாளன்று ஊரைவிட்டு ஓடிப்போனதுமுண்டு. தமிழ்நாட்டில் புகழ்பெற்ற ஆராய்ச்சியாளரும் பேரறிஞருமான ஒருவர் நன்றி கூற நான்கு சொற்களைப் பேரவையில் பேச முடியாமல் தொல்லைப்பட்டதை நான் பார்த்திருக்கிறேன். என்றாலும், முயற்சி செய்தால் ஒருவர் நன்கு பேசப் பழகிக்கொள்ளலாம்.

**நாளடைவில் அச்சம் நீங்கும்**

சிலருக்கு முதலில் அவையச்சம் தோன்றும். அது பேச்சுத் தொடக்கத்தில் இருக்கும்; வரவர முதற் பேச்சிலேயே அவ்வச்சம் பகலவனைக் கண்ட பனிபோல மறைந்துவிடும். அமெரிக்க நாட்டுப் பெருநாவலரான லிங்கனுக்குத் தொடக்கப் பேச்சில் முதலில் நடுக்கமும் தன்னம்பிக்கையின்மையும் சிறிது நேரம் இருந்தனவாம்; பேசப் பேச அவை மங்கி மறைந்தனவாம். பேசப் பழகுவோரின் அனுபவம் இவ்வாறே இருக்கும். ஆதலால், பேச்சாளராக விரும்புகிறவர்கள் அவையச்சத்தை எண்ணி அல்லற்பட வேண்டுவதில்லை. ரோம் நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தலைசிறந்து விளங்கிய பெருநாவலரான சிசரோ, "எந்தச் சிறந்த பொதுமேடைப் பேச்சிலும் அச்சம் முதலில் தோன்றுவது இயற்கை" என்று கூறியுள்ளார்.

கருவிலே திருவமைந்த பெருநாவலர்களுக்கே இந்நிலை இருந்திருக்குமானால், சாதாரணமான நிலையிலுள்ளவர்கள் பாடு எப்படியிருக்கும்? ஆரம்பப் பேச்சாளர்கள் பாடு அரும்பாடுதான். எனினும், ஆரம்பப் பேச்சாளர்கள் கவலையடைய வேண்டுவதில்லை. நன்றாகப் பேசுவது என்பது அற்புதச் செயலன்று. பழகினால் அது மிகவும் எளிது. பழகப்பழக அச்சம் பறந்து போகும். நன்றாகப் பேசலாம்.

**அச்சம் நீக்க அரிய வழிகள்**

முதலாவது, பேசப் பழகுவதற்கு முன்னர், "நான் பேச்சாளராக வேண்டும்" என்னும் எண்ணம் ஒருவருக்குத் திண்ணமாக இருத்தல் மிகமிக இன்றியமையாதது. இந்த எண்ணம் இல்லாவிட்டால், ஒருவர் ஒருமுறை இருமுறை மும்முறை பயிற்சி பெற்றுப் பின்னர் அயர்ச்சியுற்று, "தமக்குப் பேச்சு வாராது" என்று பேச்சுப் பயிற்சியைக் கைவிட்டு விடுவர். எனவே, ஒருவருக்குப் பேச்சாளராக வேண்டும் என்னும் மேடைப் பேச்சு வெறி முதலாவது ஏற்படுதல் வேண்டும். இவ்வெறி ஏற்படுமானால்,

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்"**

என்று திருக்குறள் கூறுமாறு பேச்சுத் திறமை எய்துவது உறுதி. உறுதிகொண்டு பேச்சாளராகும் முயற்சியை உவப்புடன் தொடங்குக.

இரண்டாவது, ஒருவர் பேசப் புகுவதன்முன் இன்னது பேசுப்போகிறோம் என்று தெளிவாகத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். பேசப் புகுவது இன்னதென்று தெளிவாக அறிந்து கொள்ளாவிட்டால், பேச்சில் தடு மாற்றம் ஏற்படும்; பேச்சே வாராது. ஆதலால், பேச்சில் தெளிவு கொள்க.

மூன்றாவது, பேச்சாளராவதற்குத் தன்னம்பிக்கை வேண்டும். தன்னம்பிக்கை ஏற்பட உவப்புடன் வேண்டும். அச்சம் கொண்டால் ஆட்டம் கொடுக்கும். உள்ளத்திலிருந்து அச்சத்தை ஒட்டி, உணர்ச்சியுற்று, 'அச்சம் இல்லை, அச்சம் இல்லை, அச்சம் என்பதில்லையே" என்று உள்ளத்திலேயே சொல்லிக்கொண்டு பேச்சைத் தொடங்குக. கூட்டத்தைக் கண்டதும் கூட்டத்திலுள்ளவர்கள் பேச்சைக் குறை கூறுவார்கள் என்றுதான் அச்சம் உண்டாகிறது. கூட்டத்திலுள்ளவர்கள் பெரும்பாலும் குறைகூறமாட்டார்கள். ஆதலால், அஞ்சவேண்டுவதில்லை.

நான்காவது, போதிய பயிற்சி பெறவேண்டும். அறையில் ஆடி. அம்பலத்தில் ஆடு என்பது பழமொழி. அவையச்சம். பேச்சுத் தடுமாற்றம், உச்சரிப்புக் குறை பேசமுடியாது இடையில் நிற்றல், கருத்துக்கள் மறந்து போதல் முதலிய பலவும் பயிற்சியால்தான் நீங்கும் என்பதை மறத்தலாகாது. பயிற்சியினாலேயே அச்சமின்றி மிதிவண்டி (Cycle) விடுகிறார் ஒருவர். பயிற்சியினாலேயே ஒரு சிலர் பிறர் செய்ய முடியாத அற்புதங்களைச் செய்கின்றனர். எனவே, முயன்று முயன்று, விடாது முயன்று பேச்சாளராகப் பயிற்சி செய்க. இதற்காக முதலில் நாளிதழையோ வேறு நூலையோ உரக்கப் படித்துப் பழகுதல் வேண்டும். அதன் பின் நண்பர்களுக்கு ஏதாவது ஒன்றை நன்றாகவும் தெளிவாகவும் படித்துக் காட்டுக. இது முதற் பயிற்சி.

**முதலில் எழுதிப் படிக்கலாம்**

பேச்சுப் பயிற்சி பெற விரும்புவோர் உரக்கப் படித்துப் பழகியபின் பேச்சுக் கழகங்களில் சேர்ந்து சிறிது நேரம் பேசப் பழக வேண்டும். முதலில் பேசவே முடியவில்லையென்றால், எழுதி வைத்துப் படிக்கவேண்டும். இப்படி ஒன்று அல்லது இரண்டு கூட்டங்களில் செய்யலாம். மூன்றாவது கூட்டத்தில் எழுதியதைக் கையில் வைத்துக் கொண்டு பேசவேண்டும். பேசத் திணறும் இடத்தில் கையிலுள்ளதைப் படித்துவிடவேண்டும். இங்ஙனம் இருமுறை, மும்முறை செய்துவந்தால் நாளடைவில் ஒருவர் அச்சமின்றிச் சொற்பொழிவாற்றும் திறமை அடைந்துவிடலாம். பயிற்சியினால் அச்சம் இருந்த இடம் தெரியாமல் பறந்தோடும்.

பெருஞ்செல்வர்கள் பேச்சுக் கழகங்களில் சேர்ந்து பேச்சுப்பயிற்சி பெறுதல் முடியாது. ஆதலால், அவர்கள் பேச்சை எழுதித் தங்கள் நண்பர்களுக்கு முன்னோ தனித்தோ படித்துப் படித்துப் பயிற்சி பெறலாம்.

**தயாரித்துப் பேசுக**

இங்ஙனம் பழகிய பின்பு பெரிய பேச்சைப் புள்ளி விவரங்களுடன் தயாரித்துப் பேசுதல் வேண்டும். எழுத்துப் பேச்சில், சொல்ல வேண்டிய கருத்துகள் தெளிவாகவும் கேட்போர் மனத்தில் பதியக்கூடியனவாகவும் இருக்குமாறு கவனிப்பது அவசியம். எழுத்துப் பேச்சைப் படிக்கும்போது கூடக் கைநடுக்கமும் பெருமூச்சு விடுதலும் சிலருக்கு ஏற்படலாம். முன்னதாக மூச்சுவிடும் பயிற்சி செய்துவிட்டுப் படித்தால், அந்நடுக்கமும் மூச்சு விடுதலும் இல்லாமற் போகும். நடுக்கம் ஏற்படுமானல். மேசையில் கையை ஊன்றியும் கால் விரல்களைத் தரையில் ஊன்றியும் நின்று படிக்கலாம். பேச்சுப் பயிற்சி பெறுவோர், கேட்போருடைய முகங்களைப் பார்க்காமல் படித்தலாகாது; பேசுதலுமாகாது. கேட்போர் பார்க்கக்கூடிய இடத்தில் நின்று மக்களைப் பார்த்துப் படிக்கவோ பேசவோ செய்வதுதான் சிறந்தது. அப்படிச் செய்யாவிட்டால் பேச்சாளர், அவையினரது கவனத்தைக் கவர்வது முடியாது; எளிதாக அவையினரை மகிழ்விக்கவும் இயலாது.

**சிறு குறிப்பு வைத்துப் பேசுக**

இப்பயிற்சிக்குப் பின் பேசுவோர் சிறு குறிப்பு வைத்துக் கொண்டு சிறுநேரப் பேச்சைப் பேசப் பயிற்சி பெறல் வேண்டும். வரவரக் குறிப்பு இல்லாமலே பேசும் நிலை ஏற்படும். நினைவாற்றல் இல்லாதவர்கள் குறிப்பின்றி என்றும் பேசுதல் இயலாது.

**சிறந்த பேச்சாளராதற்கு**

சிறந்த பேச்சாளராதற்கு நினைவாற்றல் இன்றியமையாதது. முதலில் கையில் வைக்கவேண்டிய குறிப்பை முழுப்பேச்சாகவே எழுத வேண்டும். முக்கியமான கருத்துகளைக் கோடிட்டு வைக்கவேண்டும். அப்பொழுதுதான் அவை உடனே கண்ணில் தயக்கமின்றிப் படும். இத்தகைய பயிற்சிக்குப் பின்பு குறிப்பானது முழுப்பேச்சாக அமையாமல் தந்திச்செய்திபோலச் சொற்றொடர்க் குறிப்புகளாக அமையலாம். இன்றியமையாத மேற்கோள்களை அல்லது ஆதாரங்களை முழுதுமே எழுதிவைத்துக் கொள்ளலாம். மேற்கோள் எனில் செய்யுளே என்று கொள்ளவேண்டுவதில்லை. இலக்கியப் பேச்சில் தவிர மற்றப் பேச்சுகளில் செய்யுள்களைக் கூற வேண்டிய அவசியமில்லை. இன்றியமையாத ஆதாரம் காட்டவேண்டுமானால் செய்யுள் ஒன்றிரண்டு கூறலாம். மனப்பாடம் செய்த செய்யுள்கள் எல்லாவற்றையும் கூட்டத்தில் கூறப் புகுவது சிறுபிள்ளைத்தனமாகும். பொருளே பேச்சுக்கு உயிர் என்பதறிக.

**தயாரித்துப் பேசுதல் வேண்டும்**

முழுத்திறமை வந்துவிட்டாலும் எவரும் பேச்சைத் தயாரிப்பின்றி ஒருநாளும் பேசுதலாகாது. பெருநாவலர் பலரும் தங்கள் பேச்சுகளை முன்கூட்டித் தயாரித்து, அவற்றை மனப்பாடம் செய்து, பேசவேண்டிய சபையில் பேசுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார்களெனில், தொடக்கப் பேச்சாளர்கள் எவ்வளவு எச்சரிக்கையுடன் தங்கள் பேச்சுகளைத் தயாரித்து மனப்பாடஞ் செய்து பேச வேண்டும் என்று சொல்லவும் வேண்டுமா?

## அலகு - III

## மேடைப் பேச்சு நடை

மேடைப் பேச்சுக்கு உயிர் பேசும் பொருள்; பேச்சு நடையே உடல். உயிரும் உடலும் சேர்ந்த ஒன்றே உலகில் இயங்கும். அதுபோலப் பொருளும் பேச்சு நடையும் சேர்ந்தால், பேசிய கருத்துக் கேட்போர் உள்ளத்தில் இயங்கும். பொருளற்ற பேச்சு உயிரற்ற உடல். அழகிய மொழி நடை அற்ற பேச்சு, உடலற்ற உயிர். எனவே, மொழி நடையும் கருத்து வளமும் மேடைப்பேச்சு மேன்மையுறுவதற்கு வேண்டுவனவாகும்.

### வடமொழி

வடமொழிவாணர்கள் செய்யுள் நடையை நாளிகேர பாகம், இட்சுபாகம், கதலிபாகம், திராட்சாபாகம். க்ஷீரபாகம் என ஐந்து வகையாகக் கூறுவார்கள். நாளிகேரபாகம் என்பது தேங்காய் நடை. இது மிகவும் கடினமானது. இட்சுபாகம் என்பது கரும்பு நடை. இது சிறிது கடினமானது. கதலிபாகம் என்பது வாழைப்பழ நடை. இஃது எளிய நடை. திராட்சாபாகம் என்பது திராட்சைப்பழ நடை. இது மிகவும் எளிய இனிய நடை. க்ஷுரபாகம் என்பது பால்போலும் மிகவும் எளிய இனிய நடை. இந்த ஐவகை நடைகளுள் சொற்பொழிவு நடை க்ஷீரபாகமான மிகவும் எளிய இனிய பேச்சு நடையாக அமைய வேண்டும்.

### ஆங்கிலப் பேச்சு நடை

ஹெர்பர்ட் என். காசன் தமது மேடைப் பயிற்சிப் பேச்சு நூலில் ஆங்கிலப் பேச்சு நடையைக் குறிப்பிடும் போது,

- உருக்கமற்ற தங்கு தடையில்லாத பேச்சு நடை (Glib Style)
- தங்குதடையுள்ள பேச்சு நடை (Hesitating Style)

- மிடுக்குப் பேச்சு நடை (Swaggering Style)
- சுவையற்ற பேச்சு நடை (Monotonous Style)
- கனத்த பேச்சு நடை (Ponderous Style)
- கம்பீரமான பேச்சு நடை (Grand Style)
- வழக்குரைஞர் பேசும் தருக்க வாதப் பேச்சு நடை (Argumentative Style)
- அச்சத்தால் ஏற்படும் தொடர்பற்ற பேச்சு நடை (Staccatol style)
- சமயச் சார்பான சுவையற்ற அறவுரை நடை (Pulpit Style)
- புள்ளி விவரப் பேச்சு நடை (Statistical Style)
- உணர்ச்சிப் பேச்சு நடை (Sentimental Style)
- கிளர்ச்சிசெய்யும் பேச்சு நடை (Indignant Style)
- உரையாடல் பேச்சு நடை (Conversational Style)
- விருந்துக்குப்பின் பேசும் பேச்சு நடை(After Dinner Style)

என்று 14 வகைப் பேச்சு நடைகளைக் குறிப்பிடுகின்றார்.

**தமிழில் ஐவகைப் பேச்சு நடை**

தமிழ் மேடைப்பேச்சு நடையில் கடு நடை, எளிய நடை, இலக்கிய நடை, அடுக்கு மொழி நடை, கொச்சை மொழி நடை என ஐவகை நடைகள் உள்ளன.

**பண்டிதர் நடை இன்றில்லை.**

ஐயா, அன்புகூர்ந்து பண்டித நடையில் பேசாமல் எளிய நடையில் பேச வேண்டுகிறேன்" என்று சிலர் சொற்பொழிவாளரிடம் வற்புறுத்துகின்றனர். பண்டிதர் நடை என்று ஒன்று இன்று கிடையாது. கடுமையான பேச்சு நடையையே சிலர் அவ்வாறு கூறுவர். இக்காலத்தில் எவரும் கடுமையான திரிசொற்களைப் பெய்து பேசுவதே இல்லை. கடுமையான நடை, மேடைப் பேச்சுக்கு உதவாது.

**பேச்சு நடையின் இலக்கணம்**

பேச்சு நடை என்பது கருத்தைப் புலப்படுத்துவதற்குப் பயன்படுத்தும் செவ்வி அல்லது முறையாகும். இதன் நோக்கம் கேட்போர் உள்ளத்தைக் கவர்வதாகும். ஆதலால் பேசுங்கருத்துக் கேட்போரைப் பிணிக்க வேண்டுமெனில், பேசும் பொழி அழகியதாகவும், எளிமையானதாகவும் இருக்க வேண்டும் என்பது மறுக்க முடியாத உண்மை.

**எளிய நடையே வேண்டும்**

எளிய நடையே இன்றைய மேடைப்பேச்சுக்கு உரிய நடை. இலக்கண வழுவின்றிப் பேசும் பொருள் விளங்குமாறு பேசுவதையே எளிய நடை என்கிறோம். இயற்சொற்களால் அமைவது இது. இந்நடை கொச்சை மொழியாக இல்லாமலும் திரிசொற்கள் இல்லாமலும் இருப்பது. வாக்கியங்கள் சிறியனவாக இருப்பின் எளிய நடை அமையும். கருத்துத் தெளிவு இருப்பினும் நடை எளிதாக இருக்கும்.

**இலக்கிய நடை**

இலக்கிய நடை என்பது இலக்கியத்தைப் பற்றிப் பேசும் போது அமைவது. இலக்கியச் சொற்களாலும் செய்யுளடிகளாலும் ஆனது. இந்நடை கற்றறிந்தோர்க்கே பயன்படும்.

**அடுக்கு மொழி நடை**

அடுக்குமொழி நடை என்பது எதுகை மோனை வரச் சொற்களை அழகாக அடுக்கிப் பேசுவது. அடுக்குமொழி நடையில் பெரும்பாலும் வாக்கியங்கள் நீளமாக இருக்கும். இந்நடை கேட்பதற்கு இனிமையானது.

**கொச்சை மொழி நடை**

கொச்சை மொழி நடை என்பது கொச்சைச் சொற்களால் ஆவது. வீட்டில் பிழைபடப் பேசுவதுபோல இந்நடை அமைந்திருக்கும். இக் கொச்சை நடை இனத்துக்கு இனம் மாறுபடும். தமிழ் மொழிப் பயிற்சியற்ற வடமொழி கற்ற அறிஞர்கள் பேசும் போது இக்கொச்சை மொழி நடையைக் கேட்கிறோம். இது கேட்கும்போது அருவருப்பாக இருக்கும்.

**பிழையற்ற மொழி நடையே வேண்டுவது**

இளம் பேச்சாளர் பிழையற்ற எளிய நடையில் சொற்பொழிவாற்றப் பயிற்சி பெறவேண்டும். நாய் மரம் ஏற முடியாது; பூனை நாயைப்போலக் குரைக்கமுடியாது. கம்பர் சேக்கிழார் போலப் பாடல் இயற்ற முடியாது. சேக்கிழார் கம்பரைப்போலப் பாடல் எழுத முடியாது. எழுத்து நடை அவரவர் மனப் போக்கைப்போல அமையும். அது

போலவே பேசும் மொழி நடையும் பேசுவோரின் மனப் போக்கை ஒட்டியது. 'மொழி நடையே பேசுவோனைக் காட்டும் என்பது ஆங்கிலப் பழமொழி. ஆதலால். அவரவர் மனப்போக்குக்கு ஏற்றவாறு பேச்சு நடை அமையும் என்பதில் ஐயம் இல்லை. ஒருவரது உளப்பான்மைக்கு ஏற்றவாறு உடை இருக்கும். அது போலப் பேச்சு நடையும் இருக்கும். மேலும் ஒருவரது இலக்கிய இலக்கணப் பயிற்சிக்கு ஏற்ற நிலையில் பேச்சு விளங்கும். இலக்கிய இலக்கணப் பயிற்சி இல்லாதவர்களுக்கு எப்படிப் பிழையற்ற இனிய எளிய பேச்சு நடை அமையும்? எனவே, ஒருவருக்கு நல்ல பேச்சு நடை அமையவேண்டுமெனில் அவர் பேச வேண்டுவதை எழுதி, அதை மனப்பாடஞ் செய்து பேசிப் பேசிப் பயிற்சி பெற வேண்டும்.

**அடுக்கு மொழியைத் தடுக்க வேண்டுவதில்லை**

ஒரு சிலர் அடுக்குமொழிப் பேச்சை ஏளனஞ் செய்கின்றனர். இஃது எல்லாருக்கும் கைவரப் பெறுவதில்லை; பயிற்சியாலே வருவது. இந்நடை கேட்க இன்பமாயிருக்கிறது. இந்நடையில் பேசுவதால் தவறில்லை. இந்நடையில் பேச விரும்புவோர் எதுகை மோனைகளுக்கே மிகுதியாகக் கவலைப்படாமல் கருத்துக்கு முதன்மை இடம் அளிக்க வேண்டும். சொற்பிழை, இலக்கணப்பிழை, உச்சரிப்புப் பிழை ஆகியவையின்றிப் பேசவும் பழகவேண்டும். மறக்க முடியாத உவமைகளைப் பேச்சில் பயன்படுத்தவும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அறிவு வளர வளர, வயது ஆக ஆக அடுக்குமொழிப் பேச்சாளரும் இலக்கிய நடைப் பேச்சாளரும், காலப்போக்கில் கருத்துச் செறிவில் மனம் செலுத்தி எளிய நடைக்கு இறங்கிவிடுவார்கள். வயதையும் அறிவு வளர்ச்சியையும் மனப்போக்கையும் பொறுத்ததே பேச்சு நடை.

**மேடைப் பேச்சில் காணும் தவறுகள்**

ஒரு சிலர் மேடைப் பேச்சிலே அருகில் என்பதற்கு மாறாக அருகாமை என்றும், மக்கள் (ஜனங்கள்) என்பதற்குப் பதிலாக மக்கள்கள் என்றும், முயன்றான் என்று கூறுவதற்கு மாறாக முயற்சித்தான் என்றும் பேசுகின்றனர். அருகாமை, மக்கள்கள், முயற்சித்தான் ஆகியவை தவறான சொற்கள் என்று அறிக.

**வழூஉச் சொற்கள்**

பேசும்பொழுது பேச்சாளர் பலர் வழூஉச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் அளவுக்குமேல் கலந்து பேசுகின்றனர். சிலர் அவ்வாறு பேசுவதால் தவறில்லை என்றும் கருதுகின்றனர். பொதுமக்கள் கூட்டத்தில் அவ்வாறு பேசினாலும் கவலையில்லை. ஆனால் பள்ளிகளிலும் கல்லூரிகளிளும் அறிஞர் அவையிலும் அவ்வாறு பேசுதல் நல்லதன்று. அங்ஙனம் பேசினால் மாணாக்கர்கள் தவறான சொற்களைக் கற்றுக்கொள்வார்கள். அறிஞர்கள் அப்பேச்சை மதிக்கமாட்டார்கள்.

ஆதலால், பேச்சாளர்கள் நல்ல எளிய தமிழில் வழூஉச் சொற்களைக் கலவாதும், பிறமொழிச் சொற்களுக்குக் கூடியமட்டும் தமிழ் சொற்களைப் பயன்படுத்தியும் பேசப் பயிற்சி பெறுதல் நலம்.

**உச்சரிப்பிலும் கவனம் செலுத்துக**

இளம் பேச்சாளர்கள் உச்சரிப்பிலும் கவனம் செலுத்த வேண்டும். ஒரு சிலர் மேடையில் ஏறி, 'வந்தவர்கல்', 'சொன்னார்கல்', 'மக்களைப் பார்த்துக் கொல்ல வேண்டும் என்றும், 'குளந்தை', 'பளம்' 'வளி' என்றும். பேசுகின்றனர். வந்தார்கள், சொன்ளார்கள் மக்களைப் பார்த்துக்கொள்ள வேண்டும், குழந்தை, பழம், வழி என்று பேசவேண்டும். ரகர றகரங்களையும் லகர ளர ழகரங்களையும் உச்சரித்துப் பழகவேண்டும். "கடலோரத்திலே உரல் உருளுகிறது. உரல் உருளுகிறது" என்று விரைவாகச் சொல்லிப் பழகுங்கள். "பல பல, பளபள, வழ வழ என்று பலமுறை உச்சரித்துப் பழகுங்கள். படிப்பது உங்கள் காதில் கேட்கும்படி உரக்கப் படித்துப் பழகுங்கள். இப்படிப் பழகினால் உச்சரிப்புக் குறைகள் நீங்கும்.

**ஒருமை பன்மைத் தவறுகளை நீக்குக**

பேச்சாளர்கள் ஒருமை பன்மை வினைமுற்றுப் பிழைகளும் நேராதவாறு கவனித்துப் பேசவும் வேண்டும். "நமக்குச் செய்திகள் கிடையாது போயிற்று என்பர் சிலர். கிடையாது போயின என்க. "அங்கே மக்கள் கிடையாது" என்பர் சிலர். கிடையார் அல்லது இல்லை என்க. பேச்சு நடையில் இலக்கணப் பிழைகள் இருக்கலாம் என்பர் ஒரு சிலர். இது தவறான கருத்து.

மதிப்புள்ள பேச்சாளராக விளங்க விரும்புகிறவர்கள் தொடக்கத்திலிருந்தே இலக்கணப் பிழை, உச்சரிப்பும் பிழை இவையின்றித் தத்தமக்குப் பிடித்த பேச்சு நடையில் கொச்சை மொழிகளைக் கலவாது, யாவருக்கும் விளங்கும் முறையில், நல்ல தமிழில்,

இனிய எளிய நடையில், தெளிவாகப் பேசுங்கருத்துகள் கேட்போர் உள்ளத்தில் நன்கு பதியுமாறு தக்க உவமைகளைப் பயன்படுத்திப் பேசப் பழக வேண்டும். சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்பது உண்மை.

மேடைப் பேச்சுக்கு எளிய இனிய நடையே இக்காலத்தில் நல்ல கருத்தை நாட்டில் பரப்ப ஏற்றதாகும். சிறந்த அழகிய மொழி நடையில் பேசச் சிறிய அளவில் இலக்கண இலக்கியப் பயிற்சி வேண்டும் என்பதை இளம் பேச்சாளர்கள் ஏன்?-பெரும் பேச்சாளர் களும் -ஒரு நாளும் மறத்தலாகாது.

நல்ல தமிழில் எளிய நடையில் தவறான உச்சரிப்பு இல்லாமல் கருத்துத் தொடர்போடு எடுத்துக்காட்டுகள் தந்து, கை அசைவு, கண் அசைவு முதலிய மெய்ப்பாடுகளுடன் சிறிது நகைச்சுவையோடு அழுத்தவேண்டிய சொற்களை அழுத்திப் புன்சிரிப்பு முகத்தோடு அவையினர் மகிழுமாறு பேசுக.

**உச்சரிப்பு**

மேடையில் பேச விரும்பும் இளைஞர்கள் மொழி உச்சரிப்பில் பெரிதும் கவனம் செலுத்த வேண்டும். இன்றைய நாட்களில் சான்றோர்கள் தமிழ் உச்சரிப்பு குறித்துப் பெரிதும் கவலைப்படுகின்றனர் என்பதை நாம் அறிவோம். தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் அதிகக் கவனம் செலுத்த வேண்டிய கருத்து இது. ழகர, ளகர, லகர வேறுபாடுகள் என்று பாடாய்ப்படுத்தப்படுகின்றன; இதே போல் ணகர, னகர, நகர வேறுபாடுகள், ர, ற போன்ற எழுத்துக்களும் இன்று முறைப்படி உச்சரிக்கப்படுவதில்லை. நேர்முகத்தேர்வுகளில் “எனக்குத் தமில் இளக்கியத்தில் ஆர்வம் அதிகம்" என்று கூறுவோர் பலராவர். இவ்வாறான மனிதர்களைச் சந்திக்கும்போது, இவருக்குத் தமிழின் மீது ஆர்வம் ஏன் ஏற்பட்டது ? என்ற கவலை நமக்குத் தோன்றிவிடுகிறது.

தமிழ் இலக்கண நூல்கள் எழுத்துக்களின் பிறப்பு பற்றி அறிவியல் முறைப்படி விளக்குகின்றன. பேச்சுத்துறையில் ஈடுபடத் தொடங்குவோர் முதற்கண் இதனை நன்கு பயிற்சி செய்து கொள்வது நன்று. உயிரெழுத்துக்கள் இடையின மெய்கள் முதலியன கழுத்திலும், வல்லின மெய்கள் மார்பிலும், மெல்லின மெய்கள் மூக்கிலும் பிறக்கின்றன. ஆய்த எழுத்து உச்சியில் காற்று உராய்வதால் பிறக்கிறது. இவற்றை உணர்ந்து பேச்சுப் பயிற்சி பெறவேண்டும். தாய்மொழி என்பதால் எழுத்துக்களைக் குழந்தைப் பருவம் முதலே உச்சரிக்கத் தொடங்கி விடுகிறோம். எனினும் குறிப்பிட்ட சில எழுத்துக்களைப் பயிற்சி செய்து உச்சரித்துப் பழக வேண்டும். ந, ன, ண என்ற எழுத்துக்களை இவ்வாறு

பயிற்சி செய்ய வேண்டும். இதற்கு அவை எந்த இடத்தில் பிறக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்வது தேவை.

ந - நாவின் நுனியாவது பல்லின் அடியைத் தொட 'ந' பிறக்கும்.

ன - மேல் அண்ணத்தை நுனி நா தொட 'ன' பிறக்கும்.

ண - மேல் அண்ணத்தின் நடுப்பகுதியை நாவின் நுனி அழுத்தமாக தொடும் போது 'ண' பிறக்கும்.

இதே முறையில்

ர - மேலண்ணத்தினை நுனி நா தடவ 'ர' பிறக்கும்.

ற- மேலண்ணத்தினை நுனி நா அழுத்தமாகக் தடவினால் ‘ற’ பிறக்கும் என்பதை அறிந்து உச்சரிக்க வேண்டும்.

ல - மேல்வாய்ப்பல்லின் அடியை நாவின் நுனி தடித்துப் பொருந்துதலால் 'ல' பிறக்கும்.

ள - மேல்வாயை நாவின் ஓரம் தடித்துத் தடவுதலால் 'ள' பிறக்கும்.

ழ - மேல்வாயை நா நுனி மடித்துத் தடவ 'ழ' பிறக்கும்.

இங்குக் குறிப்பிட்ட எழுத்துக்களைப் பன்முறை ஒலித்துப்பழகுக. எழுத்துக்களைச் சரியாக ஒலிக்காவிட்டால் சொற்களின் பொருளே வேறுபட்டுவிடும். கலை என்பதைக் களை என்றும், மனையை மணை என்றும், மூலையை மூளை என்றும் உச்சரித்தால் பொருள் வேறுபடாமல் இருக்குமோ? சிந்தித்துப் பாருங்கள். கண்ணாடி முன் நின்று இவ்வெழுத்துக்களை வழுவின்றி உச்சரித்துப் பழகுங்கள் என்று அ.கி. பரந்தாமனார் கூறுகிறார்.

**உச்சரிப்பினால் பொருள் வேறுபடுதல்**

உச்சரிப்பு என்பது சொற்களை உச்சரிப்பது மட்டுமல்ல ஒரு தொடரில் ஏற்ற இறக்கம் கொடுத்து உச்சரிப்பதும் ஆகும். ஒரு தொடரில் ஏற்ற இறக்கம் கொடுப்பதன் மூலம் பொருளை வேறுபடுத்திக்காட்ட இயலும். சான்றாக "என்னால் அதைச் செய்ய முடியும்" என்ற தொடரில் உள்ள நான்கு சொற்களை அழுத்தமும் இடைவெளியும் கொடுத்து உச்சரிப்பின் மூலமாக வெவ்வேறுபட்ட பொருண்மைகளைச் சுட்ட முடியும்.

**என்னால் அதைச் செய்ய முடியும்**

இவ்வாறு கூறுவதன் மூலமாக, என்னால் என்ற சொல்லிலும் முடியும் என்ற சொல்லிலும் அழுத்தம் ஏற்பட்டு ஒரு பொருண்மை கிடைப்பதை உணரலாம்.

**என்னால் அதைச் செய்ய முடியும்**

இவ்வாறு கூறுவதன் மூலம் என்னால் என்ற சொல்லுக்கு அழுத்தம் கூடுதலாகி ஒரு பொருண்மை ஏற்படுகிறது. இதைச் செய்ய முடியும்; ஆனால் பிறரால் இதைச் செய்ய முடியுமா முடியாதா என்பது பற்றி நான் ஒன்றும் கூறுவதற்கில்லை என்ற பொருண்மை இவ்விரண்டாவது வகை உச்சரிப்பில் கிடைக்கிறது.

**என்னால் அதைச் செய்ய முடியும்**

மூன்றாவது வகையான இவ்வுச்சரிப்பில் 'செய்ய' என்ற சொல்லில் அழுத்தம் கூடி நான் வெறுமனே பேசிக் கொண்டிருப்பவன் மட்டுமல்ல எதையும் செய்துவிடுவேன் என்கின்ற பொருண்மை கிடைக்கிறது.

**என்னால் அதைச் செய்ய முடியும்**

நான்காவது வகையான இவ்வுச்சரிப்பில் அதைச் செய்ய முடியும் என்ற மூன்று சொற்களின் மீது அழுத்தம் கூடுவதை உணரலாம். எனினும் தொடரின் முடிவிலுள்ள முடியும் என்பதில் அழுத்தம் கூடி சொல்லுபவரின் தன்னம்பிக்கையை வெளிக்காட்டுகிறது. சொற்கள் தரும் நேர் பொருளுடன் உச்சரிப்பினால் கூடுதல் பொருண்மையைப் புலப்படுத்த முடிகிறது என்பதை மேற்கண்ட சான்றின் மூலம் அறியலாம். ஜார்ஜ் கோப்ஸ் மற்றும் ரிச்சர்டு வொர்த் என்னும் இருவர் எழுதியுள்ள பெரும்பேச்சாளர்கள் பிறப்பதில்லை. (Great Speak- ers Are Not Born) என்ற நூலில் கூறப்பட்டுள்ளவாறு "பெரும் பேச்சாளர்கள் பிறப்பதில்லை. அவர்கள் பயிற்சியினால் உருவாக்கப்படுகின்றார்கள். தங்களிடம் உள்ள திறன்களைப் பயிற்சியின் மூலம் வளர்த்துக் கொள்கிறார்கள். அதன் மூலம் பெரும் பேச்சாளர்களாக மாறுகிறார்கள். நீங்களும் உங்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்ளலாம். ஆனால் இதற்கு முறையான, போதுமான பயிற்சி தேவைப்படும். இதுவே சிறந்த பேச்சிற்கான திறவு கோல்" என்ற கருத்தினை மனத்தினில் கொண்டு முறையான பயிற்சியின் மூலம் சிறந்த உச்சரிப்புத் திறனைப் பெற்றுப் பெரும் பேச்சாளர்களாகலாம்.

## எழுத்தை ஒலிக்கும் முறை

முயற்சியால் செய்வது ஒலி. முயற்சியின்றி இயற்கையாக எழுதுவது ஓசை. எழுத்துகளை ஒலிக்கும் முறையை வடமொழியில் உச்சரிப்பு என்பர். தமிழ் எழுத்துகளை ஒலிப்பதில் இளம் பேச்சாளர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். ஆங்கிலப்

பேச்சாளர்கள் எழுத்துகளை உச்சரிப்பதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள். தமிழ்ப் பேச்சாளர்கள் எழுத்தொலியைக் குறித்துக் கவனம் செலுத்துவதாகக் காணோம். இது வருந்தத்தக்கது.

**தமிழ் இலக்கணங்கள் உச்சரிப்பைக் குறிப்பிடுகின்றன**

ஆங்கில எழுத்தில் ஒலிக்குறைபாடு உண்டு. ஆனால், அவ்வளவு குறை தமிழ் எழுத்தில் இருப்பதாகச் சொல்வதற்கு இல்லை. தமிழ் எழுத்துகளுக்குள் இந்த இந்த எழுத்தை இத்தனை இத்தனை மாத்திரைதான் ஒலிக்க வேண்டும் என்றும், இன்ன இன்ன எழுத்து இன்ன இன்ன இடத்தில் பிறக்கும் என்றும், கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் தோன்றிய தொல்காப்பியமாகிய இலக்கண நூல் நன்றாக எடுத்துக்காட்டியுள்ளது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்த நன்னூலும் எழுத்தொலிகளின் அளவையும் பிறப்பிடத்தையும் கூறியுள்ளது.

**மாத்திரை (Quantity of Time)**

மாத்திரை என்பது எழுத்தை ஒலிக்கும் நேர அளவு. உன்னல் (நினைத்தல்) கால் மாத்திரையாகும்; இரண்டு விரல்களையும் ஒன்றின்மேல் ஒன்றை உறுத்தல் அரை மாத்திரையாகும்; இரண்டு விரல்களையும் முறுக்கல் முக்கால் மாத்திரையாகும்; விடுத்தல் ஒரு மாத்திரையாகும். நம் முன்னோர்கள் விஞ்ஞான முறையில் எழுத்தொலி அமைப்பைக் கூறியிருப்பது இன்றும் வியக்கத்தக்கதாக உள்ளது. இயல்பாக கைந்நொடிப்பொழுதும் கண் இமைக்கும் நேரமும் மாத்திரை எனப்படும். இதனைக் கீழ்வரும் சூத்திரங்களால் அறியலாம்.

**"கண்ணிமை நொடிஎன அவ்வே மாத்திரை**
**நுண்ணிதின் உயர்ந்தோர் கண்ட வாறே"**

-தொல்காப்பியம்

**"உன்னல் காலே; ஊன்றல் அரையே;**
**முறுக்கல் முக்கால்; விடுத்தல் ஒன்றே."**

- யாப்பருங்கலக்காரிகை உரை

**'இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை."**

- நன்னூல்

குற்றெழுத்துக்கு - 1 மாத்திரை

நெட்டெழுத்துக்கு - 2 மாத்திரை

மெய்யெழுத்துக்கு - 1/2 மாத்திரை

ஆய்த எழுத்துக்கு - 1/2 மாத்திரை

அ, இ, கு போன்றவை குற்றெழுத்துகள்; ஈ, ஊ, கூ, போன்றவை நெட்டெழுத்துகள். ஐ, ஔ, கை, கௌ போன்றவையும் நெட்டெழுத்துகளே. க், ங் போன்றவை மெய்யெழுத்துகள். ஃ - இந்த எழுத்து ஆய்த எழுத்து.

**தமிழ் எழுத்துகளின் பிறப்பிடம்**

தமிழ் எழுத்துகளை ஒலிப்பதற்குத் தமிழ் எழுத்துகள் பிறக்கும் இடங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

**எழுத்துகள்**

உயிரெழுத்துகள் - அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

ஆய்தம் - ஃ

வல்லின மெய் - க், ச், ட், த், ப், ற்

மெல்லின மெய் - ங், ஞ், ண், ந், ம், ன்.

இடையின மெய் - ய், ர், ல், வ், ழ், ள்.

**பிறப்பிடம்**

உயிரெழுத்துகள் - கழுத்தில் பிறக்கும்.

இடையின மெய் - கழுத்தில் பிறக்கும்.

வல்லின மெய் - மார்பில் பிறக்கும்.

மெல்லின மெய் - மூக்கில் பிறக்கும்.

ஆய்தம் - உச்சியில் பிறக்கும்.

**குறிப்பு**

அந்த அந்த மெய்யின் பிறப்பிடமே அந்த அந்த உயிர் மெய்யெழுத்துகளுக்குமாகும். எழுத்துகளின் பிறப்பிடங்கள் எல்லாவற்றையும் அறிந்துகொள்ள வேண்டுவதில்லை. ந, ன, ண, ர, ற, ல, ள, ழ ஆகிய இவ்வெழுத்துகளின் பிறப்பிடங்களை மட்டும் அறிந்துகொண்டாலே உச்சரிப்புக்குறை ஏற்படாது.

**ந, ன, ண**

நா நுனியானது மேல்வாய்ப் பல்லின் அடியைத் தொட 'ந' பிறக்கும். மேல்வாயை நா நுனி பரந்து தொட்டால், 'ன' பிறக்கும். மேல்வாயின் நடு இடத்தை நா நுனி மிகவும் பொருந்த 'ண' பிறக்கும்.

**ர, ற**

மேல்வாயை நா நுனி தடவ, 'ர' பிறக்கும். மேல்வாயை நா நுனி நன்றாகத் தடவ, 'ற' பிறக்கும்.

**ல, ள, ழ**

மேல்வாய் பல்லின் அடியை நாவின் நுனி தடித்துப் பொருந்துதலால், 'ல' பிறக்கும். மேல்வாயை நாவின் ஓரம் தடித்துத் தடவுதலால். 'ள' பிறக்கும். மேல்வாயை நா நுனி மடித்துத் தடவ, 'ழ பிறக்கும்.

இங்குக் குறிப்பிட்ட எழுத்துகளைப் பன்முறை ஒலித்துப் பழகுக. எழுத்துகளைச் சரியாக ஒலிக்காவிட்டால் சொற்களின் பொருளே வேறுபட்டுவிடும். கலை என்பதைக் களை என்றும், மனையை மணை என்றும், மூலையை மூளை என்றும் உச்சரித்தால் பொருள் வேறுபடாமல் இருக்குமா சிந்தித்துப் பாருங்கள். கண்ணாடி முன் நின்று இவ்வெழுத்துகளை வழுவின்றி உச்சரித்துப் பழகுங்கள்.

**பேச்சாளர் பலர் உச்சரிக்கும் சில தவறுகள்**

பேச்சாளர்கள் பொதுவாக ல, ள, ழ ஆகிய எழுத்துகளை ஒலிப்பதில் தவறு செய்கிறார்கள். சிறப்பாக ழகரத்தை ஒலிப்பதிலேதான் பெருந்தவறு புரிகிறார்கள். டாக்டர் ஜி.யூ.போப் என்ற ஐரோப்பியத் தமிழறிஞர் "ழகரமே ஐரோப்பியருக்கு நடுக்கம் தருவது'" என்று கூறினார். ழகரம் மலையாளத்தில் உண்டு. மற்ற மொழிகளில் ழகரம் கிடையாது. இது வடமொழியிலும் இல்லை ஐரோப்பிய மொழிகளிலும் இல்லை. ஆனால், இது தமிழில்தான் மிகவும் வழங்குகிறது. இது அமிழ்தினும் இனிய தமிழ்மொழிக்கு இனிமை

தருவது. தமிழ் என்னும் சொல்லுக்கு ழகரத்தைத் தனக்கே உரிய மொழி என்று ஒரு பொருள் கூறுவதுண்டு. இத்தகைய எழுத்தே பேச்சில் மிகத் தவறாகவும் பல்வேறு வகையாகவும் ஒலிக்கப்படுகிறது. ழகரத்தைத் தமிழ் நாட்டிலுள்ள பகுதியினர் சிலர் ளகரமாகவும் வேறு சிலர் யகரமாகவும், இன்னும் சிலர் ஷகரமாகவும் தவறாக ஒலிக்கக் காண்கிறோம். ழகரம் படும்பாடு பெரும்பாடு. ழகரத்தை நன்கு ஒலிப்பவர் சிலரே. கி.பி.11-ஆம் நூற்றாண்டில் வீரசோழியம் என்னும் இலக்கண நூலை இயற்றிய புத்தமித்திரனார், "ளகர ழகரங்களையும் றகர ரகரங்களையும் பிழைக்க ஒலிப்பவர் அறிவில்லாதார்" என்று 82-ஆவது நூற்பாவில் குறிப்பிட்டார். அந்நூலுக்கு உரை எழுதிய பெருந்தேவனார் தவறாக இவ்வெழுத்துகளை ஒலிப்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் கொடுத்துள்ளார்.

நாழியை நாளி எனவும், கோழியைக் கோளி எனவும், மூழை என்பதை மூளை எனவும், உழக்கு என்பதை உளக்கு எனவும், வழி என்பதை வளி எனவும், விளக்கு என்பதை விழக்கு எனவும், பளிங்கு என்பதைப் பழிங்கு எனவும், இளமை என்பதை இழமை எனவும், கருநிலம் சுற்றின தேசத்துச் சிலர் வழங்குவர் என்றும், வெற்றிலை என்பதை வெச்சிலை எனவும், முற்றம் என்பதை முச்சம் எனவும், கற்றை என்பதைக் கச்சை எனவும், உச்சியம் போது என்பதை உற்றியம்போது எனவும், காவிரி பாய்ந்த நிலத்துச் சிலர் வழங்குவர் என்றும் அவ்வுரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், இப்படிக்கு ஒத்த. அப்படிக்கு ஒத்த என்பனவற்றை இப்படிக் கொற்ற, அப்படிக் கொற்ற எனவும், சேற்று நிலம், ஆற்றுக்கால் என்பனவற்றைச் சேத்து நிலம், ஆத்துக்கால் எனவும், வாழைப்பழம், கோழி முட்டை என்பனவற்றை வாயைப் பயம், கோயி முட்டை எனவும், உயிர், மயிர் என்பனவற்றை உசிர், மசிர் எனவும், பிறவாற்றாலும் அறிவில்லாதார் தமிழைப் பிழைக்க வழங்குவர் எனவும். இவையெல்லாம் உலகத்தார்க்கு ஒவ்வா என்று களைக எனவும் அறிவுறுத்தியுள்ளார். உலகத்தார் என்பது கற்றாரைக் குறிக்கும். "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்ப. தொண்டை நாட்டில் கல்லாதார் சிலர் வாழைப்பழத்தை வாயைப்பயம் என்றும் கோழியைக் கோயி என்றும் கூறுவதை இன்றும் கேளாமல் இல்லை. மார்பு வலியைப் பெரும்பாலோர் மார்வலி என்று கூறுகின்றனர். பண்ட சாலையைப் பண்டக சாலை என்று எழுதியுள்ளனர் கூட்டுறவுக் கழகத்தார். சிதம்பரத்தில் திருவிழாவைச் சிலர் திருவிஷா என்பர். திருநெல்வேலிப் பகுதியில் பலர் குழந்தையைக் குளந்தை என்றும், வாழைப் பழத்தை வாளைப் பளம் என்றும் கூறுவர்.

தவறாக ஒலிப்பது பயிற்சிக் குறையாலும் முயற்சிக் குறைவாலும் வருவது. சென்னை போன்ற இடங்களில் பல மொழியினர் கூட்டுக் குடியினராக இருப்பதால் தமிழ்க் குழந்தைகள் தவறான உச்சரிப்பைப் பிற மொழியாளரிடமிருந்து கற்றுக்கொள்கின்றன. இது போன்ற சூழ்நிலையால் எழுத்தொலி தவறாகிறது. பேச்சாளர்கள் இக்குறையைப் போக்கிப் பேச முனைய வேண்டும். "வந்தார்கல், போனார்கல். வாயைப்பயம், குயந்தை, அயுவுது, பளக வேண்டும், எளுந்திரு" என்று பேசினால் கேட்பவர்கள் நகைக்காமல் என்ன செய்வார்கள்? இவ்வாறு பேசுபவர்களை அவையினர் எவ்வாறு மதிப்பர்? மதியார். ஆதலால், இளம் பேச்சாளர்கள் தொடக்கத்திலேயே - இக்குறை இருக்குமானால் - தங்களுடைய பேச்சொலி தங்களுடைய காதில் நன்றாக விழும்படியாக உரக்கப் படித்தும், பிறர்க்கு முன் நின்று படித்துக் காட்டியும் உச்சரிப்புப் பிழையைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

## அவையோர் உளவியல்

மேடையில் பேசினாலும், ஊடகங்களில் பேசினாலும், கல்வி நிறுவனங்களில் பேசினாலும், தொழிற்சாலைகளில் பேசினாலும் பேச்சாளர் அவையோரைச் சரியாக எடை போட்டுக் கொண்டு தன் பேச்சை வழங்க வேண்டும். அவையோரை ஈர்த்துக் கட்டிப் போடும் அளவிற்குப் பேச்சு இடம்பெற வேண்டும். அவையோரை

1. படித்த மக்கள்
2. பாமர மக்கள்
3. குற்றம் காண்போர்

என்று பிரிக்கலாம். படித்த அவையோர் பேச்சாளரின் கருத்துகளைத் தாம் ஏற்கனவே கேட்டவர்கள் பேச்சோடும், கற்ற நூல்களின் கருத்துகளோடும் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். பாமர மக்கள் பேசுவோரை ஊன்றிக் கவனித்து இன்புறுவார்கள். ஆனால் மூன்றாவது சொல்லப்பட்ட குற்றங் காண்பவர் மனது எப்போதும் குற்றங் காண்பதிலேயே ஈடுபட்டு இருக்கும். எந்தவிதப் பேச்சாளர்களும் அவர்களைத் திருத்தி விட முடியாது. திருப்திப்படுத்தவும் முடியாது. அவர்கள் திருந்த வழி குறைவு.

அவையோர் எதிர்பார்க்கும் அளவிற்கு அறிவுக்கும் நோக்கத்திற்கும் கொள்கைகளுக்கும் ஏற்றவாறு ஒரு பேச்சாளர் பேசுவதே முறையாகும். உலகப் பொது அறிவும் சபையோரின் மானிட சக்தியும் பிணைந்து நிற்பதே நல்ல பேச்சின் இலக்கணம் ஆகும். நல்ல மருத்துவர் எவ்வாறு தன்னிடம் வரும் நோயாளியின் நாடியைப் பிடித்துப் பார்த்து மருந்து கொடுக்கிறாரோ அதுபோல பேச்சாளர் நாடித்துடிப்பை உணர்ந்து இரைபோட வேண்டும்..

தாம் பேசிப் பழகியவர்கள் முன்பு பேச நேரிடலாம். பழகாத புது இடங்களில் பேச வேண்டியிருக்கலாம். இடம், காலம், இயல்பு என்று அவையோரைக் கூறுபடுத்திக் கொள்ளலாம், பழகிய பேச்சாளர் பேசும்போது அவையோரும் 'இவர் இப்படித்தான் பேசுவார் என்று முடிவு எடுத்து வைத்துக் கொண்டு கேட்க வருவார்கள். அத்தகைய பழகிய சபையோர் முன்பு பேச்சாளர் அவர்களின் எதிர்பார்ப்புக்கேற்பத் தமது உரையை அமைத்துக் கொள்வார்கள். இத்தகையோர் பேச்சு மேல் பூச்சு இல்லாமல் முலாம் இடாத இயல்பான பேச்சாகவே இருக்கும். அந்தப் பேச்சைச் செவிமடுக்கும் பெரியோர் அந்தப் பேச்சைச் சுவைப்பர். எளிய மொழி நடை, சின்னச் சின்ன வார்த்தைகள், வாக்கியத் தொடர்கள், கருத்துத் தெளிவு ஆகியவை அந்தப் பேச்சுக்குத் துணை நிற்கும்.

**விருப்பு வெறுப்பு**

ஒரு பேச்சாளரைப் பலருக்குப் பிடிக்கலாம்; சிலருக்குப் பிடிக்காமற் போகலாம். இன்றைய சூழலில் சில பேச்சாளர்களைத் தற்கால ஊடங்களின் வாயிலாகச் சபையோர் எடை போட்டு வைத்துள்ளார்கள். தாம் எடை போட்டபடி சிலர் உயர்வாகவும் சிலர் தாழ்வாகவும் மனதில் இடம் பெறலாம். பல்லாண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் நடைபெற்ற சர்வ மத உலக மாநாட்டில் விவேகானந்தர் இந்துமத உயர்வைக் குறித்துப் பேசினார். பரப்பரப்பாக இன்று வரை பலர் மேடைப்பேச்சுகளில் உதாரணம் காட்டுவது இந்தப் பேச்சைத்தான்.

ஒருசில பேச்சாளரின் பேச்சைப் பாராட்டி ஆரவாரித்து ஆர்ப்பரித்து மகிழ் சபையார் கூட்டம் உண்டு. அத்தகையோர் பேசும் இடமெல்லாம் பெருங்கூட்டம் கூடும். ஈவேரா பெரியார், சி.என். அண்ணாத்துரை, திரு.வி.க. போன்றோர் பெரும்பான்மை மக்களைத் தம் பேச்சுத் திறத்தால் வசீகரித்தவர்கள். சிலர் சபையில் பேசும்போது ஒரு குழுவினரை நண்பர்களாகவும் ஒரு குழுவை எதிரிகளாகவும் பாவித்து சிலர் பேசுவார்கள். சிறந்த பேச்சாளர்கள் இவ்வாறு பிரித்துப் பார்க்கக்கூடாது. அனைவரையும் ஒருமித்த வகையில் பாவிக்க வேண்டும்.

"இந்தக் கூட்டத்தில் என் பேச்சு பிடிக்காத சிலர் இருப்பதைக் காண்கிறேன். எனக்குக் கைதட்டாவிட்டாலும் பரவாயில்லை. இடைஞ்சல் இல்லாமல் இருந்தால் சரி" என்று சிலர் பேசுவதுண்டு. சில கரடுமுரடான பேச்சாளர்கள் "என் பேச்சு பிடிக்காதவர்கள் இருந்தால் வெளியேறுவது நல்லது' என்று பேசத் தெரியாமல் பேசிவிடுபவரும் உண்டு. இந்த மாதிரியான பேச்சாளரின் பேச்சு அவையோரின் ஒரு பகுதியைப் புண்படுத்தும் என்பதை உணராமல் போவதுண்டு. இதைத் தவிர்த்தல் நல்லது.

**தொடர்ந்து விலக்குதல்**

அவையோரை ஈர்க்கும் வகையில் பேசும் போது அவர்களுக்குத் தன் பேச்சில் எள்ளளவும் சந்தேகம் ஏற்படாதபடி தொடர்ச்சியாகவும் விளக்கமாகவும் தன் பேச்சைத் தொடர வேண்டும். ஏற்றம் இரைப்பவர்கள் எவ்வாறு தொடர்ந்து நீரை இறைப்பார்களோ அதுபோல பேச்சாளர்கள் பேச்சு என்ற நீரைத் தொடர்ந்து இறைக்க வேண்டும்.

**தேர்தல் வட்ட அவையோர்**

'அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா? என்று கவுண்டமணி சொல்வது போல அரசியல் மேடைகளில் ஒருவரை ஒருவர் திட்டித் தீர்ப்பது காலம் காலமாக நடைபெறும் ஒன்று. சிலர் நாகரிகமாகப் பெயர் குறிப்பிடாமல் சாடைமாடையாக எதிரியைத் தாக்கிப் பேசுவார்கள். அனுபவம் வாய்ந்த அவையோருக்கு இந்தப் பேச்சாளர் யாரைத் திட்டுகிறார் என்பது புரிந்துவிடும். சில பேச்சில் வல்லவர்கள் சிலேடையாக, குழூஉக் குறி கொண்டும் பேசித் தாக்குவார்கள்.

பேச்சாளர் தான் பேச வந்த நபர் குறித்து புகழ்ந்து பேசலாம். தவறில்லை. மாறாக எதிராளைப் பற்றி அவதூறாகப் பேசுவதால் இலாபமில்லை. மாறாகக் குறிப்பிட்ட சிலருடைய எதிர்ப்பையும் வெறுப்பையும் சம்பாதிக்க வேண்டியிருக்கும். இது தேவையில்லாத வேலை. அவையோர் மனம் புண்படாமல் பேசுபவர் பேச்சில், எதிர்தரப்பினர் கவனம் திருப்பக் கூடும். அனைவரையும் விருப்பு வெறுப்பு இன்றிப் பேசுவதால் இலாபம்தான்.!

வெறுப்பை உமிழ்ந்து பேச்சாளர் பேசுவதால் அவையோர் மத்தியில் ஏற்படும் வெறுப்பு பலவித இடையூறுகளை ஏற்படுத்தும். விளைவுகள் பலவற்றைச் சந்திக்க வேண்டி வரும். ஒட்டிய சுவரொட்டிகள் கிழிக்கப்படும்; தார் எண்ணெய் பூசப்படும்; கூட்டத்தில் கல்வீச்சு நடக்கலாம். இவ்வாறு தேர்தல் நேரங்களில் இடையூறு செய்வோர் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படும். வெற்றிவாய்ப்பு இடம் மாறும். இந்த விளைவுகளுக்கெல்லாம் பேச்சாளரின் பேச்சு அவையோர் மத்தியில் ஏற்படுத்திய வெறுப்பே காரணம்.

**சட்டசபைப் பேச்சு**

ஒரு காலத்தில் சட்டசபையில் கௌரவமான முறையில் பேச்சுகள் இருந்தன. காலம் செல்லச் செல்ல நாகரிகமான வாதங்களும் பேச்சுகளும் மறைந்து வருகின்றன. தர்க்க ரீதியாகவும் பகுத்தறிவு கொண்டும் பேச வேண்டிய சபையில் கடமையை உணர்ந்து பேச வேண்டும் என்பது நியதி, ஆனால் அவ்வாறு பேச்சு இருக்கிறதா? என்பது கேள்விக்குறி.

**பெண்கள் அவை**

பொதுவாக சபைதனில் பேச வேண்டுமென்றால் சில சபை நாகரிகத்தைக் கடைப்பிடித்தல் அவசியம். அதிலும் பெண்கள் இருக்கும் சபையில் கண்ணியம் காக்கப்பட வேண்டும் என்பது கட்டாயம். பொதுவாக, பொது இடங்களில் நான்கு சிறுவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போதுகூட யாராவது பெண்கள் பக்கத்தில் இருந்தால் சில வார்த்தைகளைச் சப்தம் போட்டுப் பேச மாட்டார்கள். "ஏய். பெண்கள் வராங்கப்பா என்று தன் பேச்சை சென்சார் செய்வதுண்டு. பெண்கள் தினவிழா கூட்டத்தில் பேசப்போகும் ஆடவர் அளவறிந்து அவையோர் மனமறிந்து பேசுதல் நலம். 'காதலித்தல்', 'காமம்',

‘காமுறுதல்’, 'கைம்மை', ‘விபச்சாரி’ போன்ற சில குறிப்பிட்ட வார்த்தைகளைத் தவிர்த்தல் நன்று.

இவ்வாறாக, பேச்சாளர் தன் பேச்சை அவையோர் உளவியலை ஒட்டி மாற்றிக் கொள்ள வேண்டும். உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினிலே உண்மை வெளிப்படும் என்ற தம்பிக்கையின் அடிப்படையில் அவையோர் உளவியல் முக்கியப் பங்கு வகிக்கிறது. சொல்லும்போது கேட்பவரைத் தன் வயப்படுத்தும் பண்புகளுடனும், கேட்காதவரும் கேட்க விரும்பும்படியும் கூறுவதே சொல்வன்மையாகும்.

**"கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்." - திருக்குறள்**

**மனிதனுக்குள்ள திறமைகளில் மிகுந்த போற்றுதலுக்குரியது பேச்சாற்றல். அதைச் சரியாகக் கைவரப் பெற்றவர்கள் அரசனைவிட அதிகாரம் பெற்றவர். அந்தக் கலையைக் கற்றவர்கள் இந்த உலகில் ஒரு விடுதலை பெற்ற ஆற்றலாக இயங்கக் கூடியவர்கள்.**
**-வின்ஸ்டன் சர்ச்சில்.**

## பேச்சைத் தொடங்குவது எப்படி

மக்களாட்சியில் மேடைப் பேச்சு மாண்புமிக்க கருவியாகிவிட்டது; ஆக்கவும் காக்கவும் அழிக்கவும் வல்ல அரிய பெரிய அற்புதச் சக்தியாகியும் விட்டது. இத்தகைய மேடைப் பேச்சு வேறு; முக்திக்கு வழிகாட்டும் புராணப் பிரசங்கம் வேறு: காலத்தை நல்வழியில் பயன்படுத்தச் செய்யும் காலட்சேபம் வேறு மேடைப் பேச்சாயினும், புராணப் பிரசங்கமாயினும், காலட்சேபமாயினும், வேறு எதுவாயினும், பொதுவாக இவைகட்கெல்லாம் பேசும் முறை இன்றியமையாதது. சிறப்பாக மேடைப் பேச்சுக்கு எடுத்தல், முடித்தல் ஆகிய இவை அமையப் பேசும் முறையானது. பேசும் பொருளை மக்கள் கேட்டுப் பயனுறச் செய்யும். பேசும் பொருள் கேட்போரைப் பிணிக்கவேண்டும் என்று விரும்பினால், பேசும் முறையைப் பேச்சாளர் நன்கு அறிவது அவசியமாகும். மாற்றுக் கருத்தினரும் ஏற்றுக் கொள்ளுமாறு பேச்சு இருக்க வேண்டுமானால், அது பேசும் முறையாலேதான் அமையும் என்று யாவரும் நன்குணர்வர். பேசும் பொருளை ஒழுங்கு முறைக்குக் கட்டுப்படுத்தித் தொடக்கம். இடைப்பகுதி, முடிவு பகுத்துப் பேசுவதையே பேசும் முறை என்கிறோம். மலரைத் தொடுத்து மாலையாகக் கட்டுவது போலக் கருத்துகளையும் அங்கும் இங்கும் சிதறுண்டு போகாதவாறு கோவைப்படுத்த வேண்டும்.

**பொதுக் கடவுள் வாழ்த்து**

பேச்சுக்குரிய எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்னும் மூன்றனுள் இங்கு எடுப்பைப் பற்றிப் பார்ப்போம். எடுப்பு என்பது தொடக்கம் அல்லது முன்னுரையாகும். சாதாரணமாகக் கழகங்களில் முதலாவது கடவுள் வாழ்த்து நடைபெறுவது நம் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கி வரும் வழக்கம், கடவுள் வாழ்த்துடன் கூட்டத்தைத் தொடங்க விரும்பும் அமைப்பாளர்கள் அதை இடத்துக்கு ஏற்றவாறு நடக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். பல சமயத்தார் கூடியுள்ள சபையில் பொதுக் கடவுள் வாழ்த்துப் பாடுதலே சாலச்சிறப்புடையது. கடவுள் 'வாழ்த்து என்று ' கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி' என்னும் வெண்பாவைப் பாடலாமா? பொருத்தமில்லாத பாடல்களைக் கடவுள் வாழ்த்து என்று பலர் பாடக் கேட்கிறோம். பொருத்தமாக இக்காலத்தில் பொதுக்கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடுவதே தகுதியாகும். (பொதுக்கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிலவற்றைப் பிற்சேர்க்கையில் காண்க.) கடவுள் இசைமயமாக இருப்பினும் பக்திச் சுவையுடன் கடவுள் வணக்கப் பாடலைப் பாட வேண்டுமேயன்றி, ஆரோகணம் அவரோகணம் அமையப் பாடவேண்டு மென்பதில்லை; பொருளுணர்ந்து இசையுடன் பாடுவார் பாடினால் விரும்பத்தக்கதே. கடவுள் வாழ்த்துப் பாடல் சுருங்கிய அளவினதாக இருத்தல் நன்று. "கடவுளே, இக்கூட்டம் நன்கு நடைபெற அருள் புரிய வேண்டும்" என்னும் கருத்தே கடவுள் வாழ்த்துப் பாடுவதன் நோக்கம். பாட்டானது, "கடவுளே, உன் பொன்னடி போற்றி" என்பது போல முடிய வேண்டும். கடவுள் வாழ்த்துப் பாட இசைவாணரைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுவதில்லை. ஒருவர் கடவுள் வாழ்த்தை மிக இனிமையாகப் பாடினாலும் அவையினர் இசையின் அருமையைப் பாராட்டிக் கைதட்டுவது கூடாது.

கடவுள் வாழ்த்து இல்லாமலும் கூட்டம் தொடங்கலாம். சங்க காலத்தில் புலவர்கள் கடவுள் வாழ்த்து இல்லாமலே நூல்களை இயற்றியுள்ளார்கள். ஆதலால், அவர்களைப் பின்பற்றிக் கூட்டத்தைத் தொடங்கலாம். ஏதோ ஒன்றைப் பொருள் இன்றிக் கடவுள் வாழ்த்து என்று சொல்லித் தவறாகப் பாடிக் கூட்டத்தைத் தொடங்குவதை விடக் கடவுள் வாழ்த்து இல்லாமல் தொடங்குவது மேலானது. ஆங்கில முறையில் நடக்கும் கூட்டங்களில் கடவுள் வாழ்த்துப் பாடுவதில்லை.

புராணப் பிரசங்கத்திலும் காலட்சேபத்திலும் முறையே பிரசங்கியாரும் பாகவதரும் கடவுள் வாழ்த்து, குரு வணக்கம், அவையடக்கம் இவற்றுடன் தொடங்கிக் கதைமேற்போவதைக் காணலாம். ஆனால், மேடைப் பேச்சில் கடவுள் வாழ்த்து நிகழ்ந்த பின்னும் பேச்சாளர் வேறு ஒரு கடவுள் வாழ்த்துப் பாடவேண்டுவதில்லை; குரு வணக்கம்

கூறவேண்டுவதும் இக் காலத்துக்குத் தேவையில்லை. உள்ளத்தில் நினைப்பதே உத்தமம். பேச்சாளர் ஒரு சிலர் இத்தகைய பாடல்களைப் பாடிப் பேச்சைத் தொடங்குகின்றனர். அஃது இன்று வழக்கொழிந்த முறையாகும். எனவே, மேடைப் பேச்சாளர்கள், கடவுள் வணக்கம், குரு வணக்கம், அவையடக்கம் கூறவேண்டிய அவசியம் இன்று வேண்டுவதில்லை என்றுணர்க. பேச்சாளர் ராகம் நன்றாக இராவிடின் அவர் பாடுவது அவையில் நல்லெண்ணத்தை உண்டாக்காது.

**விளித்தல் முறை**

பேச்சைத் தொடங்குவதற்கு முன்னர்ப் பேச்சாளர் "அன்புமிக்க தலைவரவர்களே. தாய்மார்களே. பெரியோர்களே" என்று விளித்துப் பேச்சைத் தொடங்க வேண்டும். தலைவருக்கு அன்பு இல்லாவிட்டாலும் "அன்புமிக்க" என்னும் அடைமொழி பெய்து விளித்தல் மரபு, "மதிப்புக்குரிய தலைவரவர்களே" என்றும் விளிக்கலாம். ஆண்களை விளிப்பதற்கு முன்பு பெண்களை விளிப்பது நம் நாட்டு வழக்கமன்றாயினும், அது நாகரிகம் மிகுந்த மேலை நாடுகளில் கையாளும் முறையாகும். நாமும் அங்ஙனம் விளிப்பதால் தவறில்லை. அது நாம் பெண்ணுலகுக்கு அளிக்கும் பெருமையாகும். பெண்களை இழிவாகக் கருதும் இழிமனப்பான்மையை ஒழிப்பதற்குப் பெண்மணிகளை ஆண்களுக்கு முன்னர், "தாய்மார்களே" என்று விளிப்பது தக்க வழியாகும். 'அன்புமிக்க தலைவரவர்களே. அருமைத் தோழியர்களே, தோழர்களே" என்று சிலர் விளிப்பதுமுண்டு. இச்சமயத்தைப் பயன்படுத்திப் பேச்சாளர் சிலர் தலைவரது சிறப்பை மிகுதியாகக் கூறுதலுமுண்டு. வீணாக அளவு கடந்து தலைவரைப் புகழ்வது பிறர் பேச்சாளரைத் தவறாக எண்ணுவதற்கு இடமளிக்கும்.

**அவையடக்கம் வேண்டுவதில்லை**

விளித்தலுக்குப் பின் பேச்சாளர் முன்னுரையில் உடனடியாக நுழையவேண்டுமேயன்றிப் பழைய அவையடக் முறையை மேற்கொண்டு, "நான் கூறுவதில் குறையும் உண்டு நிறையும் உண்டு. எப்படி அன்னப் பறவையானது தண்ணீரையும் பாலையும் கலந்து வைத்தால் தண்ணீரை விடுத்துப் பாலை மட்டும் கொள்ளுமோ 'அப்படி என் பேச்சில் உள்ள குறைகளைத் தள்ளி நிறைவுகளை மட்டும் கொள்ளவேண்டும் என்று அவையடக்கம் கூற வேண்டுவதில்லை. அன்றி, பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ?" என்றாவது, "அறையும் ஆடரங்கும் படப் பிள்ளைகள் தரையிற் கீறிடின் தச்சரும்

காய்வரோ?" என்றானது கம்பர் கூறிய அடிகளைப் பாடி அவையடக்கம் கூற வேண்டுவதில்லை. "கவ்வாத புல்லறிவிற் கடைபட்ட நாயேன்" என்றும், "ஆன்ற அறிவும் ஆழ்ந்த சுல்வியும் அழகிய பேச்சுப் பேசும் ஆற்றலும் அற்ற அடியேன், அடியார்க் கடியேன்" என்றும் தாழ்த்திச் சொல்லிக் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. பேச்சாளர் அறிவுடையவர் என்றுதானே அழைக்கப்பட்டுள்ளார். பேச்சாளரை அறிஞர் என்று கருதியே அவருடைய பேச்சைக் கேட்க மக்கள் குழுமியிருக்கிறார்கள். பேச்சாளர் இப்படிக் கூறினால் அவையினர் அவரைப் பற்றிக் குறைவாகவே நினைக்க வழி ஏற்பட்டுவிடும். சிலர் தம்மைப் போலியாகக் குறைவாய்க் கூறிக்கொள்வதுண்டு. இது போலிச் செயலாகும். பேசுபவர் அறிவு நிரம்பியவர் என்று தெரிந்தால்தான், மக்கள் பேசுங் கருத்துக்குக் காது கொடுப்பார்கள்.

அவையடக்கம் என்னும் தொடருக்கு அவைக்கு அடங்குதல் என்றும், அவையை அடக்குதல் என்றும் இருபொருள் உண்டு. ஒரு சிலர் இரண்டாவது பொருளைப் பின்பற்றி அவையினரை அடக்கும் முறையில் செருக்காகப் பேசுவதுண்டு. செருக்குடையவர் பேச்சுக்கு மதிப்பிருக்காது. ஆதலால், பேச்சாளர் செருக்குடன் பேசுதல் கூடாது. விரும்பினால், "என் பேச்சில் குற்றங் குறைகள் காணப்படின் பொறுத்தருளும்" என்று அன்பினால் வேண்டிப் பேச்சைத் தொடங்கலாம்.

**தவறான அவையடக்க முறை**

"எனக்கு முன்னே பேசியவர் எல்லாம் பேசிவிட்டார். நான் பேச இருந்ததையும் எனக்கு முன் பேசிய நண்பர் கூறிவிட்டார். பேச எனக்கு ஒன்றும் இல்லை; ஆனாலும் பேசுகிறேன்" என்றாவது, "எனக்கு இன்று ஓய்வு இன்மையால் நான் பேச்சைத் தயாரித்து வரவில்லை" என்றாவது ஒருவர் பேச்சைத் தொடங்குவது தவறாகும். உண்மையிலே பேச்சைத் தயாரித்து வரவில்லையென்றாலும் பேச்சாளர் அப்படிச் சொல்ல வேண்டுவதில்லை. அப்படிச் சொன்னால் கேட்கும் ஆர்வம் கெட்டுவிடும்.

மேடைப் பேச்சாளர் இவ்வாறெல்லாம் சொல்லித் தம்மை இழிவுபடுத்திக் கொள்ளலாகாது. பேச்சாளரிடமிருந்து புதுக் கருத்துக்கள் வெளிவரும் என்று மக்கள் நம்பிக்கை கொள்ளுமாறு பேச்சுத் தொடக்கம் இடந்தர வேண்டும்.

**எடுப்பு**

சிறந்த பேச்சாளர் எடுப்புக்குப் படும்பாடு மிகப்பெரிது. பெரும் பேச்சாளர்கள் எல்லாரும் பேச்சை எப்படித் தொடங்குவது என்பதிலும், எப்படி முடிப்பது என்பதிலும்

மிகுந்த கவனம் செலுத்தியிருப்பதாய் அவர்களுடைய வரலாற்றில் காண்கிறோம். எடுப்பு மிகக் கடினமானது. தொடக்கப் பேச்சாளர் இதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்; சிந்தித்து முன்னதாக எழுதித் தயாரித்தலும் வேண்டும். முயற்சி செய்தால் முடியாததொன்று உண்டோ?

**முன்னுரை நீண்டு விடக்கூடாது**

முன்னுரை நீண்டுவிடுதல் கூடாது. பேச்சாளர் தமது நீண்ட முன்னுரையால் கேட்பவரது பொறுமையைச் சோதிப்பதாகிவிடும். காலத்தின் அருமை உணர்ந்து பேச்செடுப்பு மிகச் சுருங்கிய அளவில் சில சொற்களில் அல்லது இரண்டு மூன்று வாக்கியங்களில் அமைவது விரும்பத்தக்கது. பேச்சில் உடனே நுழைந்துவிடுவது தவறாகாது. முன்னுரை நீண்டுவிடுமானால் "பேச்சாளர் அளக்கிறார்" என்பர் கேட்போர்.

**பேச்செடுப்புக்குச் சில வழிகள்**

பேச்செடுப்புக்குச் சில வழிகள் உண்டு. அவை வருமாறு:

- ஒரு சிலர் நகைச்சுவைக் கதையுடன் பேச்சைத் தொடங்கலாம். இது தொடக்கப் பேச்சாளரால் இயலாது; அனுபவமுள்ளவர்களுக்கே கூடியது. நான் பருத்த ஆள் என்று என்னைத் தேர்ந்தெடுத்தனர் என்று பருத்தவராயிருப்பவர் தம்மைக் குறித்து வேடிக்கையாகக் கூறித் தொடங்குவதுமுண்டு.
- பேசும் பொருளின் தலைப்பைக் குறிப்பிட்டு அதில் அவையினர் கவனத்தை ஊடுருவச் செய்து பேச்சைக் கவனிக்குமாறு செய்தல் ஒரு முறை.
- ஒன்றைக் குறித்து ஆவலை எழுப்பி அதனைப் பின்பு கூறிப் பேச்சைத் தொடங்கலாம்.
- ஓர் எடுத்துக்காட்டுத் தந்து அதனை ஆவலாகக் கேட்குமாறு கூறிப் பற்றை உண்டாக்கத் தொடங்கலாம்.
- ஒரு கேள்வியை அவையில் கேட்டு, அதற்கு விடையை அவையினர் சிந்திக்குமாறு செய்து, பேச்சாளர் அவர்களைத் தம்முடன் ஒத்துழைக்கும் படி தூண்டிப் பேச்சைத் தொடங்கலாம்.
- காட்சிக்கு ஒரு படத்தையோ வேறு ஒரு பொருளையோ காட்டி. அதனைப் பார்க்குமாறு செய்து, பேச்சில் ஆவலைத் தூண்டிப் பேச்சைத் தொடங்கலாம்.

- மேற்கோளாக உரைநடை வாக்கியத்தையோ பாடலின் அடியையோ கூறி விளக்கிப் பேச்சைத் தொடங்குவதும் ஒரு முறையாகும்.

மலைக்கும்படியான ஒரு செய்தியைக் கூறிப் பேச்சைத் தொடங்கலாம். "லண்டன் மாநகரத்தில் வானொலிக் கருவியின் முன் இருக்கும் கண்ணாடியில் ஈ உட்காரும் ஒலியை, இந்தியாவில் கன்னியாகுமரி முனையில் நயாகரா நீர் வீழ்ச்சியைப்போல் பேரொலி செய்யுமாறு இன்று விஞ்ஞானம் வளர்ந்துள்ளது" என்பது போன்றதே மலைக்கும்படியான செய்தி.

"பிற நாடுகளில் மக்களின் சராசரி வயது இன்று மிகுதியாக இருக்கிறது. சுவீடன் நாட்டில் மக்களுக்கும் சராசரி வயது 79. நார்வே நாட்டில் சராசரி வயது 78. அமெரிக்காவில் சராசரி வயது 77: ரஷ்ய நாட்டில் சராசரி வயது 67. இஸ்ரேல் நாட்டில் சராசரி வயது 78. ஜப்பானில் சராசரி வயது 81. இலங்கையில் சராசரி வயது 73. ஆனால், இந்தியாவிலே இன்று மக்களுக்குச் சராசரி வயது 63. அஃதாவது இந்தியாவில் பெரும்பாலோர் 63 வயதில் மாண்டு மடிகிறார்கள். இவ்வாறு மடிய விடலாமா? என்ன செய்தல் வேண்டும்?" என்று கூறிச் சுகாதாரச் சொற்பொழிவைத் தொடங்கலாம். வாழ விரும்புவதால் மக்கள் இப்பேச்சை விரும்பிக் கேட்க முற்படுவார்கள்.

- ஏதாயினும் ஒரு நிகழ்ச்சியைக் கூறிப் பேச்சைத் தொடங்குவதுமுண்டு, 'நேற்று ரெயில் வண்டியில் நடந்தது இது" என்று கூறித் தொடங்குவது இம்முறை.
- பேசும் பொருளின் முக்கியமான தன்மையைக் கூறி அதனால் உண்டாகும் நன்மைகளைக் காட்டிப் பற்றுக் கொள்ளுமாறு செய்து பேச்சைத் தொடங்குவதும் ஒரு முறை.
- கதை கூறிப் பேச்சைத் தொடங்குவதும் ஒரு வழி.

மதுரையில் 1.6.1947 இல் நடைபெற்ற வேளாளர் பெருமக்கள் மாநாட்டில் உழவர் பெருமையைச் சொல்லவந்த சொல்லின் செல்வர் டாக்டர் ரா.பி. சேதுப் பிள்ளை அவர்கள் தொடங்கிய தொடக்கம் இது. முதலில் அவர்கள் மதுரையைப் பற்றிச் சிறிது கூறிப் பின் வருங் கதையோடு தொடங்கியது காண்க.

"முன்னொரு காலத்தில் தமிழ்நாட்டில் ஒரு திருமணம்: மன்னரும் முனிவரும், பாவலரும் நாவலரும், குடிகளும் படைகளும் மணமாளிகையில் நிறைந்திருந்தார்கள். ஔவையாரும் அங்கே வந்திருந் தார், மன்னன் திருமகனே மணமகன். மணம் இனிது முடித்து, மங்கல வாழ்த்துத் தொடங்கியது. முனிவர் ஒருவர் எழுந்தார்; "மணமக்கள் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!" என்று வாழ்த்தினார். "இளவரசு, வாழையடி

வாழையென வையகத்தில் வாழ்க!" என்று வாழ்த்தினார் மற்றொரு முனிவர். ஔவையார் எழுந்தார்: "அரசே, உன் நாட்டில் வரப்பு உயர்க!" என்று வாழ்த்தினார். அவ்வாழ்த்துரையின் பொருத்தமும் பொருளும் அறியாத சபையார், ஒருவரை ஒருவர் வெறித்து நோக்கினர். அது கண்ட ஔவையார் தம் வாழ்த்துரையின் கருத்தை விரித்துரைப்பாராய், 'சபையோரே! வரப்பு உயர்க! என்று இளவரசை நான் வாழ்த்தினேன். விளைநிலத்தின் வரப்பு உயர, நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்: நெல் உயரக் குடி உயரும்; குடி உயரக் கோன் உயர்வான்" என்று விளக்கம் கூறினார்.'

- தமிழின்பம்

இவற்றுள் ஏதாவது ஒன்றைப் பின்பற்றிப் பேச்சாளர் பேச்சைத் தொடங்கினால், அப்பேச்சு, கேட்போர் கவனத்தைக் கவர்ந்து முழுப்பேச்சையும் கேட்குமாறு தூண்டும். சாதாரணமாகப் பேச்சைத் தொடங்கினால் அது கேட்போரையும் பிணிக்காது: கேளாரையும் கவராது.

பேச்செடுப்புக்கு இதுதான் வழி என்று வரையறுத்துத் திட்டமாகக் கூறுவது இயலாது. அவரவர் தத்தம் திறமைக்கும் அறிவுக்கும் ஏற்ற வழியைப் பின்பற்றலாம். தொடக்கம் நன்றாக இருக்க வேண்டும் என்னும் குறிக்கோளை மட்டும் மறத்தலாகாது. ஒருவர், "நன்றாகத் தொடங்கு. நன்றாக முடி. இடையில் எதைத் திணித்தாலும் கவலை இல்லை" என்றார். சிறந்த அனுபவம் மிகுந்த மற்றொரு பேச்சாளர், "மேடைப் பேச்சில் தொடக்கமே முக்கியம். முதல் ஆறு வாக்கியங்களால் கேட்போர் கவனத்தைக் கவர்தலும் கூடும்; இழத்தலும் கூடும். ஆதலால், உடனே கேட்போர் உள்ளத்தைக் கவரும் முறையில் பேச்சைத் தொடங்குவாயாக!" என்று தொடக்கப் பேச்சாளருக்கு வழி கூறினார். அவர் கூறியது அனுபவத்தில் காணும் அரிய உண்மையே.

பேச்சைத் தொடங்குவது என்பதற்குரிய சில வழி முறைகளைக் கண்டோம். இனி நடைமுறையில் எடுப்பில் கையாள வேண்டிய வழி வகைகளைக் காண்போம். இளம் பேச்சாளர்கள் மேற்சொன்ன முறைகளுள் ஏதாவது ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டும். பொருளைத் திடீரென்று தொடங்குவது நன்றாயிருக்குமா? இராதன்றோ? அவையினர் உள்ளத்தைத் தயாரிக்க வேண்டுவது முதல் வேலையாகும். பேச்சாளரைப்பற்றி அவைத்தலைவர் கூறியிருப்பார். என்றாலும், பொது மக்களுக்கு அறிமுகமாகாத இளம் பேச்சாளர் திறமையாக மிகையின்றி ஒருவாறு குறிப்பாக அவையினருக்குத் தம்மைப்பற்றி அறிவித்துக் கொள்ளுதலும் வேண்டும். அடுத்துப் பேச்சாளர், கழகம் செய்யும் பணியினையும் அவையினரது ஆர்வத்தையும் பாராட்டுதலும் வேண்டும். இவ்வாறு

செய்வதால் பேச்சை ஏற்பாடு செய்தவர்களுக்கும் அவையினருக்கும் எல்லோருக்கும் உள்ளத்தில் உவகை பூக்கும்; உள்ளம் மலரும். அவையில் பேச்சாளர் பேச்சைக் கேட்க ஆர்வம் உண்டாகும்.

பொதுக் குறைகளை அரசாங்கத்துக்கோ வேறு நிலையங்களுக்கோ தெரிவிக்கும் பொருட்டுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். ஒரு செயலுக்கு எதிர்ப்புக் காட்டவே நிகழ்ச்சி ஏற்பாடாயிருக்கும். தேர்தலில் ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்காகக் கூட்டம் நடத்துவதாக இருக்கும். இவ்வாறு வெவ்வேறு காரணங்களால் கூட்டம் கூட்டப்படும். அவையினர் மாற்றுக் கருத்துள்ளவராயிருப்பர்.

- எப்படிப்பட்ட கூட்டத்திலும் பேச்சைத் தொடங்கும் போது,

  பேச்சாளர் வேகமாக விரைந்து பேச்சைத் தொடங்காமல், ஒரு முறை அவையினரைப் பார்த்துவிட்டு. அன்பாக அமைதியுடன், மெதுவாக முதலில் பேச்சைத் தொடங்க வேண்டும்.
- மேலும் பேச்சாளர், அன்பாகவும் அமைதியாகவும் கூட்டத்தின் அவசியத்தையும், அவையினர் ஆர்வத்தையும் பாராட்டுதலும் வேண்டும்.
- தொடக்கத்திலேயே கேட்போரைத் தங்கள் பால் இழுக்க வேண்டும். அவர்களை ஒரு மனத்தராக்க வேண்டும்.
- இதுதான் பேச்சுக் கலையின் இரகசியம். இதுதான் மேடைக் கலையின் இரகசியம்.

முதலிலேயே பேச்சாளர் பேசும் கூட்டத்தில் எதிர்ப்புக் கருத்தைத் தெரிவித்துக் கேட்போருக்கு அதிர்ச்சியை உண்டாக்கி விடுதல் கூடாது. உண்மையிலேயே அவையினர் கருத்தை மறுப்பதாயிருந்தாலும் பேச்சாளர் அவர்களுடைய கருத்தோடு ஓடிச் சிலவற்றில் ஒற்றுமை காட்டி மற்றவற்றில் வேற்றுமையை வெளியாக்கி வெற்றி பெறவேண்டும். ஆதலால் பேச்சாளர் தொடக்கத்திலே அவையினர் கருத்தை மறுத்துவிடல் கூடாது.

அன்புடன் பேசத் தொடங்குக. நண்பராகக் கருதிப் பேச்சைத் தொடங்குக. "தோழியர்களே, தோழர்களே, மேடைக்குப் புதியவனாயிருந்தாலும் நான் இக்கருத்திற்குப் புதியவனல்லன்" என்று தொடங்கி ஏதாவது பொருத்தமான காரணத்தைக் காட்டுக.

ஒரு கூட்டத்தில் பலர் பேசுவதற்கு ஏற்பாடு செய்வதுண்டு. அத்தகைய கூட்டங்களில் முன்னதாக இருவர் மூவர் பேசியிருப்பார்கள். ஒருவர் நான்காவதாகப் பேச இருக்கலாம். அப்போது, “எனக்கு முன் பேசியவர்கள் எல்லாம் பேசிவிட்டார்கள். நான் என்ன பேசுவது என்று புரியவில்லை; ஆனாலும் பேசுகிறேன்" என்று ஒருவரும் பேச்சைத் தொடங்குதல் கூடாது. பேச வந்திருக்கும் போது இப்படிப் பேசுவது அறிவுடைமையாகாது. அதற்குப் பேசாமல் இருக்கலாமே. முன்னே பேசியவர்களுடைய

கருத்தை ஒட்டிப் பேசுக. இப்படிச் செய்தால் அவையினருடைய கவனத்தை எளிதாகக் கவர்ந்து விடலாம். புதுக்கருத்துகளைச் சொல்ல முடியாதென்றாலும் முன் பேசியவர்களின் கருத்துகளைச் சுருக்கமாகச் சொல்லி உமது கருத்தையும் சேர்த்துப் பேசுக. இப்படிச் செய்தால் முன் பேசியவர்களுடைய பேச்சு உமது பேச்சுக்கு முன்னுரை போல அமைந்துவிடும். இது கடுமையான கட்டத்தில் எடுத்துக் கையாள வேண்டிய திட்டமாகும்.

## பொருள் விரிக்கும் முறை

சொற்பொழிவு அல்லது மேடைப்பேச்சில் வற்புறுத்தப்பட வேண்டிய பகுதிகளுள் பொருள் விரித்தல் முக்கியமானது. எந்தப் பேச்சும் முன்னுரை, பொருள், முடிவுரை என்று மூன்று பகுதிகளாக அமைதலின், இங்கே இடைப் பகுதியாகிய பொருள் விரித்தலைப் பற்றிச் சில குறிப்புகள் தரப்படுகின்றன.

மேடைப் பேச்சில் பொருள் விரித்தல் முக்கியமானது என்பதை ஒருவரும் மறத்தலாகாது. அறிவில்லாதவன் மதிக்கப்படமாட்டான். அங்ஙனமே பொருளில்லாத பேச்சு மதிப்படையாது. ஆதலால், குறித்த பொருளும் மாறாமல் தர்க்கமுறையை மேற்கொண்டு தெளிவு. விளக்கம் இவற்றைக் குறிக்கோளாக எண்ணிப் பொருளை விரித்துப் பேச வேண்டும்.

### கருத்துச் சிதறல் கூடாது

கருத்துத் தொடர்பு பொருள் விரித்தலில் சிதறுண்டு போதல் கூடாது. ஆரம்பக் கல்வியைப்பற்றிப் பேசுபவர். ஆரம்பக் கல்வியில் தொடங்கி, உயர்நிலைப் பள்ளிக் கல்லியில் முடிப்பது தவறாகும். பேச்சு முதலிலிருந்து முடியும் மட்டும் ஆரம்பக் கல்வியைப் பற்றியதாகவே இருத்தல் வேண்டும். ஒரு பேச்சில் ஒரு பொருளே இருப்பதுதான் முறை. ஒரு பேச்சில் பல பொருள் வருவதால் கருத்துக் குழப்பம் ஏற்படும்.

### 'மற்றொன்று விரித்தல்' என்னுங் குற்றம்

சிலர் ஒரு பொருளில் தொடங்கி வேறு ஒரு பொருளில் மிகுதியாகக் காலத்தைக் கடத்திவிட்டு, "ஐயோ, நான் என்ன என்னவோ பேசவேண்டும் என்றிருந்தேன். நேரம்

இல்லையே!" என்று குறித்த பொருளைப் பற்றிப் பேசாமலோ சிறிது பேசியோ அமர்ந்துவிடுவர். குறிப்பிட்ட பொருளை விட்டு மற்றொரு பொருளைப்பற்றிப் பேசுவது 'மற்றொன்று விரித்தல்' என்னும் குற்றமாகும். இத்தவறு பலரிடம் காணப்படுகிறது. ஒருவர் பொருளை விரிக்கும் போது வேறொன்றைப் பேசவேண்டும் என்றால் பேசும் பேச்சோடு தொடர்பு படுத்தி, 5 நிமிடத்தில் அதைக் குறிப்பிட்டுவிட்டு, எடுத்த பேச்சுக்குத் திரும்பி வந்து தொடர்ந்து பேசுதல் வேண்டும். இப்படிச் செய்யாவிடின் பேசும் பொருளில் கருத்துத் தொடர்ச்சி ஏற்படாது; கருத்துத் தெளிவும் உண்டாகாது. இளம் பேச்சாளர் இதை நன்கு கவனித்து 'மற்றொன்று விரித்தல்' என்னும் குற்றத்துக்கு ஆட்படாமல் பொருள் விரித்துப் பேசப் பழகுதல் வேண்டும் என்றறிக. இதில் அரசியல் பேச்சாளரைப் பின்பற்றுதல் கூடாது. அவர்கள் திருமண வாழ்த்தில், எதை எதையோ பேசி இறுதியில் மணமக்களை வாழ்த்தி முடிப்பார்கள். இதுதான் மற்றொன்று விரித்தலாகும். இது தவறான முறை.

**தர்க்க முறை**

பொருள் விரித்தலில் பேச்சாளர்கள் கவனிக்க வேண்டிய மற்றொன்று பேசும் பொருளைப் படிப்படியாகத் தர்க்க முறையோடு விரித்துக் கொண்டு போவதுதான். ஒரு கருத்தை விளங்கச் சொல்லிய பின்பு, மற்றொரு கருத்துக்குப் போக வேண்டும்.

- ஆரம்பக் கல்வி என்று ஒருவர் ஒரு பொருளைப் பற்றிப் பேசினால்,
- ஆரம்பக் கல்வி எந்த எந்த வயதுக்கு உரியது?
- நம்முடைய நாட்டு ஆரம்பக் கல்வியில் காணப்படும் குறைகள் எவை? நிறைகள் எவை?
- அயல் நாட்டில் ஆரம்பக் கல்வி எப்படியிருக்கிறது?
- நாம் என்ன செய்யவேண்டும்?
- மாற்றம் செய்தால் ஏற்படக்கூடிய தொல்லைகள் யாவை?
- கைத்தொழிலையும் ஆரம்பக் கல்வியில் புகுத்துவதால் நன்மை உண்டா?
- முடிவாக மேற்கொள்ள வேண்டுவன எவை?

என்பன போன்ற குறிப்புகளைக் கொண்டு ஒவ்வொன்றையும் விரித்துப் பேசலாம்.

பொருள் விரிக்கும்போது பேச்சாளர் சொல்லும் பொருளை வெல்லும் வகையில் மாற்றுக் கருத்தினரும் ஏற்றுக்கொள்ளும் முறையில் ஒரு பொருளைக் குறித்து

ஒப்புக்கொள்ளக்கூடிய பல கருத்துகளை முறையாக அடுக்கிக் கூறவேண்டும். அப்போதுதான் அப்பேச்சு, கேட்போர் உள்ளத்தைத் தட்டியெழுப்பும்.

**உணர்ச்சியும் எழுப்புக**

பேச்சாளர் கருத்தை அடுக்கிக் கூறுவது மட்டும் போதாது; உணர்ச்சி எழுப்புமாறும் பேசவேண்டும். உணர்ச்சி எழுப்ப வேண்டுமாயின் ஏற்ற இடத்தில் மெய்ப்பாடு தோன்றப் பேச வேண்டும். உடலுறுப்புகளின் வெளிப்பாட்டால் கருத்துத் தோன்றச் செய்வதே மெய்ப்பாடு ஆகும். மெய்யின்கண் தோன்றலில் மெய்ப்பாடு ஆயிற்று. பொருள் விரிக்குங்காலத்தில் பேச்சாளர் மரம்போல் நின்று, அல்லது கற்றூண்போல் ஆடாமல் அசையாமல் நின்று, உணர்ச்சியின்றித் தேனீ ரீங்காரம் செய்வது போல, ஒரே ஒலியுடன் பேசிக்கொண்டு போதல் கூடாது; உணர்ச்சியுடன் பேச வேண்டிய இடத்தில் உணர்ச்சியோடு பேச வேண்டும். எந்த எந்தச் சொல்லை அல்லது சொற்றொடரை உணர்ச்சியோடு அழுத்திப் பேச வேண்டுமோ அந்தச் சொல்லை அல்லது சொற்றொடரை உணர்ச்சியுடன் அழுத்திப் பேச வேண்டும். இதைப் பேச்சாளர் மறத்தல் கூடாது.

**எடுத்தல்**

கட்டாயப்படுத்த வேண்டுவது. வெற்றி, எதிர்ப்பு, சினம், வெறுப்பு, உயர்வு, கிளர்ச்சி, களிப்பு இவற்றை எடுத்தல் ஒலியில் பேசுக.

**படுத்தலும் நலிதலும்**

வேண்டுகோள், துன்பம், பணிவு, அமைதி, விருப்பு, தாழ்ச்சி, அயர்ச்சி இவற்றைப் படுத்தல் ஒலியில் பேசுக. பொதுவாகக் களிப்பு மொழியினை எடுத்தல் ஒலியினும் துன்புறு மொழியினைப் படுத்தல் ஒலியினும் பேசலாம்.

உணர்ச்சி என்று கூச்சல் போடுதல் கூடாது; மெய்ப்பாடு என்று நாட்டியம் ஆடவும் கூடாது. உணர்ச்சி அற்ற பேச்சு உயிரற்ற பேச்சு. உணர்ச்சியுடன் பேசினால் அப்பேச்சு, கேட்பவர் உள்ளத்தில் ஊடுருவிச் சென்று அவர்களுடைய உள்ளத்தைப் பிணித்து விடும். உணர்ச்சியோடு பேசவேண்டும் என்று கூச்சல் போட்டுப் பேச்சாளர் தொடக்கம் முதல் முடிவு வரையில் பேசுதல் கூடாது. அப்படிப் பேசினால் பேச்சாளருக்கு நெஞ்சுவலி உண்டாகும்; கேட்பவருக்கும் மண்டையிடி ஏற்படும். அப்பேச்சும் சுவைபடாது. ஆதலால், பேச்சில் உணர்ச்சி அளவாக இருக்கவேண்டும் என்றுணர்க.

**புள்ளி விவரங்களைப் பயன்படுத்துதல்**

பொருள் விரித்துக் கூறும் போது சில புள்ளி விவரங்கள் கொடுப்பதற்காகப் பேச்சாளருக்குச் சில குறிப்புகளைப் படித்துக் காட்டவேண்டிய இன்றியமையாமை ஏற்படும். அப்படி நேரும்போது அவர்கள் புள்ளி விவரங்களை மனப்பாடஞ் செய்து சொன்னால் மிகுந்த மதிப்புண்டாகும்; இயலாவிட்டால் குறிப்புகளைப் படித்துக் காட்டுவதால் தவறில்லை. ஒன்று மட்டும். நினைவில் வைக்க வேண்டும். சொல்லவேண்டிய புள்ளி விவரக் குறிப்புகளைத் தயாராக வைத்திருந்து உடனடியாக எடுத்துப் படித்துக் காட்ட வேண்டுமேயன்றி, அந்த நேரத்தில் அதைத் தேடிக் கொண்டிருத்தல் கூடாது. அப்படிச் செய்தால் கூட்டத்தினர் சிறிது நேரத்தில் பேசத் தொடங்கி விடுவர் என்றறிக.

**இலக்கியப் பேச்சில் எப்படி?**

இலக்கியப் பேச்சில் பேச்சாளர் பொருளை விரிக்குங் காலத்தில் எடுத்துக்காட்டாகச் சில பாக்களைக் கூறலாம். அப்பாக்களைப் பேச்சாளர் மனப்பாடம் செய்து சொல்லுதலே தலையாயது; மனப்பாடம் செய்ய முடியாதவர்கள் பாக்களை எழுதி வைத்துக்கொண்டு படித்துக் காட்டுவது இடையாயது; நூல்களில் அடையாளம் வைத்திருந்து அந்த அந்தப் பக்கத்தை எடுத்துப் பாட்டைப் படித்துக் காட்டுவது சரியாகாது. இலக்கியப் பேச்சில் நல்ல இனிய தலைசிறந்த பாக்களை மனப்பாடம் செய்து, வேண்டுமிடத்தில் பாராமல் சொல்லி விளக்கம் செய்வதே பெருமதிப்பை உண்டாக்கும்; அவையினரையும் மகிழ்விக்கும்.

**நேர அளவு**

ஒரு பேச்சுக்கு முக்கால் மணிநேரம் அல்லது ஒருமணி நேரம் கொடுக்கப்பட்டிருந்தால், பேச்சாளர் எப்படியும் தம்முடைய பேச்சைக் குறிப்பிட்ட நேரத்தில் முடித்தேயாக வேண்டும்; காலவரையறைக்கு ஏற்றவாறு பொருள் விரித்தலை அமைக்க வேண்டும்.

**கால வரையறை**

| | நிமிடங்கள் | நிமிடங்கள் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| முன்னுரை | 10 | 5 |
| பொருள் விரித்தல் | 40 | 35 |
| பின்னுரை | 10 | 5 |
| பேச்சு | 60 | 45 |

**தொகுப்புரை**

- பேச்சாளர் பொருள் விரிக்கும்போது கருத்துத் தொடர்பு அறாதவாறு பேச்சைத் தொடர்ந்து பேசவேண்டும்.
- கூறியது கூறல், மாறுகொளக் கூறல், மற்றொன்று விரித்தல் என்னும் குற்றங்களைச் செய்யக்கூடாது.
- புள்ளி விவரங்களைக் கொடுக்க வேண்டுவது இன்றியமையாததாயிருந்தால் அவற்றைக் கொடுக்க வேண்டும்.
- உதாரணங்கள் தந்து, தெளிவு, விளக்கம் ஆகிய இவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு பல கருத்துகளையும் தர்க்க முறையில் எடுத்துக் கொடுத்து உணர்ச்சி ததும்பப் பேசவேண்டும்.

## பேச்சை முடிப்பது எப்படி?

ஒருவர் பேச்சைத் தொடங்குவதிலும் பொருள் விரித்தலிலும் கவனம் செலுத்தி, முடிப்பதில் கவனம் செலுத்தத் தவறிவிட்டால், பேசிய பேச்சு மதிப்பிழந்து போயினும் போகும். ஆதலால், பெருஞ்சொற்பொழிவாளர்கள் பேச்சை முடிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளார்கள் என்று அவர்களுடைய வரலாறுகளிலிருந்து தெரிந்து கொள்கிறோம். ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க நாட்டில் சிறந்து விளங்கிய பெரும் பேச்சாளர். அவர் தம்முடைய பேச்சில் முடிவு சிறந்து விளங்குமாறு கவனம் செலுத்தியதைப்பற்றி ஒரு குறிப்புக் காணப்படுகிறது. மற்ற நாட்டுப் பெரும் பேச்சாளர்களும் பெருநாவலர்களும் பேச்சை முடிப்பதில் திறமை காட்டியுள்ளதை அவர்களுடைய சொற்பொழிவு நூல்களில் பார்க்கிறோம்.

கேட்போர் கவனத்தைக் கவருமாறு பேச்சைத் தொடங்குவதும் முடிப்பதும் எளிதானவை அல்ல; கடினமானவை. திறமையாகப் பேச்சை முடிப்பது கடினமானது. முடிப்பதுதான் பேச்சில் முக்கியமானது; பேச்சைப் பயனுறச் செய்வது; கேட்டவர்களைச் செயலில் புகுமாறு அல்லது கேட்டதை உணருமாறு செய்யவல்லது எனவே,

பேச்சாளராகப் பழகுகிறவர்கள் பேச்சை அழகாக முடிப்பதில் இயன்றமட்டும் கவனம் செலுத்துதல் மிக மிக அவசியம்.

ஜார்ஜ் ரௌலண்டு காலின்ஸ் என்பவர், பேச்சை முடிப்பதைக் குறித்துத் தமது 'மேடைப் பேச்சு' என்னும் நூலில் கூறியுள்ளதாவது:

“பேச்சை முடிப்பதில் ஒரு குறிக்கோள் இருக்கிறது. அது பேச்சை முடிவுக்குக் கொண்டு வருவதுடன் சிறிது நேரத்திற்குள் பேசிய பேச்சின் முழுப்பொருளையும் கேட்போருடைய விழுமிய கவனத்துக்குக் கொண்டு வந்து பேச்சில் சிதறிக் கிடக்குங் கருத்துகளை ஒரு மூகப்படுத்தி, உள்ளத்தில் பசுமரத்து ஆணிபோலப் பதிய வைக்கிறது. ஆதலால், பேசி முடித்தலைத் திட்டமிட்டுச் சொற்களை நன்கு அமைத்து முடிப்பாயாக ஒருநாளும் பேச்சை விரைவாக அழகற்று முடியுமாறு திடீரென்று நிறுத்தி விடுதல் கூடாது. எடுத்துக் கொண்ட பேச்சை முடித்துக் காட்டுக. இதவே நான் சொல்லக்கூடியது. பேச்சை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து முடித்து விடுக. கேட்பவர்களும் பேச்சு முடிவடைந்தது என்று உணரட்டும்."

இக்கருத்து பேச்சாளராக விரும்புவோர் மறவாமல் என்றும் மேற்கொள்ளத்தக்கது. இதைவிட வேறு எவரும் கூற முடியாது எனலாம்.

**முடிப்பில் சிலர் செய்யும் தவறுகள்**

பொதுவாகப் பேச்சாளர் பலர், பேச்சை முடிக்கும். முறையில் சில தவறுகள் செய்வதைக் காணலாம். சில பொதுவான குறைகள் இங்குக் கூறப்படுவதற்குக் காரணம், பேச்சாளர்கள் அவற்றை நீக்கிக் கொள்வதற்காகும்.

ஒரு சிலர், "நான் சொல்லவேண்டியவையெல்லாம் சொல்லிவிட்டேன். என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்"' என்று கூறிப் பேச்சை முடிப்பதுண்டு. இது தவறான முடிப்பு முறை. முடிவு தோன்றுமாறு பேச்சை முடித்து அமர்ந்து கொள்க. கேட்பவர்கள் முடிவை உணர்ந்து கொள்ளட்டும்.

வேறு சிலர் பேச்சை எப்படி முடிப்பதென்று அறியாமல், காட்டிலே கண்ணைக் கட்டிவிட்டதுபோலச் சுற்றிச் சுற்றி வந்து, சொன்னவற்றையே பின்னும் பின்னும் சொல்லிக்கொண்டு, என்ன செய்வதென்று அறியாது திகைத்து நிற்பர். இவர்கள் முன்னதாகவே எப்படிப் பேச்சை முடிப்பதென்று தீர்மானித்து எழுதி வைத்துக்கொண்டு அதை மனப்பாடம் செய்து, பல முறை சொல்லிச் சொல்லிப் பார்த்து முடிவில் பேசுவதற்குப் புகுந்து, இறுதியில் திட்டத்தின்படி பேச்சை முடிக்கவேண்டும்.

ஒருமுறையில் திட்டமிட்டுப் பேச்சை முடிப்பது, பேசுகின்ற இடத்தில் ஒரு வேளை பயனற்றுப் போவதாக இருக்கலாம். ஆதலால், திடீரென்று திட்டத்தை மாற்றவேண்டியும் வரும். எனவே, பேச்சு முடிப்பு முறைக்கு இரண்டு அல்லது மூன்று திட்டங்கள் வைத்திருக்க வேண்டும். அப்போது தான் சபைக்கு ஏற்றவாறு பேச்சாளர் தம் பேச்சை அமைத்துக் கொள்ளுதல் கூடும்; இல்லாவிடின் தோல்வி அடைய வேண்டுவதாகும்.

ஒரு சிலர் நீண்ட நேரம் பேசிக்கொண்டேயிருந்து, அச்சு முறிந்த தேர்போல் திடீரென்று பேச்சை நிறுத்தி விடுவர். இத்தகையோர் பேச்சை நன்றாகத் தயாரித்து அடிக்கடி அறையிலே பேசிப் பேசிப் பயிற்சி பெற்றால் வெற்றிபெற முடியும். அறையில் ஆடிய பின்னர் அம்பலத்தில் ஆட வேண்டும்' என்னும் பழமொழியை இவர்கள் ஒருநாளும் மறவாமல் அதனை அறமாகக் கொண்டு நடக்க வேண்டும்.

புதிதாகப் பேசும் பேச்சாளர் சிலர் இனிதாகப் பேச்சை முடிக்க முடிப்புணர்ச்சி காட்டாமல் நிறுத்தி விடுவதுண்டு. அவையினரோ, 'பேச்சாளர் பேச்சை முடித்தாரா? இல்லையா?' என்று திகைப்பர். சிலர் சில வேளைகளில் திடீரென்று பேச்சை முடித்து விடுவதுண்டு. ஒருவர் இக்குறையைப் பயிற்சியால்தான் நீக்க முடியும். நாவலரான ஆபிரகாம் லிங்கன் தம் முதற்பேச்சைத் தயாரித்து, தம் செயலாளரிடம் கொடுத்தபோது. செயலாளர் அப்பேச்சுத் தயாரிப்பில் முடிப்பு முறை மொட்டையாக இருந்த நிலையைக் கண்டு, இரண்டு முடிப்பு முறைகளைத் தயாரித்துக் கொடுத்தாராம். லிங்கன் இவற்றைச் சில மாற்றங்களுடன் ஏற்றுப் பேசி வெற்றி பெற்றாராம். கருவிலே திருவுடைய பெருநாவலருக்கே பேச்சு முடிப்பு முறை கடினம் என்றால் மற்றவர்களுக்குச் சொல்வான் ஏன்? ஆதலால், பழகுவோர் பேச்சு முடிப்பு முறையில் நன்கு பயிற்சி பெற வேண்டும்.

முடிப்புக்குச் சில குறிப்புகள்

கீழே கொடுக்கப்படும் சில குறிப்புகள் பேச்சு முடிப்பை நன்முறையில் அமைப்பதற்கு மிகவும் பயன்படும்:-

பேசிய பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்து விடுதல் ஒரு முறை.

ஐரிஷ் நாட்டு அரசியல் அறிஞர் ஒருவர், முதலாவதாக ஒரு பேச்சாளர் பேசப்போவது இன்னதெனக் கூறவேண்டும் என்றும், இரண்டாவதாக அதைக் குறித்துப் பேச வேண்டும் என்றும், மூன்றாவதாக அதைப் பேசிவிட்டதாய்ச் சொல்லி முடிக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

பேச்சின் சுருக்கத்தைக் கூறுவதால் கவனம் இழந்தோரும், நினைவாற்றல் இல்லாதவர்களும், காலம் தாழ்த்தி வந்தோரும் பேச்சாளர் பேசிய பேச்சின் கருத்தை அறிந்துகொள்வதற்கும் வாய்ப்பு உண்டாகும். இதுதான் யாவரும் எளிதாகக் கைக்கொள்ளக்கூடிய இனிய முடிப்பு முறை. சுருக்கம், சுருக்கமாகவே இருத்தல் வேண்டுமேயன்றி நீண்டு விடுதல் கூடாது.

முடிப்புரையில் கேட்டதைச் செயலாற்றுவதற்கு ஏற்றவகையில் உணர்ச்சி எழும்பப் பேசி முடிப்பது மற்றொரு முறை.

காலஞ்சென்ற திரு.வி.க. இம்முறையைத் தம்முடைய பேச்சுகளில் பயன்படுத்தியதைப் பரக்கக் காணலாம். இதனைத் திரு.வி.க.வின் சொற்பொழிவு நூலாகிய 'தமிழ்த்தென்றலில் காண்க. திரு.வி.க. முடிப்பு முறை இது:-

"சகோதரிகளே, சகோதரர்களே! இன்னும் உங்கள் அரிய காலத்தைக் கொள்ளையிடுவதற்கு என் மனம் எழவில்லை. இதுகாறும் பொறுமையுடன் என் புன்மொழிகளைச் செவிமடுத்த உங்கட்கு எனது நன்றியறிதலான வணக்கம் உரியதாகுக.

வருங்கால உலகம் உங்களை எதிர்நோக்கி நிற்கிறது. அதற்கு முதலாவது உடலை ஓம்பிக் கல்வி பயின்று, விஞ்ஞானக் கலைகளில் ஊக்கஞ் செலுத்துங்கள்; நாட்டுக் காவியங்களுடன் உறவுகொண்டு, அவைகளின் இயற்கை அமிழ்தை உண்ணுங்கள்; உங்களை நன்முறையில் பயன்படுத்தித் தமிழ்த்தாய்க்குச் சேவை புரிய விரைந்து நில்லுங்கள். தமிழ்த்தாய் உங்கள் முகத்தை நோக்கிய வண்ணமாய் இருக்கிறாள். அவளைப் பற்றியுள்ள பீடைகள் எல்லாவற்றையும் தொலைக்க எழுங்கள்! எழுங்கள்!

இளம்பரிதிகளே! சாதி வேற்றுமை, பெண்ணடிமை, தீண்டாமை முதலிய கட்டுகள் இரிந்தோடத் தமிழ்க்கதிர் பரப்பி எழுங்கள்! எழுங்கள்!"

இது திரு.வி.க. தமிழ் மாணாக்கர் மாநாட்டில் 7-8-1932-இல் ஆற்றிய தலைமையுரையில் தமது பேச்சை முடித்த முறையாகும்.

அவரது உணர்ச்சி முடிவுரை அக்காலத்தில் தண்டமிழ் நாட்டு மக்களைத் தட்டியெழுப்பி ஆக்கவேலை செய்ய ஊக்கமளித்தது எனலாம்.

நிலையத்தினருக்கு அல்லது கழகத்தினருக்கு வாழ்த்துரை வழங்கிப் பாராட்டி முடிப்பது இன்னொரு முறை. இப்படிச் செய்யும்போது பேச்சாளர் அளவு கடந்து போகாமல், உண்மையான அன்புடன், புனைந்துரையாது பாராட்ட வேண்டும். பொய்யானவற்றைக் கூறிச் செய்யாதனவற்றையும் செய்துவிட்டதாகச் சொல்லிப் பாராட்டுவது கூடாது. அப்படிச் செய்தால் ஒருவரும் பேச்சாளர் கூறுவதை மதியார்.

நகைச்சுவையுடன் பேச்சைக் கேட்போர் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழுமாறு முடிப்பது மற்றொரு முறை. இது யாவராலும் எளிதாகக் கைக்கொள்ளக் கூடியதன்று.

நீ அவையினரிடமிருந்து விடைபெறும்போது அவர்கள் சிரித்து மகிழுமாறு செய்து பேச்சை முடிப்பாயாக" எனத் தலைசிறந்த பெருநாவலரான ஜார்ஜ் கோஹன் கூறினார். இதற்கு மிகுந்த திறமை வேண்டும்.

ஏற்றதொரு மேற்கோளுடன் அல்லது ஏற்ற செய்யுளுடன் இனிதாகக் கூறிப் பேச்சை முடிப்பது ஒருமுறை. இதை எல்லாச் சொற்பொழிவுகளிலும் செய்வது முடியாது. இலக்கியச் சொற்பொழிவுகளில் இதனைச் செய்தல் கூடும். திருவள்ளுவ மாலையில் உள்ள ஒரு வெண்பாவைக் கூறித் திருக்குறளைப் பற்றிய சொற்பொழிவில் முடிப்புரை வழங்கலாம். இதற்குப் பாட்டை மனப்பாடம் செய்யும் நினைவாற்றல் வேண்டும்.

வாக்கியங்களை மேன்மேல் உயர்த்து முறையில் (Cimax) அமைத்துக் கூறி உணர்ச்சி எழுப்பிப் பேச்சை முடிப்பது மற்றோர் அரிய முறை, அமெரிக்க நாட்டில் உள்ள பிலடெல்பியா நகரத்தைப் பற்றி ஒருவர் பேசிய பேச்சின் முடிப்புரை இம்முறையில் அமைந்துள்ளது. அது வருமாறு:

"பிலடெல்பியா இந்த அமெரிக்கா நாட்டின் பெருநகரம், அமெரிக்க நாட்டின் சுதந்திர ஊற்று. இங்கே தான் முதன் முதல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அழகிய கொடி அமைந்தது. இங்கேதான் இந்த நாட்டின் முதல் காங்கிரசு சபை கூடியது. இங்கேதான் சுதந்திரப் பிரகடனத்தில் கையெழுத்திடப்பட்டது. இங்கேதான் பொன்னைக் கடவுளாகப் போற்றி அதன் பொன்னடி வணங்காமல், சுதந்திர ஒளி விளக்கை அணைந்து போகாது பாதுகாத்தது. இங்கேதான் வாஷிங்டன், லிங்கன், ரூஸ்வெல்ட் ஆட்சிமுறை மனித இனத்துக்கு மாண்புமிக்க வழிகாட்டியாக இருக்குமாறு நாம் மிக விரும்பும் சுதந்திர மணி முதல் முதல் ஒலித்தது. இங்கே தான் ஆண், பெண் குழந்தை உள்ளிட்ட ஆயிரம் ஆயிரம் பேர்களைத் தட்டி எழுப்பி. 'இந்தப் புண்ணியத் தொண்டு உங்களுக்கு உண்டு' என்று மட்டற்ற உணர்ச்சி அளித்தது. இந்த நகரந்தால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இனிய தாய் நகரம்."

இவ்வாறு மேல் மேல் உயருமாறு வாக்கியங்களை அடுக்கிப் பேசும் முறையில் பேச்சை முடிப்பது மிக மிகக் கடினம். இஃது எல்லாப் பேச்சுகளுக்கும் அமையாது. இடம் அறிந்து இம்முறையைப் பயன்படுத்த வேண்டும்.

சாதாரணமாக, "தாய்மார்களே, பெரியோர்களே. அன்பர்களே, என் பேச்சைப் பொறுமையோடு செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றி கலந்த வணக்கத்தைச் செலுத்துகிறேன்" என்று கூறி முடிப்பது வழக்கமான எளிய முறை.

**சந்தர்ப்பம் அறிந்து முடிக்க**

என்ன சொன்னாலும் இதுதான் முடிக்கும் முறை என்று திட்டமாகக் கூறிவிட முடியாது. அவரவர் திறமைக்கும் அறிவுக்கும் ஏற்றவாறு முடிப்பு முறையை அமைத்துக் கொள்ளலாம்.

மாநாடுகளில் பலர் பேச வேண்டியிருக்கும். ஆண்டு விழாக்களில் சில கழகங்கள் ஒன்றிரண்டு சொற்பொழிவுகளோடு உளநிறைவு கொள்ளாது, நான்கு அல்லது ஐந்து சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்வதுண்டு. தலைமை தாங்குவோர் முன்னுரையாகவும் பின்னுரையாகவும் பேச வேண்டியிருக்கும். தலைமை வகிப்போர் முன்னுரையை அரைமணி நேரத்துக்குமேல் நீட்டிவிட்டுப் பேச்சாளரைப் பேச விடுவார். அத்தகைய இடங்களில் பேச்சாளர் குறிப்பிட்ட நேரத்துக்குள் பேச்சைக் கட்டாயம் முடிப்பதுதான் அறிவுடைமையாகும். சிலர் இடையில் மற்றொன்று விரித்து விட்டுப் பொருளைப் பேச நேரமில்லாது, திடீரென்று பேச்சை நிறுத்தி அமைந்து விடுவர். ஒரு சிலர், "யார் எழுந்து போனாலும் சரி. இருவரே இருந்தாலும் சரி. நாற்காலிகள் மட்டும் இருந்தாலும் சரி, நான் பேச வேண்டுவதைப் பேசியே முடிப்பேன்" என்று வெளிப்படையாகச் சொல்லிப் பேசுவதுண்டு. நேரமாய்விட்டதால் அவையில் பலர் எழுந்து செல்வதை அறிந்தாலும், சிலர் கைக்கடிகாரத்தையோ மேசையின் மேலிருக்கும் கடிகாரத்தையோ பார்த்துக்கொண்டிருந்தாலும் பேச்சாளர் பேச்சை விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும். தலைவர் பேச்சாளரை முடிக்குமாறு குறிப்புக் காட்டினாலும், காகிதத் துண்டில் எழுதிக்கொடுத்தாலும், வாய் திறந்து, ""அன்பு கூர்ந்து முடித்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னாலும், 'இதோ இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன்' என்று வேண்டிக்கொண்டே அரை மணியையும் தாண்டிப் பேசும் பேச்சாளர் செயல் வெறுக்கத்தக்கது. கேட்பவர் ஆவலாயிருக்கும்போதே பேச்சை முடித்துக்கொள்வதே அறிவுடைமையாகும்; மதிப்புடையதுமாகும். குறிப்பிட்ட நேரத்துக்கு மேல் எவரும் பேச்சை நீட்டலாகாது. நீட்டினால் மக்கள் கேட்க விரும்பாமல் இருப்பதோடு வெறுப்படைவார்கள்.

சில வேளைகளில் முன் பேசியவர் காலம் கடந்து பேசியிருக்கலாம். பின் பேசுபவருக்குப் பேசும் நேரம் குறைவாக இருக்கும். என்றாலும், பின் பேசுபவர் தமக்குள்ள பேச்சைச் சுருக்கமாகப் பேசி முடித்துக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்யும் பேச்சாளருக்குப் பெருமதிப்பும் அரிய பாராட்டும் கிடைக்கும். அமெரிக்க நாட்டு ஜனாதிபதியாக ஐசனோவர் ஓரிடத்தில் பேசவேண்டியிருந்தபோது, அவருக்கு முன் பேசியவர்கள் காலம் கடந்து பேசிவிட்டார்கள். நேரமாகிவிட்டது. ஐசனோவர் அவையினர் நிலையை அறிந்தார். நீண்ட பேச்சுக்குத் திட்டமிட்டிருந்தாலும், அவர்

திட்டமிட்டவாறு நீண்டபேச்சுப் பேசாமல் மிக மிகச் சுருக்கமாக ஐந்தே நிமிடங்களில் தம்முடைய பேச்சை முடித்து அவையினரிடத்து அரிய மதிப்பையும், பெரிய பாராட்டையும் பெற்றாராம்.

நம் நாட்டிலும் அத்தகைய அறிஞர் பெருமக்கள் அவ்வாறு செய்வதுண்டு. அதுதான் நல்லது; சிறந்தது. நேரமானது அறிந்து, கேட்போர் மனநிலை உணர்ந்து, பேச்சாளர் என்றும் நடந்து கொள்ள வேண்டும்.

**தொகுப்புரை**

குருடன் அவையிலிருந்து கேட்டாலும் பேச்சு முடிவடைகிறது என்றுணருமாறு முடிப்புரை அமைய வேண்டும்.

"பேச்சாளர் இன்னும் பேசுவாரா?" என்று எதிர்பார்க்கையில் தக்க முறையில் முடிக்கும் பேச்சே சுவையுடையதாயிருக்கும். இவற்றைப் பேச்சாளர்கள் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

## நினைவாற்றலைப் பெருக்கும் வழிகள்

கேட்போர் அனைவரையும் மகிழ்விக்க வோ மதிக்கவோ செய்யவல்லது பேச்சாளரது நினைவாற்றல் என்பதை இளம் பேச்சாளர்கள் ஒருநாளும் மறத்தலாகாது. "ஆ! ஆ! இவர் இத்தனை மேற்கோள்களை அல்லது இத்தனை பாக்களை அடுக்கடுக்காக முயற்சியின்றித் தயக்கமின்றி விருந்தளிக்கின்றாரே! எப்படி அவற்றை நினைவில் வைத்திருக்கிறார்! அத்தனை புள்ளி விவரங்களையும் எத்தகைய குறிப்புமின்றி வாரி வழங்குகின்றாரே இவர்!" என்று ஒருவரைக் குறித்து வியக்குமாறு செய்யக்கூடியது அவரது நினைவாற்றலேயாகும். ஆதலால், சிறந்த மேடைப் பேச்சுக்கு நினைவாற்றல் இன்றியமையாதது என்றுணரலாம். நினைவாற்றல் அற்றவர் பேச்சு ஒருநாளும் சிறப்படைவதில்லை.

பேச்சாளராக விரும்புவோர் நினைவாற்றலின் இன்றியமையாமையையும் அதனைப் பெருக்கும் வழியையும் அறிந்துகொள்ளுவது அவசியமாகிறது.

நம் நாடு பெறலரிய நினைவாற்றலுக்குப் புகழ் பெற்றது. வடமொழிவாணர்கள் நான்கு மறைகளையும் எழுதி வைக்காமலே மனப்பாடஞ்செய்து வழிவழியாக வழங்கிப் பலபல நூற்றாண்டுகளாகப் பாதுகாத்து வந்தார்கள். வேதத்தை எழுதாக் கிளவி என்பர். வேதங்கள் எழுதி வைக்காமலே வாய்மொழியாக வழங்கி வந்தவை. ஒரு வேதத்தை மனப்பாடம் செய்ய 12 ஆண்டுகள் செல்லுமாம். நான்கு வேதங்களைப் பாராமல் படிக்க

48 ஆண்டுகள் செல்லும். இன்றும் 'இருக்கு வேதத்தை' மனப்பாடம் செய்தவர் ஒரு சிலர் இந்நாட்டில் இருக்கிறார்கள்.

ஒல்காப் புகழுடைய தொல்காப்பியமும். வாழ்க்கையை வளமாக்கும் வள்ளுவரின் ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும், தேனினும் இனிக்கும் திருவாசகமும், அருட்சுவை நல்கும் ஆழ்வார்களின் அழகிய அருளிச் செயல்களும், கவிச்சுவைக் களஞ்சியமான கம்பரின் பத்தாயிரம் பாடல்களும் பலபல படையெடுப்புகளையும் பலபல ஊர் எரியூட்டுகளையும் கடந்து, கால வெள்ளத்தில் மிதந்து, அழியாது நலமுற வந்துள்ளன. நம் முன்னோர்கள் அவையெல்லாவற்றையும் தங்களுடைய அற்புதமான நினைவாற்றலாலே மனப்பாடஞ்செய்து அழியாமல் காத்துவந்தார்கள். பொதுமக்களுக்குப் பயன்பட்ட நூல்களெல்லாம் இந்நினைவாற்றலாலேயே பாதுகாக்கப்பட்டன. ஒரு சிலர்க்கே பயனளித்தவை மறைந்தன.

**அந்தாதி**

நினைவாற்றலை பெருக்க நம் முன்னோர்கள் அந்தாதி என்னும் பாடல் முறையை வகுத்து மக்களை மனப்பாடஞ் செய்யுமாறு ஊக்கி வந்தார்கள். ஆங்கிலக் கல்விமுறையில் நினைவாற்றலுக்கு மிகுந்த இடமில்லாது போயிற்று. நினைவாற்றலை மட்டும் மிகப் பெரிதாக மதித்த தவறாலேயே நினைவாற்றலுக்கு மதிப்புக் குறைந்தது.

**அவதானம்**

அவதானம் செய்வதற்கு அடிப்படை அற்புத நினைவாற்றலேயாகும். இதனோடு புலமையும் வேண்டும். நினைவாற்றல் மிகுதியுள்ளவர்கள் திருக்குறள் அவதானம் செய்யலாம்; நுண்ணறிவும் இலக்கிய இலக்கணப் புலமையும் மிக்கவர்கள் அஷ்டாவதனம் செய்ததுண்டு. முஸ்லீம் புலவர் ஒருவர் சதாவதானமே செய்தார். (அஷ்டம் - எட்டு; சதம் - நூறு)

**நினைவாற்றலை இகழ்தல் கூடாது**

ஒருவரும் உருப்போடுவதை இகழக்கூடாது. ஆனால், மனப்பாடஞ் செய்ய வேண்டுவதை அறிவோடு உருப்போட வேண்டும்; உருப்போட்டதை அறிவோடு பயன்படுத்தவும் வேண்டும். 'உருவுக்கு மிஞ்சின குரு இல்லை' என்பது பழமொழி. ஆதலால், பேச்சாளராக விரும்புகிறவர் இளம் வயது முதல் நினைவாற்றலைப் பெருக்கி வரவேண்டும். மனப்பாடம் செய்யும் ஆற்றல் மிக்க ஒருவர், தமது பேச்சுத் திறமையால் பெருங்கூட்டத்தை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி, பல்லாயிரம் பேச்சாளர் அடைய முடியாத

பெருமதிப்பை அடைதல் கூடும். ஆதலால், நினைவாற்றலை இகழாது அதனைப் பெருக்க முற்படுதல் வேண்டும். அதற்கு இங்கே கூறப்படும். குறிப்புகள் உறுதுணை செய்யும்.

**நினைவாற்றலைப் பெருக்கும் வழிகள்**

நினைவாற்றல் அற்புதமான ஆற்றல் மிக்க மூளையை ஒட்டியது; பயிற்சியால் வருவது. 70 ஆண்டுகள் படிக்கும் பழக்கமுள்ள ஒருவருக்கு 1500 கோடித் தனிச் செய்திகளை வைத்துப் பாதுகாக்கும் பெட்டகமாய், அரிய கருவூலமாய் மானிட மூளை விளங்குவதாக அறிஞர் ஹார்வடே குறிப்பிடுகிறார். உளத்தியல் நூற்பேராசிரியர் கார்ல் சீ-ஷோர், "சாதாரண மனிதன் தனக்கு இயற்கையாக இருக்கும் நினைவாற்றலில் 10 சதவிகிதத்தைப் பயன்படுத்தி 90 சதவிகிதத்தை வீணாக்குகிறான்" என்கிறார். உலகத்தில் பெரும்பாலோர் தமக்குரிய நினைவாற்றலைப் பயன்படுத்துவதில்லை என்றும். தக்கவாறு பயன்படுத்தினால் ஒருவர் முழு நினைவாற்றலையும் பெறக்கூடும் என்றும் அவர் குறிப்பிடுவதால் அறிகிறோம். ஆதலால், நினைவாற்றல் நமக்கில்லையே என்று ஒருவரும் ஏங்க வேண்டுவதில்லை. நினைவாற்றல் நமக்குண்டு என்று நினைத்துக்கொள்வதே நினைவாற்றலைப் பெருக்குவதற்கு முதற்படியாகும். இந்தத் தன்னம்பிக்கையுடன் நினைவாற்றலைப் பேச்சாளர்கள் பெருக்கிக் கொள்ளவேண்டும்.

நினைவுத் திறனைப் பெருக்குவதற்கு உளத்தியல் நூல் ஆசிரியர்கள் கூறும் வழிகள் மூன்றாகும். அவை,

1. படிப்பது பதியுமாறு செய்தல்.
2. திரும்பத் திரும்பக் கூறுதல்.
3. உள்ளத்திலுள்ள இணைத்தல். உட்கோள் உட்கோள் தொகுதியுடன் தொகுதி என்பது முன்னமே அறிந்திருக்கும் கருத்துத் தொகுதி.

நினைவொற்றலைப் பெருக்கும் வழிகள் உள்ளத்தைக் குறிப்பிடும்போது நாம் மார்பைத் தொட்டு நெஞ்சைக் காட்டுகிறோம். உள்ளம் வேறு: நெஞ்சம் வேறு. உள்ளம் என்பது மூளையிலுள்ளது. நெஞ்சைக் காட்டி உள்ளம் என்பது தவறு.

**படிப்பது பதியச் செய்தலுக்கு வழி**

படிப்பது பதியுமாறு செய்யவேண்டுமானால், ஒருவர் ஒன்றைப் படிக்குங்கால் முழுமனத்தையும் ஒருமுகப்படுத்திப் படிப்பதில் ஆழ்ந்துவிட வேண்டும். கண்ணொன்று செய்ய வாயொன்று கூறக் கருத்தொன்று எண்ணக் கையில் நூல் வைத்துக்கொண்டு

கவனம் செலுத்தாது படித்தால், படித்த கருத்துத்தான் பதியுமா? பதியாது. ஒன்பது நாள் கவனம் வையாது படித்தலைப் பார்க்கிலும் ஒரு மணி நேரம் மனத்தை ஒருமுகப்படுத்தி ஆழ்ந்து படிப்பதால் மிகுந்த பயனுண்டு. நினைவாற்றலைப் பெருக்குவதற்கு உற்றுப் பார்க்கும் பழக்கத்தையும் மேற்கொள்ள வேண்டும். பல்லாயிரம் முறை ஒரு வழியாகப் போய்க்கொண்டிருப்போம்; ஆனால், அவ்வழியில் ஒரு மரம் இருப்பதைப் பார்க்கமாட்டோம். இப்படிச் செய்யாமல் உற்றுப் பார்க்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். மனத்தில் பதியும் பதிவு கண்ணால் மட்டுமன்றி மற்ற பொறிகளாலும் அறியுமாறு செய்ய வேண்டும். ஆபிரகாம் லிங்கன் மறவாமல் இருக்க வேண்டுவதை வாய்விட்டு உரக்கப் படிப்பது வழக்கமாம். கண்ணால் பார்ப்பதோடு காதும் கேட்குமானால் படித்தது பசுமரத்து ஆணிபோல மறவாது மூளையில் பதிந்துவிடும். காதைவிடக் கண்ணால் பார்ப்பது என்றும் மறப்பதில்லை. ஒரு சொல்லில் ஐயம் ஏற்படுமானால் அச்சொல்லை எழுதிப் பார்த்து எழுத்துப் பிழையை நீக்கிக் கொள்கிறோம்.

கண் பார்ப்பதால் மூளையில் ஏற்படும் உருவ அமைப்பே இதற்குக் காரணம். இதனால் அமெரிக்க நாட்டுப் பேச்சாளர்கள் சிலர் பேச வேண்டிய பொருளைப் பற்றிக் குறிப்புச் சொல் அமைத்துக்கொண்டு, அக்குறிப்புச் சொற்களுக்குச் சித்திரம் எழுதி வைத்துக்கொண்டு, நினைவாற்றலைப் பெருக்குவதுண்டு. தமிழ்நாட்டில் கலைகளைப் பற்றிப் பேசவேண்டுமென்றால் சிற்பக்கலை, இசைக்கலை முதலியவற்றைக் கூறவேண்டுமன்றோ? சிற்பக் கலைக்குக் கோபுரச் சித்திரமும், இசைக் கலைக்கு யாழ்ச்சித்திரமும் வரைந்து வைத்துக்கொண்டால், சிற்பக் கலையையும் இசைக் கலையையும் குறித்துப் பேசலாம். இப்படிச் செய்வதால் பேசும் பொருள் மறப்பதில்லையாம். ஏன்? உருவமும் உள்ளத்தில் பதிந்துவிடுவதே காரணமாகும்.

**விட்டுவிட்டு உருப்போடுக**

நினைவுத் திறனைப் பெருக்குவதற்கு மற்றொரு வழி யாதெனில், ஒன்றைத் திரும்பத் திரும்பக் கூறுதல். இஃது உருப்போடுதல் எனப்படும். திரும்பத் திரும்பக் கூறுதல் கல்விக்குத் தாய் (Repetition is the mother of Education) என்பது ஆங்கிலப் பழமொழி. ஒன்றைத் திரும்பத் திரும்பக் கூறுவதால் மூளையில் கோடுகள் ஆழமாக விழ விழப் படித்த பொருள் மறவாது நினைவில் நிற்கின்றது. நம் நாட்டில் நம் முன்னோர்கள் திருவாசகம். திருமுருகாற்றுப்படை, கந்தரனுபூதி, திருக்குறள் இவற்றை மனப்பாடஞ் செய்து நாள்தோறும் விடியற்காலையில் எழுந்ததும் ஒப்பிக்கும் முறையை மேற்கொண்டார்கள். பழம்பெரும் புலவர்கள் படித்தவையெல்லாவற்றையும் நினைவாற்றலைப் பெருக்கும்

வழிகள் பாராமல் படித்தார்கள். பாடம் போற்றல் என்பது மாணவர்க்குள்ள முதல்வேலையாக நன்னூலார் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். பாடம் போற்றல் என்பது மூல பாடத்தை மறவாது பாதுகாத்தலாகும்.

மனப்பாடமாக வரும் வரைக்கும் ஒரே இடத்திலிருந்து உருப்போட்டுக் கொண்டிருத்தல் கூடாது. ஒரு முறை அல்லது இருமுறை படிக்கவேண்டும்: விட்டுவிட வேண்டும்; திரும்பவும் எடுத்துப் படிக்கவேண்டும். விட்டுவிடவேண்டும்; திரும்பவும் எடுத்துப் படிக்க வேண்டும். இவ்வாறு விட்டு விட்டுப் படித்தால் ஒன்றை ஒரே முறையில் உட்கார்ந்து நீண்ட நேரம் உருப்போட்டுப் படித்துவிடக் கூடிய நேரத்திலும் குறைவான நேரத்தில் பாராமல் படித்துவிட முடியும். காரணம் என்ன? இடைநேரத்தில் உள்மனம் (Sub Conscious Mind) வேலை செய்து முன்னிருக்கும் கருத்தோடு இணைத்துப் படித்ததை மறவாதவாறு செய்துவிடுகிறது. இரண்டாவது காரணம் மூளை அயர்ச்சியுறாமலும் மேலும் மேலும் வேலை செய்வதாகும். அராபிக் கதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த சர். ரிச்சர்ட் பர்ட்டன் இடைவிட்டுப் படிக்கும் முறையைக் கைக்கொண்டு ஒரு முறைக்கு 15 நிமிடங்களே படிப்பது என்ற வழிமுறையில் மிகுந்த தொல்லையின்றி விளையாட்டாக 27 மொழிகளைப் பயின்றாராம். திரும்பத் திரும்பப் படித்தால், படித்தது மறவாமல் இருக்கும். அடிக்கடி "பாடம் போற்றல்' முறையை மேற்கொள்ள வேண்டும்.

### உட்கோள் தொகுதியுடன் இணைத்தல் முறை

மூன்றாவது வழி உட்கோள் தொகுதியுடன் புதுக்கருந்தை இணைப்பதாகும். முன்னமே உள்ள கருத்துத் தொகுதியே உட்கோள் தொகுதி என்பது. இந்தியா சுதந்திரம் பெற்ற 1947-ஆம் ஆண்டு நம் நினைவில் இருக்கும். இதற்கு 5 ஆண்டுகளுக்கு முன்புதான் கடற்கரை நகர்களிலிருந்து மக்கள் ஜப்பான் படையெடுப்பினால் வெளியேறினார்கள் என்று நினைவு வைத்துக் கொண்டால் அந்த 1942-ஆம் ஆண்டு நினைவுக்கு வரும். இவ்வாறே பல செய்திகளை உட்கோள் தொகுதியோடு தொடர்புபடுத்தி நினைவாற்றலைப் பெருக்கிக் கொள்ளலாம்.

### குறிப்புச் சொல் முறை

பொருளற்ற சொற்களைக் குறிப்புச் சொல்லாக அமைத்து அதை மனப்பாடம் செய்து பேசவேண்டிய பொருளை மனத்தில் பதியவைக்கலாம். திருக்குறள் முதல் நூல் என்றும். அதில் சிறந்த கருத்துகள் உண்டு என்றும். அதன் உவமைகள் மறக்க முடியாதவை என்றும், அது ஒரு வழிகாட்டி நூல் என்றும் பேச வேண்டுமாயின், 'முசிஉவ'

என்று முதலெழுத்துகளைச் சேர்த்தமைத்த குறிப்பு வைத்துக்கொண்டு அத்தலைப்புகளைப் பற்றி மறவாது பேசலாம்.

**நினைவாற்றலைப் பெருக்க முடியும்**

இம்முறையில் பேச்சாளராக விரும்புகிறவர்கள் நினைவுத் திறனைப் பெருக்க முயற்சி செய்யவேண்டும். இது முடியாத செயலன்று. 17-ஆம் நூற்றாண்டிலிருந்த அந்தகக்கவி வீரராகவ முதலியார் பிறவிக் குருடராயிருந்தும், பெருங்கவிஞராக விளங்கினார். அவர் பிறர் சொல்லக் கேட்டு நினைவாற்றலைப் பெருக்கிக்கொண் டார். அக்கவிஞர் பெருமானே.

**"ஏடாயிரம் கோடி எழுதாமல் தன்மனத்து**
**எழுதிப் படித்த விரகன்**
**இமசேது பரியந்தம் எதிரிலாக்**
**கவிவீரராகவன் விடுக்கும் ஓலை"**

என்று தம்மைப்பற்றி ஒரு சீட்டுக்கவியில் பாராட்டிப் பாடியுள்ளார். கண்ணற்ற குருடரே நினைவுத் திறனைப் பெருக்கிக்கொண்டாரெனில், கண்ணுள்ளவர்கள் நினைவுத் திறனைப் பெருக்கிக்கொள்வது அருஞ்செயலன்று. இளம் பேச்சாளர்கள் பெருமதிப்புள்ள பேச்சாளர்களாக வேண்டுமென்றால், நினைவாற்றலைப் பெருக்க வேண்டும்.

நினைவுத் திறனைப் போற்ற மாசற்ற உடலும் நோயற்ற வாழ்வும் வேண்டும். பிஞ்சிலே பழுப்பவர்களுக்கு நினைவுத்திறன் குறைவதுண்டு. ஆதலால், மேடைப் பேச்சாளர்கள் நினைவாற்றலைப் பாதுகாக்கவும் பெருக்கவும் உடலைப் போற்றவேண்டும் என்பதை மறவாமலிருப்பார்களாக!

## அலகு - IV

**கலைவாணர்**

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் ரசிகர்கள் புடைசூழ உரையாடிக் கொண்டிருந்தார். "மதுரைக்குச் சென்றிருந்தேன். அங்கே வைகையில் கழுத்தளவு தண்ணீர் இருந்துதுங்கோ" என்றாராம். இரசிகர்கள் திகைப்புடன் "என்னங்க கதை விடுறீங்களா? வைகையிலாவது கழுத்தளவு தண்ணீராவது?" என்று கேட்டார்களாம்.

கலைவாணர் தனக்கே உரிய பாணியில் "கழுத்தளவு தண்ணீர் உண்மைதானுங்கோ. ஆனால், தலைகீழா நிக்கணுங்கோ என்று கூற இரசிகர்கள் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தனர்.

நகைச்சுவையில் சமூக சீர்திருத்தக் கருத்துகளை நுழைத்து சினிமா ரசிகர்களைச் சிரிக்க வைத்ததோடு சிந்திக்கவும் வைத்தவர். 'சிந்திக்கத் தெரிந்த மனித குலத்துக்குச் சொந்தமானது சிரிப்பு' என்ற பாடல் ஒன்றே இவரது நகைச்சுவை கலந்த சமூகச் சிந்தனைக்கு எடுத்துக்காட்டாகும்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் இனிமையான பேச்சு எதிராளியையும் தன்பால் ஈர்க்கும் தன்மை கொண்டது. காஞ்சிபுரத்திலே ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தலில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்துப் போட்டியிடுகின்ற வேட்பாளர் மருத்துவப் பட்டம் பெற்ற டாக்டர். மிகுந்த செல்வந்தரும் கூட; இந்நிலையில் பேரறிஞர் அண்ணாவிற்கு வாக்குச் சேகரிக்க, ஆதரித்துப் பேச புகழ்பெற்ற நகைச்சுவை நடிகராகிய கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனை அழைத்திருந்தனர். அவர் பேசப் போகிறதை அறிந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அம்மை தானத்திலே கூடியிருந்தனர்.

அவர் பேசப் போகிறதை அறிந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்த மைதானத்தில் கூடியிருந்தனர். கலைவாணர் அவர்கள் தன் பேச்சைத் தொடங்கினார். "பெரியோர்களே.....தாய்மார்களே.... வாக்காளப் பெருமக்களே... நீங்கள் அனைவரும் தேர்தலில் கட்டாயம் ஓட்டுப்போடவேண்டும்" என்று தொடங்கியவர் பேரறிஞர் அண்ணாவிற்கு ஓட்டுப் போடுங்கள் என்றோ அவருக்காக ஓட்டுக் கேட்க வந்திருக்கிறேன் என்றோ பேசாமல் அவரை எதிர்த்து நின்ற டாக்டரைப் புகழ்ந்து பேசிக்கொண்டே இருந்தார்.

"இதோ பாருங்கள், நம் அண்ணாவை எதிர்த்து நிற்கின்ற மருத்துவர் ஒரு மேதை, எத்தனையோ அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாகச் செய்து இவ்வூர் மக்களைக் காப்பாற்றியவர். அவருடைய மருத்துவ அறிவு பலருக்கு உடல்நலத்தைத் தந்திருக்கிறது. இத்தகைய புகழ்பெற்ற மருத்துவர் இல்லாவிட்டால் இவ்வூர் மக்களின் கதி என்னாகும்? அவருடைய மருத்துவ சேவை இந்த ஊருக்குத் தேவை. எனவே டாக்டரை மருத்துவமனைக்கு அனுப்புங்கள்" என்றபோது திரண்டிருந்த அத்தனை பேரும் மகிழ்ச்சியால் கை தட்டினர்.

எவ்வளவு அழகான பேச்சு நயம். பாருங்கள்.

**"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாய் சொல்"**

கேட்டுக்கொண்டிருக்கிறவர்களை தன் பேச்சாற்றலால் கட்டிப்போட்டு பகைவரும் கேட்க விரும்பும் பேச்சே சிறந்த பேச்சு என்ற வள்ளுவர் கருத்துக்கு எடுத்துக்காட்டாக மேற்குறித்த நிகழ்வைப் பார்க்கலாம்.

**திரு. வி.க.**

ஒரு தலைசிறந்த மேடைப் பேச்சாளர் மடைதிறந்த வெள்ளமென உணர்ச்சியும் எழுச்சியும் எழுப்பும் கருத்தாழமுள்ள பல உரைகளை நிகழ்த்துபவர். கட்டிப் போடுகின்ற பேச்சாற்றல் கொண்டவர். கேட்பாரைப் பிணிக்கும் தன்மையுடன் கேளாரையும் கேட்க விரும்ப வைக்கும் வகையினதாய் மாற்றாரையும் மயக்கி தன்வசம் ஈர்க்கும் வண்ணம் அமைந்தவை அவரது மேடைப் பேச்சுகள். புதிய உரைநடையின் தந்தை, மேடைப் பேச்சின் தந்தை எனப் போற்றப்பட்டவர். தமிழ்த் தென்றல், பேச்சுப்புயல் எனப் பலவாறு போற்றப்பட்டவர். பூக்களிலே சிறந்த பூ என்று திரு.வி.க. அவர்கள் பருத்திப் பூவைக் கூறினார். ஏனென்றால் மற்ற பூக்களெல்லாம் பூத்து மலராகி உதிர்ந்து விடும். ஆனால் பருத்திப் பூவோ பூத்து மலராகி, பஞ்சாகி, நூலாகி, துணி ஆகி ஆடை ஆகி மனிதனின் மானம் காத்து நிற்கும் என்றார்.

**அறிஞர் கி.வா. ஜகந்நாதன்**

தமிழில் சிலேடையாகப் பேசுவதில் வல்லவர் கி.வா. ஜகந்நாதன். இதற்கு நிறைய உதாரணங்கள் கூறலாம். கி.வா.ஜ.வின் தாயார் வீட்டில் அவருக்கு முந்திய நாள் இரவு செய்த உப்புமாவைத் தந்து சாப்பிடச் சொல்லி இருக்கிறார். இவரோ வேண்டவே வேண்டாம் என்று அடம் பிடித்து இருக்கிறார். "உனக்கு உப்புமா தொண்டையில் குத்துகிறதோ?!" என்று தாயார் கேட்க, "ஆமாம் குத்துகிறது; ஊசியிருக்கிறது" என்றாராம். உப்புமா கெட்டுப் போய் விட்டது என்பது ஒரு பொருள். வழக்காற்றில் நாம் ஊசிப்போய் விட்டது என்றுதான் சொல்வோம். இது இரட்டுற மொழிதலாகும். இதுபோல சிலேடை பேசுவதில் கி.வா.ஜ. வல்லவர்.

ஒரு ஊருக்கு கி.வா.ஜ. பேசச் சென்றார். அவருக்குச் சிற்றூண்டி செய்தவர், "தங்களுக்குப் பூரி பிடிக்குமா?" என்று கேட்டார். அதற்கு இவர் "ஜகந்நாதனுக்குப் பூரி பிடிக்காமல் இருக்குமா?" என்று பதில் சொல்ல அனைவருமே சிரித்தனராம்.

ஒரு கல்யாண வீட்டில் சாப்பிட்டு முடித்துக் கை கழுவ வந்தார் கி.வா.ஜ. ஒரு அன்பர் செம்புத் தண்ணீர் கொடுத்து கை கழுவத் தந்தார். சாதாரணமாக நீரில்தான் குவளை இருக்கும். இங்கே குவளையில் நீர்!" என்றாராம்.

இம்மை - மறுமை என்ற தலைப்பில் பேச கி.வா.ஜ. அழைக்கப்பட்டிருந்தார். அவர் பேச ஆரம்பித்ததும் மைக் கோளாறாகி விட்டது. அதை அகற்றிவிட்டு வேறு மைக் வைத்தார்கள். அதுவும் கொஞ்ச நேரத்தில் சரியாகச் செயல்படாமற் போனதாம். உடனே கி.வா.ஜ. "இம்மைக்கும் சரியில்லை; அம்மைக்கும் சரியில்லை" என்று அவர் பேச வந்த தலைப்புக்கேற்ப பேசவே சபையோர் ரசித்துச் சிரித்தனர்.

தொடர்ந்து கூட்டங்களில் பேசச் சென்றார் கி.வா.ஜ. தொண்டையில் சளி பிடித்தது. இருமல் வந்தது. விழாக் குழுவினர் அவருக்கு Cough Syrup வாங்கிக் கொண்டு

வந்து தந்தனராம். "இதைத்தான் கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் Syrup - சிறப்பு என்கிறார்களோ?! என்றாராம்.

கிருபானந்தவாரியார் கலந்து கொண்ட விழாவில் கி.வா.ஜ. சுவாமிகளுக்குப் பொன்னாடை போர்த்தியதும் "நூல் தந்த வாரியாருக்குப் பதிப்பாளர் ஆடை தருகிறார்" என்றார். சிரித்தனர். அடுத்து இறைவணக்கம் பாடிய சிறுமிக்கு கி.வா.ஜ. பேனா பரிசளித்தார். "நாவால் பாடிய சிறுமியைக் கி.வா.ஜ. தன் பே'னா'வால் கௌரவிக்கிறார்" என்று வாரியார் சிலேடையாகப் பேச அரங்கமே சிரித்தது.

ஒரு கடை முதலாளி வீட்டு விருந்தில் கி.வா.ஜ. கலந்து கொண்டார். கடையில் வேலை பார்க்கும் ஒரு பையன் மட்டும் இல்லாததைக் கண்டு கி.வா.ஜ. முதலாளியிடம் அவனைப் பற்றி விசாரித்தார். “அவன் கடையை பூட்டிவிட்டு வந்து அடுத்த பந்தியில் கலந்து கொள்வான்" என்று பதிலுரைத்தார். "ஓஹோ! கடை சிப்பந்திக்குக் கடைசிப் பந்தியா?"என்று கேட்டாராம் கி.வா.ஜ.

ஒரு நண்பரின் வீட்டுக்கு கி.வா.ஜ. போயிருந்தார். நண்பரின் மனைவி விளாம்பழத்தில் வெல்லம் போட்டு பிசைந்து அன்போடு கொண்டு வந்து உபசரித்தார். அதை வாங்கி உண்ட கி.வா.ஜ. "மாதுளங்கனி அருமை என்று பாராட்டினார். "மாதுளங்கனியா! நான் தந்தது விளாம்பழம் அல்லவோ? என்று அந்த அம்மையார் குழப்பத்துடன் கேட்டார். "மாது உளம் கனிந்து கொடுத்த கனி என்று சொன்னேன்" என்றார் கி.வா.ஜ.

கி.வா.ஜ.வை அவருடைய பாணியிலேயே சிலேடையில் மடக்கும் ஒரு பெண் உண்டாம். கி.வா.ஜ.வை ஒரு நாள் கூட்டத்துக்குப் பேச அழைத்தார். "இன்னிக்கு வேண்டாமே! தொண்டை கம்மியிருக்கு' என்றார். அந்தப் பெண்ணோ, "பரவாயில்லை கம்மல் பிரகாசிக்கவே செய்யும்" என்று பதிலுரைத்தார். ஒருமுறை அவருக்குப் போர்த்திய பொன்னாடை கிழிந்து இருந்தது. அதற்கு அவர் கொடுத்த கமெண்ட் "இந்தப் பொன்னாடையில் பூ இருக்கிறது, பழம் இருக்கிறது, பிஞ்சும் இருக்கிறது" என்றாராம்.

**திருமுருக கிருபானந்த வாரியார்**

ஆன்மீகச் சொற்பொழிவுக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்த திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் நகைச்சுவை ததும்பப் பேசுவதில் வல்லவர். துணுக்குகள், கதைகள், நடைமுறை நிகழ்வுகள் என்ற நிலைகளில் நகைச்சுவையை உருவாக்குவார்.

பெரும்பாலும் வாரியார் பொழிவின்போது சிறுவர்கள் முன்வரிசையில் அமர்ந்து இருப்பார்கள். சிறுவர்களைப் பார்த்துக் கேள்வி கேட்பார். சரியான பதில் கூறுபவர்களுக்கு புத்தகங்களைப் பரிசாகக் கொடுப்பது வழக்கம். ஒருமுறை நாகமலை புதுக்கோட்டைக்கு அவர் வந்திருந்தபோது, குழந்தைகளை நோக்கி "இந்தக் கூட்டத்திலேயே அவரவர் வீட்டில் கடைசிக் குழந்தை யார்? கையைத் தூக்குங்கள்" என்று கேட்டார். ஒரு பையன் எழுந்து நின்று, "நான்தான் எங்கள் வீட்டில் கடைசிக் குழந்தை"

என்றான். மகிழ்ச்சி... மகிழ்ச்சி என்றபடி உங்களைப் பார்த்து இவன் தான் கடைசிக் குழந்தை என்று அப்பா அம்மா அல்லவா சொல்ல வேண்டும்" என்றார். கூட்டத்தினர் ரசித்துச் சிரித்தனர். அந்தக் குழந்தைக்கு ஒரு சிறு புத்தகம் பரிசாகக் கொடுத்து உட்கார வைத்தார்.

மற்றொரு நிகழ்வைச் சொல்வார்கள். ஒரு சமயம் சிறுவர்கள் அமர்ந்திருந்த திசையை நோக்கியவர் முருகப் பெருமானின் தந்தை பெயர் என்ன?" என்று குழந்தைகளிடம் வாரியார் கேட்டார். "சிவாஜி" என்று கூறிவிட்டான் ஒரு சிறுவன். திருவிளையாடல் திரைப்படம் வந்த புதிது என்பதால் அச்சிறுவனின் மனதில் சிவபெருமான் வேடமேற்று நடித்த சிவாஜிகணேசன் ஆழப் பதிந்திருந்தார். சிறுவனின் பதிலைக் கேட்டு மக்கள் சிரித்தனர். உடனே மக்களைப் பார்த்து ஏன் சிரிக்கிறீர்கள்? "அவன் சொன்னதில் தவறில்லை. முருகனின் அப்பா பெயர் சிவன். சிவா என்றும் கூறலாம். பெரியவர்களான காந்தி, நேரு, மாதா, பிதா போன்றவர்களை காந்திஜி, நேருஜி, மாதாஜி, பிதாஜி என்று சொல்வது போல, சிவனையும் இந்தச் சிறுவன் மரியாதையுடன் சிவாஜி என்று கூறிவிட்டான்" என்று சிலேடையாகப் பதிலளித்தார். குழந்தையை தன் அருகே அழைத்துப் பரிசைக் கொடுத்து தட்டிக் கொடுத்தார். அப்போது எழுந்த கைதட்டலில் அரங்கமே அதிர்ந்தது.

வாரியார் தம் 15 ஆம் வயதிலிருந்தே சொற்பொழிவு செய்யும் திறன் உடையவர். 19 ஆம் வயதிலிருந்தே தனியாகப் புராணப் பிரசங்கங்கள் செய்யத் தொடங்கினார். இவருடைய பிரசங்கங்கள் பெரும்பாலும் பேச்சு வழக்கை ஒட்டியே அமைந்ததால் பாமர மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தார். இவரது பிரசங்கத்தின் இடையே நகைச்சுவை, குட்டிக்கதைகள் இருக்கும்.

**ஆன்மீகப் பேச்சாளர் சுகி சிவம்**

இரண்டாயிரத்துக்குப் பிறகு சுகி சிவம் பெயர் அதிக அளவில் பிரபலம் ஆனது. ஆன்மீகச் சொற்பொழிவு மட்டும் அல்லாமல் ஜனரஞ்சகமான பேச்சிலும் அவர் வல்லவர். சொல்வேந்தர்' என அழைக்கப்படுபவர். ஒருமுறை கால்நடை மருத்துவர்கள் கல்லூரி விடுதி விழாவுக்கு எம்.ஆர். ராதாவை சிறப்பு விருந்தினராகப் பேச அழைத்து இருந்தார்கள். இரண்டு மாடி ஏறி வந்த களைப்பில் மூச்சு வாங்கியபடி சீட்டில் உட்கார்ந்தார். மாணவர்கள் சப்தமிட்டபடி 'நடிகவேள் பேசு! நடிகவேள் பேசு ! என்று முழக்கமிட்டனர். அப்போது அவர் எழுந்து மைக்கில், "டேய் நீங்கள்லாம் மாடுகளுக்கு வைத்தியம் படிக்கற பசங்கதானடா?!" "ஆமாம் ஆமாம்." "அப்படினா கொஞ்சம் நாஞ்சொல்றத கேளுங்க. வயதான காலத்துல இரண்டு மாடி ஏறி வந்து உட்கார்ந்து இருக்கேன். எப்படிடா உடனே பேச முடியும்?!"

நான் மனுசன் சொல்றேன் கேக்க மாட்டேங்கறீங்களே!? ஆனால் பாவம் வாயில்லா ஜீவன். அதுகளும் எதுவும் சொல்லத் தெரியாது. நீங்க எப்படி புரிஞ்சுக்கிட்டு வைத்தியம் பாக்கப் போறீங்களோ?" என்று சமயோசிதமாக பேசி மாணவர்களை அமைதிப்படுத்தினாராம்.

மற்றொரு முறை நடிகவேள் எம்.ஆர். இராதா நாடகம் போட சபாவுக்கு வருகிறார். இவருடைய ஒரே நாடகம் தினமும் மீண்டும் மீண்டும் போடுவார்களாம். தினம் நடந்தாலும் வசனங்களை மாற்றி மாற்றிப் பேசுவாராம். மக்கள் ஆர்வமுடன் கேட்க வருவார்கள். கூட்டம் அலைமோதியது.

ஆறு மணிக்கு காரில் வந்து இறங்குகிறார். “நாடகத்தைப் போடு! நாடகத்தைப் போடு" என்று கூட்டம் கூக்குரலிடுகிறது. காரிலிருந்து இறங்கிய ராதா தன் கையில் அவருடைய நாயை அழைத்துப் போவது வழக்கம். நேராக மேடையில் ஏறி மைக் அருகில் செல்கிறார். கையில் இரண்டு பிஸ்கெட் எடுத்துக் கொண்டு தன் நாயைப் பார்த்துப் பேசுவது போல ஜாடையாக கூட்டத்தைப் பார்த்துப் பேசுகிறார். "இதோ பாரு குலைக்காதே. நான் போடுவேன்னு நினைத்தாயோ. போட மாட்டேன். ஆறரைக்குதான் போடுவேன்" என்று சாடை பேசினாராம்.

இதுபோல நாட்டு நடப்பு செய்திகளைத் தன் சுவையான சொற்பொழிவுகளில் கலந்து பேசுவார் சுகிசிவம். சன் தொலைக்காட்சியில் இவர் தினமும் நிகழ்த்திய 'இந்த நாள் இனிய நாள்' சொற்பொழிவு அனைவர் மனதிலும் நிலைத்து நிற்கிறது. "மோனமாகிற போது ரமணராகவும், கர்ஜிக்கிறபோது விவேகானந்தராகவும் இருப்பது என் இயல்பு என தன்னைப் பற்றி பிரகடனம் செய்தவர்.

**வார்த்தைச் சித்தர் வலம்புரிஜான்**

1946 இல் நெல்லை மாவட்டம் உவரி என்ற ஊரில் பிறந்தவர். 12 ஆண்டுகளாகத் தாய் பத்திரிகை நடத்தி வந்தவர். எதுகை மோனையுடன் வார்த்தைகளை அடுக்கிப் பேசுவதில் இவர் தனி ரகம். 2001 இல் இவர் பேசிய பேச்சு வலைத்தளக் காணொளியில் உள்ளது.' இவருடைய ஆங்கில மொழிப்புலமை அளப்பரியது. போப் இரண்டாம் ஜான்பால், ஜெகசீவன்ராம், அன்னை தெரசா, செயப்பிரகாசம் ஆகியோருக்கு மேடைப் பேச்சின் போது மொழி பெயர்ப்பாளராக இருந்துள்ளார் என்பதிலிருந்து இவருடைய மொழி வல்லமை புலப்படும். உதாரணத்திற்கு ஒரு சில கூறலாம்.

ஒருமுறை இவர் பேசும்போது இவருடைய தொண்டை சரியில்லை. ஏற்கெனவே 64 கூட்டங்களில் பேசி வந்து விட்டார். மைக்கைப் பிடித்ததும்... "அனைவருக்கும் வணக்கம். என்னுடைய தொண்டை ஒத்துழையாமை இயக்கம் நடத்தினால் கூட தமிழுக்கு ஆற்றும் தொண்டை நிறுத்தக் கூடாது என்று 65 வது கூட்டத்தில் பேச வந்திருக்கிறேன்" என்று 'தொண்டை' என்ற வார்த்தையை வைத்து இரு பொருள்படப் பேசி வார்த்தை விளையாட்டு விளையாடினார் இவர்

இவர் எல்லோரையும் மனம் திறந்து பாராட்டும் குணமுடையவர். ஏனென்றால், இவருடை என் சின்ன வயதில் தன்னைப் பாராட்ட ஆளில்லையே என்ற மனக்குறை உந்தவே தன் மொழிப்புலமையையும் பேச்சாற்றலையும் தானாகவே வளர்த்துக் கொண்டவர். 1985 இல் தூய சவேரியர் கல்லூரி ஆண்டு விழாவுக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். வந்து கலந்து கொண்டு கல்லூரி ஆண்டு மலரை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். இவர் இக்கல்லூரியின் பழைய மாணவர். 'எப்போதும் வருவதில்லை கவிதை. எப்போதோ வருவதே கவிதை. நினைத்தால் வருவதல்ல கவிதை. இதயம் கனத்தால் வருவது கவிதை" என்று இவர் கவிதை உருவாவது குறித்து விளக்குவார்.

புத்தகங்களை உரக்க வாசிப்பது நல்லது. கண், வாய், காது என அநேகப் பொறிகள் ஒரே காரியத்தில் ஈடுபடுகிற போது கவனம் அபாரமாகக் குவிகிறது. உரக்க வாசிக்கும் வழக்கம்தான் என்னை ஒரு பேச்சாளனாகவும் ஆக்கியது. அண்ணா, கலைஞர் ஆகியோரின் பேச்சுக்கள் எனக்குப் பிடிக்கும். ஒவ்வொவரும் ஒவ்வொரு விதமாகப் பேசுவார்கள். ஆனாலும் நான் அவர்களைப் பின்பற்றிப் பேசமாட்டேன். பல நல்ல பேச்சாளர்களின் சிறப்பான அம்சங்களை எல்லாம் சேர்த்துக் கொண்டு என்னுடைய பேச்சுப் பாணியை அமைத்துக் கொள்வேன் என்கிறார் வலம்புரியார்.

### அறிஞர் அண்ணா

இலண்டன் மாநகரில் நடைபெற்ற கூட்டத்தில் அறிஞர் அண்ணா கலந்து கொள்ள செய்தார். 'Complete", "finished" என்ற இரண்டு சொற்களுக்கும் வித்தியாசம் என்ன? என்று - கேட்டார்களாம். கூட்டத்தில் ஒரு பகுதியினர் இரண்டுக்கும் வித்தியாசம் இல்லை என்று கூறினார்களாம்.

அறிஞர் அண்ணா கூறியதாவது - நீங்கள் ஒரு சரியான பெண்ணைத் திருமணம் செய்தால் உங்கள் வாழ்க்கை. 'Complete'. அதுவே, நீங்கள் ஒரு தவறான பெண்ணைத் திருமணம் செய்தீர்களானால் உங்கள் வாழ்க்கை 'finished'!

அதுவே அந்த ஒரு சரியான பெண் உங்களை ஒரு தவறான பெண்ணுடன் கையும் களவுமாகப் பிடித்துவிட்டால் உங்கள் வாழ்க்கை 'Completely finished' என்றாராம். இந்த விளக்கத்தைக் கேட்டு ரசித்த கூட்டத்தினர் எழுந்து நின்று 5 நிமிடங்கள் கைதட்டினராம்.

### Because

ஒரு முறை அறிஞர் அண்ணாவிடம் ஒரே வார்த்தையை ஒரு வாக்கியத்தில் மூன்று முறை தொடர்ந்து பயன்படுத்த முடியுமா? என்ற சவாலுக்கு விடையாக அவர் பேசியது: No sentence can end with because, because because is a conjuction. 1945 ஆம்

ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் படத்திறப்பு விழாவின்போது பேசியது!

அது இருக்க இது ஏன் என்று மேல்நாடுகளிலே கருதி இருப்பார்களானால் ஆளில்லா விமானத்திற்குப் பிறகு அணுகுண்டு கண்டு பிடித்திருக்க முடியுமா? தொல்காப்பியம் நமக்கு இருக்கும்போது நமக்கு வேறென்ன வேண்டும் என்றிருந்தால் அகமும் சிலப்பதிகாரமும் கிடைத்திருக்க வழியுண்டா? சிலப்பதிகாரமே போதும் என்றிருந்தால் கலிங்கத்துப்பரணி கிடைத்திருக்குமா? கலிங்கத்துப்பரணியே போதுமென்றிருந்தால் பாரதியாரின் தேசிய கீதங்களைக் கேட்டிருக்க முடியுமா? பாரதியாரின் தேசிய கீதங்களே போதுமென்றிருந்தால் தேசிய விநாயகம் பிள்ளையின் தாயினுமினிய அன்பு குழைத்தூட்டும் பாக்களைப் பார்த்திருக்க முடியுமா? முடியாது. தேசிய விநாயகம் பிள்ளையே போதுமென்றிருந்தால் நாமக்கல்லாரின் "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்ற புது மாதிரியான சண்டை தத்துவப் பாடலைக் கேட்டிருக்க முடியுமா? அதுபோலத்தான் நாமக்கல்லாரே போதுமென்றிருந்தால் "கொலை வாளினை எடடா! மிகு கொடியோர் செயல் அறவே" என்ற பாரதிதாசனின் உணர்ச்சிமிக்க புரட்சிகரமான பாடலைக் கேட்டிருக்க முடியாது" என்று அறிஞர் அண்ணா தான் எழுதியிருந்த 'ஏ! தாழ்ந்த தமிழகமே!" என்ற நூலில் பதிவு செய்திருப்பார். ஒரு பத்திப் பேச்சில் அறிஞர் அண்ணா மேற்கோள் காட்டுகிற நூல்களின் எண்ணிக்கை நமக்கு வியப்பூட்டுகிறது. பரப்பரப்பான அரசியல் பணிகளுக்கு நடுவே அவர் கொண்டிருந்த இலக்கியப் பயிற்சியானது மற்றவர்களுக்கு முன்மாதிரியாக அமைகிறது.

இந்தச் சொற்பொழிவிலிருந்து அண்ணாவுடைய தமிழ்மொழி பரந்துபட்ட தமிழ் அறிவை உய்த்துணர முடியும். நாடாளுமன்றத்தில் தனது கனல் தெறித்த பேச்சின்மூலம் அகில இந்தியத் தலைவர்களின் கவனத்தை ஈர்த்தார். அண்ணாவின் ஆங்கிலப் புலமை வட உறுப்பினர்களை வாயடைக்கச் செய்தது.

**கலைஞர் மு.கருணாநிதி**

கலைஞர் மு. கருணாநிதி, பேச்சாளர்களுக்கு அச்சத்தினால் ஏற்படும் தோல்விகளைச் சுட்டிக்காட்டுகிறார். கலைஞருடன் பயின்ற ஒரு மாணவர் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு பேசியபோது பயத்தினால் உளறிக்கொட்டி, பேச்சை முடிக்கும்போது "இத்துடன் என்பேச்சை முடித்துக்கொள்கிறேன்" என்று கூறுவதற்குப் பதிலாக "இத்துடன் என் வாழ்க்கையை முடித்துக்கொள்கிறேன் " என்று கூறியதையும் அவையினர் குபீரென்று சிரித்ததையும் எடுத்துக்காட்டுகிறார். ஒரு பெரும் தொழிலதிபர் சிவாஜியின் கட்டபொம்மன் நாடகத்தைப் பார்த்துவிட்டு "நானும் நீங்களும் கண்டுகளித்த

இந்த... இந்த... பொம்மன் கட்டன் நாடகமானது..." என்று பேச முடியாமல் திணறி அவையினர் கேலிக்கு ஆளானதையும் கலைஞர் மு. கருணாநிதி எடுத்துக்காட்டுகிறார். நிறைவாக "கூட்டத்தைக் கண்டு ஏற்படுகிற அச்சத்தை மெல்ல மெல்ல ஒத்திகை பார்த்தாவது போக்கிக் கொள்ள வேண்டும்" என்ற ஆலோசனையையும் கலைஞர் மு.கருணாநிதி வழங்குகிறார்.

**வ.உ.சி.**

வ.உ.சி. தலை சிறந்த மேடைப் பேச்சாளர். சேலத்தில் நடந்த மூன்றாவது காங்கரசு மாநாட்டில் அவர் நிகழ்த்திய தலைமையுரை **"எனது அரசியல் பெருஞ்சொல்"** என்ற தலைப்பில் வெளி வந்துள்ளது. வ.உ.சி. 1908-ஆம் ஆண்டே தொழிற்சங்கங்கள் இல்லாமல் தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் பங்கு பெறச் செய்து அவர்களை வழி நடத்தி வேலை நிறுத்தத்தைப் பெரும் வெற்றி பெறச் செய்தார். வ.உ.சி. எல்லோருக்கும் முன்னோடியாக வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். இந்த வேலை நிறுத்தத்தின் பயனாக மற்ற ஆங்கில நிறுவனங்களின் தொழிலாளர்களும் பயன் பெற்றனர். அவர்கள் கூலியை அதிகரித்ததுடன் கொடூரமாக நடத்துவதையும் நிறுத்தினர். சிரீ அரவிந்தர் இந்த வேலை நிறுத்தம் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது என்று பாராட்டி **வந்தே மாதரம்** என்ற இதழில் எழுதினார்.

**நெல்லை கண்ணன்**

நெல்லை கண்ணன் என்பவர் பேச்சாளரும், பட்டிமன்ற நடுவரும் ஆவார். காமராசர், கண்ணதாசன் முதலிய 1970 களில் தொடங்கி தமிழ்நாட்டு சூழலில் முக்கிய தலைவர்களாக, ஆளுமைகளாக, பிரமுகர்களாக இருந்தவர்களிடம் நெருங்கிப் பழகியவர். திருநெல்வேலியில் 1945ம் ஆண்டு ஜனவரி 27ம் தேதி பிறந்தார். இவரது தந்தையார் ந.சு.சுப்பையா பிள்ளை, தாயார் முத்து இலக்குமி. இவருக்கு உடன்பிறந்தோர் எட்டு பேராவர். நெல்லை கண்ணனின் முதல் மகன் சுகா எனப்படும் சுரேஷ் கண்ணன் திரைப்பட இணை இயக்குநராகவும் எழுத்தாளருமாக உள்ளார். இரண்டாம் மகன் ஆறுமுகம் புதியதலைமுறை செய்தித் தொலைக்காட்சியில் நிகழ்ச்சியாளராகவும் உள்ளார்.

பிரபல இலக்கிய பேச்சாளர் தமிழ்க்கடல் நெல்லை கண்ணன் அவன், இவன் என்றே பேசக்கூடியவர். 2021-ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை விருதுகள் வழங்கப்பட்ட நிலையில் தமிழ் இலக்கியங்களில் மிகப் பெரிய புலமை பெற்றவரும், தமிழ்க்கடல் என அழைக்கப்படுவருமான நெல்லை கண்ணனுக்கு இளங்கோவடிகள் விருது வழங்கப்பட்டது. விடுதலை சிறுத்தைகள் கட்சியின் விருதுகள் வழங்கும் விழா 2021 சென்னை வேப்பேரியில் உள்ள பெரியார் திடலில் நடைபெற்றது,

அதில் விசிக சார்பில் பேச்சாளர் நெல்லை கண்ணனுக்கு காமராஜர் கதிர் விருது வழங்கப்பட்டது.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன் (1946 - 16 செப்டம்பர் 2009)**

தென்கச்சி கோ. சுவாமிநாதன் புகழ்பெற்ற பேச்சாளரும், எழுத்தாளரும் ஆவார். 'இன்று ஒரு தகவல்' நிகழ்ச்சி மூலம் வானொலி நேயர்களிடையே பிரபலமாக விளங்கினார். அகில இந்திய வானொலியில் உதவி இயக்குநராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். தொலைக்காட்சியில் **'இந்த நாள் இனிய நாள்'** என்ற நிகழ்ச்சியை நடத்தி வந்தார். பல சிறுகதைகளையும் எழுதியிருந்தார். அரியலூர் மாவட்டம் தென்கச்சிப்பெருமாள் நத்தம் என்ற ஊரில் பிறந்த கோ. சுவாமிநாதன் சென்னை மடிப்பாக்கத்தில் வசித்து வந்தார். வேளாண்மைப் பட்டதாரி ஆவார். நெல்லை வானொலியில் அறிவிப்பாளராகப் பணியைத் தொடங்கியவர். சென்னை வானொலி நிலையத்தில் இன்று ஒரு தகவல் நிகழ்ச்சி வழியாக உலகத் தமிழர் உள்ளங்களில் இடம் பிடித்தவர். திரைப்படங்களிலும் தொலைக்காட்சியிலும் நடித்தவர். இவர் தமிழ்நாடு அரசுப் பணியில் விவசாய அலுவலராக வாழ்க்கையைத் தொடங்கி, பின்னர் 1977 முதல் 1984 வரை திருநெல்வேலி வானொலி நிலையத்தில் பணிபுரிந்தார். அகில இந்திய வானொலியில் வேளாண்மை நிகழ்ச்சிப் பிரிவு இயக்குனராக இருந்தபோது "வீடும் வயலும்" என்ற நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். "அன்பின் வலிமை", "தீயோர்", மற்றும் "அறிவுச்செல்வம்" உட்பட பல நூல்களை எழுதியுள்ளார். "இலக்கணம்" என்ற திரைப்படத்தில் நடித்திருந்தார்.

## அலகு - V

மேடைப் பேச்சுத் தொன்றுதொட்டு இருந்துவரினும், இன்று நாடாள்வார்க்கும் ஆளப்படுவார்க்கும் இன்றியமையாத கருவியாகிவிட்டது. பேச்சாளர்களைக் கண்டு, பெரிய அரசாங்கங்களும் அஞ்சும்படியான நிலை இன்று ஏற்பட்டுள்ளது. வள்ளுவரும்,

**"வில்லேர் உழவர் பகைகொளினும், கொள்ளற்க**
**சொல்லேர் உழவர் பகை"**

என்று மன்னர்களை நோக்கி, "வில் ஏர் உழவர்களான படை மறவர் பகை கொண்டாலும், சொல் ஏர் உழவர் களான பேச்சாளர் பகை கொள்ளக் கூடாது" என்று வற்புறுத்தியதைக் காணும்போது, பேச்சாளர் சிறப்புப் பெரிதும் புலனாகும்.

நாட்டிற்கு ஏற்ற திட்டங்களை எடுத்துக்காட்டவும். கண்மூடி வழக்கங்கள் மண்மூடிப் போகவும், மடமையை மாய்க்கவும், கடமையைக் காட்டவும். கொடுமைகளைக் களையவும், இடும்பைகளை ஒடுக்கவும். செம்மையான சீர்திருத்தங்கள் செய்யவும். நேர்மையை வலியுறுத்தவும், இன்று, இந்நாட்டில் பல துறைகளிலும் நலமுறப் பேசும் நல்ல பேச்சாளர்கள் தேவைப்படுகிறார்கள். கற்றவர்கள் மட்டும் இன்று பேச்சாளராக வரவேண்டும் என்பதில்லை; மற்றவர்களும் பேச்சாளராய் உருவாக வேண்டும். ஆதலால், ஒருவர் அல்லது இருவர் பேச்சாளராக மலர்வதும் இம்மாபெரும் நாட்டிற்குப் பயனளிக்காது. பல்லாயிரக் கணக்கில் பேச்சாளர்கள் பற்பல துறைகளில் தோன்ற வேண்டும். எனவே, பேச்சாளராக விரும்புகிறவர்கள் பலவற்றை அறிந்து நலமுறப் பயின்று உருவாக வேண்டும்.

**பண்டைத் தமிழ்நாட்டில்**

பண்டைக்காலத்தில் தண்டமிழ் நாட்டில் நாவலர்களும் பாவலர்களும் இருந்தார்கள். அவர்கள் இன்றைய பேச்சாளர்களினும் வேறுபட்டவர்கள்.

**"கவியே கமகன் வாதி வாக்கி எனப்**
**புவிமேற் சொல்லும் புலவர் நால்வர்"** எனப்பட்டார்கள் அவர்கள்.

பலவகைப் பாக்களைப் பாட வல்லவன் கவி எனப்பட்டான். "அடைந்த கல்வியால் நிறைந்த அறிவால் அறைந்த ஒரு பொருள்தனை விரிக்க வல்லவன் கமகன்" ஆவான். கமகன் என்பவன் கல்வியறிவும் அனுபவ அறிவும் நிரம்பி, ஒரு பொருளைக் குறித்து விரித்துப் பேச வல்லவனாவான். இவன் தலைசிறந்த பேச்சாளனாக இருத்தல் வேண்டும்.

"ஏதுவும் (காரணமும்), மேற்கோளும் எடுத்துக் காட்டித் தன்கோள் (தன் கொள்கையை) நிறீஇப் பிறர் கோள் மறுக்கும் வன்புடையனே வாதியாவான்." வாதம் செய்வதில் வல்லவன் வாதி.

"அறம், பொருள், இன்பம், வீடு என நான்கும் பலரும் கேட்கச் செஞ்சொற் கொண்டு அருள்நோக்கி உரைப்போன் வாக்கியாவான்." வாக்கி என்பவன் சமயத் துறையில் அறத்தைத் திறம்படப் பேசும் பிரசங்கி.

கமகன், வாதி, வாக்கி இவர்களை நோக்குங் காலத்து ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கிய பேச்சாளர்கள் நம் நாட்டில் இருந்தார்கள் என்று அறிகிறோம். எந்த எந்தத் துறையில் தொண்டாற்ற வேண்டுமோ அந்த அந்தத் துறைக்கு வேண்டிய அறிவையும் பயிற்சியையும் அவர்கள் பெற்று விளங்கினார்கள் என்பதும் புலனாகிறது.

**பேச்சாளர்கள் என்ன செய்ய வேண்டும்?**

பேச்சாளர்கள் இக்காலத்துக்கு ஏற்றவாறு எந்த எந்தத் துறையில் தொண்டு புரிய வேண்டுமோ அந்த அந்தத் துறையில் அறிவுபெற்றுப் பயிற்சியுற்று விளங்க வேண்டும். பொது அறிவும் துறையறிவும் இன்றி ஒருவரும் மதிப்புக்குரிய பேச்சாளராக விளங்குவது முடியாது. இதற்காகப் பேச்சாளர்கள் கல்வி நிலையங்களுக்கு ஓடிக் கற்க

வேண்டுமென்பதில்லை. தாமாகக் கற்கக் கூடியவர்கள் நூல்களை மேலும் மேலும் கற்கவேண்டும். மற்றவர்கள் கற்றவர்களை நாடித் தெரிந்துகொள்ள வேண்டும்.

**குறிப்பேடு**

நாளிதழ்கள், நூல்கள் இவற்றைப் படிக்குங் காலத்தில் பேச்சாளர்களாய் உருவாக விரும்புகிறவர்கள் ஒரு குறிப்பேடு வைத்துக்கொண்டு அதில் வேண்டிய அரிய குறிப்புகளை எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். புள்ளி விவரங்கள் பல இதழாசிரியர் உரைகளிலும் (Editorials) பேரறிஞர் சொற்பொழிவுகளிலும் வருகின்றன. அவற்றுள் வேண்டுவனவற்றைக் குறிப்பேட்டில் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு காதலன் தன் அன்புக்குரிய காதலிக்குக் கொடுக்க எப்படி அரிய பொருள்களைத் தேடிச் சேர்ந்துவைப்பானோ, அப்படிச் சிறந்த பேச்சாளனாக விரும்புகிறவன் வேண்டிய செய்திகளை மக்களுக்கு அளிக்கக் குறிப்பேட்டில் சேர்த்துத் திரட்டி வைக்க வேண்டும்.

சோம்பேறி ஒருநாளும் சிறந்த பேச்சாளனாக வர முடியாது. விடாமுயற்சியுடன் உழைத்துப் படிப்பவர்களே வெற்றியுறும் பேச்சாளராக விளங்குவார்கள். ஹாமில்டன் என்ற பெரும் பேச்சாளர், "பலர் என்னைப் பேரறிஞன் என்று பாராட்டுகிறார்கள். நான் ஒரு பொருளைப் பற்றிய பேச வேண்டுவதாயின் அதைப்பற்றி அரும்பாடுபட்டுக் கருத்துகளை அல்லும் பகலும் நூல்களைப் படித்துச் சிந்தித்துச் சேகரித்து வைத்துக் கோவைப்படுத்திப் பேசுவேன். என் பேச்சு என் உழைப்பினாலும் சிந்தனையாலும் உருவான பயனாகும்" என்றார். இவரைப்போலவே பெரும் பேச்சாளர் பலரும் உழைத்தும் சிந்தித்தும் பேசி அரும்புகழ் பெற்றார்கள். ஆதலால், பேச்சாளர்கள். பழைய சரக்குகளை விலைக்கு விற்க முற்படாமல் உழைத்துப் புதுக்கருத்துகளை வெளியிட வேண்டும். பொது அறிவு, பேச்சாளர்களுக்கு இன்றியமையாதது. பொது அறிவின்றி யாரும் தலைசிறந்த பேச்சாளராதல் இயலாது, இயலாது.

**பேசியதையே பேசுதல் கூடாது**

ஒரு சிலர் ஈரோட்டில் பேசிய கருத்துகளையே இராம நாதபுரத்திலும் எழுத்து மாறாமல் பேசுவதுண்டு. ஈரோட்டில் பேசியபடி பேசினால் இராமநாதபுரத்தில் யார் கண்டுபிடிக்கப் போகிறார்கள் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். அப்படிச் செய்வது கூடாது. இடத்துக்கு இடம் ஒரு பாதியளவாவது வேறு கருத்துகளைக் கூறவேண்டும். சிலர் ஆராய்ச்சி என்னும் பெயரால் முப்பதாண்டுகளுக்கு முன்னே கூறியதையே முப்பதாண்டுகளுக்குப் பின்னும் பேசுவதுண்டு. இவ்வாறு சிலர் பேசக் கேட்டிருக்கிறோம். இத்தகையவர்களுக்கு அறிஞர் மதிப்புக் கிட்டாது. அவர்கள் மேலும் மேலும் ஆராய்ந்து முன்னிலும் பன்மடங்கு சிறப்பாகப் பேசுதல் வேண்டும்.

**இப்படிக் கூறுவது கூடாது**

ஆராய்ச்சியே இன்னதென்று அறியாதவர்கள், "என் ஆராய்ச்சிக்கு எட்டியவாறு" என்றும், "நான் ஆராய்ந்து பார்த்ததில்" என்றும் இடையிடையே பலமுறை சொல்கிறார்கள். இவ்வாறு இளம் பேச்சாளர்களும் ஆராய்ச்சி இன்னது என்று அறியாதவர்களும் பேசுவது கூடாது. பேச்சில் 'நான்' என்னும் ஆணவம் நுழையவிடாமல் பார்த்துக்கொள்ளுதல் நல்லது. உலக வரலாற்றையே படியாதவர்,"உலக வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள்" என்று கூறுவது தக்கதன்று. உலக வரலாற்றைப் படித்த அறிஞர்கள் இங்ஙனம் கூறலாம். மற்றவர்கள் கற்றவர்களைப் பின்பற்றி இப்படிக் கூறுதல் எப்படிப் பொருந்தும்? முழு நூலைப் படியாதவர் நூலாராய்ச்சியில் புகுதலும், "இது இடைச்செருகல்" எனலும், "இவ்வுரை தவறு" என்று புலவர்களைப் பின்பற்றிக் கூறுதலும் பொருந்தாது என்றுணரவேண்டும். புலமை மிக்கவர் இங்ஙனம் கூறுவதில் தவறில்லை. மற்றவர்கள் இப்படிக் கூறுவது தவறாகும்.

**மேற்கோள்**

இளம் பேச்சாளராயினும் பெரும் பேச்சாளராயினும் அளவு கடந்து மேற்கோட் செய்யுள்களைக் கூறுதலாகாது. அளவு கடந்து மேற்கோட் செய்யுளைக் கூறுவது பேச்சாளரது அறியாமையைப் புலப்படுத்துவதாகும். கூறிய கருத்தை வற்புறுத்தவே மேற்கோள் வேண்டுவது.

**பச்சோந்திப் பேச்சாளர் இகழ்ச்சியுறுவர்**

ஒரு சிலர் மேடைப் பேச்சாளர் என்னும் புகழைப் பெறத் திருநெறிக் கூட்டத்திலும் பேசுவர்; திராவிட இயக்கங்களிலும் பேசுவர்; காங்கிரஸ் கூட்டத்திலும் சொற்பொழிவாற்றுவர்; பொதுவுடைமைக் கூட்டத்திலும் சொற்பெருக்கு ஆற்றுவர். சிலர் சந்தர்ப்பங்களுக்கும் இடங்களுக்கும் ஏற்றவாறு பேசுவர். புகழ் வந்தால் போதும் என்பதே இவர்களுடைய குறிக்கோள். இங்ஙனம் வருவது புகழாகாது. உண்மை ஊழியத்தின் ஊதியமே உறுதியான புகழ். நாளிதழ்ப் புகழ் நற்புகழாக நிலைத்திராது. உண்மைப் புகழ் என்றும் நிலைத்திருக்கும். கொள்கையற்ற பச்சோந்திகளுக்கு இகழ்ச்சி உண்டாகுமேயன்றிப் புகழ்ச்சி உண்டாகாது. ஆதலால், பேச்சாளர்கள் வழவழ வெண்டைக்காயாய் இராமல், நல்ல கொள்கையில் ஊற்றமும் உறுதியும் உடையவர்களாக விளங்க வேண்டும். இதைப் பேச்சாளர்கள் கடைப்பிடித்தல் இன்றியமையாதது. பச்சோந்திக் கொள்கை பாரில் ஒருவரைப் பாழாக்கிவிடும். சந்தர்ப்பவாதிகள் தலையெடுக்க மாட்டார்கள்; தலையெடுத்தாலும் பொதுமக்களால் இகழப்படுவார்கள்.

**இனிய முறையில் அஞ்சாமல் கூறுக**

மற்றொன்றும் பேச்சாளர்களுக்கு வேண்டுவது எங்கு பேசினாலும் பேச்சாளர்கள் தங்களுடைய நல்ல கொள்கையை அஞ்சாமல் இனிய முறையில் பிறரைப் புண்படுத்தாத வகையில் அறிவிக்கும் ஆற்றலும் பெறல் வேண்டும்.

**பேச்சாளர் பண்புடையவராய் இருத்தல் வேண்டும்**

இவற்றோடன்றிப் பேச்சாளர்கள், அன்பு, நன்னடக்கை, நேர்மை, இரக்கம் முதலிய நற்பண்புகளுடையவர்களாக இருப்பது மிகவும் அவசியமானது. நற்பண்பற்றவர்கள் எத்தகைய பேச்சாளர்களாக இருப்பினும் மக்களிடம் மதிப்படையார்கள். பேச வந்தவரைத் தலைவர் மறந்து பேசக் கூப்பிடாவிட்டால் அது குறித்துக் கவலைப்படக் கூடாது; சினந்து கொள்ளவும் கூடாது. நேரமாகிவிட்டால் நாமாக விலகிக்கொள்ளும் பண்பும் வேண்டும்.

**முறை அறிந்து பேசுக**

மறவாமல் பேசுதல், தர்க்க முறையில் கோவைப்படப் பேசுதல், மற்றொன்று விரித்தலின்றிப் பேசுதல், முன்பின் முரணின்றிப் பேசுதல் முதலியவை பேச்சாளர்கள் கவனத்தில் என்றும் இருக்க வேண்டியவை. நினைவாற்றல் இல்லாதவர்கள் குறிப்பு வைத்துக்கொண்டு பேசுங்காலத்து அக்குறிப்பையே பார்த்துக்கொண்டிராமல் பார்ப்பதும் பார்க்காததும்போல இருந்து, தலை நிமிர்ந்து, அங்க சேட்டைகள்' செய்யாது, பலரும் பார்க்குமாறு நின்று, அன்போடு, விரைந்து பேசாமல், குரலை எடுத்தும் படுத்தும் நலிந்தும் ஒலிக்குமாறு செய்து, உச்சரிப்புப் பிழையின்றி, அழுத்த வேண்டிய சொற்களை அழுத்தி, சிறிது நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்தி, உணர்ச்சி காட்ட வேண்டிய இடத்தில் உணர்ச்சி எழுப்பி, ஊற்றமும் ஊக்கமும் அமைய இடையிடையே முடியுமானால் நகைச்சுவை தோன்றுமாறு செய்து, கருத்துகளை அளவுக்குமேல் கொட்டிவிடாமல் சிறுவர்களாயிருந்தால் சிறுவர்களுக்கு ஏற்ற மொழியிலும், அறிஞர்களாயிருந்தால் அவர்களுக்கு ஏற்ற நடையிலும், மற்றவர்களாயின் மிக எளிய நடையிலும், சிறு சிறு வாக்கியங்களாகப் பேசி, எடுத்துக்காட்டுகள் வேண்டுமாயின் கூறி, புள்ளி விவரங்கள் தேவையானால் அவற்றைக் குறிப்பிட்டு, பேச்சை இனிதாக முகமலர்ச்சியோடு முடிக்க வேண்டும் என்றறிக.

**கவனத்தைக் கவர்ந்து பேசுக**

மிகுந்த நகைச்சுவையுடன் பேசினால் பேச்சு மறந்து போகிறது; பயனற்றும் போகிறது. பேசும்போது பேச்சாளர் தமக்குள்ள ஊற்றத்தையும் ஊக்கத்தையும் வெளிப்படுத்திப் பேச வேண்டும். அப்போதுதான் பேச்சு மக்களைத் தட்டி எழுப்பி அவர்களுடைய கவனத்தைக் சுவர முடிகிறது. கூடுமானால் பேச்சாளர்கள் தங்கள்

அனுபவத்தையும் கூறலாம். பேசுவோர் அவையினர் கவனத்தைக் கவர்தல் இன்றியமையாதது என்று கருத வேண்டும்.

### குறிப்பறிந்து பேச்சை முடித்து விடுக

அவையினருள் சிலர் குறிப்பாகக் கைதட்டிவிட்டால், அப்படிச் செய்வது பேச்சை நிறுத்துவதற்குரிய மணியோசையாகக் கருதிப் பேச்சாளர் பேச்சை முடித்துவிட வேண்டும். பேச்சை உடனே நிறுத்துவது மரியாதை. "நாற்காலிகள் மட்டும் இருப்பினும் நான் பேசுவேன்" என்று மேலும் மேலும் பேசுதல் அறிவுடைமையாகாது. குறிப்பிட்ட கால அளவுக்கு மேல் பேச்சாளர்கள் பேசுதல் கூடாது. நெடுநேரமாகிக் கூட்டம் தொடங்கப்பட்டால் பேச்சாளர் பேச்சை மிகவும் சுருக்கிக் கொள்ள வேண்டும்.

### எடுத்தும் படுத்தும் நலிந்தும் பேசுக

பேசும்போது பேச்சாளர் களிப்பு மொழியினை எடுத்தல் ஒலியினும், துன்புறு மொழியினைப் படுத்தல் ஒலியினும் பேசலாம். கட்டாயப்படுத்த வேண்டுவது வெற்றி, எதிர்த்தல், சினம், வெறுப்பு, உயர்வு, கிளர்ச்சி இவற்றை எடுத்தல் ஒலியில் பேசலாம். வேண்டுகோள், துன்பம், பணிதல், அமைதி, விருப்பு, தாழ்ச்சி, அயர்வு இவற்றைப் படுத்தல் ஒலியில் பேசலாம். பிறவற்றை நலிதல் ஒலியில் பேச வேண்டும். ஒரே ஒலியில் பேசினால் தேனீக்கள் ரீங்காரம் செய்வதுபோல இருக்கும். மிக உரக்கப் பேசினாலும் மெதுவாகப் பேசினாலும் அப்பேச்சு வெறுப்பை உண்டாக்கும். ஆதலால், எடுத்தும் படுத்தும் நலிந்தும் சொல் தட்டுப்பாடு இன்றிப் பேசவேண்டும்.

### பத்துக் கட்டளைகள்

உருவாகும் பேச்சாளர்களுக்குப் பெரும்பயன் அளிக்கும் பத்துக் கட்டளைகள் இவை:

- முன் கூட்டிச் சிந்தித்துப் பேசுக.
- அவையினரை நோக்கி நிமிர்ந்து நின்று பேசுக.
- கவனத்தைக் கவரும் வண்ணம் பேசுக.
- இரைந்தும் விரைந்தும் பேசற்க.
- குரல் எடுத்தும் படுத்தும் நலிந்தும் வருமாறு பேசுக
- சுருங்கச் சொல்லி விளங்க வைக்குமாறு பேசுக.
- பேச்சை மெல்லிய குரலில் தொடங்கிப் படிப்படியாக உயர்த்தி, உணர்ச்சி காட்டி உள்ளக் கிளர்ச்சி யுடன் பேசுக.
- அஞ்சாமல் நிபுணனாகப் பேசுக.
- இனிதாக முடிக்க.
- பொருத்தமாகப் பிழையின்றிப் பேசுக

### உடலைப் பேணி அளவாகப் பேசுக

பேச்சாளர்கள் உடலை .பாதுகாத்துக்கொள்ள வேண்டும். பேச்சாளர்களுக்கு முன்னால் கிடைப்பன புகழும் பூமாலையுமே; பின்னால் விளைவன நெஞ்சு வலியும் வயிற்று வலியும் தலைவலியுமாம். நம் நாட்டில் வங்கச்சிங்கம் சி.ஆர்.தாசர் சிறந்த பேச்சாளராக விளங்கியவர். திரு.வி.க. தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளராக இருந்தவர். இவர்கள் நீண்ட நாள்கள் வாழவில்லை. எத்தனையோ பெரும் பேச்சாளர்கள் பேசிப் பேசிப் பல நோய்களுக்கு இரையாகி எமனுலகுக்கு ஏகினார்கள். ஆதலால், பேச்சாளர்கள் மாலைக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு மிகுதியாகப் பேசிப் பேசி நோய்க்கு ஆளாகாமல், அளவாகப் பேசி, உடலைப் பேணி, உடல் நலமுடன் விளங்க வேண்டுமென்பதை ஒருநாளும் மறத்தலாகாது. சுவர் இருந்தாலன்றோ சித்திரம் எழுதலாம்?

**பேச்சாளர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்**

ஒவ்வொரு பணியிலும் அதற்குரிய நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**நடை, உடை**

பேச்சாளராக மேடையேறும் நபர் தன் நடை உடையை அதற்கேற்ப மாற்றிக் கொண்டு தன்னை முன்னிறுத்த வேண்டும். ஆன்மீகச் சொற்பொழிவாளர் பொது இடங்களில் கூட திருநீறு, உத்திராட்சம் அணிந்து காவி உடை கட்டிக் கொள்வதைப் பார்க்க முடியும். கவிஞர்கள் ஜிப்பா அணிந்து வருவதைக் காணலாம். கவிப்பேரரசு வைரமுத்துவை உதாரணம் காட்டலாம். பெரும்பாலும் ஆண்கள் வேஷ்டி கட்டி வருவதும், பெண்கள் சேலை கட்டி வருவதும் கலாச்சாரமாகப் பின்பற்றப்படுகிறது.

**பாவனை**

பேசும்போது முக பாவனைகளை மாற்றுவதும் நடக்கலாம்.

> **நகையே அழுகை இளிவரல் மருட்கை**
> **அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
> **அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப** (தொல்.சூ. 252)

என்ற நூற்பா எண்வகை மெய்ப்பாடுகளை எடுத்துச் சொல்வதாகும். சிரிப்பு, அச்சம், பெருமிதம் போன்ற மெய்ப்பாடுகள் பேச்சாளரால் பெரும்பாலும் பின்பற்றப்படும் குணங்களாகும்.

## ஏற்ற இறக்கம் (Modulation)

பொதுவாகப் பேசும்போது நம் உணர்வுக்கு ஏற்றபடி வார்த்தைகளில் ஏற்ற இறக்கம் தானாகச் சிலருக்கு வந்துவிடும். ஒரே வார்த்தை அல்லது வாக்கியம் நாம் சொல்லும் முறையிலேயே காலச் சூழலுக்கேற்பப் பொருள் கொள்ளப்படும். "ஏலே ! எப்படி இருக்கு?" என்று சுகமில்லாமல் இருப்பவனைப் பார்த்து பெரியவர்கள் கேட்பதுண்டு. இதே வாக்கியத்தை ஊரில் தன்னை எதிர்த்துப் பேசி வரும் ஒரு நபரைப்

பார்த்து மற்றொருவர். கொஞ்சம் உச்சஸ்தாயில் கேட்டால் கோபமாகப் பேசுவதாக எடுத்துக் கொள்ளப்படும்.

"நல்லா இருப்பாய்" என்று சொன்னால் நல்லதாகவும், வாழ்த்தாகவும் பொருள் கொள்வர். "நல்லா இருப்பே?" என்று கேட்பதாக இருந்தால் கெட்டதாகவும் எதிரிகள் எடுப்பார்கள். அரசு அறிவிப்புகளைத் தண்டோரா போட்டு அறிவிப்பவர்கள் "இதனால் சகலமானவர்களுக்கும் சொல்லப்போகும் செய்தி என்னவென்றால்..." என்று உச்சஸ்தாயியில் தொடங்குவார்.

**கால அளவு**

பேச்சாளர் தான் எடுத்துக்கொள்ளும் இடம், காலம், மேடை, பொருளுக்கேற்ப கால அளவைக் கைக்கொள்வது அவசியம். தேவைக்கேற்ப நீட்டியோ, அல்லது சற்று குறைத்தோ தான் கூறவரும் கருத்தைச் சொல்வதற்குக் கால அவகாசம் எடுத்துக் கொள்ள வேண்டும். பட்டிமன்றத்தில் நடுவரால் தரப்படும் மூன்று அல்லது நான்கு மணித்துளிகளில் தன் பங்கு வாதத்தை எடுத்து வைத்துப் பேச வேண்டும். காலம் நெருங்கும்போது நடுவரின் எச்சரிக்கை மணி ஒலித்த உடன் தன் மையக் கருத்தைச் சொல்லி முடிக்க வேண்டும்.

பள்ளி, கல்லூரிகளில் பேச்சுப் போட்டிக்கு வரும் மாணவ, மாணவிகள் நெறியாளர் கூறும் விதிகளுக்குட்பட்டு, தமக்குத் தரப்படும் மணித்துளிகளுக்குள் உரிய தகவல்களை எடுத்துரைக்கலாம். உரிய கால அவகாசத்தை மீறிப்பேசும்போது அந்த நபர்கள் பரிசுக்குரிய தகுதியை இழக்க நேரிடும்.

**தேவைக்கேற்பக் கருத்துரைத்தல்**

பேசும் மேடை பள்ளிக் குழந்தைகள் முன்பாகவா? கல்லூரியிலா? கிராமப்புறக் கூட்டமா? என உணர்ந்து அவையோர் யார் என்று மனதில் நிறுத்திக் கொண்டு தம் பேச்சைத் தர முன்வர வேண்டும். தேவைப்படும் இடங்களில் தேவைக்கு ஏற்ற அளவில் உரிய மேற்கோள்கள் கூறலாம். சின்னச் சின்னக் கதை சொல்லி எடுத்துக்காட்டு மூலம் பேசலாம். தாம் சொல்லும் கதை எதிரில் உள்ளவர்களின் மனநிலையை ஈர்ப்பதாக உள்ளதா? சலிப்பு தட்டுகிறதா என்று பேச்சாளர்தாம் அவதானிக்க வேண்டும்.

புள்ளி விவரங்களை எடுத்துச் சொல்வதாக இருந்தால் அதைத் தகுந்த இடம், தகுந்த நபர்கள் முன்பு கவனிக்கத் தகுந்த முறையில் விவரிக்கலாம். தேவையற்ற இடத்தில் புள்ளி விபரங்களை எடுத்துக் கூறுவது அனைவரின் நேரத்தையும் வீணடிப்பதாக முடியும். பயன் தராது.

சிலர் தன் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே பேசுவதை நீங்கள் பார்த்திருக்கலாம். அது அவர்கள்ஆரம்பத்திலிருந்து பின்பற்றி வந்த பழக்கமாக இருக்கும். தவறில்லை. லேனா தமிழ்வாணன் அவர்கள் பேசும் நேரம் குறித்து ஒரு அலாரத்தில்

செட்டிங் செய்து வைப்ரேஷன் மோடில் தன் சட்டைப் பையில் வைத்துக் கொள்வதாக ஒருமுறை குறிப்பிட்டுள்ளார்.

**ஒலி வாங்கி**

நிலையான அல்லது கை ஒலிவாங்கி தரப்படலாம். தமக்குத் தரப்படும் ஒலிவாங்கி தமது பேச்சின் ஒலி அளவை எவ்வாறு உள்வாங்கி வெளியிடுகிறது என்பதை முதல் ஓரிரு நிமிடங்களில் உணர்ந்து கொள்ளலாம். அதற்கேற்ப ஒலி வாங்கியை நகர்த்தியோ அல்லது தான் அதனருகில் நின்றோ பேச வேண்டியது இருக்கும்.

**குறிப்புத்தாள்கள்**

கையில் குறிப்புகள் ஏதும் இல்லாமல் பேசுவது அனுபவம் வாய்ந்த பல பேச்சாளர்களின் திறமைகளுள் ஒன்று. அப்படிக் கையில் குறிப்புகள் வைத்திருந்தாலோ சிறு டயரி வைத்து இருந்தாலோ அதை மேடையின் முன்பு இருப்பவர்கள் கண்களில் படாமல் பார்த்துக் கொள்வது முக்கியம். புரட்டும் போது ஒலி வாங்கியில் தாள்கள் புரட்டும் ஒலி வராமல் தற்காத்துக் கொள்ள வேண்டும்.

**உரிய மரியாதை**

சபையறிந்து பேசுவது ஒவ்வொரு பேச்சாளரின் நாகரிகம். மேடையில் இருக்கும் பெரியவர்கள், முக்கியஸ்தர்கள் பெயர்களைக் குறிப்பிட நேரிடும். அவர்களுடைய வயது மூப்பு அடிப்படையிலும் தனி, பதவி அடிப்படையிலும் 'வரிசைக் கிரமமாக விளித்துப் பேசுதல் மரபு. உரிய மரியாதை அழைக்க வேண்டும். தனக்குத் தனிப்பட்ட முறையில் வேண்டாதவராகக்கூட இருக்கலாம். அவரையும் சூழல் சுருதி மரியாதை கொடுத்தே பேசுதல் சபை மரபு.

**எதிர்பார்ப்பு**

எல்லோரும் நாம் பேசுவதை நன்றாகக் கவனிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பேச்சாளரிடம் இருக்கலாம். அதுபோல மேடைமுன் உள்ள அவையோருக்கும் ஓர் எதிர்பார்ப்பு இருக்கும் அல்லவா?

"இவரு புதுசா தெரியறாரே?!"

"இவரு முழிக்கற முழியே சரியில்லையே"

"என்னத்த பேசப் போறாரோ?

எவ்வளவு நேரம் பிளேடு போடப் போறாரோ?!"

"நேரம் போவதற்கு ஏதாவது கொஞ்ச நேரம் கேட்டு விட்டுத்தான் போவோமே?!"

இப்படி ஆளாளுக்கு ஒவ்வொருவிதமான எதிர்பார்ப்புகளைப் பேசவிருக்கும் பேச்சாளரின் மேல் வைத்திருப்பார்கள். 'இருக்கற ஆளுகளைப் பார்த்தால் கவனிக்கிற

மாதிரி தெரியலையே?!" "நம்மாளால இந்த ஜனங்களைச் சமாளிக்க முடியுமா?" "இவங்க எந்த மாதிரி பேசுனா நாம பேசறத கவனிப்பாங்க?!" என்பன போன்ற எதிர்பார்ப்புகளுடன் கூடிய கேள்விகள் பேச வருபவர் மனதிலும் எழலாம்.

**பேசுவோர் கேட்போர்**

இரண்டு நிலையிலும் உள்ள எதிர்பார்ப்புகள் பலவற்றில் ஒருசில நிறைவேறினாலும்கூட பேச்சாளரின் பேச்சு வெற்றி பெற வாய்ப்பு உண்டு. பேசுவதற்கு ஏற்பாடு செய்தவர்களையும் பேச்சாளர் திருப்திப்படுத்த வேண்டும். அப்போதுதான் அடுத்த முறை இவருக்கு இந்த வாய்ப்பு மீண்டும் வழங்கப்படும். எனவே பேசுவோரும் கேட்போரும் சமனிலை பெற வேண்டும். தனது பேச்சை எதிரிலிருப்போர் எப்படி வரவேற்கிறார்கள் அல்லது பேச்சு எப்போது முடியும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கிறார்களா என்பதை அவர்களது முகக்குறிப்பு கொண்டு அறிந்து தன் பேச்சை நீட்டிக்கவோ அல்லது விரைந்து முடிக்கவோ வேண்டும். இதைத்தான் வள்ளுவப் பெருந்தகை,

**"குறிப்பின் குறிப்புணரா ஆயின் உறுப்பினுள்**
**என்ன பயத்தவோ கண்." (குறிப்பு அறிதல் குறள் 705)**

என்று கூறுவார். எழுத்துக்களின் ஒலி சரியான முறையில் ஒலிக்குமாறு பேச வேண்டும். நகன, னகர, ணகரம்; லகர, ளகர, ழகரம், ரகர, றகர ஒலி வேறுபாடு அறிந்து பேச வேண்டும். முன்னுக்குப் பின் முரண்பாடு இன்றித் தெளிவாகப் பேச வேண்டும். ஒவ்வொரு வார்த்தையாகப் பேசாமல், தயங்கித் தயங்கிப் பேசாமல், விரைவாகவும் நிதானமாகவும் பேச வேண்டும். சொல்லும் கருத்துகளைத் தெளிவாகச் சொல்லப் பயிற்சி பெற வேண்டும். சவார்த்தைக்கு வார்த்தை எழுதி வைத்து குறிப்பைப் பார்த்துப் பேசாமல் இயல்பாகப் பேச வேண்டும்.

## பேச்சுத் தயாரிப்பு - சில குறிப்புகள்

பேசுவது என்பது ஒரு வகையில் ஒரு போரினை நடத்துவது போலாகும். போருக்கு முன்னர் படைகள், ஆயுதங்கள். போர்த்தந்திரங்கள் முதலியவற்றைத் திட்டமிட்டுத் தயாரித்து ஒழுங்குசெய்து கொள்வதைப் போல, பேசுவதற்கு முன்னர் கருத்துக்கள், புலப்பாட்டு உத்திகள் முதலியவற்றைச் சிந்தித்து நிரல்படுத்தி ஒழுங்கு செய்துகொள்ள வேண்டும். பேச்சாளருக்குச் சிறந்த நூல்கள், செய்தித் தாள்கள், மாத இதழ்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், நடைமுறையில் கண்டும் கேட்டும் மனத்தில் இருத்திக்கொள்ளும் செய்திகள் முதலியன சிறந்த தகவல் வங்கிகளாகும். இவையே ஒரு

பேச்சாளனுக்கு நெருக்கடியில் கைகொடுக்கும் பிரம்மாஸ்திரங்களாகும். எனவே ஒரு பேச்சாளன் இந்த அஸ்திரங்ளை எப்போதும் தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். பேச்சுத்துறையில் முனைப்புடன் ஈடுபட விரும்பும் அன்பர்கள் தங்கள் பேச்சை எப்படித் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான சில குறிப்புகள் இங்கே கொடுக்கப்படுகின்றன.

1. பேசுவதற்கு உரிய நாளுக்கு ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே நூல்களைப் படித்துத் தரவுகளைத் திரட்டத் தொடங்க வேண்டும். நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று தயாரிப்புப் பணியைத் தள்ளிப்போடக் கூடாது.

2. பேசுவதற்குரிய மையப் பொருள் தொடர்பான நூல்களைப் படித்துத் தரவுகளைத் திரட்டிக்கொள்ள வேண்டும். சான்றாக வைரமுத்துவின் கவிதைகளைப் பற்றிப் பேசவேண்டும் என்றால் வைரமுத்துவின் கவிதைத் தொகுதிகளை முதலில் படித்து முடித்து, என்ன என்ன உட்தலைப்புகளில் பேசலாம் என்பதை உய்த்துணர்ந்து குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். மீண்டும் ஒருமுறை கவிதைத் தொகுதிகளைப் படித்து உட்தலைப்புக்களுக்குப் பொருத்தமான கவிதை வரிகளைக் காகிதத்தில் எழுதித் தொகுத்துக்கொள்ள வேண்டும்.

3. தயாரிப்பின் மூன்றாவது படிநிலையாகத் தொகுக்கப்பட்ட கவிதை வரிகள் அடங்கிய காகிதக் குறிப்புகளை மீண்டும் படித்துப்பார்த்து (இப்போது கவிதைத் தொகுதிகள் தேவையில்லை) எந்தச் செய்தியை முதலில் கூறுவது, எதை அடுத்தடுத்துக் கூறுவது என்று சீர்தூக்கிப் பார்த்து ஒரு வரிசை முறையில் நிரல்படுத்திக்கொள்ள வேண்டும். இப்போது உங்கள் பேச்சுக்குரிய 75% பணி முடிந்தது.

4. நான்காவது படிநிலையாக வரிசைப்படுத்தப்பட்ட குறிப்புகளை மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும். இவ்வாறு படிக்கும்போது புதிய நயங்கள் உங்கள் மனத்தில் தோன்றும். சில வரிகள் மனப்பாடமாகி மனத்தில் பதிந்து விடவும் கூடும். இது பேசும்போது உங்களுக்கு மிக உதவியாக இருக்கும்.

5. பேச்சுத் தயாரிப்பின் ஐந்தாவது படிநிலையாக நீங்கள் புதிய பணியை தொடங்க வேண்டும். வைரமுத்து கவிதைகளைப் பற்றி நீங்கள் பேச்சுத் தயார் செய்து கொண்டிருக்கும் நிலையில் வைரமுத்துவின் நேர்முகப் பேட்டிகள், பிறர் கூறும் தகவல்கள் முதலியவற்றைத் தேடித் தொகுத்துக் குறிப்புக்கள் எழுதியுள்ள தாள்களில் தேவையான இடத்தில் குறித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு குறித்துக்கொள்ளும் போது இச்செய்தியை மேடையில் கூறினால். வரவேற்பினைப் பெறுமா என்பதை உறுதி செய்துகொண்டு அதை மேடையில் கூறலாம்.

6. பழக்கப்பட்ட பேச்சாளர்கள் பத்து அல்லது பதினைந்து பக்கங்கள் உள்ள குறிப்புகளைக் கையில் வைத்துக்கொண்டு புரட்டிக் கொண்டிராமல் ஒரே பக்கத்தில் குறிப்புக்களை வைத்துக்கொண்டு பேசுவதுண்டு. இது அனைவருக்கும் சாத்தியமல்ல.

7. குறிப்புகளை நிரல்படுத்தும் போது, மேடையில் கூறத்தகுந்தன இவை. கூறத்தகாதன இவை என்ற ஆராய்ச்சி தேவை. உறுதி செய்துகொண்ட கருத்துக்களை மட்டுமே மேடையில் கூறவேண்டும்.

8.காகிதத்தில் நிரல்படக் குறிப்புக்களைத் தொகுத்த பிறகு அவற்றை ஏற்ற இறக்கங்களுடன் ஒரு முறை உரத்த குரலில் வீட்டில் சொல்லிப் பார்க்கலாம். பேசும்போது தடுமாற்றம் இல்லாமல் இருக்க இப்பயிற்சி மிகவும் உதவும்.

9. பேசப்போகும் செய்திகளைத் திரட்டித் தொகுத்தபின் அவற்றைப் பேச்சாளர் இயன்றளவு தன் நினைவினும் வைத்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இதை கூறுவதற்கு ஒரு காரணம் உண்டு. மிக உயர்ந்த பதவி வகித்த ஒரு நண்பரும். அவருடன் சிலரும் பேசுவதற்காகக் காரில் போய்க்கொண்டிருந்தார்கள். உயர்பதவி வகிக்கும் நண்பர் ஒரு சிறிய நோட்டில் அன்று பேசக்கூடிய குறிப்புக்களை எழுதிவைத்திருந்தார். பேச வேண்டிய இடம் நெருங்கி வந்தபோது நண்பர் அந்த நோட்டைத் தேட, அதைக் காணவில்லை. நண்பரின் முகம் பேயறைந்தது போல் ஆகிவிட்டது. தொகுத்து வைக்கப்பட்ட குறிப்புக்கள் இல்லாமலேயே கூட அவரால் பேச முடியும். அவர் பேச்சில் வல்லவர்தான்; எனினும் அவர் சிறிது தடுமாறிவிட்டார். பின்னர் காரை விட்டு இறங்கும்போது கார் இருக்கைக்கு அடியில் நோட்டு கிடந்ததைப் பார்த்து எடுத்துக்கொண்டார். அவரது முகத்தில் பெரும் நிம்மதி நிலவியது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் துன்புறாமல் இருப்பதற்குக் குறிப்புகளை ஓரளவு மனத்தில் பதிய வைத்திருப்பது நல்லது.

10. அனுபவம் முதிர்ந்த பேச்சாளர்கள் சிறிய துண்டுக் காகிதத்தில் பேச்சுக்குத் தேவையான மையச் செய்திகளை மட்டும் வைத்திருப்பார்கள். அவற்றை ஒருமுறை பார்த்துவிட்டு மடமடவென் பேசத் தொடங்குவார்கள். இந்த நிலை தொடக்கப் பேச்சாளருக்கு எளிதல்ல. அனுபவம் மிகுந்த பேச்சாளரானாலும் இவ்வாறு மேடையில் வந்து உட்கார்ந்த பின் குறிப்புகளை எழுதிக்கொண்டு மனத்தில் தோன்றியதை எல்லாம் பேசுவது ஒரு வகையில் ஆணவத்தின் வெளிப்பாடாகும். இத்தகைய பேச்சுக் கலையில் ஏற்கனவே கூறப்பட்ட உவமைகள், நகைச்சுவைகள் திரும்பத் திரும்பக் கூறப்படும். இதனால் பார்வையாளர்கள் எரிச்சல் அடைவார்கள். மேடைப் பேச்சுக்களைச் சில சமயங்களில் சான்றோர்கள் வெறுத்து ஒதுக்குவதற்கு இதுவே காரணமாகும். தாங்கள் மேற்கொண்டிருக்கும் நல்லதொரு பணிக்குப் பேச்சாளர்கள் மறைமுகமாகத் தீமை

செய்கின்றனர் என்றே கூறவேண்டும். எனவே மேடைக்குப் போகும் முன்னர் சிறிதளவாவது சிந்தித்துத் தயார் செய்துகொண்டு புதிய செய்திகளுடன் மேடையேறுவதுதான் சிறந்த பேச்சாளரின் பண்பாகும்.

11. மிகவும் மூத்த பேச்சாளர்கள் கையில் எவ்விதக் குறிப்பும் இல்லாமல் கடல்மடை திறந்தது போல் பேசுவதை நாம் காண்கிறோம். பேச்சாற்றலின் சிகரம் என்று இதனைக் கூறலாம்.

இந்நிலை பல்லாண்டு முயற்சி செய்து பெற்ற பயிற்சியின் விளைவாக ஒருவருக்கு வாய்க்கக்கூடும். இத்தகைய பேச்சாளர்களை மக்கள் பெரிதும் போற்றுவார்கள் என்பது திண்ணம்.

பேச்சாளர் முயற்சியும் பயிற்சியும் உடையவராக இருக்க வேண்டும். அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூற்று இங்கு நினைக்கத்தக்கது. "நான் பேசவேண்டிய எல்லாவற்றையும் விடாமல் தோண்டி எடுத்துச் சரிபார்த்துத் தரமறிந்து அதற்குமேல் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை என்றும், அவை அசைக்க முடியாதவை என்றும் நிச்சயப்படுத்துவேன். பின்னர் அவைகளின் உதவிகொண்டு பேச்சை வெகுவிரைவில் சுருக்கெழுத்துக்காரருக்குப் பேச்சு முறையில் சொல்லுவேன். பிறகு அது கையச்சு இயந்திரத்தில் பொறித்து வந்ததும் அதைத் திருத்தியும், சேர்த்தும், குறைத்தும் பேச்சைத் தயாரிப்பேன். முற்கூட்டி யோசிக்காமலும் ஆழ்ந்து நோக்காமலும் கடின உழைப்பு எடுத்துக் கொள்ளாமலும் என் பொது மேடைப் பேச்சுக்களில் எந்நாளும் நான் வெற்றி கண்டதில்லை" என்று ஒரு நாட்டின் தலைவர் கூறியுள்ளார். இதிலிருந்து பேச்சுத் தயாரிப்பின் இன்றியமையாமையை நம்மால் உணரமுடிகிறது.

தயாரிப்பு இல்லாமல் ஒருவர் பேசப் போவது பேதமையிலும் பேதமை. ஒரு சபையில், "ஒரு பேச்சாளர் தமது பேச்சை முற்கூட்டித் தயாரிக்காது பேசப் புகுதல் எல்லா விருந்தினர்களும் ஊண் கொள்ள அமர்ந்தபின் உணவைத் தயாரிக்கப் புகும் பேதமை" என்று குறிப்பிடுகின்றார் தி.மு.தெய்வசிகாமணி ஆச்சாரியார். பேச்சுக் கலையின் நுட்பங்களை அறிந்துகொள்வோம்! நன்கு பேசுவோம்! வாழ்வில் வெற்றி பெறுவோம்.

## பாராட்டும் வாழ்த்தும் இரங்கலும்

### பாராட்டு

ஒருவர் பட்டம் பெற்றதற்காகவோ, பதவியுற்றதற்காகவோ, தேர்வில் தேறியதற்காகவோ, வேறு காரணத்திற்காகவோ பாராட்டிப் பேசுவதற்கு அமைக்கும் கூட்டமே பாராட்டுக் கூட்டமாகும். இத்தகைய பாராட்டுக் கூட்டத்தில் பேசுவோர்

பாராட்டுக்குரியாரைக் குறித்துச் சுருக்கமாகப் பேசுதலே நன்று. பாராட்டும்பொழுது பேசுவோர் பாராட்டுக்குரியவர்க்கு ஒன்றிரண்டு வேண்டுகோளை விடுக்கலாமே அன்றி, அவர் அஞ்சிச் செய்யாததைக் குறிப்பிட்டுத் தாக்குதல் நாகரிகமாகாது. அப்படிப் பேசுவது பாராட்டுக்குரியாரது மனத்தைப் புண்படுத்துவதாகும். இத்தகைய பாராட்டுக் கூட்டங்களில் பாராட்டுக்குரியாரை உள்ளனவும் இல்லனவும் எல்லாம் கூறி வாயார வானளாவப் புகழ்தலும் தகுதியன்று.

பாராட்டுக்குரியவர் முடிவில் தம்முடைய நன்றியறிதலைத் தெரிவித்துப் பேச்சை இனிதாக முடிக்க வேண்டும். பாராட்டுக் கூட்டத்தில் நால்வரோ ஐவரோ பேசுவதே நல்லது. பலர் பேச விரும்பலாம். ஒருவர் பேசியதையே பிறர் பேசி நேரத்தை வீணாக்குவதால் பயன் யாது? கூட்ட அமைப்பாளர் இத்தகைய கூட்டம் இரண்டு மணி நேர அளவில் நன்றியுரையுடன் கூட்டத்தை நீண்ட நேரம் நடத்தி, இடையிடையே மக்களைக் கூட்டத்தைவிட்டு எழுந்து போகுமாறு செய்வது நன்றாயிராது. நன்றி கூறும்போது ஆள்களே இல்லாமல் இருப்பது பாராட்டுக்குரியாரைப் புண்படுத்தாமல் இருக்குமா என்று சிந்தனை செய்ய வேண்டும். எல்லாரும் இருக்குமாறு செய்யவேண்டுமானால் இத்தகைய கூட்டம் இரண்டு மணி நேரத்துக்கு மேல் எவ்வாற்றானும் நடத்தல் கூடாது.

**வாழ்த்து**

'வாழ்த்துக் கூட்டம்' என்பது ஒருவரைத் திருமணத்திலோ வேறு நிகழ்ச்சியிலோ வாழ்த்துவதற்கு அமைப்பது. திருமணத்தில் இன்று வாழ்த்துரை வழங்குவது பெருவாரியான வழக்கமாகிவிட்டது.

ஒரு சிலர், திருமணத்தில் புது மணமக்களுக்கு வழங்கும் வாழ்த்துரை, அரசியல் பேச்சாகவோ, கட்சிப் பேச்சாகவோ. சிலரைப் புண்படுத்தும் பண்பாடற்ற பேச்சாகவோ அமைந்துவிடுகிறது. இங்ஙனம் பேச்சுகள் அமைவது நன்றன்று. புது மணமக்கள் புது வாழ்வை நடத்துவதற்குப் பேச்சு வழிகாட்டவேண்டும். அப்படியின்றிப் பேச்சாளர்கள் திருமணக் கூட்டத்தைச் சொற்போர்க்களமாக மாற்றிவிடுவது ஏற்றதாகாது.

குறிப்பிட்ட திருமணத்தைக் குறிப்பிட்ட முறையில் நடத்துவதைப் பற்றிப் பேசலாம்; குறிப்பிட்ட முறையில் நடத்தவேண்டிய காரணத்தைக் கூறலாம்; பண்டை நாளில் தண்டமிழ் நாட்டில் திருமணம் நடந்த முறையைக் காட்டலாம். இங்ஙனம் பேசும்போது ஒரு குறிப்பிட்ட இனத்தாரை இழிவுபடுத்தித் தாக்கிப் பேச வேண்டுவதில்லை; கட்சிக் கொள்கைகளை இதுதான் சமயம் என்று புகுத்திப் பிரசாரம் செய்ய வேண்டுவதில்லை.

பல இனத்தாரும் திருமணத்திற்கு வரக்கூடும். பல கட்சியினரும் திருமணத்திற்கு வரலாம். ஆதலால். பேச்சாளர், ஒருவர் மனமும் புண்படாத வகையில் பேச வேண்டும். தலைசிறந்த அனுபவம் மிக்க பேச்சாளர் சிலர் யாரையும் புண்படுத்தாத முறையில் மாற்றுக் கருத்துகளையும் நல்ல வகையில் திருமணத்தில் பேசக் கேட்கிறேன். அனுபவமற்றவர்களே வாழ்த்துக் கூட்டத்தைப் போர்க்களமாக்கி விடுகிறார்கள். இளம்

பேச்சாளர்கள் அங்ஙனம் பேசுதல் கூடாது என்று வற்புறுத்துவது தவறாகாது. வாழ்த்துரை வழங்குகிற பேச்சாளர்கள் புது மணமக்களுக்கு வாழ வழிகாட்டுவதே நன்று.

**வாழ்த்துரை** வழங்குவதற்கு மூவர்க்கு மேல் வேண்டுமா என்று எண்ணுவது நல்லது. ஐவராயின் பேச்சாளர்கள் பேச்சைச் சுருக்கிக் கொள்ளுதல் பொருத்தமாகும். வாழ்த்துரை வழங்குவது வாழ்க்கையில் புகும் மணமக்களுக்காதலால், அவர்கள் அவ்வுரைகளை எதிரில் அமர் அமர்ந்து கேட்கவேண்டும். சில வீடுகளில் மணம் நடத்துபவர் வாழ்த்துரை வழங்குதலை இசையரங்காகக் கருதியும், மக்களை எழுந்து போகாமல் உட்கார வைப்பதற்குரிய பொழுதுபோக்குக் கருவியாக எண்ணியும் மணத்திற்கு வந்திருப்பவர்களைப் பகுதி பகுதியாகச் சாப்பாட்டுக்கு அழைத்துச் செல்கின்றனர். சில இல்லங்களில் பெண்கள் சந்தைக் கடை போல இரைச்சலிட்டுப் பேசிக்கொண்டிருக்கக் காணலாம். இத்தகைய இடங்களில் பேச்சாளர்கள் வாழ்த்துரை வழங்காமல் இருத்தலே நல்லது. வாழ்த்துரையை மதிக்கும் மணவீடுகளில் மட்டுமே பேச்சாளர்கள் வாழ்த்துரை வழங்க ஒப்புக்கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால் மேற்குறிக்கப்பட்ட குறைபாடுகள் நிகழாதவாறு திருமண வீட்டாருக்கு வற்புறுத்தல் வேண்டும்.

**இரங்கல்**

இறந்தவருக்கு இரங்குதற்பொருட்டு நடத்துவது இரங்கல் கூட்டம். இக்கூட்டத்தில் பேசுபவர்கள் இறந்தவருடைய குணநலன்களைச் சுருக்கமாகக் கூறித் தமது வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டும். இரங்கற் கூட்டத்தில் பேச்சாளர்கள் நகைச்சுவையைக் கையாளாமல் பேச வேண்டும். நகைச்சுவையோடு பேசுவது வருத்தம் தெரிவிப்பதற்கு மாறாக இறந்தமைக்கு மகிழ்ச்சி கொண்டாடுவது போலாகும்.

ஒருவர் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிய வேண்டும்; மற்றொருவர் அத்தீர்மானத்தைப் பின்பற்றி வழி மொழிய வேண்டும். இன்னொருவர் அத்தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும். முன்மொழிபவர் நீண்ட நேரம் பேசலாம்; மற்றவர்கள் சுருங்கப் பேச வேண்டும்.

கூட்டத்துக்குத் தலைமை தாங்கும் தலைவரே முடிவில் இரங்கல் தீர்மானத்தைப் படித்துவிட்டு நிறைவேற்றி வைக்கலாம். அவையினர் ஒன்று அல்லது இரண்டு நிமிடம் எழுந்து நிற்றல் இன்றைய மரபாகும்.

**சொற்போர்**

இம்முறையை நம் நாட்டில் சமயவாதிகள் பயன்படுத்தி வந்தார்கள். பௌத்தர்களுக்கும் சைவ சமயத்தவர்களுக்கும், சமணர்களுக்கும் சைவ மதத்தவர்களுக்கும், வைணவர்களுக்கும் சிவநெறியினர்களுக்கும் தத்தம் சமயங்களைப் பற்றிப் பேச்சுப் போர்கள் நடைபெற்றதைத் தமிழ் நூல்களில் காண்கிறோம். இது சமரசக்

கொள்கை பரவி வரும் இந்நாளில் அறவே மறைந்தொழிந்தமை நாட்டுக்கே பெரு நன்மையாயிற்று; எல்லாச் சமயத்தாரும் ஓரளவு ஒன்றுபட்டு வாழ்வதற்கு வழிகோலிற்று.

இக்காலத்தில் ஒரு பொருளைக் குறித்துச் சொற்போர் நிகழ்வதுண்டு: 'மணவிலக்கு வேண்டும்' என்று ஒருவர் ஒட்டிப் பேசுவார். மற்றொருவர் மணவிலக்கு வேண்டுவதில்லை' என்று வெட்டிப் பேசுவார். ஒரு சிலர் ஒட்டியும் வேறு சிலர் வெட்டியும் பேசுவர். முடிவில், முதலில் பேசியவர் தம் கருத்தை நிலைநாட்டிப் பேசுவார். தலைவர், கேட்போர்தம் வாக்கெடுத்து முடிவு கூறுவார். இத்தகைய முறையில் இன்று சொற்போர் நிகழ்கிறது.

சொற்போரில் ஒருவரை மற்றொருவர் தாக்கிப் பேசுவது அநாகரிகமாகும்; அறிவுடைமையுமாகாது. பெயர் குறிக்காமலும், இழிவாகப் பேசாமலும் வெட்டிப் பேசுவோர், நாகரிக நிலையில் நின்று பேசவேண்டும். இச்சொற்போர் முறையில் நன்கு பயிற்சி பெறுகிறவர்கள், நாடாளும் மன்றத்திலோ சட்டசபையிலோ ஒரு பொருளைக் குறித்து ஒட்டியோ வெட்டியோ பேச வாய்ப்புக் கிடைக்கும்போது, நாகரிகமாகப் பேசும் திறமை எய்துவார்கள்.

**பட்டிமன்றம்**

பட்டிமன்றம் என்று இக்காலத்தில் நடத்தப் பெறுவதும் இச்சொற்போர் முறையை ஒட்டியதேயாகும். வாதம் செய்யும் சபை என்னும் பொருளில் இச்சொற்றொடர் இந்நாளில் வழங்கப்பெறுகிறது. கலித்தொகைக் குறிஞ்சிக் கலி 15-ஆவது பாடலில் வரும், "நோதக்க செய்யும் சிறு பட்டி" எனும் சொற்றொடருக்கு 'நோவத்தக்க செயல்களைச் செய்யும் சிறியனாகிய காவலில்லாதவன்' என்பது பொருளாகும். திருக்குறள் 'கயமை' அதிகாரத்தில்.

**"அகப்பட்டி யாவாரைக் காணின், அவரின்**
**மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்."**

என்று ஒரு குறள் உண்டு. "கீழாயினான் தன்னிற் சுருங்கிய பட்டியாய் நடப்பவரைக் காணின் அந்நடக்கையில் அவர்களைக் காட்டிலும் தான் மேம்பட்டுச் செருக்கடைவான்" என்பது இக்குறளுக்குப் பொருளாகும். அகப்பட்டி என்னும் சொற்றொடருக்கு 'அகமாகிய (மனமாகிய) பட்டி போன்று வேண்டியவாறே ஒழுகலின் பட்டி என்றார்" என்பர் உரையாசிரியர் பரிமேலழகர். 'பெரிய வாயாடி' என்னும் பொருளில் 'வாய்ப்பட்டி' என்னும் சொற்றொடர் தமிழில் உலக வழக்கில் வழங்கப்பட்டு

வருகிறது. அதனால் இக்காலத்தில் பட்டி என்னும் சொல்லுக்கு வாதிப்பவர் எனும் பொருளை ஏற்கலாம். சொற்பொருளும் காலத்துக்குக் காலம் மாறுவதுண்டு.

தேருந்தொறும் இனிதாம் தமிழிலக்கியங்களில் வாத மன்றத்துக்குப் பட்டிமண்டபம் என்னும் பெயரே வழங்கப்பட்டுள்ளது. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமோ மகத நாட்டு வேந்தன் பட்டிமண்டபத்தைக் கொடுத்ததாகக் குறிப்பிடுகிறது. மணிமேகலையோ, “ஒட்டிய சமயத்தின் உறுபொருள் வாதிகள் பட்டி மண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின்" என்றே கூறுகிறது. மாணிக்கவாசகரும் தமது திருவாசகத்தில், "பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை" என்றே பாடியிருக்கக் காண்கிறோம். கம்பர் பெருமானும் தமது இராமாயண நகரப்படலத்தில், "பன்னருங் கலைதெரி பட்டிமண்டபம்" என்றே குறிப்பிட்டுள்ளார். சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லாரும். ‘பட்டிமண்டம்' என்னும் சொற்றொடருக்கு, "வித்தியா மண்டம்; ஓலக்க மண்டபமுமாம்" என்றார். நூல்கள் பட்டிமண்டபம் நடந்ததாகக் கூறவில்லை. எவரோ ஒருவர் இதைத் தொடங்கிய போது பட்டிமன்றம் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அத்தொடரே நிலைத்து விட்டது. ஆதலால், பட்டிமன்றம் என்னும் பெயரையே இந்நாளில் பயன்படுத்தலாம். இதுவும் சொற்போர் நடத்தும் ஒருவகை மன்றமேயாகும்.

இனி, இன்று பட்டிமன்றத்தில் நடைபெறும் முறை யைக் காண்போம். ஒரு பொதுத்தலைவரின் கீழ் இரு குழுவினரோ முக்குழுவினரோ சொற்போர் புரிவர். தலைமை தாங்குவோர் நடுவு நிலையில் இருந்து தீர்ப்பு வழங்கும் நோக்காளர் ஆவார். ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு தலைவர் இருப்பார். இரு குழுவினரோ மூன்று குழுவினரோ தத்தம் பொருளைக் குறித்துச் சொற்போர் புரிவர். பெரும்பாலும் மூன்று பொருளே வாதிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாகக் 'குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகிய மூவருள் திருக்குறள் அடிப் படையில் ஏற்றமானவர் யார்?" என்னும் பொருளைக் கூறலாம். குகனைக் குறித்து மூவரடங்கிய குழு வாதிக்கும். இக்குழுவுக்கு ஒரு தலைவர் இருப்பார். சுக்கிரீவனைப் பற்றி மூவரடங்கிய குழு வாதிக்கும். இக்குழுவுக்கு ஒரு தலைவர் இருப்பார். வீடணனைக் குறித்து மூவரடங்கிய குழு வாதிக்கும். இக்குழுவுக்கும் ஒரு தலைவர் இருப்பார். மூன்று குழுக்களும் வாதித்து முடித்த பின்பு, முக்குழுவின் தலைவர்கள் மட்டும் ஒவ்வொருவராய்த் தத்தம் பொருளைப் பற்றி வற்புறுத்தி முடிப்பர். முடிவில் நோக்காளராய் அமர்ந்திருக்கும் தலைவர் முக்குழுக்களின் கருத்துகளையும் ஒருமித்து ஆராய்ந்து தக்கவாறு தீர்ப்புக் கூறுவார்.

இதில் கலந்து கொள்பவர்கள் உணர்ச்சிவயப்பட்டு எதிர்க்கட்சிப் பேச்சாளர்களைத் தாக்கிப் பேசாது அவர்களுடைய கருத்துகளை மட்டும் வெட்டிப் பேசித் தங்கள் கருத்தை

நிலைநாட்ட வேண்டும்; கேட்பவர்களின் கை தட்டலுக்காக மதியிழந்து நிலைமறந்து விதிமுறை பிறழ்ந்து பேசுதலாகாது; பிறர்மனம் புண் படாதவாறு விழிப்புணர்ச்சியோடும் பண்பாட்டுடனும் நடந்துகொள்ள வேண்டும். இப்போது காரைக்குடிக் கம்பர் கழகம் மேல்முறையீட்டு மன்றம் என்று ஒன்றைப் புதிதாகப் புகுத்தியிருக்கிறது.

**வழக்காடு மன்றம்**

பட்டிமன்றத்தில் நடுவர் உட்பட ஏழு பேச்சாளர்கள் பங்கேற்பார்கள். வழக்காடு மன்றத்தில் ஒரு நடுவரும் இரு வழக்குரைஞர்களும் ஆக மூவர் பங்கேற்பார்கள். வழக்குத் தொடுப்பவர் தன் பக்கத்து நியாயங்களாக மூன்று நான்கு செய்திகளை எடுத்துக் கூறுவார். சான்றாக கோவலன் செயல்கள் குற்றமுடையன என்று வழக்குத் தொடுப்பவர் முதலில் மூன்று அல்லது நான்கு செய்திகளை எடுத்துரைப்பார். வழக்கினை மறுப்பவர் தன்முறை வரும்போது எழுந்து நின்று முதலில் கூறியவரின் கருத்துக்களை மறுத்துரைப்பார். பின்னர் முதலாமவர் எழுந்து வாதிடுவார்; இரண்டாம் பேச்சாளர் இடைமறித்துப் பேசுவார். அவ்வப்போது நடுவர் குறுக்கிட்டு தடைவிடைகளை எழுப்பி நிகழ்ச்சியினை நகர்த்திச் செல்வார். நிறைவாக நடுவர் தீர்ப்புரையுடன் வழக்காடுமன்றம் நிறைவுறும். பட்டிமன்றத்தில் ஒருவர் பேசியதைப் பின்னே பேசுபவர் மறுப்பார்; மறுப்பதற்காகச் சிந்திக்கவும். சிறிது தயார் செய்துகொள்ளவும் சிறிது கால அவகாசம் கிடைக்கும். வழக்காடு மன்றத்தில் இந்த வாய்ப்பு இல்லை. இதனால் வழக்காடுமன்றப் பேச்சாளர் ஆழ்ந்த படிப்பும் நினைவாற்றலும் உடையவராக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

தமிழ் இலக்கியங்களின் செழுமையைப் பொதுமக்கள் அரங்கத்திற்கு கொண்டு சென்றத்தில் வழக்காடு மன்றத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது.

## அவைத்தலைமை

அவைத்தலைமை பூண்டு ஒரு பொதுக்கூட்டத்தை நடத்துவதற்கு அரிய பயிற்சியோ, பெரிய திறமையோ, ஆழ்ந்த அனுபவமோ ஒருவருக்கு வேண்டுவதில்லை என்று எண்ணி விடுதல் கூடாது. அவைத்தலைமை பூணும் பணிக்கு அனுபவம் மிகவும் வேண்டும்.

ஒருவர் பெரும் பேச்சாளராக இருந்து பல கூட்டங்களில் நலமுறப் பேசி மக்களை மகிழ்வித்திருக்கலாம்; ஆனால், அவர் அவைத்தலைமை பூண்டு பொதுக்கூட்டத்தை நடத்தித்தர அறியாமல் இருக்கக்கூடும். ஆதலால், பேச்சாளராகப் பயிற்சி பெறுவோர் அவைத் தலைமை பூண்டு பொதுக்கூட்டத்தை நடத்தி முடிக்கும் முறையை அறிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

"அவைத்தலைவர் யார்? அவருடைய கடமைகள் யாவை?" என்னும் வினாக்களுக்கு ஒருவர் விடை தெரிந்து கொண்டால், அவைத்தலைவர் இலக்கணத்தையும் அவரது கடமைகளையும் அறிந்து கொள்ளக்கூடும். ஆங்கில அகராதிகளில், "அவை அல்லது குழு அல்லது பொதுக்கூட்டம் நடத்தித்தரத் தலைமை தாங்கும் அலுவலரே அவைத் தலைவராவார்" என அவைத்தலைவர் என்னும் சொல்லுக்குப் பொருள் கொடுக்கப்பட்டிருப்பதைப் பலரும் கண்டிருக்கலாம். கூட்டத்தைச் சிறப்புற நடத்தித் தருவதே அவைத்தலைவர் கடமை. அக்கடமை கூட்டத்துக்கு ஏற்றவாறு வெவ்வேறு வகையில் மாறுபடும்.

## அவைத்தலைவருக்குத் தகுதிகள்

### அறிவு வேண்டும்

அவைத்தலைமை பூண்பவருக்குப் பொதுவாக ஆன்ற அறிவும் மிகுந்த பொறுமையும் ஆழ்ந்த அனுபவமும் இருத்தல் நன்று. ஓர் ஆண்டு விழாக் கூட்டத்தில் இருவர் அல்லது மூவர் வெவ்வேறு பொருள்களைப் பற்றிப் பேசலாம். தலைமை பூணும் தகைமையுடையார் அக்கூட்டத்தில் பேசிய பொருள்களை அறிந்து அவற்றைக் குறித்து இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் பேசவாவது தெரிந்திருக்கவேண்டும். பரந்த அறிவிருந்தாலன்றி அவ்வாறு பேசுதல் முடியாது. தலைவர் அழகுப் பதுமையாகக் கூட்டத்தை அணி செய்தால் மட்டும் போதுமா? மதிப்புக் கருதியோ, பொருள் வருவாய் விரும்பியோ அணி செய்யும் அழகுப் பதுமைத் தலைவர்களைக் கூட்டத்தை அணி செய்ய அழைப்பதுண்டு. இவர்களை விதிவிலக்காகக் கொள்க. மற்றப்படி தலைமை வகிப்பவர்கள் மேற்குறித்த தகுதியுள்ளவர் களாக இருத்தலே நன்று என்றறிக.

### பொறுமை வேண்டும்

சிறப்பாக, அவைத்தலைமை தாங்குவோர்க்கு மிகுந்த பொறுமை வேண்டும். பேசுவோர் சிலர் எடுத்த பொருளை விடுத்து, மற்றொன்று விரித்து, முடிவில் எடுத்த பொருளுக்குத் திரும்பாமல், கால எல்லையைக் கடந்து நேரத்தை வீணாக்குவர். வேறு சிலர் பேசி முடிக்காமல் பின்னே பேச இருக்கும் பேச்சாளர்களையும் பேசவிடாமல் விண்மாரி எனச் சொல்மாரி பொழிந்து கொண்டிருப்பர். அறிவுடைய தலைவர் அதனைக் கேட்டுப் பொறுத்துக் கொண்டிருப்பதற்கு மிகுந்த பொறுமை அவசியமாகும். தலைவர் சினந்து பேச்சாளரைக் கடிந்து உடனடியாகப் பேச்சை நிறுத்தமாறு தடையுத்தரவு போடுதல் நாகரிகமற்ற செயல் என்று கருதக்கூடும். தலைவர் நிறுத்துமாறு சொன்னாலும், "இதோ நிறுத்திவிடுகிறேன். இன்னும் இரண்டு நிமிடத்தில் இறங்கி விடுகிறேன்" என்று சொல்லிச் சிலர் மேலும் மேலும் பேசிக் கொண்டிருப்பர். தலைவரது பொறுமை சோதனைக்குள்ளாகும். என்ன செய்வது? சில சமயங்களில் இப்படிச் செய்யும் பேச்சாளர் தலைவருக்கு அறிமுகமானவராகவும் இருக்கக்கூடும். இந்நிலையில் அவைத்தலைவருக்கு

ஏற்படும் சங்கடம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லுந்தரமன்று. தலைவர் பொறுமையை இழக்காது தந்திரமான முறையில், பேச்சாளரது பேச்சை நிறுத்த முயலுதல் வேண்டும்.

பேரறிஞராக விளங்கிய காலஞ் சென்ற பா.வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் சென்னையில் ஒரு கூட்டத்தில் தலைமை தாங்கியபோது பேச்சாளர் பேசவேண்டிய பொருளைவிட்டு வேறு பேசிக்கொண்டிருந்தார். தலைமை தாங்கிய மாணிக்க நாயக்கர் சிறிது பொறுத்துப்பார்த்தார். பேச்சாளரோ எடுத்துக்கொண்ட தலைப்புக்குத் திரும்பக் காணோம். தலைவர் ஒரு துண்டுக் கடிதம் எழுதிக் கொடுத்துப் பேச்சாளரைப் பேசவேண்டிய பொருளில் நுழையுமாறு வற்புறுத்தினார். பேச்சாளர் தலைவரது வற்புறுத்தலைக் கண்டதும் வியர்த்துப் போய்ச் சிலை போல் நின்றுவிட்டுப் பின்பு பேசத் தொடங்கிப் பேச்சை ஒருவாறு முடித்தார். பேரறிஞர்கள் தலைமை தாங்கும் போது, பேச்சாளர்கள் மற்றொன்று விரித்துக் காலத்தை வீணாக்குவதைக் கண்டு பொறுத்திருத்தல் இயலாது. ஆதலால், அவர் அவ்வாறு செய்யவேண்டுவதாயிற்று. தலைமை தாங்கும் எல்லோரும் இப்படிச் செய்ய முடியாது; இடம் பார்த்து ஆளைப் பார்த்து இனிய முறையில் கூறவேண்டும். வற்புறுத்தினால் பெரும்பேச்சாளர் சிலர், மனநிலை இழந்து, தமது சொற்பெருக்கைவிட்டுத் தலைவரையே தாக்கத் தொடங்கிவிடுவர்.

**திறமை வேண்டும்**

மற்றொரு சங்கடம் உண்டு. கூட்டம் மாலை 6.30 மணிக்குத் தொடங்கும். தலைவர் சில வேளைகளில் முன்னுரையாக ஒரு மணி நேரம் பேசிவிடுவார். இன்னும் மூன்று பேச்சாளர்கள் ஆளுக்கு ஒவ்வொரு மணி நேரம் பேச நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும். தலைவர் ஒரு மணி நேரமும் மூவர் 3 மணி நேரமும் பேசுவதென்றால் மொத்தம் 4 மணி நேரம் வேண்டுவதாகும். தலைவர் முடிவுரைக்கு 3/4 மணி நேரமாகும். இம்முறையில் விழா முடிய இரவு 11 ¼ மணியாகும். நன்றி சுருக்கமாகக் கூறுவதாகத் தொடங்கிச் செயலாளர் 1/4 மணி நேரத்துக்குப் பேசினால் விழா முடிய ஏறக்குறைய நள்ளிரவாகும். நேரமாவதால் மக்கள் வெறுப்படைந்து எழுந்து போவார்கள். ஆகையால், ஒன்று இரண்டுக்குமேல் பேச்சு இருத்தலாகாது; நன்றி 5 நிமிடத்திற்குமேல் போவது நாகரிகமாகாது.

மூவர் பேச்சை அமைத்த கூட்டத்துக்கு ஒருவர் தலைமை வகிக்க வேண்டுமெனில், அவர் 4 மணி நேரத்துக்குமேல் முன்னுரையை வளர்க்கக்கூடாது. மூவரையும் ஒவ்வொருவருக்கு ½ மணிக்கு மேல் பேசவிடுதல் கூடாது. இதைத் தலைவர் முன்னதாகப் பேச்சாளர்களுக்கு அறிவித்து வற்புறுத்த வேண்டும். இவ்வாறு செய்து கூட்டம் 9 அல்லது 9 1/4 மணிக்குள் முடியுமாறு தலைவர் திறமையாக நடத்தித் தர வேண்டும். இன்றேல்,

தமிழ்க் கூட்டங்களுக்கு வரவே மக்கள் வெறுப்புக் கொள்வார்கள். காலத்தை வீணாக்கக் கூடாது. காலம் காசு; காலம் கழிந்தால் திரும்பவும் வாராது. எனவே, நம் நாட்டு மக்களை நாம் கால அருமையின் பெருமையை உணராதவர்களாகச் செய்துவிடுதல் கூடாது. அப்படிச் செய்வது இந்நாட்டுக்குச் செய்யும் அளப்பரிய கொடிய தீமையாகும். அரசியல் கூட்டங்களைக்கூட மூன்று மணி நேரத்துக்குமேல் நடத்துவது நன்றன்று. கூட்ட அமைப்பாளர்களும் பேச்சாளர்களும் அவைத் தலைவர்களும் இதை நன்குணர்ந்து நடக்க வேண்டும்.

### தேவையானால் அதிகாரத்தைப் பயன்படுத்துக

பள்ளித் தமிழ் விழாக்களிலும் கழக ஆண்டு விழாக்களிலும் ஒரு பேச்சுடன் பல நிகழ்ச்சிகளையும் அமைப்பதுண்டு. கூட்டத்துக்கு வருபவர்கள், நிகழ்ச்சிகளையும் மாணவர்கள் பரிசு பெறுதலையும் காண விரும்புவார்களேயன்றிப் பேச்சை கேட்க எண்ணுவதில்லை. இத்தகைய கூட்டங்களில் அவைத்தலைவரின் முன்னுரையும் பின்னுரையும் மிகச் சுருக்கமாக இருக்க வேண்டும். சொற்பொழிவாளர் பேச்சும் 20 நிமிடங்களுக்குமேல் நடவாதவாறு தலைவர் வற்புறுத்தவும் வேண்டும். பேச்சாளர் ஒரு சிலர், கழக விழாக்களில் பெருங்கூட்டத்தைக் கண்டு, இதுதான் தக்க சமயம் என்று அரசாங்கத்தைத் தாக்கியோ, ஒரு கட்சியைத் தாக்கியோ, பிறமொழியைத் தாக்கியோ பேசத் தொடங்குவதுமுண்டு. இதனால், பள்ளிக்கோ, கழகங்களுக்கோ தீமை விளையும். ஆதலால், தலைவர் இடைமறித்து அல்லது முன்னதாகப் பேச்சாளரை அவ்வாறு செய்யாதவாறு வேண்டிக்கொள்வது நன்று; இல்லையென்றால் தமது முடிவுரையில் பேச்சாளர் மிகுந்த ஆர்வத்தால் கூறியதாகச் சொல்லிப் புண்பட்ட சிலர் உள்ளத்தை ஆற்றிவிட வேண்டும். இத்தகைய நிலைகளில் அவைத்தலைவர் தமக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டுவதானால், பயன்படுத்தியாகவேண்டும். ஆனால், தலைவர் கூடிய மட்டும் இனியமுறையில் இதைச் செய்வது நன்று.

### மாநாடுகளில்

மாநாடுகளில் தலைமை தாங்குவதற்கு மிகுந்த அனுபவம் வேண்டும். அவைத்தலைவர் பொறுமை இழக்காமல் இனியமுறையில் பேச்சாளர்களை அடக்கி ஆட்சி செலுத்தி நல்லமுறையில் மாநாட்டை முடிக்கும் திறமை பெற அனுபவம் துணைசெய்யும். மாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேறும்போது கடுமையான எதிர்ப்புகளும், தீப்பொறி பறக்கும் பேச்சுகளும், அவிழ்க்க முடியாத சிக்கல்களும் நிறையத் தோன்றும். அலைமோதும் பெருங்கடலில் திசையறி கருவியைப் பார்த்துக்கொண்டு. தன்னுடைய அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்திக் கப்பலை நடத்திச் செல்லும் மாலுமியைப் போல அவைத்தலைவர், மாநாடு என்னும் மரக்கலத்தைக் காலமென்னும் கருங்கடலில் செலுத்திக் கரைசேர்க்க வேண்டும். ஆதலால், மாநாடுகளில் தலைமை

தாங்குவோர்க்குப் பலதிறப்பட்ட அறிவும், நலம் மிக்க பொறுமையும், ஆழ்ந்த அனுபவமும் வேண்டும் என்றறிக.

**பெரும்பேச்சாளர்கள் கூட்டத்தில்**

பெரும் பேச்சாளர் பேசும்போது தலைமை தாங்குவோர் ஐந்து நிமிடங்களுக்குமேல் முன்னுரை நிகழ்த்தலாகாது; நன்றி என்னும் சொல்லுடன் பின்னுரையை முடிக்க வேண்டும். மிகுதியாகப் பேசினால் மக்கள் கேட்கவே மாட்டார்கள்; கைதட்டி விடுவார்கள். அவமதிப்புத்தான் உண்டாகும்; ஆதலால், இத்தகைய கூட்டங்களில் தலைமை தாங்குவோர் விழிப்பாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

இதற்கு எடுத்துக்காட்டு ஒன்று கூறலாம். ஒரு முறை மதுரைத் தமுக்கம் திடலில் பேரறிஞர் ராஜாஜி தலைமையில் பெரும் பேச்சாளரான முத்துராமலிங்கத் தேவர் பேசுவதாக ஏற்பாடாகியிருந்தது. தமுக்கம் திடல் மிகப் பெரிய இடம். குறிப்பிட்டவாறு ராஜாஜி தலைமையில் தேவர் பேசினார். கட்டுக்கு அடங்காத பெருங்கூட்டம் கூடியிருந்தது. தேவர் பேசி முடித்ததும் நூற்றுக்கணக்கான மக்கள் எழுந்துவிட்டார்கள். தலைமைப் பேச்சைத் தொடங்கிய ராஜாஜி, மக்கள் எழுந்து போவதைக் கண்டதும், நான் "தேவர் கூறியவை அனைத்தையும் ஒப்புக் கொள்கிறேன்" என்று கூறிக் கூட்டத்தை முடித்துவிட்டார்.

தேர்தல் கூட்டங்களும் அரசியல் கூட்டங்கள் அடங்கும். இத்தகைய கூட்டங்களில் தலைமை வகிப்பவர்கள் பெரும்பாலும் பொம்மைத் தலைவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் நீண்ட நேரம் பேசமாட்டார்கள்; பேசவும் அஞ்சுவார்கள். முக்கியமான பேச்சாளர்கள் இக்கூட்டங்களில் பேசுவார்கள். இவர்களது நீண்ட பேச்சைக் கேட்கவே மக்கள் திரளாக வந்திருப்பார்கள். இந்தக் கூட்டங்களுக்குப் பொதுக்கூட்டக் கட்டுப்பாடு தேவையில்லை.

**பொதுவாகத் தெரிந்துகொள்ள வேண்டுபவை**

பொதுவாக அவைத்தலைமை வகிப்போரிடம் காணும் சில குறைகளைத் தெரிந்துகொள்ளுதல், அக்குறைபாடுகளைப் போக்கிக்கொள்ள வழிகாட்டும். அவைத்தலைவர், முன்னுரையையும் பின்னுரையையும் நீண்ட பேருரைகளாக நிகழ்த்த வேண்டுவதில்லை. முன்னுரையை நீட்டிப் பேசுமாறு தலைமை தாங்கும் ஒரு சிலரை அமைப்பாளர்கள் வேண்டிக்கொள்வ துண்டு. அத்தகைய கூட்டங்களில் தலைமை வகிப்போர் முன்னுரையை நீட்டிப் பேசினாலும் பின்னுரையை நீண்ட பேருரையாக நிகழ்த்தலாகாது. எத்தகைய பேச்சாளராக இருந்தாலும், எப்படிப்பட்ட பெருமதிப்புடையவராக இருந்தாலும் அவைத்தலைவராக இருப்போர், தம் தலைமையில் நிகழும் சொற்பொழிவுகளை விட நீண்ட நேரம் பேசுவது, சொற்பொழிவாளர்களை இகழ்வது போலாகும். ஒரு சிலர் பின்னுரையை ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் பேசும் நிலை இன்று காணப்படுகிறது. அது பாராட்டக்கூடியதன்று. அவைத்தலைவர்

பெரிய மாநாடுகளில் முன்னுரையையும் பின்னுரையையும் பேருரையாக நிகழ்த்துவது முறையேயன்றிச் சாதாரணப் பொதுக்கூட்டங்களில் அவ்வாறு செய்தல் கூடாது, முடிவுரையில் தலைவர், "யார் எழுந்து போனாலும் பேசியே தீருவேன்" என்றிராமல் பேச்சாளர்களின் பேச்சின் தொகுப்புரையாகவோ, குறிப்புரையாகவோ 15 நிமிடங்களுக்கு மேல் போகாமல் முடிவுரையை அமைத்துக் கொள்ளுதலே அழகாகும்; நற்பெயர் பெறுவதுமாகும்.

**வெட்டிப் பேசுவது பெரும்பாலும் கூடாது**

சொற்பொழிவாளரது பேச்சில் கண்ட மாறுபட்ட கருத்துகளை அவைத்தலைவர் வெட்டிப் பேசுவது சில சமயம் நிகழ்கிறது. ஒருவர் ஆய்ந்து கண்ட உண்மைகளை அவைத்தலைவர் அரைமணி நேரத்தில் மறுத்துப் பேச முனைவது என்பது முறையாகாது. ஒருவர் கண்ட ஆராய்ச்சி மற்றொருவருக்கு மாறுபடக் காணலாம். சமயத்தாலும் கட்சிக் கருத்தாலும் உண்மை ஆராய்ச்சி நடைபெறுவதற்கு இயலாத இந்நாட்டில் அவைத்தலைவர் தம் கருத்தே முடிவானது என்று வற்புறுத்த முடியாது.

அவைத்தலைவர் கடமை, கூட்டத்தை நன்முறையில் நடத்தித் தரவேண்டுவதேயாகும்; அதுவன்றிச் சொற்பொழிவாளர் சொல்வனவற்றைத் தவறென்று வெட்டிப் பேசுதல் முறையன்று. கருத்து வேற்றுமைகளும் மாறுபட்ட ஆராய்ச்சிகளும் மிகுந்த இந்நாட்டில் அவைத்தலைமை தாங்குவோர் விழிப்புடன் ஆன்றமைந்தடங்கிய சான்றோராக நடந்துகொள்ளுதல் வேண்டும். சில வேளைகளில் பேச்சாளர் சிலர் தவறான கருத்துகளையும் ஆராய்ச்சி முடிவுகளையும் அறியாமையினால் அறிஞர்களுடைய கூட்டத்தில் பேசுவதுமுண்டு. அச்சமயங்களில் தலைமை வகிப்போர், அறிஞர்களாயிருப்பின், நல்ல முறையில் தவறுகளை எடுத்துக் காட்டித் தலைமையுரையை முடிக்கலாம். தலைவர் வீணான வாதத்தை எழுப்பிப் பூசலைக் கிளப்பி விடுதல் கூடாது.

**அவைத்தலைமைக்கும் பயிற்சி வேண்டும்**

அவைத்தலைமை பூண்பதிலும் சொற்பயிற்சிக் கழகங்கள் அரிய நற்பயிற்சியளித்தல் நல்லது. நடத்தும் பயிற்சிக் கூட்டத்தில் ஒருவர் தலைமை தாங்கவும், இருவர் பேசவும், ஒருவர் நன்றி கூறவும் மேடைப் பேச்சுப் பயிற்சிக் கழகங்கள் பயிற்சியளித்தால் மேடைப் பேச்சுமுறை நாட்டில் மேன்மையடையும்.

**தொகுப்புரை**

அவைத்தலைமை தாங்குவோர்க்குக் கூட்டத்தை நன்முறையில் நடத்தித் தருதலே தலையாய கடன். ஆன்ற அறிவும் மிகுந்த பொறுமையும் ஆழ்ந்த அனுபவமும் அவைத்தலைவருக்கு வேண்டுவன. பயன்கருதி எப்பொழுதாவது அத்தன்மைகள் இல்லாத சிலரை அவைத்தலைமை பூணச் செய்வதில் தவறில்லை. அவைத்தலைவர் முன்னுரையைப் பேருரையாக அரை மணிக்கு மேல் நிகழ்த்தலாகாது. பின்னுரையை

இரண்டு மணி நேரம் பெரும் பேச்சாக்கி விடுதல் முறையன்று. பேச்சாளர்களின் கருத்துகளை அங்கேயே மறுத்து வெட்டிப் பேசுதல் அவைத்தலைமை பூண்போர் கடமையாகாது. மேற்கூறியவற்றை அவைத்தலைமை பூண விரும்புவோர் அறிதல் நன்றாகும்.

## நன்றி நவிலல்

நன்றி நவில்வதைப் பற்றியுங்கூட ஒருவர் கற்றுக் கொள்ளுதல் வேண்டுமா என்று சிலர் கருதலாம். அவ்வாறு கருதுதல் தவறு. நன்றி நவில்வோரிடம் பல குறைபாடுகள் காணப்படுவதால், நன்றி நவில்வதைக் குறித்தும் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியமாகிறது.

நன்றி நவிலல், கூட்டத்தின் கடைசிக் கட்டம். அவையினர், "இனி என்ன வேலை இருக்கிறது? விரைவாக வீட்டுக்குப் போகலாம்" என்று எழுந்திருப்பர். மாலை 6.30 மணிக்குத் தொடங்கிய கூட்டம் 9.30 மணிக்கு முடிந்திருக்கும். சிலர் 'பஸ்' அல்லது 'ரயில்' ஏறிப் போக 'வேண்டியவர்களாக இருப்பர். அப்படிப் போக வேண்டுபவர்கள் எப்படி எழுந்து போகாமல் அமர்ந்திருக்கக் கூடும்? ஒருவர் இருவர் எழுந்ததும், எல்லோரும் எழுந்து விடுவர். இந்நிலையில் செயலாளர் மேடையின் அருகில் இருந்து, தலைவர் முடிவுரை முடிந்ததும் மேடையேறி, "பெரியோர்களே, தாய்மார்களே, நன்றி நவிலும் கடமையாற்ற நிற்கிறேன்" என்று கூறிப் பேச்சை வளர்த்துக் கொண்டே போதல் கூடாது; இரு நிமிடங்களுக்குள் கடமையை முடித்துவிட வேண்டும்.

முதன்மையாகத் தலைவர்க்கும் பின்னர் முறையாக முதலில் பேசியவர்க்கும், இரண்டாவது பேசியவர்க்கும், மூன்றாவது பேசியவர்க்கும், பின்பு இடம் உதவியவர்க்கும் மற்றும் உதவி செய்தவர்களுக்கும் இறுதியாக அன்புகூர்ந்து வந்து கூட்டத்தைச் சிறப்பித்த பெருமக்களுக்கும் நன்றி நவில்தல் இன்று காணும் வழக்கம். தலைவர் முடிவுரை தொடங்கும்போதே, நன்றி கூற இருப்பவர் மேடையின் அருகில் நின்று கொண்டிருந்து, தலைவர் முடிவுரை முடிந்ததும், மேடையேறி விரைவில் பிழையின்றி நன் முறையில் நன்றி கூறி, மேடையைவிட்டு இறங்க வேண்டும்." அவரை விட்டுவிட்டனையே, இவரை விட்டுவிட்டனையே" என்று பிறர் குறைகூறாவண்ணம் நன்றியுரை நடைபெறவேண்டும். இதற்கு நினைவாற்றல் இன்றியமையாதது. இன்றேல், கையில் பெயர்களை எழுதிய ஒரு குறிப்பை வைத்துக்கொண்டு மறவாது நன்றி கூறும் பணியைத் தட்டுத்தடங்கல் இன்றி இனிதாக முடிக்க வேண்டும்.

உதவி செய்தவர்களுக்கு நன்றி கூற மறந்துவிட்டால், அவர்களுடைய மனம் புண்படும். சிலர் வெளிப்படையாக அக்குறையைக் கூறாவிடினும் உள்ளத்தில் வருந்தாமல் இரார். எனவே, விழிப்புடன் பொறுப்போடு நன்றி கூறும் செயலாளர்,

நன்றிக்குரியவர் அத்தனை பேர்க்கும். காலத்தை வீணாக்காது சுருக்கமாக, ஆனால் தெளிவாக. கூட்டம் கலைவதற்குள் நன்றி நவில வேண்டும்.

**நன்றி கூறுதலைச் சொற்பெருக்காக்காதீர்கள்**

பேச்சுத் திறமைமிக்கவராக இருத்தலால் செயலாளர் நன்றி நவில்தலைச் சொற்பொழிவாக்குதல் தவறு. எத்தகைய பெரும் பேச்சாளராயினும் நன்றி நவில்தலை இரண்டு மூன்று நிமிடங்களுக்கு மேல் நிகழ்த்தலாகாது. செயலாளர் சிலர், பேச்சாளர்கள், தலைவர் ஆகிய இவர்களுடைய பேச்சுகளின் கருத்துகளைத் தொகுத்துக்கூறி 'விமர்சனம்' செய்து, அவர்கள் கூறியனவற்றிக்கு மேலாக வேறு கருத்துகளையும் சொல்லி நன்றி நவில்வதுண்டு. இஃது அநாகரிகமான செயலாகும். அறிஞர்களாயினும் பெரும் பேச்சாளர்களாயினும் ஒருவர் செயலாளராக அல்லது செயலாளர் பிரதிநிதியாக முன்வந்து நன்றி கூறுங்காலத்துத் தம் பேச்சுத் திறமையைக் காண்பிக்கும் முகத்தான் சொற்பெருக்காற்றுதல் தவறான முறையாகும்.

ஒருவேளை பேச்சாளரோ, தலைவரோ தம் கழகத்தைப் பற்றியோ, நிலையத்தைக் குறித்தோ தவறான கருத்தை வெளியிட்டால், அப்போது நன்றி கூறுவோர். அத்தவறான கருத்தை மாற்ற இரண்டொரு வாக்கியங்களால் திருத்தத்தை நன்முறையில் எடுத்துக்கூறி, அடுத்து நன்றி நவிலுதல் முறையாகும். அப்படிச் செய்வதில் தவறில்லை. கேட்போர் தவறான கருத்துடன் போகலாகாது என்பதற்காகச் செய்வது அது. மற்றவகையில் எவரும் எக்காரணம் பற்றியும் நன்றி நவில்தலை நீட்டி விடுதலாகாது.

**நன்றாயிராவிடினும் நன்முறையில் நன்றி கூறுக.**

சில சமயங்களில் பேச்சு நன்றாயிராமல் இருக்கலாம். நன்றாகப் பேசுபவர் என்று கருதப்பட்டு அழைக்கப்பட்ட பேச்சாளர் நன்றாகச் சொற்பொழிவாற்றாமல் இருக்கலாம். என்றாலும், அவர் அழைப்பிற்கு இணங்கி வந்து சொற்பொழிவாற்றியதற்காக நன்முறையிலுங்கூட, "நாங்கள் அவர் பேச்சை மிகவும் சிறப்பாக எதிர்பார்த்தோம்; அப்படி இல்லாததற்கு வருந்துகிறோம்" என்று சொல்லி நன்றி கூறலாகாது. இப்படிச் செய்தால் வந்தவர் மனம் புண்படும். பேச்சாளர்கள் பேச வரமாட்டார்கள். "நம் வேண்டுகோளுக்கு இசைந்து இங்கு வந்து சொற்பொழிவாற்றியதற்கு நம்முடைய அன்பு கலந்த நன்றி உரித்தாகுக" என்று சொல்லி நன்றி நவிலலாம்."

**கற்பனைப் புகழ்ச்சி கூடாது**

செயலாளர் சிலர், தலைவர், பேச்சாளர் இவர்களை வானளாவப் புகழ்ந்து, இல்லாததையும் ஏற்றிப் பொருந்தாத முறையில் கற்பனையாகத் திறமைகளைப் பாராட்டி நன்றி கூறுதல், கேட்பவர்களுக்குச் செயலாளரைப் பற்றியோ, கழகத்தைப் பற்றியோ

நல்லெண்ணத்தை உண்டாக்காது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சன்றோ? ஆதலால், அவ்வாறு செய்தல் நன்றன்று.

**வஞ்சப் புகழ்ச்சியும் கூடாது**

பேச்சாளர் மீது வஞ்சம் தீர்க்கும் வகையில் செயலாளர் சிலர் வஞ்சப் புகழ்ச்சியணியைத் துணைக் கொண்டு நன்றி கூறும் முகத்தான் தாக்குவதுமுண்டு; தாக்காவிடினும் வெறுப்புத் தோன்றும் முறையில் நன்றி நவில்வதுண்டு. ஒருநாளும் அப்படிச் செய்தலாகாது.

**அறிவிக்கவேண்டுவதைத் தெரிவிக்கலாம்**

அடுத்த நாள் நிகழ்ச்சியைக் குறித்துக் கூட்டத்தில் அறிவிக்கவேண்டுமாயின், அதை முன்னமே அறிவித்துப் பின்பு நன்றி நவிலவேண்டும்.

**தொகுப்புரை**

எந்த வகையிலும் எத்தகைய அறிஞராயினும் 'எப்படிப்பட்ட பெரும் பேச்சாளராயினும் நன்றி கூறுங்கால், எவரும் தலைவர், பேச்சாளர் இவர்களுடைய பேச்சுக்களைக் குறித்து ஆராய்ச்சி நிகழ்த்தாமலும், சொற்பொழிவு செய்யாமலும், பாராட்டி, மிகச் சுருங்கிய அளவில் கேட்போர் வெறுப்புற்று எழுந்து போகாதவாறு கூட்டம் கலைவதற்குள் சுவையுடன், எவ்வாற்றானும் மிகாமல் நன்றி நவில்தல் முறை.

ஆங்கிலக் கழகங்களில் இரண்டு நிமிடங்களுக்குள்ளே நன்றி கூறக் காணலாம். பெரும் பேச்சாளர் பேசும் அரசியல் கூட்டங்களில் "பேசிய அனைவருக்கும் வந்து சிறப்பித்த எல்லோருக்கும் உளமார்ந்த நன்றி" என்று கூறுவதோடு நன்றி நவில்வது முடியவேண்டும். இல்லா விட்டால் நன்றி நவில்தலுக்கு மதிப்பிராது.

பெரும்பேச்சாளர்கள் பேச்சுக்களையன்றி மற்றவர்கள் பேச்சுகளைக் கேட்க அரசியல் கூட்டங்களில் மக்கள் விரும்புவதில்லை. ஆதலால், நன்றி கூறுவோர் தம் மானத்தைப் பாதுகாத்துக்கொள்ள விரும்பினால் ½ நிமிடத்தில் நன்றி நவில்தலே சிறப்புடையது. அரசியல் பெரும் பேச்சாளர்கள் சுருக்கமான நன்றியைப்பற்றி வருந்திக் கவலை கொள்ளமாட்டார்கள்.

கழகச் செயலாளர்கள், கேட்போர் மனநிலையறிந்து நேரமறிந்து நன்றி நவின்று கூட்டங்களை இனிது முடிக்கவும். கேட்போர் நல்லெண்ணத்துடன் வீட்டுக்குத் திரும்பிப் போகுமாறு செய்யவும் பயிற்சி பெறுதல் வேண்டும்.


**பார்வை நூற்கள்**

**1. மேடைப்பேச்சும் ஒரு கலை - முனைவர் வ. ஹரிஹரன்**

**2. பேச்சுக்கலை - ம. திருமலை**

**3. பேச்சாளராக - அ.கி.பரந்தாமனார்**

## வினாக்கள்

**I . சரியான விடையை எழுதுக.**

1. சொற்பொழிவு என்ற சொல்லினை புழக்கத்திற்கு கொண்டு வந்தவர் யார் ?

2. பேச்சாளருக்குரிய தலையாய தகுதிகளில் ஒன்றாக திகழ்வது______________

அ) நினைவாற்றல் ஆ) குரல் வளம்

இ) மொழி அறிவு ஈ) தோற்றம்

3. அறியாமையிலிருந்து பிறப்பதே அச்சம் என்றவர்______________

4. தமிழ் மேடைப்பேச்சு நடை ___________ வகைப்படும்.

அ) ஐந்து ஆ) மூன்று

இ) நான்கு ஈ) இரண்டு

5. நினைவாற்றலைப் பெருக்க நம் முன்னோர்கள் பயன்படுத்திய முறை ?

அ) குறிப்பெடுத்தல் ஆ) அந்தாதி

இ) உச்சரித்தல் ஈ) பேசுதல்

6. வழக்காடு மன்றத்தில் எத்தனை பேர் பங்கெடுப்பர் ?

7. பொருத்துக.

| | |
|---|---|
| சிலேடை பேச்சாளர் | - திரு. வி.க |
| பேச்சுப்புயல் | - கி.வா.ஜகன்நாதன் |
| சொல் வேந்தர் | - வலம்புரி ஜான் |
| வார்த்தை சித்தர் | - சுகி சிவம் |

அ) 2 1 4 3 ஆ) 1 4 3 2

இ) 4 3 1 2 ஈ) 4 1 3 2

8. தமிழ்க்கடல் என்று அழைக்கப்படுபவர் ?

9. மேடைப்பேச்சின் அச்சத்தைப் போக்கும் வழியாக பெர்னாட்ஷா குறிப்பிடுவது யாது ?

10 பொருத்துக.

ஒரு மணி நேர பேச்சிற்கான கால வரையறை

| | |
|---|---|
| முன்னுரை | - 40 |
| பொருள் விரித்தல் | - 10 |
| பின்னுரை | - 60 |
| பேச்சு | - 10 |

அ) 4 1 2 3 ஆ) 1 4 2 3

இ) 4 2 3 1 ஈ) 3 1 2 4

## II. குறுவினாக்கள்

1) சொற்பொழிவு - விளக்குக.

2) மேடைப்பேச்சின் வகைகள் யாவை ?

3) சமய சொற்பொழிவு - விளக்குக.

4) ஊடகப் பொழிவுகள் யாவை ?

5) பேச்சின் மொழி ஆளுமை - குறிப்பு வரைக.

6) பேச்சின் தொடக்கம் - குறிப்பு வரைக.

7) அண்ணாவின் மேடைப்பேச்சு - குறிப்பு வரைக.

8) கி.வா.ஜகன்நாதனின் சொல்லாற்றலை விளக்குக.

9) பொழிவு தயாரிப்பின்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை ?

10 ) பாராட்டுக் கூட்டங்களில் பேசும் முறை யாது ?

## III. பெருவினாக்கள்

1) சொற்பொழிவு அரிய கலை - விளக்குக.

2) பேச்சாளரின் தகுதிகள் யாவை ? விவரி.

3) அவையச்சம் நீங்குவதற்கான வழிமுறைகள் யாவை ?

4) மொழியை கையாளும் திறனை விவரிக்க?

5) நினைவாற்றலைப் பெருக்கும் வழிமுறைகளை புலப்படுத்துக.

6) மேடைப்பேச்சில் உச்சரிப்பு பெறும் முக்கியத்துவத்தினை விவரிக்க.

7) புகழ்பெற்ற சொற்பொழிவாளர்கள் குறித்து எழுதுக.

8) மேலைநாட்டு சொற்பொழிவாளர்கள் விவரிக்க.

9) பேச்சாளருக்குரிய நெறிமுறைகளை விவரிக்க.

10) அவைத்தலைமை, நன்றியுரை போன்றவற்றை பேசும்முறை மற்றும் பயிற்சிகள் குறித்து விளக்குக.

**முனைவர் இரா.நி.ஸ்ரீகலா**
உதவிப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
தெ.தி.இந்துக்கல்லூரி
நாகர்கோவில் - 02.